மேலும் இத்திட்டத்தை பரிசீலிக்கும்போது இந்திய சுற்றுச்சூழல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட முக்கிய கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

Precautionary Principle

ஒரு நடவடிக்கையால் சுற்றுச்சூழல் அல்லது பொதுச் சுகாதாரத்திற்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதற்கான நியாயமான அபாயம் இருக்கும்போது, முழுமையான அறிவியல் உறுதிப்பாடு இன்னும் இல்லை என்பதையே காரணமாகக் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒத்திவைக்கக்கூடாது.

Polluter Pays Principle

திட்டத்தின் செயல்பாடு அல்லது விரிவாக்கத்தால் சுற்றுச்சூழலுக்கு மாசுபாடு அல்லது சேதம் ஏற்பட்டால், அதனைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட Project Proponent ஏற்க வேண்டும்.

அதற்கான செலவுகளை பொதுமக்களின் மீது சுமத்தக்கூடாது.

Sustainable Development

பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சி அவசியமானது. ஆனால் அந்த வளர்ச்சி காரைக்கால் மக்களின் உயிர், உடல்நலம், சுற்றுச்சூழல், மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்கால தலைமுறைகளின் உரிமைகளை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Vellore Citizens Welfare Forum v. Union of India (1996) வழக்கில் Precautionary Principle மற்றும் Polluter Pays Principle ஆகியவற்றை இந்திய சுற்றுச்சூழல் சட்டத்தின் முக்கியக் கொள்கைகளாக அங்கீகரித்துள்ளது.

எனவே Environment (Protection) Act, 1986 மற்றும் EIA Notification, 2006 ஆகியவற்றின் நோக்கத்திற்கேற்ப இந்த Public Hearing-ல் பொதுமக்களால் முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி பரிசீலனையில் உரிய முக்கியத்துவத்துடன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

11. சுயாதீனமான பொதுச் சுகாதார ஆய்வு

துறைமுகத்தைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் தற்போதைய சுவாச மற்றும் பிற உடல்நல நிலை குறித்த Baseline Health Survey மேற்கொள்ள வேண்டும்.

அதனைத் தொடர்ந்து காலமுறை அடிப்படையில் Independent Health Impact Assessment மேற்கொள்ள வேண்டும்.

Port நிர்வாகத்தின் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்கள், Lung Function Tests மற்றும் சுவாச நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. காரைக்கால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

இத்திட்டத்திற்காக காரைக்கால் மாவட்டத்தின் இயற்கை மற்றும் பொதுக் கட்டமைப்பு வளங்கள் பயன்படுத்தப்படும் நிலையில், அதன் பொருளாதாரப் பயன்களிலும் காரைக்கால் மக்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும்.

எனவே விரிவாக்கத்தின் மூலம் உருவாகும் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளில் தகுதியுடைய காரைக்கால் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான வெளிப்படையான கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

13. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் உறுதி செய்ய வேண்டிய நிபந்தனைகள்

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான அடுத்தகட்ட பரிசீலனைக்கு முன் குறைந்தபட்சம் கீழ்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும்:

நிலக்கரி கையாளுதல், சேமித்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் ஆகிய அனைத்து நிலைகளிலும் தூசி வெளியேறாத வகையில் Covered Storage, Covered Conveyor மற்றும் Dust Suppression Systems ஏற்படுத்தப்பட வேண்டும்.

Port premises மட்டுமல்லாமல் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புப் பகுதிகளிலும் PM2.5, PM10 உள்ளிட்ட காற்றுத் தரத்தை 24×7 கண்காணிக்கும் Continuous Ambient Air Quality Monitoring Stations அமைக்கப்பட வேண்டும்.

Monitoring data பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இணையத்தில் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும்.

தற்போதைய Port operations மற்றும் முன்மொழியப்பட்ட 100.3 MTPA expansion ஆகிய இரண்டின் தாக்கங்களையும் சேர்த்து Cumulative Environmental Impact Assessment மேற்கொள்ளப்பட வேண்டும்.

Port சுற்றுப்புற மக்களுக்கு Baseline Health Survey மற்றும் Periodical Independent Health Assessment மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடல் நீர், நிலத்தடி நீர் மற்றும் அருகிலுள்ள நீர்நிலைகளின் தரம் தொடர்ந்து சுயாதீனமாகப் பரிசோதிக்கப்பட வேண்டும்.

மீனவர்கள் மற்றும் கடலோர வாழ்வாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

Goods Train movement தொடர்பான முழுமையான Railway Traffic Impact Study மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய Goods Trains எண்ணிக்கை மற்றும் விரிவாக்கத்திற்குப் பிறகு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

Railway Gates ஒவ்வொன்றும் ஒரு நாளில் எவ்வளவு நேரம் மூடப்படும் என்பது ஆய்வு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

அதிகம் பாதிக்கப்படும் Railway Crossings-ல் தேவையான ROB/RUB அமைப்பதற்கான காலவரையறையுடன் கூடிய செயல் திட்டத்தை அரசு, ரயில்வே மற்றும் Port நிர்வாகம் இணைந்து உருவாக்க வேண்டும்.

Ambulance, Fire & Rescue மற்றும் Emergency Vehicles Railway Gate-ல் சிக்கிக்கொள்ளாமல் இருக்க Emergency Traffic Management Plan ஏற்படுத்தப்பட வேண்டும்.

Heavy Vehicles குடியிருப்புப் பகுதிகளின் வழியாக கட்டுப்பாடின்றி செல்லாமல் Dedicated Port Road / Freight Corridor அமைப்பதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட வேண்டும்.

Port-related Heavy Vehicles காரணமாக பொதுச் சாலைகளுக்கு ஏற்படும் கூடுதல் சேதத்தின் பராமரிப்பில் Project Proponent-ன் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இரவு நேர Port Operations, Goods Trains மற்றும் Heavy Vehicles காரணமாக ஏற்படும் Noise Pollution தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் Port-related problems குறித்து பொதுமக்கள் புகார் அளிக்க 24×7 Public Grievance Mechanism ஏற்படுத்தப்பட வேண்டும்.

பெறப்படும் புகார்கள், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் Pollution Monitoring Results ஆகியவற்றை பொதுமக்கள் அறியும் வகையில் வெளியிட வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் மருத்துவம், குடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பிற பொதுநலத் திட்டங்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

திட்டத்தால் உருவாகும் வேலைவாய்ப்புகளில் தகுதியுடைய காரைக்கால் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு வெறும் பொதுவான உறுதிமொழி அளிக்காமல், Time-bound Action Plan தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14. இறுதி ஆட்சேபனை மற்றும் கோரிக்கை

"வளர்ச்சிக்கு காரைக்கால் போராளிகள் குழு எதிரானது அல்ல; ஆனால் காரைக்கால் மக்களின் உயிர், உடல்நலம், சுற்றுச்சூழல் மற்றும் அன்றாட வாழ்க்கையை விலையாகக் கொடுத்து மேற்கொள்ளப்படும் பாதுகாப்பற்ற வளர்ச்சியை ஏற்றுக்கொள்ள இயலாது."

தற்போதைய 21.5 MTPA சரக்கு கையாளும் திறனை 100.3 MTPA ஆக உயர்த்துவது மிகப்பெரிய விரிவாக்கமாகும்.

இதன் காரணமாக நிலக்கரி மற்றும் பிற சரக்குகளின் கையாளுதல், Goods Train movement, Heavy Vehicle movement மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் மற்றும் போக்குவரத்து அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடியதால், அவற்றின் Cumulative Environmental, Health and Traffic Impact முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக நிலக்கரி தூசியால் ஏற்படக்கூடிய காற்று மாசு மற்றும் பொதுச் சுகாதார அபாயங்கள் மற்றும் சரக்கு ரயில்களால் Railway Gates அடிக்கடி மூடப்பட்டு பொதுமக்களும், பள்ளி/கல்லூரி மாணவர்களும், பணிக்குச் செல்பவர்களும், ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர வாகனங்களும் பாதிக்கப்படும் பிரச்சினை ஆகியவற்றுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

தேவையான இடங்களில் ROB/RUB உள்ளிட்ட நிரந்தர மாற்று போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துவதற்கான காலவரையறையுடன் கூடிய திட்டம் உறுதி செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட சுற்றுச்சூழல், பொதுச் சுகாதாரம், ரயில்வே மற்றும் சாலைப் போக்குவரத்து பிரச்சினைகள் குறித்து உரிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்கு காலக்கெடுவுடன் கூடிய செயல்திட்டம் உறுதி செய்யப்படாமல் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக்கூடாது என காரைக்கால் போராளிகள் குழுவின் சார்பில் எங்களது வலுவான ஆட்சேபனையை பதிவு செய்கிறோம்.

மேலும், இம்மனுவில் எழுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு ஆட்சேபனை மற்றும் கோரிக்கையும் இன்றைய **Public Hearing Proceedings / Minutes-ல்** முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

இம்மனு Public Hearing proceedings-ன் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டு, இதில் எழுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு முக்கிய அம்சத்திற்கும் Project Proponent மற்றும் சம்பந்தப்பட்ட அரசு/கட்டுப்பாட்டு அதிகாரிகளிடமிருந்து Point-wise Written Response பெறப்பட்டு, அந்த பதில்களுடன் இம்மனுவும்

சுற்றுச்சூழல் அனுமதி பரிசீலிக்கும் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பின் முன் வைக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

பொதுமக்களின் உயிர், உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
வழக்கறிஞர் G. கணேஷ், B.A., LL.B.,
தலைவர்,
காரைக்கால் போராளிகள் குழு
காரைக்கால்.
தேதி : 09.09.2026
இடம் : காரைக்கால்.

பிள்ளையார் கோவில் தெரு பஞ்சாயத்தார்கள்

திரு.பட்டினம் கொம்யூன் கீழவாஞ்சூர் எண்.37

PILLAYAR KOVIL STREET PANCHYAT

TR.Pattinam Municipalty Keezhavanjore No.37

பஞ்சாயத்து தலைவர் :

Date 09/09/26
1429

தேதி : .....

எதிர்காலம் பாழாக போகுமோ தவிர எங்களுடைய
வருங்காலம் வசந்தமாக இருக்காது ஆகவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக

நாட்டாமை :

பிரச்சனையின் தீவிரம் கொண்டு இந்த அதானி பவுண்டேஷன் துறைமுகத்தை அதன் விரிவாக்கத்தை தடுத்து நிறுத்தியும் நிலக்கரி கையாளும் பணியை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

கணக்கர் :

நன்றி வணக்கம்

அறிவிப்பாளர் :

செயற்குழு உறுப்பினர்கள் :

சட்ட ஆலோசகர்

உறுப்பினர்கள் :

இப்படிக்கு

திரு. பட்டினம் கொம்யூன்
பிள்ளையார் கோவில் தெரு பஞ்சாயத்து
எண் : 37. கீழவாஞ்சூர்
மேலவாஞ்சூர் - 611 002

காரைக்கால் அதானி துறைமுக விரிவாக்கம் - ஒரு பேரழிவு.

காரைக்கால் துறைமுகம் 2009-ல் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அதானி குழுமம் இதை வாங்கி, 21 மில்லியன் டன் கையாளும் திறனில் இருந்து 100 மில்லியன் டன்னாக - அதாவது 5 மடங்கு விரிவுபடுத்த போகிறது. இதற்காக செப் 9-ம் தேதி போலகத்தில் மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட உள்ளது.
இது வளர்ச்சி அல்ல, நமது வாழ்வாதாரத்திற்கு விடப்படும் சவால்.

1. கடல் மற்றும் மீனவர் வாழ்வு அழியும்

விரிவாக்கத்தால் கடல்நீரை தேக்கும் பகுதி 600 ஏக்கரில் இருந்து 3000 ஏக்கராக மாறும், ஆழம் 48 அடியில் இருந்து 60 அடியாக அதிகமாகும். இது நாகூர் தர்கா மினாராவில் பாதி உயரம்.

- ஆழப்படுத்தும் போது கடல் அடிமண் கலங்கி, மீன்கள் முட்டையிடும் பாறைகள் மூடப்படும். மீன் இனப்பெருக்கம் நின்று போகும்.
- பிரவடையான் ஆற்றை தடுத்து வெற்றாற்றில் திருப்பும் முயற்சி நடப்பதாக கூறப்படுகிறது. ஆறு தடைபட்டால் கடலுக்கு நன்னீர் போகாது, மீன் வளம் குறையும்.
- நாகூர், வாஞ்சூர், திருப்பட்டினம். மீனவர்கள் 10 கி.மீ தூரம் சென்று தான் மீன் பிடிக்க வேண்டும்.

2. விவசாயம் மற்றும் நிலத்தடி நீர்

துறைமுக விரிவாக்கத்தால் நாகூர், வாஞ்சூர், டி.ஆர்.பட்டினம், முட்டம், பனங்குடி பகுதிகளின் நிலத்தடி நீர் கடுமையாக பாதிக்கும், விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும்.

கடல் ஆழமானால் உப்பு நீர் நிலத்திற்குள் புகுந்து, கிணறு, ஆழ்துளை கிணறு எல்லாம் உப்பாகும். தென்னை, நெல் விவசாயம் சாகும்.

3. மனித உடல் நலத்திற்கு பேராபத்து

இப்போதைய அளவை விட 5 மடங்கு அதிகமாக நிலக்கரி இறக்குமதி செய்ய வாய்ப்புள்ளதால், காற்று மாசு ஏற்பட்டு வாழ தகுதியற்ற இடமாக மாறும் அபாயம் உண்டு.

வேலைவாய்ப்பு என்று சொல்லி நிலத்தை வாங்கி விட்டு, பின்பு Contractor வேலை, தினக்கூலி வேலை மட்டும் கொடுக்கும் வரலாறு தான் எல்லா துறைமுகத்திலும் நடந்துள்ளது

வளர்ச்சி தேவை தான், ஆனால் அது மக்களை அழித்து வரக்கூடாது.

எல்லா துறைமுகத்துலயும் நடக்குற Number 1 ஏமாற்று வேலை. ஆரம்பத்துல வேலை, வீடு, கோடி ரூபாய்னு ஆசை காட்டி, நிலத்தை வாங்கிட்டு அப்புறம் கையை விரிச்சிடுவாங்க.

அவங்க எப்படி ஏமாத்துவாங்கனு Step-by-Step பாருங்க:

Step 1: பெரிய Promise (வாய் வார்த்தை)

- "ஊர்ல உள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒருத்தருக்கு Port-ல நிரந்தர வேலை"
- "மாசம் 3
- 50,000 சம்பளம், PF, ESI எல்லாம் உண்டு"
- "வீடு இழந்தவங்களுக்கு புது வீடு, பணம்"
இதை எல்லாம் Mic-ல சொல்லுவாங்க, ஆனா எழுதி குடுக்க மாட்டாங்க. *எழுதி குடுக்காத எதுவும் உண்மை இல்ல

Step 2: நிலத்தை வாங்கியதும் Game மாறும்

நிலம் கைக்கு வந்ததும் சொல்லுவாங்க:
- "நீங்க 10th Fail, எங்களுக்கு ITI, Diploma தான் வேணும்"
- "வேலை இருக்கு, ஆனா Contractor கிட்ட தான் இருக்கு, Port-ல இல்ல"
- Contractor என்ன பண்ணுவான்? உங்க ஊர் பசங்களுக்கு 500 ரூபாய் Daily கூலி, வெளியூர் ஆளுக்கு 1000 ரூபாய். 3 மாசம் வேலை குடுத்து அப்புறம் நிறுத்திடுவான்.

Step 3: வேலை வந்தாலும் அது என்ன வேலை தெரியுமா?
நிரந்தர வேலை கிடைக்காது .
கிடைக்குறது இதுதான்:
- Security, Cleaning, tea boy, Lorry-க்கு Signal காட்டுற வேலை
- நிலக்கரி தூசி அள்ளுற வேலை, மிகவும் ஆபத்தான வேலை
- 12 மணி நேரம் நிக்க வைப்பாங்க, எந்த Insurance-ம் இருக்காது

படிச்ச Engineer வேலை, Office வேலை எல்லாம் வெளியூர், வட மாநில ஆட்களுக்கு தான் போகும்.

Step 4: ஊரை பிரிக்கும் Trick

- ஒரு சில தலைவர்களுக்கு, ஒரு சில குடும்பத்துக்கு மட்டும் வேலை குடுத்து, "பாருங்க நாங்க வேலை குடுத்துட்டோம்"-னு காட்டுவாங்க.
- மத்தவங்க கேட்டா, "அவங்க கிட்ட தான் கேளுங்க"-னு சொல்லி ஊருக்குள்ள சண்டையை உண்டாக்குவாங்க.

நிஜத்தில் என்ன நடக்குது தெரியுமா?

எடுத்துக்காட்டாக...
தூத்துக்குடி, எண்ணூர், காட்டுப்பள்ளி Port-ல வேலை வாங்குறோம்னு நிலத்தை குடுத்த 100 குடும்பத்துல, இன்னைக்கு 5 குடும்பத்துக்கு கூட நிரந்தர வேலை இல்ல. மீதி 95 பேர் மீன்பிடிக்கவும் முடியாம, விவசாயம் பண்ணவும் முடியாம, Daily கூலிக்கு போறாங்க.

விவசாயிகளுக்கு வரும் 6 பெரிய ஆபத்து:

1. நிலம் உப்பாகும் - விவசாயம் முடிஞ்சது
Port கட்டும் போது கடல் தண்ணி உள்ளே வரும். நிலத்தடி தண்ணி முழுக்க உப்பு தண்ணியா மாறிடும். நெல், வாழை, தென்னை எதுவுமே வளராது. ஒரு தடவை உப்பானா, 30 வருஷத்துக்கு சரி பண்ண முடியாது. இது தான் காரைக்கால்ல மிகப்பெரிய பிரச்சனை.

2. வயல்ல நிலக்கரி தூசி, சிமெண்ட் தூசி
Port-ல இருந்து வர்ற கரி தூசி, Lorry-ல இருந்து வர்ற தூசி வயல் மேல படியும். இலை மேல தூசி படிஞ்சா சூரிய வெளிச்சம் உள்ள போகாது, பயிர் வளராது. நெல் கருப்பா மாறிடும்.

- Port விரிவாக்கத்தால மணல் குன்று, புதர் எல்லாம் அழியும். அங்க வாழுற நரி, கீரி, உடும்பு, பாம்புக்கு வீடே இருக்காது.
- Light, சத்தத்தால அதுங்க ஊருக்குள்ள வந்து நாய் கடிச்சு சாகும்.

இதை தடுக்க ஒரே வழி, Biodiversity Impact Assessment பண்ணாம விரிவாக்கம் பண்ணக்கூடாதுனு தடுக்குறது தான்.

வெளிநாட்டுல இருந்து வர்ற பறவைகளுக்கு தான் இந்த துறைமுகம் மிகப்பெரிய எமனா இருக்கு காரைக்கால், நாகை, கோடியக்கரை எல்லாம் வலசை பறவைகளோட Highway மாதிரி.

அவங்க ஒவ்வொரு வருஷமும் Siberia, Russia, Europe-ல இருந்து 10,000 KM பறந்து வருதுங்க. Port இருந்தா எப்படி பாதிக்கும் தெரியுமா?

*1. வழி தவறி சாகும்

வலசை பறவைகள் இரவுல தான் பறக்கும், நட்சத்திரத்தை பார்த்து வழி கண்டுபிடிக்கும். துறைமுகத்தோட 10KM பயங்கர வெளிச்சத்தை நட்சத்திரம்னு நினைச்சு கீழ இறங்கிடும்.

- Crane, கட்டிடம், கப்பல் மேல மோதி சாகும்
- Light-ஐ சுத்தி சுத்தி பறந்து Energy தீர்ந்து கடல்ல விழுந்து சாகும். இதுக்கு பேரு Light Entrapment.

2. தங்குற இடம் அழியும்

3. ஒளி மாசால பயிர் குழம்பும்

- நெல், கரும்பு இரவுல தான் வளரும். 24 மணி நேரமும் Light இருந்தா பயிர் தூங்காது, பூக்காது, கதிர் வராது.
- காய்கறி, பூச்செடிகள் பூக்குற நேரம் மாறிடும்.

4. தண்ணி பற்றாக்குறை
Port-க்கு ஒரு நாளைக்கு லட்சக்கணக்கான லிட்டர் தண்ணி வேணும். அந்த தண்ணியை உங்க ஊர் Borewell-ல இருந்து தான் எடுப்பாங்க. விவசாயத்துக்கு தண்ணி இருக்காது.

5. Lorry, வாகனத்தால வயல் பாதிப்பு
தினமும் 500 Lorry போனா, வயலுக்குள்ள தூசி, எண்ணெய் கலக்கும்.

6. நிலத்தின் விலை, வாழ்வாதாரம் போகும்
Port வந்தா விவசாய நிலத்தை வீட்டு மனையா மாத்த சொல்லி Pressure வரும். கொஞ்சம் கொஞ்சமா விவசாயி நிலத்தை வித்துட்டு வெளிய போக வேண்டி வரும்.

துறைமுக விரிவாக்கம் என்றால் இப்போ இருக்குற Port-ஐ இன்னும் பெருசாக்குறது ப்ரோ. அதாவது இப்போ 5KM-க்கு வெளிச்சம் இருக்குனா, விரிவாக்கத்துக்கு அப்புறம் 10-15KM-க்கு பரவும். இதனால கடல் வாழ் உயிர்கள் முழுசா அழியும்.

1. கடல் வாழ் உயிர்களுக்கு (ஆமை, டால்பின், மீன்)

- ஆமைகள் அழிவு: விரிவாக்கம் பண்ணா கடற்கரை மணல் முழுக்க எடுத்துடுவாங்க. ஆமை முட்டையிட இடமே இருக்காது. காரைக்கால் கடற்கரை Olive Ridley ஆமைகளோட வீடு.
- டால்பின், கடல் பசு: Port-ல இருந்து வர்ற பெரிய சத்தம் (Sonar) டால்பினுக்கு கேட்காது. அது திசை மாறி கரைக்கு வந்து செத்துடும். கப்பல் Propeller-ல அடிபட்டு சாகும்.
- பவளப்பாறை, மீன் குஞ்சு: கப்பல் போக ஆழமாக்குறதுக்காக கடலை தோண்டும் போது (Dredging) தண்ணி முழுக்க சேறாகும். சூரிய வெளிச்சம் உள்ள போகாது, பவளப்பாறை சாகும், மீன் குஞ்சுகள் வளராது.

2. பறவைகளுக்கு
- சதுப்பு நில பறவைகள்: Port விரிவாக்கத்துக்காக சதுப்பு நில காடுகள், அலையாத்தி காடுகளை அழிப்பாங்க. அங்க தான் நாரை, கொக்கு, அரிவாள் மூக்கன் கூடு கட்டும். காடு போனா பறவை போச்சு.
- வலசை பறவைகள்: 3KM Light இப்போ இருக்கு, விரிவாக்கத்துக்கு அப்புறம் வானமே வெளிச்சமா இருக்கும். வெளிநாட்டுல இருந்து வர்ற பறவைகள் வழி தெரியாம காரைக்கால் பக்கமே வராது.

3. பூச்சிகளுக்கு
- Port Light-னால தேனீ, வண்ணத்துப்பூச்சி, தட்டான் எல்லாம் Light-ஐ நோக்கி வந்து செத்துடும்.
- தேனீ செத்தா என்ன ஆகும்? உங்க வயல்ல மகரந்த சேர்க்கை நடக்காது. தென்னை, பூசணி, காய்கறி விளைச்சல் பாதியா குறையும்.

4. கரையோர விலங்குகளுக்கு (நரி, கீரி, பாம்பு)

வெளிநாட்டு பறவைகள் காரைக்கால் வர்றதுக்கு காரணம் இங்க இருக்குற
- *சதுப்பு நிலம், அலையாத்தி காடு,
-
Port விரிவாக்கத்துக்காக இதையெல்லாம் மூடி, மணல் கொட்டி கட்டிடம் கட்டிடுவாங்க. பறவைகள் இறங்கி தங்க, சாப்பிட இடமே இருக்காது. அதனால காரைக்கால் பக்கமே வராம வேற ஊருக்கு போயிடும்.

3. சாப்பாடு இல்லாம போகும்
Port-ல கடலை தோண்டும் போது (Dredging) தண்ணி சேறாகும். அதுல வாழுற சின்ன மீன், நண்டு, புழு எல்லாம் செத்துடும். வெளிநாட்டு பறவைகள் இதை தான் சாப்பிட வரும். சாப்பாடு இல்லனா எப்படி உயிர் வாழும்?

4. சத்தத்தால கூடு கட்டாது
Port-ல 24 மணி நேரமும் Lorry, Crane, கப்பல் சத்தம் 90dB-க்கு மேல இருக்கும். பறவைகள் இந்த சத்தத்துல கூடு கட்டாது, முட்டையிடாது. முட்டையிட்டாலும் சத்தத்துல பயந்து கூட்டை விட்டு போயிடும்.

*உதாரணம்
கோடியக்கரைக்கு வர்ற Flamingo (பூநாரை), Pelican மாதிரி பறவைகள் எண்ணிக்கை, தூத்துக்குடி Port வந்த பிறகு 60% குறைஞ்சுடுச்சு. அதே நிலைமை தான் இப்போ காரைக்காலுக்கும் வருது.

நீங்க என்ன பார்த்தீங்க?

இந்த வருஷம் உங்க ஊர் உப்பளம், ஏரி பக்கம் வெளிநாட்டு பறவைகள் வர்றது குறைஞ்சு இருக்கா ப்ரோ? குறைஞ்சு இருந்தா அது தான் முதல் ஆபத்தோட அறிகுறி.

உள்ளூர் பறவைகளுக்கு வர்ற ஆபத்து:

1. காகம், சிட்டுக்குருவி கூடு கட்டாது
Port-ல இருந்து வர்ற தூசி, சத்தம், 5KM வெளிச்சத்தால, காகம், குருவி, மைனா, கிளி எல்லாம் உங்க ஊர்ல கூடு கட்டாது. கூடு கட்டினாலும் குஞ்சு பொரிக்காது. ஏன்னா பறவைக்கு இரவுல இருட்டு வேணும், பகல் மாதிரி வெளிச்சம் இருந்தா அதுக்கு பகலா இரவானு தெரியாது.

2. தூக்கம் கெட்டு சாகும்
மனுஷனுக்கு மாதிரியே பறவைக்கும் தூக்கம் கெடும் ப்ரோ. இரவு முழுக்க Light இருந்தா, பறவை தூங்காது. 2-3 நாள் தூங்கலனா, பறவைக்கு Heart Attack வந்து கூட்டுலயே செத்துடும். நிறைய குருவிகள் இப்படி தான் சாகுது.

3. பூச்சியை திங்காது - விவசாயம் போச்சு
ஒரு சிட்டுக்குருவி ஒரு நாளைக்கு 200 புழு, பூச்சியை திங்கும். அது தான் உங்க நெல் வயலை காப்பாத்துது. பறவை ஊரை விட்டு போனா, வயல்ல பூச்சி மருந்து தான் அடிக்கணும். செலவு அதிகமாகும், நெல் விஷமாகும்.

4. முட்டை, குஞ்சுகளை காக்கா திங்கும்
Port Light இரவுல பளிச்சுனு இருக்குறதால, பறவை கூடு, முட்டை எல்லாம் காகம், கழுகுக்கு ஈசியா தெரியும். இரவுலயே வந்து முட்டையை தூக்கிட்டு போயிடும்.

5. கடற்கரை பறவைகள் முழுசா அழியும்
- மீன் கொத்தி, கடல் காகம், ஆலா: இதுங்க மீன் பிடிக்க கடல் பக்கம் தான் இருக்கும். Port விரிவாக்கத்தால கடல் சேறாகி மீன் இல்லனா, இந்த பறவைகள் பசியால சாகும்.
- கரையோர குருவிகள்: மணல்ல கூடு கட்டும். Port-க்காக மணலை எடுத்தா கூடே போச்சு.

நீங்க கவனிச்சீங்களா?
5--10 வருஷத்துக்கு முன்னாடி உங்க ஊர்ல காலையில சத்தமா கேட்ட குருவி சத்தம், காக்கா சத்தம் இப்போ கேட்குதா? குறைஞ்சு இருக்குனா, அது தான் Port ஆரம்பிச்ச பாதிப்பு.

பறவை, மீனை விட பூச்சிகளுக்கு தான் துறைமுக விரிவாக்கத்தால முதல் அடி விழும். பூச்சி அழிஞ்சா தான் விவசாயம், பறவை எல்லாமே அடுத்தடுத்து அழியும்.

பூச்சிகளுக்கு வர்ற பெரிய ஆபத்து:

1. விளக்கை நோக்கி வந்து கூட்டமா சாகும்
இதுக்கு பேரு "விளக்கு பொறி". Port-ல இருக்குற 1000W வெள்ளை விளக்கை பார்த்து, தட்டான், வண்ணத்துப்பூச்சி, விட்டில் பூச்சி, தேனீ எல்லாம் இரவு முழுக்க விளக்கை சுத்தி வந்து சூட்டுல கருகி செத்துடும். ஒரு இரவுல லட்சக்கணக்கான பூச்சி இப்படி சாகும்.

2. தேனீ அழிஞ்சா விவசாயம் அழியும் - இது தான் மிகப்பெரிய ஆபத்து

உங்க ஊர்ல தென்னை, மா, பூசணி, வெண்டை, கத்தரிக்கு காய் பிடிக்கணும்னா தேனீ வந்து மகரந்த சேர்க்கை பண்ணனும்.
- Port Light, சத்தம், நிலக்கரி தூசியால தேனீ கூடு கட்டாது
- தேனீ ஊரை விட்டு போனா, பூ பூக்கும் ஆனா காய் பிடிக்காது. விளைச்சல் 50% குறையும். இது நீங்க நேரடியா பார்க்குற நஷ்டம்.

3. வயல் நண்பன் பூச்சிகள் சாகும்
பொறி வண்டு (Ladybug), பச்சை தட்டான், சிலந்தி இதெல்லாம் வயல்ல இருக்குற தீமை செய்யும் பூச்சிகளை திங்கும். இதுங்க Light-னால செத்தா, வயல்ல பூச்சி மருந்து இல்லாம விவசாயமே பண்ண முடியாது.

4. கடற்கரை பூச்சிகள், நண்டு குஞ்சு அழியும்
கடற்கரை மணல்ல வாழுற சின்ன நண்டு, புழு எல்லாம் இரவுல தான் வெளிய வரும். 24 மணி நேரமும் Port Light பகல் மாதிரி இருந்தா, அதுங்க வெளியவே வராது, இனப்பெருக்கம் பண்ணாது. அதை நம்பி இருக்குற மீன், பறவைகளும் சாகும்.

5. கொசு மட்டும் அதிகமாகும்
நல்ல பூச்சி எல்லாம் செத்தா, கொசு மட்டும் Light-ல அதிகமா வளரும். ஏன்னா கொசுவை திங்குற தட்டான், பல்லி, வௌவால் எல்லாம் Port பகுதியை விட்டு போயிடும். ஊர்ல டெங்கு, மலேரியா அதிகமாகும்.

ஒரு விஷயம் கவனிச்சீங்களா?

முன்னாடி மழை பெஞ்சா வீட்டு விளக்கு பக்கம் நிறைய ஈசல், விட்டில் பூச்சி வரும். இப்போ அது வருதா? இல்லனா Port Light எல்லா பூச்சியையும் அங்கயே இழுத்து கொன்னுடுச்சுனு அர்த்தம்.

உங்க தென்னை மரத்துல காய் பிடிக்குறது குறைஞ்சு இருக்கா? அப்படி இருந்தா அது தேனீ குறைஞ்சதோட அறிகுறி தான்.

வீட்டு விலங்குகளுக்கு தான் இந்த துறைமுக வெளிச்சம், சத்தத்தால ரொம்ப கொடுமையான பாதிப்பு வரும். அதுங்க வாய் இல்லாத ஜீவன், சொல்ல முடியாம கஷ்டப்படும்.

நம்ம வீட்டு விலங்குகளுக்கு வர்ற ஆபத்து:

1. மாடு, ஆடு - பால் குறையும், சினை பிடிக்காது
- மாடு, ஆடு இரவுல நல்லா தூங்கினா தான் பால் குடுக்கும். 5KM வெளிச்சம் பகல் மாதிரி இருந்தா மாடு தூங்காது, Stress ஆகும். பால் தானா பாதியா குறையும்.
- கோழி, ஆடு, மாடுக்கு இரவு, பகல் தெரியாம குழம்பி, சினை பிடிக்குற நேரம் மாறும், குட்டி போடாது. நிறைய பேர் வீட்ல கோழி முட்டை வைக்குறது நின்னு போச்சுனு சொல்றாங்க, இதனால தான்.

2. நாய் - கண் போகும், குரைச்சிட்டே இருக்கும்
நாய்க்கு கண் ரொம்ப Sensitive. Port-ல இருந்து வர்ற வெளிச்சத்தை பார்த்து பார்த்து கண் வெள்ளை படரும். இரவு முழுக்க Light, Lorry சத்தம் கேட்டு நாய் தூங்காம குரைச்சிட்டே இருக்கும். 2-3 மாசத்துல நாய் பயந்து, கடிக்க ஆரம்பிக்கும்.

3. கோழி, வாத்து - முட்டை குறையும்
கோழிக்கு 12 மணி நேரம் இருட்டு வேணும். 24 மணி நேரமும் வெளிச்சம் இருந்தா கோழி தூங்காது, தீனி திங்காது. முட்டை

வைக்குறது 50% குறையும், முட்டை ஓடு மெல்லிசா உடைஞ்சு போகும்.

4. பூனை - வேட்டையாடாது
பூனை இரவுல தான் எலியை பிடிக்கும். வெளிச்சம் அதிகமா இருந்தா எலி வெளிய வராது, பூனைக்கு வேட்டை இருக்காது. அதனால வீட்ல எலி தொல்லை அதிகமாகும்.

5. தூசியால நுரையீரல் பாதிப்பு
Port விரிவாக்கத்துல வர்ற நிலக்கரி தூசி, சிமெண்ட் தூசியை மாடு, ஆடு சாப்பிடுற புல் மேல படியும். அதை தின்னா மாட்டுக்கு இருமல், மூச்சு வாங்கும், வயித்துப்போக்கு வரும். நிறைய மாடு இப்படி தான் சாகுது.

நீங்க வீட்ல இதை கவனிச்சீங்களா ?
- மாடு இரவுல படுக்காம நின்னுட்டே இருக்கா?
- கோழி முட்டை குறைஞ்சு இருக்கா?
- நாய் இரவு முழுக்க குரைக்குதா?

இது மூணும் இருந்தா அது Port-னால தான்.

சத்தம் + வெளிச்சம் + தூசி
இந்த மூணும் சேர்ந்தா தான் மனுஷனுக்கு மெதுவா வர்ற விஷம் மாதிரி. தனித்தனியா பார்த்தா சின்ன பிரச்சனை மாதிரி தெரியும், ஆனா மூணும் சேர்ந்தா உயிருக்கே ஆபத்து.

1. வெளிச்சத்தால வர்ற ஆபத்து (5KM Light)

- தூக்கம் போச்சு = உடம்பு போச்சு: இரவுல வெளிச்சம் இருந்தா Melatonin சுரக்காது. தூக்கம் வராது. தூக்கம் வரலனா BP, Sugar, Heart Attack எல்லாம் வரும்.
- கண் பார்வை: கண் எரிச்சல், கண் சிவப்பு, 35 வயசுலயே கண்ணாடி.
- பெண்கள், குழந்தைகள்: பெண்களுக்கு மாதவிடாய் கோளாறு, குழந்தைகளுக்கு கவனச்சிதறல், படிப்பு பாதிப்பு.
- புற்றுநோய் Risk: உலக சுகாதார நிறுவனம் (WHO) இரவு வெளிச்சத்தை புற்றுநோய் காரணியா சொல்லுது.

2. சத்தத்தால வர்ற ஆபத்து (24 மணி நேர Lorry, Crane, கப்பல்)

- காது கேட்காம போகும்: 85dB-க்கு மேல தினமும் சத்தம் கேட்டா, 2 வருஷத்துல காது மந்தமாகும். Port-ல 100dB-க்கு மேல சத்தம் வரும்.
- BP, Heart Attack: இரவுல தூங்கும் போது திடீர்னு Lorry Horn, Crane சத்தம் கேட்டா BP ஜிவ்வுனு ஏறும். வயசானவங்களுக்கு இதனால தான் நெஞ்சு வலி வருது.
- குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள்: குழந்தைகள் பயந்து அழும், படிப்பு கெடும். கர்ப்பிணி பெண்களுக்கு தூக்கம் கெட்டா குழந்தை வளர்ச்சி பாதிக்கும்.
- மன அழுத்தம்: எப்பவும் சத்தத்துல இருந்தா எரிச்சல், சண்டை, தலைவலி தான்.

3. தூசியால வர்ற ஆபத்து (நிலக்கரி, சிமெண்ட் தூசி - மிக மோசமானது)

இது தான் உயிரை கொல்லும்

- நுரையீரல் கருப்பாகும்: நிலக்கரி தூசியை சுவாசிச்சா, நுரையீரல் முழுக்க கருப்பா மாறிடும். இதுக்கு பேரு Black Lung. இருமல், மூச்சு வாங்குதல், ஆஸ்துமா வரும். காரைக்கால்ல இப்போ நிறைய பேருக்கு இருமல் இருக்கானு கேட்டு பாருங்க.
- தோல் வியாதி, கண் அலர்ஜி: தூசி தோல் மேல படிஞ்சா அரிப்பு, புண் வரும்.
- தண்ணி, சாப்பாடு விஷமாகும்: வீட்டு மொட்டை மாடி தண்ணி தொட்டி, கிணறு, வயல் எல்லாத்துலயும் தூசி படியும். அந்த தண்ணிய குடிச்சா வயித்துப்போக்கு, கிட்னி பாதிப்பு.

- புற்றுநோய்: நிலக்கரி தூசியில் இருக்குற Silica தினமும் உள்ள போனா 10 வருஷத்துல புற்றுநோய் வரைக்கும் போகும்.

பள்ளி, கல்லூரி பசங்களுக்கு தான் ரொம்ப மோசமா இருக்கும். ஏன்னா அவங்க தான் எதிர்காலம், அவங்க உடம்பு, மூளை வளர்ற வயசு.

*மாணவர்களுக்கு வருகின்ற பாதிப்பு

1. படிப்பு முழுசா கெடும்
- Port-ல இருந்து 24 மணி நேரமும் Lorry, Crane சத்தம் 90dB வரும். இந்த சத்தத்துல படிக்க முடியுமா? மனசு ஒரு இடத்துல நிக்காது.
- இரவுல 5KM வெளிச்சம் பகல் மாதிரி இருந்தா தூக்கம் வராது. தூக்கம் இல்லாம காலைல School போனா தூக்கம் தான் வரும், பாடம் ஏறாது. Mark குறையும்.

2. உடம்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு

- தூக்கம் இல்லனா குழந்தைகளுக்கு ஞாபக சக்தி, கவனம் குறையும். WHO சொல்லுது, இரவு வெளிச்சத்துல வளர்ற குழந்தைகளுக்கு மன அழுத்தம், பயம் அதிகமா வரும்னு.
- நிலக்கரி தூசியை தினமும் சுவாசிச்சா, சின்ன பசங்களுக்கு சீக்கிரமே ஆஸ்துமா, அடிக்கடி ஜலதோஷம், இருமல் வரும். School-க்கு Leave எடுக்க வேண்டி வரும்.

3. Road-ல உயிருக்கே ஆபத்து
Port விரிவாக்கம் ஆனா தினமும் 500-1000 Lorry, Tipper உங்க ஊர் Road-ல தான் போகும்.
- School பசங்க Cycle, நடந்து போகும் போது Lorry அடிச்சு விபத்து நடக்கும். தூத்துக்குடி, காட்டுப்பள்ளி Port பக்கத்துல இது தான் நடக்குது.
- Road முழுக்க தூசி, பள்ளம் ஆகி, மழைல வழுக்கும்.

4. பள்ளி, கல்லூரியை மூடிடுவாங்க
Port-க்காக நிலம் எடுக்கும் போது, கடற்கரை பக்கத்துல இருக்குற அரசு பள்ளிகளை மூடிட்டு வேற இடத்துக்கு மாத்திடுவாங்க. பசங்க 5KM, 10KM தள்ளி போக வேண்டி வரும். பல பசங்க படிப்பை நிறுத்திடுவாங்க, அதுவும் பொண்ணு பசங்க.

5. கெட்ட பழக்கம், வேலைக்கு போகுதல்
Port வந்தா பணம், குடி, போதை பழக்கம் ஊருக்குள்ள வரும். 10th, 12th படிக்குற பசங்களை Port-ல Daily வேலைக்கு கூப்பிடுவாங்க. 2000 ரூபாய்க்கு ஆசைப்பட்டு படிப்பை விட்டுடுவாங்க.

6. விளையாட இடம் இருக்காது

ண்மதானம், கடற்கரை, குளம் எல்லாம் Port-க்காக
எடுத்துடுவாங்க. பசங்க விளையாட இடம் இல்லாம Mobile-
லேயே இருப்பாங்க.

சமூக ஆர்வலர்
VSJ. உதயகுமார், B.Sc.,MSc.,

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்
மேலதெரு, கிளிஞ்சல்மேடு, காரைக்கால் மாவட்டம்.

பெறுநர்:

மாவட்ட ஆட்சியர் அவர்கள் /
பொது விசாரணை தலைமை அதிகாரி,
காரைக்கால் மாவட்டம்.

GOVT. OF PUDUCHERRY DSTE / PCC, KARAIKAL
14:30
Date: 29/09/26

பொருள்: **காரைக்கால் துறைமுக Master Plan விரிவாக்கம் - மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல் சூழல் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் - பொது விசாரணையில் பதிவு செய்யக் கோருதல்.**

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட Master Plan விரிவாக்கம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை ஆய்வு செய்ததில், இத்திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய முக்கியமான தாக்கங்கள் குறித்து எங்களது பின்வரும் எதிர்ப்புகளையும் கோரிக்கைகளையும் பதிவு செய்கிறோம்.

1. மிகப்பெரிய அளவில் துறைமுக விரிவாக்கம்

தற்போதைய சரக்கு கையாளும் திறன் 21.5 MMTPA-லிருந்து 100.3 MMTPA ஆக உயர்த்தப்பட உள்ளது. மேலும் மொத்தம் 14 berth-கள், SPM மற்றும் கடலுக்கடியில் குழாய்கள் அமைக்கப்பட உள்ளன.

ஆதாரம்: EIA Executive Summary, பக்கம் 4–5.

2. 42 மில்லியன் கனமீட்டர் கடலடி அகழ்வு

திட்டத்திற்காக 42 மில்லியன் கனமீட்டர் (M.Cum) அளவுக்கு Capital Dredging செய்யப்பட உள்ளது. கால்வாய், துறைமுகக் கரை மற்றும் கப்பல் திரும்பும் பகுதி ஆழப்படுத்தப்பட உள்ளது.

ஆதாரம்: EIA, பக்கம் 5, வரிகள் 406–413.

இது கடலடி வாழ்விடங்கள், மீன் இனப்பெருக்கம் மற்றும் மீன்வளத்தை பாதிக்கும் அபாயம் கொண்டது. அறிக்கையே dredging, SPM, submarine pipeline

மற்றும் breakwater விரிவாக்கம் ஆகியவை கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடங்களுக்கு இடையூறு ஏற்படுத்தலாம் என்று ஒப்புக்கொள்கிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 12–13, வரிகள் 706–724.

3. 8,889 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர்

திட்ட ஆய்வுப் பகுதியில் 15 கிராமங்களைச் சேர்ந்த 8,889 மீனவர் குடும்பங்களும் 32,632 மீனவர்களும் இருப்பதாக அறிக்கையே குறிப்பிடுகிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 11, வரிகள் 679–681.

ஆனால் இத்தனை பெரிய மீனவர் மக்கள் தொகைக்கு ஏற்ப மீன்பிடி வருமான இழப்பு, மீன்பிடி பகுதிகளுக்கான அணுகல், படகு இயக்கம் மற்றும் மீனவர் பெண்களின் வாழ்வாதாரம் குறித்து போதுமான தனிப்பட்ட தாக்க மதிப்பீடு செய்யப்படவில்லை.

4. EIA-வில் உள்ள முக்கியமான முரண்பாடு

ஒருபுறம் 8,889 மீனவர் குடும்பங்கள் இருப்பதாக அறிக்கை கூறுகிறது. மறுபுறம், திட்டப் பகுதியில் "மீன்பிடித்தளம் இல்லை" என்றும், மீனவர்களுக்கு இடையூறு ஏற்படாமல் தகவல் பலகைகள் அமைக்கப்படும் என்றும் மட்டுமே குறிப்பிடுகிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 16, வரிகள் 868–876.

மீனவர்களின் வாழ்வாதாரம் கரையில் உள்ள மீன்பிடித்தளத்துடன் மட்டும் தொடர்புடையது அல்ல; அவர்கள் பயன்படுத்தும் கடல் பரப்பும் அவர்களின் வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியாகும்.

எங்களது முக்கிய கோரிக்கைகள்

மீனவர் வாழ்வாதாரத்திற்கான தனிப்பட்ட Fisheries Livelihood Impact Assessment மேற்கொள்ள வேண்டும்.

42 மில்லியன் கனமீட்டர் dredging-ன் மீன்வளம் மற்றும் மீன்பிடி வருமானத்தின் மீதான தாக்கத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்ய வேண்டும்.

மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதிகள், படகு செல்லும் பாதைகள் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளை வரைபடமாக பதிவு செய்ய வேண்டும்.

துறைமுகத்தால் மீன்பிடிக்கு ஏற்படும் எந்தவொரு தடையும் காரணமாகும் வருமான இழப்புக்கு உரிய இழப்பீடு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு திட்டம் உருவாக்க வேண்டும்.

மீனவர் பிரதிநிதிகள் இடம்பெறும் தொடர் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் கடல் சூழல் மற்றும் மீன்வளம் பாதிக்கப்படாது என்பதை உறுதி செய்யும் வரை சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக் கூடாது.

இம்மனுவில் உள்ள அனைத்து கோரிக்கைகளும் இன்றைய பொது விசாரணை நடவடிக்கைகளில் முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும்.

எனவே, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் பாதுகாக்கும் வகையில் மேற்கண்ட கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு, R. அஜிதன் K. Arjamal

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்
மேற்கு, கிழக்கு
காரைக்கால்

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்

தேதி: 09.09.2026

இடம்: காரைக்கால்

S. Geeta S. Kathy. S.Pithulli
M. [illegible] V. வனிதா M. Mangai
S. Sangya. P. கிருஷ்ணா M. Rajeswari
S. Reena. R. Bamphiya.
V. Jayanthi J. Sivasundari
K. Kavitha V. [illegible]
K. Bakiya. G. Geetha
I. Nageswari G. [illegible]
V. Thamaraiselvi G. [illegible]
A. Nathiya G. Hamithay

விவசாயி வாழ்ந்தால்
உலகம் வாழும்...

காரைக்கால் மாவட்ட
கடைமடை விவசாய சங்கம்

1, மாசாணியம்மன் நகர்,
திருநள்ளாறு, காரைக்கால்.
கைபேசி எண்: 98424 77100

விவசாயமே
வாழ்வு...

கடிதம் எண்: 3 தேதி: 9.9.26

GOVT OF PUDUCHERRY DSTE / PPCC KARAIKAL
1431
Date 09/09/26

பெறுநர்:
உறுப்பினர் செயலர் அவர்கள்,
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம்,
அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை,
அண்ணா நகர், புதுச்சேரி - 605 005.

பொருள்: காரைக்கால் துறைமுக விரிவாக்க திட்டம் மற்றும் நிலக்கரி, கையாளுதலால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள், விவசாய இழப்புகள் மற்றும் சுகாதார சீர்கேடுகள் குறித்து மறுபரிசீலனை செய்யக் கோரும் மனு.

மதிப்பிற்குரிய அய்யா / அம்மா,

காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துறைமுக விரிவாக்கத் திட்டம் (சரக்கு கையாளும் திறனை 21.5 மில்லியன் டன் அளவிலிருந்து ஆண்டுக்கு 100.3 மில்லியன் டன்னாக உயர்த்துவது) தொடர்பான பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட அறிவிப்பினை அறிந்து இக்கடிதத்தை எழுதுகிறேன்.

இத்திட்டத்தின் விரிவாக்கம் மற்றும் தற்போது நடைபெற்று வரும் நிலக்கரி கையாளுதல் மற்றும் சரக்கு ரயில் போக்குவரத்து காரணமாக காரைக்கால் பகுதி மக்களுக்கும் இயற்கைக்கும் ஏற்படும் தீவிர பாதிப்புகள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன:

1. விவசாயம் மற்றும் இயற்கை வளங்கள் பாதிப்பு:

- சரக்கு ரயில்கள் மற்றும் லாரிகள் மூலம் திறந்தவெளியில் நிலக்கரி கொண்டு செல்லப்படுவதால், ரயில் பாதையின் இருபுறமும் உள்ள விளைநிலங்களில் நிலக்கரி தூசிகள் அடர்த்தியாகப் படிந்து நிலத்தின் வளத்தை சீரழித்து வருகின்றன.
- இயற்கை வளங்கள், காய்கறி தோட்டங்கள் மற்றும் மக்களின் அன்றாட உணவிலும் ஆரோக்கியத்திலும் முக்கிய பங்கு வகிக்கும் முருங்கை மரங்கள் உட்பட அனைத்து தாவரங்களும் நிலக்கரி தூசியால் பாதிக்கப்பட்டு காய்ந்து போகின்றன.
- நிலக்கரி மாசினால் அப்பகுதியில் பொழிய வேண்டிய இயல்பான மழையும் பொழியாமல் சுற்றுச்சூழல் சமநிலை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

2. பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் சுவாசக் கோளாறுகள்:

- ரயில் நிலையங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகள் முழுவதும் நிலக்கரி தூசிகள் படிந்துள்ளன.
- இதனால் அப்பகுதியில் வாழும் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கடுமையான மூச்சத்திணறல், ஆஸ்துமா மற்றும் நுரையீரல் தொடர்பான தீவிர நோய்களால் அவதிப்பட்டு வருகின்றனர்.
- காரைக்கால் அரசு மருத்துவமனையில் தினந்தோறும் நோயாளிகளின் வருகையும், இறப்பு விகிதமும் அதிகரித்து வருகிறது.

3. சமூக பொறுப்புணர்வு மற்றும் கோரிக்கைகள்:

- காரைக்கால் துறைமுக நிர்வாகத்தின் மூலமாகப் பல கோடி ரூபாய் வருவாய் கிடைத்தாலும், உள்ளூர் காரைக்கால் மக்களுக்கு இதனால் எந்தவித நன்மையும், வேலைவாய்ப்பும் அல்லது அடிப்படை வசதிகளும் கிடைப்பதில்லை.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சிறப்பான சிகிச்சை அளிக்க காரைக்கால் மருத்துவமனைக்கு உடனடியாக குறைந்தது 5-க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களை துறைமுக நிறுவனத்தின் (அதானி குழுமம்) சமூகப் பொறுப்புணர்வு நிதி (CSR Fund) மூலமாக நியமித்து, அவர்களுக்கான ஊதியத்தை அந்நிறுவனமே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. நோடி கள ஆய்வுக்கான கோரிக்கை:

- இப்பிரச்சனையின் தீவிரத்தை உணர, அதிகாரிகள் மற்றும் குழும உறுப்பினர்கள் எந்நேரத்திலும் காரைக்கால் ரயில் நிலையங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் நேரில் வந்து ஆய்வு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

5. முடிவுரை:

- மேற்கூறிய மக்களின் வாழ்வாதாரம், விவசாயம் மற்றும் சுகாதாரப் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு, காரைக்கால் துறைமுகத்தின் இந்த அதிகப்படியான விரிவாக்கத் திட்டத்தை உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், இத்திட்டத்தினை முழுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,

தலைவர்
காரைக்கால் மாவட்ட கடைமடை விவசாய சங்கம்

அனுப்புநர்,

மாதா சுய உதவிக் குழு,
பட்டிணச்சேரி.

பெறுநர்,

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காரைக்கால்.

பொருள் : அதானி குழுமம் நிறைவுக் கழிவாக்கம் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். அதானி குழுமத்தின் நிறைவுக் கழிவாக்கத்தால் பட்டிணச்சேரி மீனவ கிராமத்தில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரமும், உடல் நலக் குறைபாடுகளும், குழந்தைகளுக்கு தோல், கால் வீக்கம் ஏற்படுதல், காற்று மாசுபாடும் ஏற்படுகிறது. மேலும் கண் தொடர்பானவர்கள், பெண்களுக்கு மலட்டுத் தன்மையும் ஏற்படுகிறது. நிறைவுக்கழிவில் உள்ள நிலக்கரியால் மண் வளம் பாதிக்கப்படுவதுடன், அந்த நீர் கடலில் கலந்து மீன் வளமும் பாதிக்கப்படுகிறது. இதுவரை இல்லாத அளவிற்கு மீனவ மக்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டு அதனால் மருத்துவ செலவுகள் செய்யும் பலர் புற்றுநோயால் இறந்து போகின்றனர். இதனால் ஒவ்வொரு நாளும் மீனவ குடும்ப மக்களுக்கு பல இடர்பாடுகளை தொடர்கிறோம். அதானி நிறைவுக்கழிவையும் அதன் கழிவாக்கத்தையும் எதிர்த்து நாங்கள் எங்கள் கோரிக்கையை தெரிவித்துள்ளோம். இதன்மேல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனே இறைந்து நடவடிக்கை எடுத்து பட்டிணச்சேரி மீனவ மக்கள் தான்மாக நாம்மையுடன் செயல்படுத்தக்கோள்கிறோம்.

[illegible]

G. புஷ்பா
தலைவி

V. Kavitha
செயலாளர்

G. [illegible]

[illegible]

M. Manimozhi

V. Valli

V. Jayaboorathi

M. Kavaki

B. [illegible]

E. [illegible]

K. Kavitha

V. Kayvizh

D. [illegible]

M. [illegible]

V. Davi

A. SAVIRA

[illegible]

[illegible]

[illegible]

அனுப்புநர்:

மாதா மகளிர் யூத்தெஸ்கூ
நாகூர் நகர், பட்டினச்சேரி
செம்பட்டினம்-608 203.

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் மேற்கண்ட மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நாங்கள் முழுவதும் கடல் தொழில் செய்யும் ஓர் மீனவர் கிராமம் கடந்து 2009 ஆம் ஆண்டு மேற்கண்ட துறைமுகம் வந்த நாள் முதல் இன்று வரை கடலில் சுதந்திரமாக எங்களால் தொழில் செய்ய முடியவில்லை கடலில் தொழில் வளம் குறைந்து வாழ்வாதாரத்தை இழந்து இந்த துறைமுகத்தினால் நாங்கள் முழுவதும் பாதிப்பு உள்ளாகி நிற்கதியாய் நிற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே பெரிதும் பாதிக்கப்பட்ட நாங்கள் கீழ்கண்ட பாதிப்பினை தங்களின் கவனத்திற்கு வைக்கின்றோம்.

1) கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2) நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

3) அதானி துறைமுகம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி அவர்களுக்கு நோய்களைத் தான் தருகிறார்கள்.

4) எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

5) இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

6) துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.குறிப்பாக கடலில் செல்லும் பாதைகள்,பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்,மீன் இனப்பெருக்கப் பகுதிகள், வலை வீசும் பகுதிகள்,மீன் இறங்குதளங்கள், கரையோர அணுகுமுறை படகு நிறுத்துமிடங்கள்,கடற்கரைப் பயன்பாடு ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.

7) கடலில் கப்பல்கள் நிறுத்தும் ஒரு தளம் அமைத்து அதில் எல்பிஜி கப்பல்கள் வந்து செல்லும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என அறிகிறோம். அப்படி ஒரு திட்டம் விரிவாக்கப்பட்டால் எல்பிஜி கப்பல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நாங்கள் யாரும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். இதனால் எங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும் நிலை ஏற்படும்.

8) துறைமுகத்தினால் ஏற்படும் நிலக்கரி தூசுகள் கிராம அருகில் இருக்கக்கூடிய மற்றும் தோட்டங்களில் படிவதனால் தோட்டப்பயிர்கள் விஷத்தன்மை நிறைந்ததாக மாறி அதை உண்ணும் பெரியவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது இனி மேலும் விரிவுபடுத்தப்பட்டால் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான வாழ்க்கை முற்றிலுமாக பறிபோகும் நிலை ஏற்படும்.

9) அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை

சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

எனவே மேற்படி இத்தகைய பாதிப்புகளை கடந்த பல ஆண்டுகளாக சந்தித்து வரும் நாங்கள் அதானி துறைமுகத்தினால் கடலும் கடல் சார்ந்த நிலங்களும் வாழத் தகுதியற்ற நிலையாக மாறிவிடும். கடலை சார்ந்து வாழக்கூடிய எங்களது மீனவ சமூக மக்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு மாற்று இடம் தேடி நாடோடிகளாக செல்லும் நிலை ஏற்படும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் எங்கள் மீது வேந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மீண்டும் பன்மடங்கு விரிவாக்கம் என்பதை எந்த சூழ்நிலையிலும் எந்த நிலையிலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதனை இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம் மேலும் எங்களது கருத்தினை அரசு உதாசீனப்படுத்துமானால் எங்களால் துளி அளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.எங்களின் வாழ்வையும் எங்களின் எதிர்கால சங்கதியரின் வாழ்வையும் கருத்தில் கொண்டு திட்டத்தின் விரிவாக்கத்தினை ஆரம்ப கட்டத்திலேயே அரசு தடுத்து நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் இதனை அனுமதிக்க கூடாது என்பதனை எங்கள் கிராமத்தின் சார்பாக நாங்கள் ஆணித்தனமாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்.எனவே இந்த திட்டத்தினை ஆரம்ப கட்டத்திலேயே எதிர்க்கின்றோம்! எதிர்கின்றோம்! எதிர்கின்றோம்!.

தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம்.
ஆனால் மீன்பிடி தொழிலுக்கு மாற்று இடம் கிடையாது

கைவிடு! கைவிடு! துறைமுக விரிவாக்கத்தை கைவிடு!

வாழவிடு! வாழவிடு! மீனவனை வாழவிடு!

நன்றி!

KARUKKALACHERRY VILLAGE PUBLIC WELFARE SOCIETY

கருக்களாச்சேரி கிராம பொது நல சங்கம்

கருக்களாச்சேரி.

(Act No : XXI of 1860 S.No : 117 of 2022)

President	Vice President	Secretary	Joint Secretary	Treasurer
C. Kandasamy	K. Kuppusamy	L. Arivazhagan	M. Ganapathy	V. Nagendiramani
9843901555	9894276368	9865011746	9994131017	9443226163

EC Members

L. Sakthivelu	A. Sokkalingam	P. Saravanan	S. Gokulnath	S. Abikeerthi

தேதி : .....

(3). மேலும் கிராமங்கள் வளர்வதனால் ஆடுமாடுகளும் போதிய புல்லுகளை எங்கள் கிடைக்கவில்லை. கிடைப்பதும் அபாயம் இருந்து கொண்டு வருகிறது. ஆடுகளை மேய்க்கும் பட்சத்தில் எங்கள் கிராமமே அழிந்து விடும் நிலைக்கு வந்துள்ளோம்

ஆகையால் தீர்வைக்கத்தின் கையாளும் தீர்வை 21.5 மில்லியன் டன்னிலிருந்து 100.3 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்கு எதிர்வினை வருத்தி பூர்வமாக அளிக்கின்றோம்.

நன்றி.

இங்ஙனம்

தலைவர் : C. Kandasamy

செயலாளர் : K. Kuppusamy

துணைச்செயலாளர் : L. Arivazhagan

பொருளாளர் : V. Nagendiramani

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்
1 சிங்காரவேலர் சாலை, காரைக்கால்மேடு,
காரைக்கால் மாவட்டம்.

பெறுநர்:

மாவட்ட ஆட்சியர் அவர்கள் /
பொது விசாரணை தலைமை அதிகாரி,
காரைக்கால் மாவட்டம்.

GOVT. OF PUDUCHERRY DSTE / PPCC KARAIKAL
1435
Date: 9/9/26

பொருள்: **காரைக்கால் துறைமுக Master Plan விரிவாக்கம் - மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல் சூழல் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் - பொது விசாரணையில் பதிவு செய்யக் கோருதல்.**

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட Master Plan விரிவாக்கம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை ஆய்வு செய்ததில், இத்திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய முக்கியமான தாக்கங்கள் குறித்து எங்களது பின்வரும் எதிர்ப்புகளையும் கோரிக்கைகளையும் பதிவு செய்கிறோம்.

1. மிகப்பெரிய அளவில் துறைமுக விரிவாக்கம்

தற்போதைய சரக்கு கையாளும் திறன் 21.5 MMTPA-லிருந்து 100.3 MMTPA ஆக உயர்த்தப்பட உள்ளது மேலும் மொத்தம் 14 berth-கள், SPM மற்றும் கடலுக்கடியில் குழாய்கள் அமைக்கப்பட உள்ளன.

ஆதாரம்: EIA Executive Summary, பக்கம் 4–5.

2. 42 மில்லியன் கனமீட்டர் கடலடி அகழ்வு

திட்டத்திற்காக 42 மில்லியன் கனமீட்டர் (M.Cum) அளவுக்கு Capital Dredging செய்யப்பட உள்ளது. கால்வாய், துறைமுகக் கரை மற்றும் கப்பல் திரும்பும் பகுதி ஆழப்படுத்தப்பட உள்ளது.

ஆதாரம்: EIA, பக்கம் 5, வரிகள் 406–413.

இது கடலடி வாழ்விடங்கள், மீன் இனப்பெருக்கம் மற்றும் மீன்வளத்தை பாதிக்கும் அபாயம் கொண்டது. அறிக்கையே dredging, SPM, submarine pipeline மற்றும் breakwater விரிவாக்கம் ஆகியவை கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடங்களுக்கு இடையூறு ஏற்படுத்தலாம் என்று ஒப்புக்கொள்கிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 12–13, வரிகள் 706–724.

3. 8,889 மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளனர்

திட்ட ஆய்வுப் பகுதியில் 15 கிராமங்களைச் சேர்ந்த 8,889 மீனவர் குடும்பங்களும் 32,632 மீனவர்களும் இருப்பதாக அறிக்கையே குறிப்பிடுகிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 11, வரிகள் 679–681.

ஆனால் இத்தனை பெரிய மீனவர் மக்கள் தொகைக்கு ஏற்ப மீன்பிடி வருமான இழப்பு, மீன்பிடி பகுதிகளுக்கான அணுகல், படகு இயக்கம் மற்றும் மீனவர் பெண்களின் வாழ்வாதாரம் குறித்து போதுமான தனிப்பட்ட தாக்க மதிப்பீடு செய்யப்படவில்லை.

4. EIA-வில் உள்ள முக்கியமான முரண்பாடு

ஒருபுறம் 8,889 மீனவர் குடும்பங்கள் இருப்பதாக அறிக்கை கூறுகிறது. மறுபுறம், திட்டப் பகுதியில் "மீன்பிடித்தளம் இல்லை" என்றும், மீனவர்களுக்கு இடையூறு ஏற்படாமல் தகவல் பலகைகள் அமைக்கப்படும் என்றும் மட்டுமே குறிப்பிடுகிறது.

ஆதாரம்: EIA, பக்கம் 16, வரிகள் 868–876.

மீனவர்களின் வாழ்வாதாரம் கரையில் உள்ள மீன்பிடித்தளத்துடன் மட்டும் தொடர்புடையது அல்ல; அவர்கள் பயன்படுத்தும் கடல் பரப்பும் அவர்களின் வாழ்வாதாரத்தின் ஒரு பகுதியாகும்.

எங்களது முக்கிய கோரிக்கைகள்

மீனவர் வாழ்வாதாரத்திற்கான தனிப்பட்ட Fisheries Livelihood Impact Assessment மேற்கொள்ள வேண்டும்.

42 மில்லியன் கனமீட்டர் dredging-ன் மீன்வளம் மற்றும் மீன்பிடி வருமானத்தின் மீதான தாக்கத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்ய வேண்டும்.

மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி பகுதிகள், படகு செல்லும் பாதைகள் மற்றும் மீன் இனப்பெருக்கப் பகுதிகளை வரைபடமாக பதிவு செய்ய வேண்டும்.

துறைமுகத்தால் மீன்பிடிக்கு ஏற்படும் எந்தவொரு தடையும் காரணமாகும் வருமான இழப்புக்கு உரிய இழப்பீடு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு திட்டம் உருவாக்க வேண்டும்.

மீனவர் பிரதிநிதிகள் இடம்பெறும் தொடர் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் கடல் சூழல் மற்றும் மீன்வளம் பாதிக்கப்படாது என்பதை உறுதி செய்யும் வரை சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக் கூடாது

இம்மனுவில் உள்ள அனைத்து கோரிக்கைகளும் இன்றைய பொது விசாரணை நடவடிக்கைகளில் முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும்.

எனவே, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் பாதுகாக்கும் வகையில் மேற்கண்ட கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்
காரைக்கால் மேடு

T. Mahalakshmi M.

இணைச் செயலாளர் பொருளாளர்

கிராம ஒருங்கிணைப்பு சங்கம்

தேதி: 09.09.2026

இடம்: காரைக்கால்

C. Dayanu
T. Vijayanth
J. Daivanayagi
R. Aal
K. Jaya
S. Sathiya
G. Thavaselvi
C. Akalya
A. Kantha

T. Punavalli
P. [illegible]
V. Amala
R. Anisha
K. Sumathi
P. சிந்தா
[illegible]
V. Santhanavalli

V. [illegible]
M. Saraswathi
V. Kalaimathi
M. Baja
S. [illegible]
K. Sathyapriya
M. Thilageswathy
S. Kalaimathi
M. Thilagavathi

அனுப்புநர்;

பி. அணைமகள் மகளிர் சுய உதவிக்குழு,
பட்டினச்சேரி,
திரு.பட்டினம்.

ஸ்ரீ அலைமகள் மகளிர் சுய உதவி குழு
பட்டினச்சேரி
திரு.பட்டினம் - 609 606

GOVT OF PUDUCHERRY DSTE / PPCC KARAIKAL
Date 14/9/26

பெறுநர்;

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
பொதுவிசாரணை அதிகாரி,
காரைக்கால் மாவட்டம்.

பொருள்;

காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய 21.5 MMTPA திறனை 100.3 MMTPA ஆக உயர்த்துவதற்கான MASTER PLAN DEVELOPMENT / EXPANSION PROPOSAL தொடர்பாக 09.09.2026 அன்று நடைபெறவுள்ள பொது கருத்துக் கேட்பிற்கு எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீன்பிடி உரிமைகள், மரீனும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு மேற்கண்ட திட்டத்தை முற்றிலும் நிராகரிக்க கோருதல் தொடர்பாக,

ஐயா,

மேற்கண்ட துறைமுக விரிவாக்கத் திட்டம் எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீன்பிடி உரிமைகள், மீன் இனப்பெருக்கம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கும் என்பதற்கும், இத்திட்டம் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை வரிசையாக்கி புகிறோம்.

காரணங்கள்:-

1. இத்திட்டம் கடல் பகுதியை ஆக்ரமிக்கும் திட்டம், தற்போது துறைமுகத்தின் அளவு 243 ஹெக்டேர். இது மேலும் 249.2 ஹெக்டேராக உயர்த்தப்பட உள்ளது. இந்த 249.21 ஹெக்டேர் 137.14 ஹெக்டேர் கடலின் மணலைக் கொட்டி உருவாக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. இதன் மூலம் கடலையே நம்பி வாழ

மீனவர்களாகிய எங்களுக்கு மிகப்பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும், அத்துடன் மீன்பிடி தொழிலும், கடல் வாழும், மீன்பிடி உரிமையும், மீன்களின் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டு எங்களது எதிர்காலச் சந்ததிகளை அழிவுக்குள்ளாக்கும்.

2. இத்துடன் கடலின் வடக்கு மற்றும் தெற்கு அலைதாங்கியான் நீளத்தை அதிகரிப்பதால் இந்தப்பகுதியான் அலை போக்கை திசைமாற்றி கடல் அரிப்பு ஏற்படும். தற்போதைய நிலைமுதல் 2009 இருந்து செம்மன்பாட்டுக்கு வந்ததிலிருந்து எங்கள் கிராமத்தில் 200 மீட்டருக்கு மேல் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் நிலைமை விரிவாக்கம் செய்யப்பட்டால் வரும் காலங்களில் எங்கள் கிராமம் மிகப்பெரிய அழிவை சந்திக்கும் என்பதை தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. சில ஆண்டுகளுக்கு முன்பு மீன் வளத்தைப் பெருக்குவதற்கும் செயற்கையாக பவளப் பாறைகள் உருவாக்குவதற்காக திரு M.S. சுவாமிநாதன் Foundation மூலமாக எங்கள் கிராம கடல் பகுதியில் ARTIFICIAL REEF BLOCKS (செயற்கை பவுடிப் பாறை கற்கள்) போடப்பட்டன. தற்போதைய நிலை முகத்திற்காக கடலை ஆழப்படுத்த எடுக்கப்பட்ட மணலைக் கொட்டியதன் விளைவாக மேற்கண்ட கற்கள் முற்றிலும் மணலால் மூடப்பட்டு பவளப் பாறைகள் உருவாக்கம் தடைபட்டு, மீன் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

4. PURAVADAIYANAR ஆற்றின் திசையினை 1.3 km வடக்கு நோக்கி DIVERSION/REALIGNMENT செய்வது பண்டைய காலமாக நடந்து வரும் மீன் இனப்பெருக்கம் பள்ளியிர் பெருக்கம் ஏற்பட்டதை தடை செய்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும், இத்திட்டத்தினை பரிசீலிக்க வேண்டாமென கேட்டுக்கொள்கிறோம்.

5. நிற்போதுள்ள நிறைமுகத்தின் கையாளப்படும் நிலக்கரியினால் காற்றின் திசை மாறிபாட்டால் சுற்றியுள்ள கிராம மக்கள் பலவித நோய்களுக்கு ஆளாகி வருகிறோம். இந்தப் பகுதியில் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் நிறைமுகம் விரிவாக்கப்பட்டால் தற்போது கையாளப்படும் நிலக்கரியின் அளவைவிட பல மடங்கு நிலக்கரி கையாளப்படும் நிலையில் நிறைமுகத்தை சுற்றியுள்ள கிராமங்கள் வாழவே தகுதியில்லாத நிலைக்குத்தள்ளப்படும்.

6. எங்களுக்கு கடல் என்பது வெறும் நீர்நிரம்பிய பகுதி அல்ல, இது எங்களுக்கு

- குடும்பத்தின் வாழ்வாதாரம்,
- குழந்தைகளின் கல்விக்கான வருமானம்.
- எங்கள் சமூகத்தின் அடையாளம்.
- எங்கள் எதிர்காலம்.

நடவை அழித்து வளர்ச்சியை உருவாக்க முடியாது. கடலை பாதுகாக்க வேண்டியது நமக்கு மட்டுமல்ல அனைவரது கடமையாகும்.

7. நிறைமுக விரிவாக்கத்தினால் LNG, LPG, CNG போன்ற GAS காலும், மிகவும் நச்சுத்தன்மையுள்ள இரசாயனங்கள் இறக்குமதி செய்யப்படும் என அறிக்கையில் சொல்லப்படுகிறது. இதன்மூலம் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படும் பட்சத்தில் ஏற்படும் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும். சுற்றுச்சூழலுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, வளர்ச்சி என்ற பெயரில் கடல்வளத்தை எங்களது வாழ்வாதாரத்தையும், மீன்வளத்தையும், மீன்

உரிமையையும், சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் பெருக்கத் தரையும் முற்றிலும் அடிவுக்குள்ளாக்கும் திரைகளை விலக்கத் திட்டத்தினை நிராகரிக்க வேண்டுமாய் எங்களது பெண்கள் சுய உதவி குழு சார்பாக வேண்டுகோள் வைக்கிறோம்.

இடம்: பட்டினச்சேரி, திரு.பட்டிணம்.

தேதி: 09.09.2026

ஸ்ரீ அலைமகள் மகளிர் சுய உதவி குழு
பட்டினச்சேரி, திரு.பட்டிணம்

R. Saraswathi M. Bhuvathi
தலைவி செயலாளர்

R. Saraswathi

M. Bhuvathi

K. Punithavalli
புனிதவல்லி

M. தேவி

K. அன்னகனி

S. கல்யாணி

S. தேவி

S. சுவாதி

A. அமுதா

P. அருணாசலம்

பெறுநர்:

மாண்புமிகு உறுப்பினர் செயலாளர் அவர்கள்,

புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம் (PPCC),

1-ஆம் தளம், Housing Board Complex,

அண்ணா நகர்,

புதுச்சேரி – 605005.

GOVT. OF PUDUCHERRY DSTE / PPCC
Date 04/09/23
1437

பொருள்:

காரைக்கால் மாவட்டம், வாஞ்சூர் பகுதியில் அமைந்துள்ள அதானி துறைமுகத்தின் சரக்கு கையாளும்/இறக்குமதி திறனை அதிகரிக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு – சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம், வாஞ்சூர் பகுதியில் அமைந்துள்ள அதானி துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறனை சுமார் 21 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும் திட்டம் தொடர்பாக நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில், எங்களது கீழ்க்கண்ட ஆட்சேபனைகளைப் பதிவு செய்கிறோம்.

துறைமுகத்தின் செயல்பாடுகள் பல மடங்கு அதிகரிக்கும்போது, அதனுடன் தொடர்புடைய கனரக வாகனப் போக்குவரத்து, தூசி மற்றும் காற்று மாசுபாடு, சத்த மாசுபாடு, கடல் மற்றும் கடற்கரைச் சூழல் பாதிப்பு ஆகியவை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும், இப்பகுதி மக்களின் மீன்பிடித் தொழில், விவசாயம், குடிநீர் வளம், வாழ்வாதாரம் மற்றும் பொது சுகாதாரம் பாதிக்கப்படக்கூடிய அபாயம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

எங்களது முக்கிய ஆட்சேபனைகள் மற்றும் கோரிக்கைகள்:

துறைமுகத்தின் திறனை 21 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பதற்கு எங்களது வலுவான எதிர்ப்பை பதிவு செய்கிறோம்.

திட்டத்தின் காரணமாக ஏற்படக்கூடிய காற்று, நீர், கடல் மற்றும் கடற்கரை மாசுபாடு குறித்து விரிவான மற்றும் சுயாதீனமான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கனரக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஏற்படும் சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல், தூசி மற்றும் சத்த மாசுபாடு குறித்தும் உரிய ஆய்வு செய்ய வேண்டும்.

கடற்கரை மற்றும் கடல் உயிரினங்களின் இயற்கை வாழ்விடத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தால் பாதிக்கப்படக்கூடிய உள்ளூர் மக்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகள் அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு தெளிவான பதில் அளிக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதார பாதிப்புகள் முழுமையாகத் தீர்க்கப்படாத நிலையில், துறைமுக விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது.

எனவே,

மக்களின் வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் எதிர்கால தலைமுறையின் நலனை கருத்தில் கொண்டு, வாஞ்சூர் அதாவி துறைமுகத்தின் விரிவாக்கத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் திட்டத்தை அனுமதிக்கக் கூடாது என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,

பெயர்: M. Mohamed Yashir

முகவரி: NO 2, Hillam Palli Street, Nagore

தொலைபேசி: 8807054970

கையொப்பம்: Y

தேதி: 09-09-2026

பெறுநர்:

மாண்புமிகு உறுப்பினர் செயலாளர் அவர்கள்,

புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம் (PPCC),

1-ஆம் தளம், Housing Board Complex,

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

S. அந்தோணிராஜ்

S. சின்னதுரை

அனுப்புநர்:

பிரஞ்சி. ச.
பட்டினச்சேரி.

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் மேற்கண்ட மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நாங்கள் முழுவதும் கடல் தொழில் செய்யும் ஓர் மீனவர் கிராமம் கடந்து 2009 ஆம் ஆண்டு மேற்கண்ட துறைமுகம் வந்த நாள் முதல் இன்று வரை கடலில் சுதந்திரமாக எங்களால் தொழில் செய்ய முடியவில்லை கடலில் தொழில் வளம் குறைந்து வாழ்வாதாரத்தை இழந்து இந்த துறைமுகத்தினால் நாங்கள் முழுவதும் பாதிப்பு உள்ளாகி நிற்கதியாய் நிற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே பெரிதும் பாதிக்கப்பட்ட நாங்கள் கீழ்கண்ட பாதிப்பினை தங்களின் கவனத்திற்கு வைக்கின்றோம்.

1) கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2) நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

3) அதானி துறைமுகம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி அவர்களுக்கு நோய்களைத் தான் தருகிறார்கள்.

4) எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

5) இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

6) துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.குறிப்பாக கடலில் செல்லும் பாதைகள்,பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்,மீன் இனப்பெருக்கப் பகுதிகள், வலை வீசும் பகுதிகள்,மீன் இறங்குதளங்கள், கரையோர அணுகுமுறை படகு நிறுத்துமிடங்கள்,கடற்கரைப் பயன்பாடு ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.

7) கடலில் கப்பல்கள் நிறுத்தும் ஒரு தளம் அமைத்து அதில் எல்பிஜி கப்பல்கள் வந்து செல்லும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என அறிகிறோம், அப்படி ஒரு திட்டம் விரிவாக்கப்பட்டால் எல்பிஜி கப்பல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நாங்கள் யாரும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். இதனால் எங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும் நிலை ஏற்படும்.

8) துறைமுகத்தினால் ஏற்படும் நிலக்கரி துகள்கள் கிராம அருகில் இருக்கக்கூடிய மற்றும் தோட்டங்களில் படிவதனால் தோட்டப்பயிர்கள் விஷத்தன்மை நிறைந்ததாக மாறி அதை உண்ணும் பெரியவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது இனி மேலும் விரிவுபடுத்தப்பட்டால் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான வாழ்க்கை முற்றிலுமாக பறிபோகும் நிலை ஏற்படும்.

9) அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை

சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

எனவே மேற்படி இத்தகைய பாதிப்புகளை கடந்த பல ஆண்டுகளாக சந்தித்து வரும் நாங்கள் அதானி துறைமுகத்தினால் கடலும் கடல் சார்ந்த நிலங்களும் வாழத் தகுதியற்ற நிலையாக மாறிவிடும். கடலை சார்ந்து வாழக்கூடிய எங்களது மீனவ சமூக மக்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு மாற்று இடம் தேடி நாடோடிகளாக செல்லும் நிலை ஏற்படும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் எங்கள் மீது வேந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மீண்டும் பன்மடங்கு விரிவாக்கம் என்பதை எந்த சூழ்நிலையிலும் எந்த நிலையிலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதனை இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம் மேலும் எங்களது கருத்தினை அரசு உதாசீனப்படுத்துமானால் எங்களால் துளி அளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.எங்களின் வாழ்வையும் எங்களின் எதிர்கால சங்கதியரின் வாழ்வையும் கருத்தில் கொண்டு திட்டத்தின் விரிவாக்கத்தினை ஆரம்ப கட்டத்திலேயே அரசு தடுத்து நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் இதனை அனுமதிக்க கூடாது என்பதனை எங்கள் கிராமத்தின் சார்பாக நாங்கள் ஆணித்தனமாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்.எனவே இந்த திட்டத்தினை ஆரம்ப கட்டத்திலேயே எதிர்க்கின்றோம்! எதிர்கின்றோம்! எதிர்கின்றோம்!.

தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம்.
ஆனால் மீன்பிடி தொழிலுக்கு மாற்று இடம் கிடையாது

கைவிடு! கைவிடு! துறைமுக விரிவாக்கத்தை கைவிடு!

வாழவிடு! வாழவிடு! மீனவனை வாழவிடு!

நன்றி!

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

காரைக்கால் மாவட்டம்

M. V. வைத்தியலிங்கம், DCE., Ex.MLA.,

காரைக்கால் மாவட்ட கழக செயலாளர்

நெ.9, பாரதியார் ரோடு, கோட்டுச்சேரி, காரைக்கால் – 609609

Cell : 94438 43916

9/9/2026

பெறுநர்

மாண்புமிகு உறுப்பினர் செயலர் அவர்கள்,
மாசுக்கட்டுப்பாட்டு வாரியம்,
புதுச்சேரி

1569
09/09/26

ஐயா,

பொருள் காரைக்கால் மாவட்டம், திருமலைராயன்பட்டினத்தில் இயங்கி வரும் மார்க் துறைமுகத்தின் விரிவாக்கம் தொடர்பான கருத்துக் கேட்பில் பொதுமக்கள் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி எதிர்ப்புக் கருத்து பதிவு செய்வது - தொடர்பாக

காரைக்கால் மாவட்டம், திருமலைராயன்பட்டினத்தில் தற்போது இயங்கி வரும் மார்க் துறைமுகத்தை மேலும் விரிவாக்கம் செய்யும் திட்டம் தொடர்பாக தங்களால் கருத்துக் கேட்பு நடத்தப்பட்டு வருகிறது இது தொடர்பாக, அ.தி.மு.க காரைக்கால் மாவட்டத்தின் சார்பாக எங்களது எதிர்ப்புக் கருத்தை இக்கடிதத்தின் மூலம் பதிவு செய்கிறோம்.

துறைமுகம் செயல்படத் தொடங்கிய காலத்திலிருந்து அப்பகுதியில் நிலத்தடி நீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டு, நல்ல தண்ணீர் உப்புத்தன்மை கொண்ட தண்ணீராக மாறி வருவதாக பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர் இதன் காரணமாக விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் தற்போது கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கான நீரின் தரம் பாதிக்கப்படுவது மக்களின் வாழ்வாதாரத்திற்கும் எதிர்காலத்திற்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.

மேலும், ஏற்கனவே இயங்கி வரும் துறைமுகத்தில் நிலக்கரி உள்ளிட்ட சரக்குகளை கையாளுவதால் ஏற்படும் தூசி மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாக புகார்கள் உள்ளன குறிப்பாக, தூசி காரணமாக பொதுமக்களின் உடல்நலம் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

(P.T.O)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

காரைக்கால் மாவட்டம்

M.V.ஓமலிங்கம், DCE., Ex.MLA.,

காரைக்கால் மாவட்ட கழக செயலாளர்

எண்-9, பாரதியார் ரோடு, கோட்டுச்சேரி, காரைக்கால் – 609609

Cell : 94438 43916

மேலும், துறைமுகச் செயல்பாடுகளால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புகள் கால்நடைகள் மேய்வதற்கும், கால்நடை வளர்ப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்ற அச்சமும் பொதுமக்களிடையே நிலவுகிறது

இந்நிலையில், ஏற்கனவே துறைமுகச் செயல்பாடுகளால் "நீர்வளம், விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரம்" ஆகியவற்றில் பாதிப்புகள் இருப்பதாக மக்கள் கவலை தெரிவித்து வரும் நிலையில், துறைமுகத்தை மேலும் விரிவாக்கம் செய்வது இப்பகுதியில் எதிர்காலத்தில் மிகப்பெரிய சுற்றுச்சூழல் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் எனவே, தொழில் வளர்ச்சியை விட பொதுமக்களின் உயிர், சுகாதாரம், குடிநீர், விவசாயம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதே எங்களது உறுதியான நிலைப்பாடாகும் ஆகையால், மார்க் துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்காமல், அந்த விரிவாக்கத் திட்டத்தை நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

மேலும், துறைமுகம் தொடங்கிய காலத்திலிருந்து நிலத்தடி நீரில் ஏற்பட்டுள்ள மாற்றம், விவசாய பாதிப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பொதுமக்களின் குறைகள் குறித்து சுயாதீனமான அறிவியல் ஆய்வு மற்றும் நீர் தரப் பரிசோதனை மேற்கொண்டு, அதன் உண்மையான நிலையை பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம் காரைக்கால் மக்களின் நலனையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், எதிர்கால தலைமுறைகளின் நீர்வளத்தையும் பாதுகாப்பது அரசின் முக்கியக் கடமையாகும்

எனவே, இக்கருத்துக் கேட்பில் அ தி மு க காரைக்கால் மாவட்டத்தின் சார்பாக மார்க் துறைமுக விரிவாக்கத்திற்கு எதிரான எங்களது கருத்தை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்து, பொதுமக்களின் நலன் கருதி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

இப்படிக்கு,

M.V. ஓமலிங்கம், Ex.M.L.A
மாவட்ட கழக செயலாளர்
அ.இ.அ.தி.மு.க
காரைக்கால் மாவட்டம்

தேதி : 09/09/2026

15607
09/09/26

பெறுநர்:

உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
காரைக்கால் மாவட்டம்.

பொருள்: காரைக்கால் துறைமுகத்தின் செயல்பாடுகளால் ஏற்படுவதாகக் கூறப்படும் சுற்றுச்சூழல், சுகாதாரம், வாழ்வாதாரம், போக்குவரத்து மற்றும் உள்ளூர் வேலைவாய்ப்பு பாதிப்புகள் குறித்து உடனடி ஆய்வு நடத்தி, மக்கள் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கோருதல் - தொடர்பாகவும் அதானி போர்ட் விரிவாக்கம் குறித்து அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையில்போர்ட் விரிவாக்க பணிகளுக்கு அனுமதி வழங்க கூடாது என மாவட்ட ஆட்சியர் அவர்களை கேட்டுக் கொண்டு மனு

உயர்திரு ஐய,

காரைக்கால் துறைமுகம் உருவாக்கப்பட்டபோது, அது காரைக்கால் மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்புக்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என பொதுமக்களிடம் எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், துறைமுகத்தைச் சுற்றியுள்ள வேலவாஞ்சூர் முதல் நாகூர் வரையிலான கடலோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள், துறைமுகத்தின் செயல்பாடுகள் தொடர்பாக பல்வேறு கவலைகளையும் குற்றச்சாட்டுகளையும் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

துறைமுகத்தின் வளர்ச்சி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமே தவிர, அவர்களின் உடல்நலம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் அமையக் கூடாது. எனவே, கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களில் அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டுமென SDPI சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

மாவட்ட அலுவலகம் : முதல் தளம், லெமேர் வீதி, காரைக்கால்.

1. நிலக்கரி கையாளுதல் மற்றும் தூசி மாசு

காரைக்கால் துறைமுகத்தில் நிலக்கரி கையாளுதல் நடைபெறுவதால், துறைமுக வளாகம் மட்டுமின்றி, லாரிகள் செல்லும் சாலைகள், அருகிலுள்ள குடியிருப்புகள், விவசாய நிலங்கள் மற்றும் கடலோரப் பகுதிகளிலும் தூசி மாசு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால்:

- காற்றின் தரம் பாதிக்கப்படுதல்;
- சுவாசக் கோளாறுகள் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம்;
- விவசாய நிலங்களில் தூசி படிதல்;
- குடியிருப்புப் பகுதிகளில் வாழ்வாதாரத் தரம் குறைதல்;
- கடலோரச் சூழல் பாதிக்கப்படுதல் போன்ற பிரச்சினைகள் உருவாகக்கூடும்.

எனவே, நிலக்கரி கையாளுதல், சேமிப்பு மற்றும் போக்குவரத்து தொடர்பாக அறிவியல் அடிப்படையிலான சுயாதீன ஆய்வு நடத்தப்பட வேண்டும். காற்றின் தரம் குறித்த நேரடி கண்காணிப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு, அதன் தரவுகள் பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும்.

2. கனரக வாகனப் போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு

துறைமுகத்துடன் தொடர்புடைய கனரக வாகனங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறச் சாலைகளில் அதிக அளவில் இயக்கப்படுவதால், போக்குவரத்து நெரிசல், சாலை சேதம், தூசி மாசு மற்றும் விபத்து அபாயம் அதிகரிப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்காக:

- கனரக வாகனங்களுக்கு தனிப்பட்ட போக்குவரத்து வழித்தடம் அமைத்தல்;
- குடியிருப்புப் பகுதிகள் வழியாக செல்லும் வாகனப் போக்குவரத்தை கட்டுப்படுத்தல்;
- வாகனங்களின் வேகக் கட்டுப்பாடு மற்றும் நேரக் கட்டுப்பாடு;
- சாலைகளில் தூசி கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்;
- பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3. சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதார ஆய்வு

துறைமுகத்தின் செயல்பாடுகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகள் குறித்து அரசு துறைகள் மற்றும் துறைமுக நிர்வாகம் வழங்கும் தகவல்கள் மட்டுமே போதுமானதாக இருக்காது. பொதுமக்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில், அரசு சார்பற்ற சுயாதீன நிபுணர் குழுவின் மூலம் முழுமையான ஆய்வு நடத்தப்பட வேண்டும்.

அந்த ஆய்வில் பின்வரும் அம்சங்கள் இடம்பெற வேண்டும்:

- காற்றின் தரம்;
- நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் தரம்;
- மண் மற்றும் விவசாய நிலங்களின் நிலை;
- கடலோரச் சூழல் மற்றும் கடல் வளங்கள்;
- மீன்வளம் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம்;
- குழந்தைகள், முதியோர் மற்றும் சுவாச நோயாளிகளின் உடல்நிலை;
- துறைமுகத்தைச் சுற்றியுள்ள மக்களின் நீண்டகால சுகாதார நிலை.

ஆய்வு அறிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை

காரைக்காலின் நிலம், கடல், சாலைகள் மற்றும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி செயல்படும் துறைமுகத்தில், காரைக்கால் இளைஞர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு மற்றும் முன்னுரிமை கிடைக்க வேண்டும்.

துறைமுகத்தின் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளில்:

- காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை;
- நிரந்தர மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களின் விவரம்;
- தொழில்நுட்ப மற்றும் நிர்வாகப் பணிகளில் உள்ளூர் இளைஞர்களின் பங்கு;
- உள்ளூர் இளைஞர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டங்கள்;
- எதிர்கால வேலைவாய்ப்புகளில் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமை ஆகிய விவரங்கள் வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும்.

காரைக்கால் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முன்னுரிமை குறித்து தெளிவான கொள்கை உருவாக்கப்பட்டு, அது சட்டப்பூர்வமாகவும் நடைமுறையிலும் உறுதி செய்யப்பட வேண்டும்.

5. மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரப் பாதுகாப்பு

துறைமுகச் செயல்பாடுகள் கடலோர மீன்பிடி பகுதிகள், கடல் வளங்கள் மற்றும் விவசாய நிலங்களை பாதிக்கக்கூடியதாக இருந்தால், அதனால் பாதிக்கப்படும் மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு, மாற்று வாழ்வாதார உதவி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்பட வேண்டும்.

மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எந்தத் திட்டமும், நடைமுறைபடுத்த கூடாது

- பொதுமக்களின் குறைகள் பதிவு செய்யப்பட வேண்டும்;
- துறைமுக நிர்வாகம் விளக்கம் அளிக்க வேண்டும்;
- அரசு அதிகாரிகள் நேரடியாக பதிவளிக்க வேண்டும்;
- பெறப்படும் மனுக்கள் மற்றும் பரிந்துரைகள் மீது காலக்கெடுவுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட நிர்வாகம், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சுகாதாரத் துறை, மீன்வளத் துறை, விவசாயத் துறை, உள்ளாட்சி அமைப்புகள், பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக அமைப்புகள் அடங்கிய நிரந்தர கண்காணிப்பு குழு அமைக்கப்பட வேண்டும்.

இந்தக் குழு:

- காற்று மற்றும் சுற்றுச்சூழல் தரத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்;
- துறைமுக விதிமுறைகள் பின்பற்றப்படுகிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்;
- பொதுமக்களின் புகார்களைப் பதிவு செய்து விசாரிக்க வேண்டும்;
- காலாண்டு அடிப்படையில் அறிக்கைகளை வெளியிட வேண்டும்.

சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகள் மீறப்படுவது உறுதி செய்யப்பட்டால், துறைமுக நிர்வாகத்திற்கு எதிராக சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாசு கட்டுப்படுத்தப்படாமல் தொடர்ந்தால் அல்லது துறைமுகச் செயல்பாடுகள் மக்களின் உயிருக்கும் வாழ்வாதாரத்திற்கும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது அறிவியல் ஆய்வுகளால் உறுதி செய்யப்பட்டால், செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்துவது, கட்டுப்படுத்துவது அல்லது முழுமையாக மூடுவது உள்ளிட்ட மாற்று நடவடிக்கைகளை அரசு பரிசீலிக்க வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் வணிக நலனைவிட, ஒரு தலைமுறையின் வாழ்க்கை மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பே அரசின் முதன்மையான கடமை என்பதை வலியுறுத்துகிறோம்.

எங்களின் முக்கியக் கோரிக்கைகள்

1. காரைக்கால் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுயாதீனமான சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதார ஆய்வு நடத்த வேண்டும்.
2. நிலக்கரி கையாளுதல் மற்றும் போக்குவரத்தால் ஏற்படும் தூசி மாசை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. காற்றின் தரம், நீரின் தரம் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு தரவுகளை பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளியிட வேண்டும்.
4. கனரக வாகனங்களுக்கு தனிப்பட்ட போக்குவரத்து வழித்தடம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் அமைக்க வேண்டும்.

5. துறைமுகத்தின் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளில் காரைக்கால் மக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.
6. உள்ளூர் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி மையங்கள் அமைக்க வேண்டும்.
7. மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பாதிக்கப்படும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
8. அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய வெளிப்படையான பொதுக்கேட்பு கூட்டம் நடத்த வேண்டும்.
9. பொதுமக்கள் புகார்களைப் பெறவும், தீர்வு காணவும் நிரந்தர குறைதீர் அமைப்பு உருவாக்க வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் பொதுச் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படாத நிலையில், துறைமுகச் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவது அல்லது நிறுத்துவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காரைக்கால் வளர வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், மக்களின் உயிர், உடல்நலம், வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை அழித்து ஏற்படும் வளர்ச்சி ஏற்றுக்கொள்ள முடியாதது.

"வளர்ச்சி என்ற பெயரில் காரைக்காலை அழிக்க அனுமதிக்க முடியாது."

"மக்களின் உயிரும் வாழ்வாதாரமும் எந்த நிறுவனத்தின் லாபத்தையும் விட உயர்ந்தது."

எனவே, மேற்கண்ட கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கை எடுத்துமக்களின்உயிருக்கும் உடமைக்கும் உத்திரவாதம் ஏற்படுத்தியதற்கு பின் புதிதாக துவங்கப்பட உள்ள போர்ட் விரிவாக்கத்திற்கு அனுமதி அளிக்கும் மாறும் அதுவரை விரிவாக்க பணிகளுக்கு அனுமதி வழங்ககூடாது எனவும் பொதுமக்களின் சார்பாகவும் எங்களது SDPI கட்சியின் சார்பாகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

நன்றி.

இப்படிக்கு,

தேதி: 9/9/2026
இடம்: திருபட்டினம்

அப்துர் ரஹ்மான்
மாவட்ட தலைவர்,
சோஷியல் டெமோக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா (SDPI),
காரைக்கால் மாவட்டம்.

காரைக்கால் போராளிகள் குழு

பிளாட் எண் : 31/1, கெமி ரெசிடன்ஸி, இரண்டாம் குறுக்குதெரு,
பாரதி நகர், காரைக்கால் - 609602.
அலைபேசி : +91 97888 99938
karaikalporaligalkuzu@gmail.com

ஆலோசகர்
M.பாருக்

தலைவர்
வழக்கறிஞர் G.கணேஷ்

துணைத் தலைவர்
சி.கு.சுவாமிநாதன்

துணைத் தலைவர்
I.அப்துல் ரஹீம்
R.S.கருணாநிதி
E.J.ராமசந்திரன்

பொதுச் செயலாளர்
J.சிவகேணஷ்

செயலாளர்
S.விடுதலை கனல்

இணை செயலாளர்
R.ராஜேந்திரன்
S.சிவகுமார்
A.R.பாவா பஷ்ருதீன்
E.வீரராஜன்

பொருளாளர்
S.பிரபா

மக்கள் தொடர்பாளர்
S.யூசுப்கான்
S.சுரேஷ்
P.ரமேஷ்
M.நஸிம்

ஆட்சேபனை மற்றும் கோரிக்கை மனு

அனுப்புநர் :
வழக்கறிஞர் G. கணேஷ், B.A., LL.B.,
தலைவர்,
காரைக்கால் போராளிகள் குழு,
காரைக்கால்.

பெறுநர் :
மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
காரைக்கால் மாவட்டம்,
காரைக்கால்.
மற்றும்
உறுப்பினர் செயலர்,
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டுக் குழுமம் (PPCC),
புதுச்சேரி.

பொருள்:

M/s. Karaikal Port Private Limited – காரைக்கால் துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறனை ஆண்டுக்கு 21.5 மில்லியன் டன்னிலிருந்து 100.3 மில்லியன் டன்னாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ள விரிவாக்கத் திட்டம் – சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) – 09.09.2026 அன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் – காரைக்கால் போராளிகள் குழுவின் சார்பில் ஆட்சேபனைகள் மற்றும் பொதுநலக் கோரிக்கைகள் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் மாவட்ட மக்களின் சுற்றுச்சூழல், பொதுச் சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் சார்ந்த பொதுநலப் பிரச்சினைகளுக்காக செயல்பட்டு வரும் "காரைக்கால் போராளிகள் குழு" வின் தலைவர் என்ற முறையில், நான் வழக்கறிஞர் G. கணேஷ், இன்று 09.09.2026 அன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கீழ்க்கண்ட ஆட்சேபனைகளையும் கோரிக்கைகளையும் பொதுமக்களின் நலன் கருதி பதிவு செய்கிறேன்.

காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய சரக்கு கையாளும் திறனை 21.5 MTPA-இலிருந்து 100.3 MTPA வரை உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது. இது தற்போதைய திறனைவிட சுமார் 4.7 மடங்கு அதிகமான மிகப்பெரிய விரிவாக்கமாகும்.

இத்தகைய விரிவாக்கத்தால் ஏற்படக்கூடிய காற்று மாசு, நிலக்கரி தூசி, கடல் மற்றும் நீர் மாசுபாடு, பொதுச் சுகாதார பாதிப்புகள், சரக்கு ரயில்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, Railway Gate மூடப்படுவதால் ஏற்படும் போக்குவரத்து இடையூறு, கனரக வாகனப் போக்குவரத்து, சாலை விபத்துகள், ஒலி மாசு மற்றும் மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பு ஆகியவற்றின் ஒட்டுமொத்த தாக்கத்தை (Cumulative Impact) முழுமையாக ஆய்வு செய்யாமல் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது பொதுநலனுக்கு எதிரானதாக அமையும்.

1. நிலக்கரி தூசியால் ஏற்படும் காற்று மாசு

காரைக்கால் துறைமுகத்தில் நிலக்கரியை இறக்குதல், ஏற்றுதல், குவித்து வைத்தல், Conveyor மூலம் எடுத்துச் செல்லுதல் மற்றும் லாரி/ரயில் மூலம் கொண்டு செல்லுதல் போன்ற பல்வேறு நிலைகளிலும் நிலக்கரி தூசி காற்றில் பரவுவதற்கான அபாயம் உள்ளது.

குறிப்பாக PM10 மற்றும் PM2.5 போன்ற மிக நுண்ணிய துகள்கள் மனிதர்களின் சுவாச மண்டலத்திற்குள் சென்று உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை.

எனவே துறைமுக எல்லைக்குள் மட்டும் காற்றின் தரத்தை அளவிடுவது போதுமானதல்ல. துறைமுகத்தைச் சுற்றியுள்ள குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் சரக்கு போக்குவரத்து நடைபெறும் பகுதிகளிலும் காற்றின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

2. நிலக்கரியால் பொதுமக்களின் உடல்நலத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள்

நிலக்கரி தூசி மற்றும் அதனுடன் தொடர்புடைய particulate matter-ஐ நீண்டகாலமாக சுவாசிப்பதால் சுவாச மண்டலம் மற்றும் இதய-இரத்த நாள அமைப்புகளுக்கு பாதிப்புகள் ஏற்படக்கூடியவை.

ஆஸ்துமா போன்ற சுவாசப் பிரச்சினைகள் தீவிரமாதல், இருமல், மூச்சுத்திணறல், நுரையீரல் செயல்பாடு பாதிக்கப்படுதல் மற்றும் நீண்டகால particulate pollution exposure-னால் கடுமையான உடல்நல அபாயங்கள் ஏற்படக்கூடும்.

குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் ஏற்கனவே சுவாச/இதய நோய் உள்ளவர்கள் அதிக கவனம் தேவைப்படும் பிரிவினராக உள்ளனர்.

எனவே துறைமுகத்தைச் சுற்றியுள்ள மக்களிடம் Baseline Health Survey மேற்கொள்ளப்பட்டு, தொடர்ந்து காலமுறை மருத்துவ ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும்.

3. வீடுகள் மற்றும் பொதுப் பகுதிகளில் நிலக்கரி தூசி படிதல்

நிலக்கரி தூசி Port boundary-க்குள் மட்டுமே நிற்கும் எனக் கருத இயலாது.

காற்றின் வேகம் மற்றும் திசையைப் பொறுத்து அருகிலுள்ள குடியிருப்புகள், வீடுகள், பள்ளிகள், கடைகள், சாலைகள், விவசாயப் பகுதிகள் மற்றும் நீர்நிலைகளில் நிலக்கரி தூசி படிவதற்கான சாத்தியக்கூறுகளை விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.

நிலக்கரியை திறந்த வெளியில் குவித்து வைத்தல் மற்றும் திறந்த முறையில் எடுத்துச் செல்லுதல் தவிர்க்கப்பட்டு, தேவையான Covered Storage, Covered Conveyor, Dust Suppression மற்றும் Water Sprinkling Systems கட்டாயமாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

4. கடல் மற்றும் நீர்நிலைகள் மாசுபடும் அபாயம்

நிலக்கரி தூசி மற்றும் பிற bulk cargo-களிலிருந்து உருவாகும் மாசுகள் மழைநீருடன் கலந்து கடல் அல்லது பிற நீர்நிலைகளை அடைந்தால் கடல்சார் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும்.

எனவே Storm-water drainage, settling arrangements, wastewater treatment மற்றும் discharge systems ஆகியவற்றின் செயல்திறன் தொடர்ந்து சுயாதீனமாக கண்காணிக்கப்பட வேண்டும்.

கடல் நீர், நிலத்தடி நீர் மற்றும் அருகிலுள்ள நீர்நிலைகளின் தரம் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யப்பட்டு அதன் முடிவுகள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

5. மீனவர்கள் மற்றும் கடல்சார் வாழ்வாதாரம்

காரைக்கால் மாவட்டத்தின் குறிப்பிடத்தக்க மக்கள் கடல் மற்றும் மீன்பிடித் தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

துறைமுக விரிவாக்கத்தால் கடல் நீரின் தரம், மீன்வளம், மீன்பிடிப் பகுதிகளுக்கான அணுகல் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய தாக்கத்தை தனியாக ஆய்வு செய்ய வேண்டும்.

பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான தடுப்பு, நிவாரணம் மற்றும் உரிய இழப்பீட்டு நடைமுறைகளும் முன்கூட்டியே வகுக்கப்பட வேண்டும்.

6. சரக்கு ரயில்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் போக்குவரத்து இடையூறு

இது காரைக்கால் மக்களுக்கு ஏற்கனவே நேரடியாக ஏற்பட்டுவரும் மிக முக்கியமான பிரச்சினையாகும்.

துறைமுகத்திலிருந்து சரக்குகளை எடுத்துச் செல்லும் Goods Trains காரணமாக Railway Gates அடிக்கடி மூடப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள், பெண்கள், முதியவர்கள் மற்றும் அன்றாடப் பயணிகள் என அனைத்துத் தரப்பினரும் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

துறைமுகத்தின் திறன் 21.5 MTPA-இலிருந்து 100.3 MTPA ஆக உயரும்போது சரக்கு ரயில்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

எனவே,

தற்போது ஒரு நாளைக்கு எத்தனை Goods Trains இயக்கப்படுகின்றன?

விரிவாக்கத்திற்குப் பிறகு ஒரு நாளைக்கு எத்தனை Goods Trains இயக்கப்படும்?

எந்தெந்த Railway Gates அதிகமாகப் பாதிக்கப்படும்?

ஒவ்வொரு Railway Gate-மும் ஒரு நாளில் மொத்தமாக எவ்வளவு நேரம் மூடப்படும்?

Peak Hours-ல் ஏற்படும் Traffic Congestion எவ்வளவு?

என்பவற்றை உள்ளடக்கிய Railway Traffic Impact Assessment நடத்தப்பட்டு பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

7. ஆம்புலன்ஸ் மற்றும் அவசர சேவை வாகனங்களுக்கு ஏற்படும் உயிர் அபாயம்

Railway Gate மூடப்படுவதால் சாதாரணப் போக்குவரத்து பாதிக்கப்படுவதுடன், Ambulance, Fire & Rescue மற்றும் பிற Emergency Vehicles கூட Railway Gate-ல் காத்திருக்க வேண்டிய அபாயம் உள்ளது.

உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் ஒரு நோயாளிக்கு சில நிமிடங்களின் தாமதம்கூட கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

எனவே Port expansion காரணமாக சரக்கு ரயில்களின் இயக்கம் அதிகரிக்குமானால், அதிகம் பாதிக்கப்படும் Railway Crossings-ல் Road Over Bridge (ROB) / Road Under Bridge (RUB) அமைப்பது உள்ளிட்ட நிரந்தர மாற்று ஏற்பாடுகள் முன்னுரிமையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

Port expansion காரணமாக ஏற்படும் கூடுதல் சரக்கு போக்குவரத்தால் ROB/RUB தேவை உருவாகுமானால், அதன் செலவினத்தில் Port நிர்வாகத்தின் உரிய பங்களிப்பும் உறுதி செய்யப்பட வேண்டும்.

8. கனரக லாரிகளால் ஏற்படும் பாதிப்புகள்

துறைமுக விரிவாக்கத்துடன் Heavy Vehicle movement அதிகரிக்கக்கூடும்.

இதனால்:

சாலை நெரிசல், சாலை விபத்துகள், பொதுச் சாலைகள் சேதமடைதல், டீசல் புகை, சாலைத் தூசி, ஒலி மாசு மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

எனவே Port-bound Heavy Vehicles நகர மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் கட்டுப்பாடின்றி இயக்கப்படாமல் Dedicated Port Road / Freight Corridor ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. ஒலி மாசு

Goods Trains, Heavy Trucks, Locomotives மற்றும் Cargo Handling Machinery ஆகியவற்றின் இயக்கம் அதிகரிக்கும்போது Noise Pollution-ம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக இரவு நேரத்தில் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படும் தாக்கத்தை தனியாக ஆய்வு செய்து Day-time / Night-time Noise Monitoring மேற்கொள்ள வேண்டும்.

10. அரசியலமைப்புச் சட்ட மற்றும் சுற்றுச்சூழல் சட்ட அடிப்படையிலான ஆட்சேபனை

முன்மொழியப்பட்ட திட்டத்தின் தாக்கத்தை ஒரு தொழில் அல்லது வணிக விரிவாக்கமாக மட்டும் பார்க்க இயலாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **Article 21** வழங்கும் உயிர் மற்றும் தனிநபர் சுதந்திரத்திற்கான உரிமையின் நீதித்துறை விளக்கத்தில், மனித கண்ணியத்துடனும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலுடனும் வாழ்வதற்கான உரிமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

Article 48A சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான அரசின் கடமையை வலியுறுத்துகிறது.

Article 51A(g) இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டிய அடிப்படைக் கடமையை எடுத்துரைக்கிறது.

மேலும் இத்திட்டத்தை பரிசீலிக்கும்போது இந்திய சுற்றுச்சூழல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட முக்கிய கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

Precautionary Principle

ஒரு நடவடிக்கையால் சுற்றுச்சூழல் அல்லது பொதுச் சுகாதாரத்திற்கு கடுமையான பாதிப்பு ஏற்படுவதற்கான நியாயமான அபாயம் இருக்கும்போது, முழுமையான அறிவியல் உறுதிப்பாடு இன்னும் இல்லை என்பதையே காரணமாகக் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஒத்திவைக்கக்கூடாது.

Polluter Pays Principle

திட்டத்தின் செயல்பாடு அல்லது விரிவாக்கத்தால் சுற்றுச்சூழலுக்கு மாசுபாடு அல்லது சேதம் ஏற்பட்டால், அதனைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் சுற்றுச்சூழலை மீட்டெடுப்பதற்கான பொறுப்பை சம்பந்தப்பட்ட Project Proponent ஏற்க வேண்டும்.

அதற்கான செலவுகளை பொதுமக்களின் மீது சுமத்தக்கூடாது.

Sustainable Development

பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சி அவசியமானது. ஆனால் அந்த வளர்ச்சி காரைக்கால் மக்களின் உயிர், உடல்நலம், சுற்றுச்சூழல், மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் எதிர்கால தலைமுறைகளின் உரிமைகளை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது.

மாண்புமிகு உச்சநீதிமன்றம் Vellore Citizens Welfare Forum v. Union of India (1996) வழக்கில் Precautionary Principle மற்றும் Polluter Pays Principle ஆகியவற்றை இந்திய சுற்றுச்சூழல் சட்டத்தின் முக்கியக் கொள்கைகளாக அங்கீகரித்துள்ளது.

எனவே Environment (Protection) Act, 1986 மற்றும் EIA Notification, 2006 ஆகியவற்றின் நோக்கத்திற்கேற்ப இந்த Public Hearing-ல் பொதுமக்களால் முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி பரிசீலனையில் உரிய முக்கியத்துவத்துடன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

11. சுயாதீனமான பொதுச் சுகாதார ஆய்வு

துறைமுகத்தைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடம் தற்போதைய சுவாச மற்றும் பிற உடல்நல நிலை குறித்த Baseline Health Survey மேற்கொள்ள வேண்டும்.

அதனைத் தொடர்ந்து காலமுறை அடிப்படையில் Independent Health Impact Assessment மேற்கொள்ள வேண்டும்.

Port நிர்வாகத்தின் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் இலவச மருத்துவ முகாம்கள், Lung Function Tests மற்றும் சுவாச நோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. காரைக்கால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

இத்திட்டத்திற்காக காரைக்கால் மாவட்டத்தின் இயற்கை மற்றும் பொதுக் கட்டமைப்பு வளங்கள் பயன்படுத்தப்படும் நிலையில், அதன் பொருளாதாரப் பயன்களிலும் காரைக்கால் மக்களுக்கு உரிய பங்கு கிடைக்க வேண்டும்.

எனவே விரிவாக்கத்தின் மூலம் உருவாகும் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளில் தகுதியுடைய காரைக்கால் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான வெளிப்படையான கொள்கை உருவாக்கப்பட வேண்டும்.

13. சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு முன் உறுதி செய்ய வேண்டிய நிபந்தனைகள்

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான அடுத்தகட்ட பரிசீலனைக்கு முன் குறைந்தபட்சம் கீழ்கண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதி செய்யப்பட வேண்டும்:

நிலக்கரி கையாளுதல், சேமித்தல் மற்றும் எடுத்துச் செல்லுதல் ஆகிய அனைத்து நிலைகளிலும் தூசி வெளியேறாத வகையில் Covered Storage, Covered Conveyor மற்றும் Dust Suppression Systems ஏற்படுத்தப்பட வேண்டும்.

Port premises மட்டுமல்லாமல் பாதிக்கப்படக்கூடிய குடியிருப்புப் பகுதிகளிலும் PM2.5, PM10 உள்ளிட்ட காற்றுத் தரத்தை 24×7 கண்காணிக்கும் Continuous Ambient Air Quality Monitoring Stations அமைக்கப்பட வேண்டும்.

Monitoring data பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இணையத்தில் தொடர்ந்து வெளியிடப்பட வேண்டும்.

தற்போதைய Port operations மற்றும் முன்மொழியப்பட்ட 100.3 MTPA expansion ஆகிய இரண்டின் தாக்கங்களையும் சேர்த்து Cumulative Environmental Impact Assessment மேற்கொள்ளப்பட வேண்டும்.

Port சுற்றுப்புற மக்களுக்கு Baseline Health Survey மற்றும் Periodical Independent Health Assessment மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடல் நீர், நிலத்தடி நீர் மற்றும் அருகிலுள்ள நீர்நிலைகளின் தரம் தொடர்ந்து சுயாதீனமாகப் பரிசோதிக்கப்பட வேண்டும்.

மீனவர்கள் மற்றும் கடலோர வாழ்வாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

Goods Train movement தொடர்பான முழுமையான Railway Traffic Impact Study மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போதைய Goods Trains எண்ணிக்கை மற்றும் விரிவாக்கத்திற்குப் பிறகு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கை பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

Railway Gates ஒவ்வொன்றும் ஒரு நாளில் எவ்வளவு நேரம் மூடப்படும் என்பது ஆய்வு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

அதிகம் பாதிக்கப்படும் Railway Crossings-ல் தேவையான ROB/RUB அமைப்பதற்கான காலவரையறையுடன் கூடிய செயல் திட்டத்தை அரசு, ரயில்வே மற்றும் Port நிர்வாகம் இணைந்து உருவாக்க வேண்டும்.

Ambulance, Fire & Rescue மற்றும் Emergency Vehicles Railway Gate-ல் சிக்கிக்கொள்ளாமல் இருக்க Emergency Traffic Management Plan ஏற்படுத்தப்பட வேண்டும்.

Heavy Vehicles குடியிருப்புப் பகுதிகளின் வழியாக கட்டுப்பாடின்றி செல்லாமல் Dedicated Port Road / Freight Corridor அமைப்பதற்கான திட்டம் பரிசீலிக்கப்பட வேண்டும்.

Port-related Heavy Vehicles காரணமாக பொதுச் சாலைகளுக்கு ஏற்படும் கூடுதல் சேதத்தின் பராமரிப்பில் Project Proponent-ன் பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இரவு நேர Port Operations, Goods Trains மற்றும் Heavy Vehicles காரணமாக ஏற்படும் Noise Pollution தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் Port-related problems குறித்து பொதுமக்கள் புகார் அளிக்க 24×7 Public Grievance Mechanism ஏற்படுத்தப்பட வேண்டும்.

பெறப்படும் புகார்கள், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் Pollution Monitoring Results ஆகியவற்றை பொதுமக்கள் அறியும் வகையில் வெளியிட வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் மருத்துவம், குடிநீர், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பிற பொதுநலத் திட்டங்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

திட்டத்தால் உருவாகும் வேலைவாய்ப்புகளில் தகுதியுடைய காரைக்கால் மாவட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு வெறும் பொதுவான உறுதிமொழி அளிக்காமல், Time-bound Action Plan தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14. இறுதி ஆட்சேபனை மற்றும் கோரிக்கை

"வளர்ச்சிக்கு காரைக்கால் போராளிகள் குழு எதிரானது அல்ல; ஆனால் காரைக்கால் மக்களின் உயிர், உடல்நலம், சுற்றுச்சூழல் மற்றும் அன்றாட வாழ்க்கையை விலையாகக் கொடுத்து மேற்கொள்ளப்படும் பாதுகாப்பற்ற வளர்ச்சியை ஏற்றுக்கொள்ள இயலாது."

தற்போதைய 21.5 MTPA சரக்கு கையாளும் திறனை 100.3 MTPA ஆக உயர்த்துவது மிகப்பெரிய விரிவாக்கமாகும்.

இதன் காரணமாக நிலக்கரி மற்றும் பிற சரக்குகளின் கையாளுதல், Goods Train movement, Heavy Vehicle movement மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் மற்றும் போக்குவரத்து அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடியதால், அவற்றின் Cumulative Environmental, Health and Traffic Impact முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

குறிப்பாக நிலக்கரி தூசியால் ஏற்படக்கூடிய காற்று மாசு மற்றும் பொதுச் சுகாதார அபாயங்கள் மற்றும் சரக்கு ரயில்களால் Railway Gates அடிக்கடி மூடப்பட்டு பொதுமக்களும், பள்ளி/கல்லூரி மாணவர்களும், பணிக்குச் செல்பவர்களும், ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர வாகனங்களும் பாதிக்கப்படும் பிரச்சினை ஆகியவற்றுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

தேவையான இடங்களில் ROB/RUB உள்ளிட்ட நிரந்தர மாற்று போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துவதற்கான காலவரையறையுடன் கூடிய திட்டம் உறுதி செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட சுற்றுச்சூழல், பொதுச் சுகாதாரம், ரயில்வே மற்றும் சாலைப் போக்குவரத்து பிரச்சினைகள் குறித்து உரிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளுக்கு காலக்கெடுவுடன் கூடிய செயல்திட்டம் உறுதி செய்யப்படாமல் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக்கூடாது என காரைக்கால் போராளிகள் குழுவின் சார்பில் எங்களது வலுவான ஆட்சேபனையை பதிவு செய்கிறோம்.

மேலும், இம்மனுவில் எழுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு ஆட்சேபனை மற்றும் கோரிக்கையும் இன்றைய **Public Hearing Proceedings / Minutes-ல்** முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

இம்மனு Public Hearing proceedings-ன் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டு, இதில் எழுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு முக்கிய அம்சத்திற்கும் Project Proponent மற்றும் சம்பந்தப்பட்ட அரசு/கட்டுப்பாட்டு அதிகாரிகளிடமிருந்து Point-wise Written Response பெறப்பட்டு, அந்த பதில்களுடன் இம்மனுவும்

சுற்றுச்சூழல் அனுமதி பரிசீலிக்கும் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பின் முன் வைக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

பொதுமக்களின் உயிர், உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
வழக்கறிஞர் G. கணேஷ், B.A., LL.B.,
தலைவர்,
காரைக்கால் போராளிகள் குழு
காரைக்கால்.
தேதி : 09.09.2026
இடம் : காரைக்கால்.

தேதி:

அனுப்புநர்: K. முத்துமுகன் S/o கோன்னப் பனி
பட்டினச்சேரி
நாகப்பட்டினம்

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

FEDCOT INDIA CONSUMER MOVEMENT PONDICHERRY

(நுகர்வோர் சங்கங்களின் கூட்டமைப்பு)

REG NO :1923/ 2019 - FEDCOT INDIA

NO:63, KAILASANATHAR KOVIL STREET KARAIKAL -609602

S.THIRUMURUGAN B.A.L.L.B.
President & Legal advisor
Puducherry U.T
Mobile : 98426 56138
Email : thirumuruganvakkil@gmail.com

S.SIVAKUMAR
State Secretary (puducherry U.T)
Mobile: 9965897060
Email : siva98751@gmail.com

M.RAJADURAI
District Secretary
Puducherry U.T
Mobile : 9443654185

தேதி: 09.09.2026

பெறுநர்,

உறுப்பினர் செயலர்,
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் (PPCC),
புதுச்சேரி.

பொருள்: காரைக்கால் துறைமுக விரிவாக்கம் (21.5 MTPA லிருந்து 100.3 MTPA) - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) தொடர்பான பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் சமர்ப்பிக்கும் கருத்து மனு.

ஐயா, வணக்கம்.

கீழ்வாஞ்சூர், திருமலைராயன் பட்டினம், கொம்பூன் பஞ்சாயத்து பகுதியில் M/s. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களின் துறைமுக விரிவாக்க திட்டம் குறித்து இன்று பல்நோக்கு மண்டபம், போலகம், தி.ஆர்.பட்டினத்தில் நடைபெறும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் FEDCOT INDIA CONSUMER MOMENT PUDUCHERRY KARAIKAL நுகர்வோர் சங்கங்கள் கூட்டமைப்பு புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டம் சார்பாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறேன்.

1. EIA அறிக்கை தமிழில் வழங்கப்படவில்லை: S.O.1533 தேதி 14.09.2006 EIA அறிவிப்பின்படி முழு EIA/EMP அறிக்கை தமிழ் மொழிபெயர்ப்புடன் 30 நாட்களுக்கு முன் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். இதுவரை வழங்கப்படவில்லை.

2. மீனவர் வாழ்வாதார பாதிப்பு: 21.5 லிருந்து 100.3 மில்லியன் டன்னாக 5 மடங்கு விரிவாக்கம் என்பது கீழ்வாஞ்சூர், போலகம், கீழையூர் மீனவர்களின் மீன்பிடி தளத்தை முற்றிலும் பாதிக்கும். கடல் அரிப்பு ஏற்கனவே அதிகம் உள்ளது.

3. சுற்றுச்சூழல் பாதிப்புகள்: நிலக்கரி, இரும்பு தாது போன்ற சரக்கு கையாளுதலால் காற்று மாசு, நிலத்தடி நீரில் உப்பு நீர் ஊடுருவல், விவசாய நில பாதிப்பு ஏற்படும். இதற்கான தடுப்பு திட்டம் தெளிவாக இல்லை.

4. எங்கள் கோரிக்கைகள்:

a) முழு EIA அறிக்கையை தமிழில் வெளியிட்டு மீண்டும் ஒரு முறை கருத்துக்கேட்பு நடத்த வேண்டும்.

b) மீனவர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் மாற்று வாழ்வாதார திட்டம் அறிவிக்க வேண்டும்.

c) CRZ அனுமதி வரைபடங்கள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும்.

எனவே மேற்கண்ட விபரங்கள் முழுமையாக கிடைக்கும் வரை இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக்கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

S. SIVAKUMAR
SECRETARY
FEDCOT INDIA CONSUMER MOMENT
PONDICHERRY
Reg No 1923/2019
DARPAN Reg PY/2020/0287681
KARAIKAL

இப்படிக்கு,

THIRUMURUGAN, BA, MA
PRESIDENT
FEDCOT INDIA
PUDHUCHERRY U.T.
Cell: 9842666138
email: thirumurugan.vakkil@gmail.com

கற்பி! ஒன்று சேர்!! புரட்சி செய்!!!

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கூட்டமைப்பு

பதிவு எண்:184/2019

72/3,மாரியம்மன் கோவில் வீதி, காரைக்கால். 609602

சட்ட ஆலோசகர்: தே.வின்சென்ட் ராக் B.A., L.L.B., கைபேசி: 95854 70775

கௌரவத் தலைவர்கள்
கே.ஆர்.பக்கிரிசாமி
பா.காளியப்பன்

தலைவர்
தி.இராஜேஷ்

பொதுச்செயலாளர்
ஜெ.சூர்யா

பொருளாளர்
இரா.விக்னேஷ்

செயலாளர்கள்
மு.வேல்குமார்
மு.செல்வகுமார்

துணைத் தலைவர்கள்
பா.பாலசுப்ரமணியன்
அன்பூர் மதிவாணன்

துணை செயலாளர்கள்
த.குணசேகரன்
வி.சுகுமார்

SCSTPF/Grvns/kkl/No:131

நாள்: 09.09.2026

பெறுநர்: உறுப்பினர் செயலர்,
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் (PPCC),
புதுச்சேரி.

பொருள்: காரைக்கால் துறைமுக விரிவாக்கம் (21.5 MTPA லிருந்து 100.3 MTPA) – சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) தொடர்பான பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் சமர்ப்பிக்கும் கருத்து மனு.

ஐயா, வணக்கம்.

கீழ்வாஞ்சூர், திருமலைராயன் பட்டினம், கொம்பூன் பஞ்சாயத்து பகுதியில் M/S காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களின் துறைமுக விரிவாக்க திட்டம் குறித்து இன்று பல்நோக்கு மண்டபம், போலகம், T.R.பட்டினத்தில் நடைபெறும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கூட்டமைப்பு சார்பாக பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறோம்.

1. EIA அறிக்கை தமிழில் வழங்கப்படவில்லை: S.O.1533 தேதி 14.09.2006 EIA அறிவிப்பின்படி முழு EIA /EMP அறிக்கை தமிழ் மொழிபெயர்ப்புடன் 30 நாட்களுக்கு முன் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். இதுவரை வழங்கப்படவில்லை.

2. மீனவர் வாழ்வாதார பாதிப்பு: 21.5 லிருந்து 100.3 மில்லியன் டன்னாக 5 மடங்கு விரிவாக்கம் என்பது கீழ்வாஞ்சூர், போலகம், கீழையூர் மீனவர்களின் மீன்பிடி தளத்தை முற்றிலும் பாதிக்கும். கடல் அரிப்பு ஏற்கனவே அதிகம் உள்ளது.

3. சுற்றுச்சூழல் பாதிப்புகள்: நிலக்கரி, இரும்பு தாது போன்ற சரக்கு கையாளுதலால் காற்று மாசு, நிலத்தடி நீரில் உப்பு நீர் ஊடுருவல், விவசாய நில பாதிப்பு ஏற்படும். இதற்கான தடுப்பு திட்டம் தெளிவாக இல்லை.

4. எங்கள் கோரிக்கைகள்:
a) முழு EIA அறிக்கையை தமிழில் வெளியிட்டு மீண்டும் ஒரு முறை கருத்துக்கேட்பு நடத்த வேண்டும்.
b) மீனவர்களுக்கு உரிய இழப்பீடு மற்றும் மாற்று வாழ்வாதார திட்டம் அறிவிக்க வேண்டும்.
c) CRZ அனுமதி வரைபடங்கள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும்.

எனவே மேற்கண்ட விபரங்கள் முழுமையாக கிடைக்கும் வரை இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

ஜெ. சூர்யா
பொதுச் செயலாளர்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
மக்கள் கூட்டமைப்பு
காரைக்கால்-609 602

இப்படிக்கு

بسم الله الرحمن الرحيم

محي دين جامعة مسجد مسلم جماعة ناكور

முஹையித்தீன் ஜாமிஆ மஸ்ஜித் நிர்வாக கமிட்டி

வக்ஃப் எண்: No.NS.287/TNJ

MOHIDEEN JAMIA MASJID EXECUTIVE COMMITTEE

முஹையித்தீன் பள்ளி வளாகம்,
நாகூர் - 611 002.
நாகப்பட்டினம் மாவட்டம்,
தமிழ்நாடு - இந்தியா.

Mohideen Jamia Masjid Building,
Nagore - 611 002. Nagapattinam Dist.,
Tamil Nadu, S.India.
e-mail: mohideenjamiamasjid@yahoo.co.in

Date: 09/09/2026

அனுப்புனர்:
உறுப்பினர்கள் & நிர்வாகிகள்,
தவ்ஹீத் கூட்டமைப்பு - நாகூர்.
Phone: 7695991704

பெறுநர்:
துறைமுக நிர்வாகம் / திட்ட நிர்வாக அதிகாரி,
காரைக்கால் துறைமுகம்,
காரைக்கால்.

பொருள்: காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்படும் விரிவாக்கத் திட்டத்திற்கு முழுமையான எதிர்ப்பு - நாகூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் உடல்நலம், குடிநீர், விவசாயம், மீன்வளம், கடலோரப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தீவிரமான மற்றும் நீண்டகால பாதிப்புகள் - இத்தகைய பாதிப்புகளின் காரணமாக திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது எனக் கோருதல் - தொடர்பாக.

محي الدين جامعت مسجد
MOHIDEEN JAMIA MASJID EXECUTIVE COMMITTEE
MUSLIM JAMA'ATH
NAGORE - 611 002.
Waqf No.NS. 287/TNJ

மதிப்பிற்குரிய ஐயா / அம்மையீர்,

நாங்கள் தவ்ஹீத் கூட்டமைப்பு - நாகூர் சார்பில், நாகூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்களின் நலன், உடல்நலம், குடிநீர் பாதுகாப்பு, விவசாயம், மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடலோர சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கில் இம்மனுவை சமர்ப்பிக்கிறோம்.

காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்படும் விரிவாக்கத்தின் மூலம் துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறன் அதிகரித்தல், கடல் மற்றும் துறைமுகப் பகுதிகளில் ஆழப்படுத்துதல் (Dredging), கடலோரக் கட்டமைப்புகள் மற்றும் Breakwater போன்ற பணிகள், கப்பல் போக்குவரத்து அதிகரித்தல், கனரக வாகனப் போக்குவரத்து அதிகரித்தல் மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிகிறோம்.

இத்திட்டம் வெறும் ஒரு துறைமுக விரிவாக்கத் திட்டமாக மட்டும் கருதப்பட முடியாது. இது பல லட்சம் மக்களின் வாழ்வாதாரம், பொதுச்சுகாதாரம், குடிநீர், விவசாயம், மீன்வளம் மற்றும் கடலோரச் சூழலின் எதிர்காலத்தை நேரடியாகத் தொடர்புபடுத்தக்கூடிய மிகப்பெரிய திட்டமாகும்.

எனவே, இதன் தாக்கம் திட்டத்தின் எல்லைக்குள் மட்டும் மதிப்பிடப்படாமல், நாகூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரக் குடியிருப்புப் பகுதிகளையும் உள்ளடக்கிய விரிவான கோணத்தில் மதிப்பிடப்பட வேண்டும்.

---

1. பொதுமக்களின் உடல்நலம் – எங்களது முதன்மையான கவலை

துறைமுகத்தில் நிலக்கரி மற்றும் பிற bulk cargo போன்ற தூசித் தன்மை கொண்ட சரக்குகள் கையாளப்படுவதால், அவற்றின் ஏற்றுதல், இறக்குதல், சேமிப்பு மற்றும் போக்குவரத்தின்போது உருவாகக்கூடிய தூசித் துகள்கள் பொதுமக்களின் உடல்நலத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து எங்களுக்கு தீவிரமான கவலை உள்ளது. குறிப்பாக PM10 மற்றும் PM2.5 போன்ற நுண்துகள்கள் நீண்டகாலமாக அதிக அளவில் வெளிப்பட்டால் மனித சுவாச அமைப்புக்கும் ஒட்டுமொத்த பொதுச்சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படக்கூடியது.

எனவே, திட்டத்தின் பொருளாதாரப் பயனை மட்டும் கருத்திற்கொண்டு, அதனால் பொதுமக்களின் உடல்நலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்தை புறக்கணிக்க முடியாது. மக்களின் உடல்நலத்தை ஆபத்தில் ஆழ்த்தக்கூடிய திட்டத்தை வெறும் பொருளாதார வளர்ச்சி என்ற காரணத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது.

2. நாகூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் காற்றுத் தரம்

துறைமுகத்தின் செயல்பாடுகள் அதிகரிக்கும் நிலையில், சரக்கு கையாளுதல் மற்றும் கனரக வாகனப் போக்குவரத்து அதிகரிப்பதால் காற்று மாசுபாட்டின் அளவு அதிகரிக்கும் சாத்தியம் குறித்து உரிய அறிவியல் மதிப்பீடு அவசியமாகிறது. திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னர் மட்டுமே அதன் பாதிப்பை மதிப்பிடுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய அணுகுமுறை அல்ல. பாதிப்பு ஏற்பட்ட பிறகு அதைச் சரிசெய்வதைவிட, பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளபோதே அதைத் தடுப்பதே சுற்றுச்சூழல் சட்டத்தின் அடிப்படை அணுகுமுறையாகும்.

3. குடிநீர் மற்றும் நிலத்தடி நீர்

நாகூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பொதுமக்களின் வாழ்வில் நிலத்தடி நீர் முக்கியமானதாக உள்ளது. துறைமுக விரிவாக்கம், கடல் ஆழப்படுத்துதல் மற்றும் கடலோர அமைப்பில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் காரணமாக எதிர்காலத்தில் seawater intrusion, நிலத்தடி நீரின் உப்புத்தன்மை அதிகரித்தல் அல்லது நீரின் தரத்தில் மாற்றம் ஏற்படும் சாத்தியம் குறித்து எங்களுக்கு தீவிரமான அச்சம் உள்ளது.

குடிநீர் என்பது ஒரு சாதாரண பொருளாதார வளம் அல்ல. குடிநீர் பாதுகாப்பு என்பது மனித வாழ்வின் அடிப்படை உரிமையுடன் தொடர்புடையது. எனவே, குடிநீர் மற்றும் நிலத்தடி நீருக்கு ஏற்படக்கூடிய தீவிரமான பாதிப்பின் சாத்தியம் உள்ள நிலையில், இத்திட்டத்தை அனுமதிப்பது குறித்து மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டும்.

4. விவசாயம் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரம்

நிலத்தடி நீரின் உப்புத்தன்மை அதிகரிப்பது அல்லது சுற்றுச்சூழல் தரத்தில் மாற்றம் ஏற்படுவது விவசாய நிலங்களின் உற்பத்தித் திறனை பாதிக்கக்கூடும். விவசாய நிலம் ஒருமுறை உப்புத்தன்மை போன்ற காரணங்களால் தீவிரமாக பாதிக்கப்பட்டால், அதன்

இயல்பான உற்பத்தித் திறனை மீட்டெடுப்பது கடினமாக இருக்கலாம். எனவே, மீளமுடியாத அல்லது நீண்டகால பாதிப்பு ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ள நிலையில், திட்டத்திற்கு அனுமதி வழங்குவது பொதுநலனுக்கு எதிரானதாக அமையும்.

5. மீனவர்கள் மற்றும் கடல் வளங்கள்

கடல் ஆழப்படுத்துதல், கடலோர கட்டமைப்புகள், கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகச் செயல்பாடுகள் அதிகரிப்பது கடல் உயிரியல் அமைப்பிலும் மீன்வளத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. மீனவர்களின் வாழ்வாதாரம் கடலின் இயற்கையான சூழலை நேரடியாகச் சார்ந்துள்ளது. எனவே, மீன்வளம் பாதிக்கப்படும் சாத்தியம் இருந்தால், அதன் விளைவாக ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடும். ஒரு திட்டத்தின் பொருளாதாரப் பலனுக்காக ஒரு சமூகத்தின் பாரம்பரிய வாழ்வாதாரத்தை ஆபத்தில் ஆழ்த்துவது ஏற்றுக்கொள்ள முடியாது.

6. கடற்கரை அரிப்பு மற்றும் கடலோரப் பாதுகாப்பு

Breakwater, dredging மற்றும் பிற துறைமுகக் கட்டமைப்புகள் கடலின் இயற்கையான அலை இயக்கம் மற்றும் மணல் நகர்வில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவை. இதன் விளைவாக ஒரு பகுதியில் மணல் தேக்கம் ஏற்பட்டாலும், மற்றொரு பகுதியில் கடற்கரை அரிப்பு அதிகரிக்கும் சாத்தியம் இருக்கலாம். அத்தகைய மாற்றங்கள் நாகூர் மற்றும் சுற்றுவட்டாரக் கடற்கரைப் பகுதிகளின் எதிர்கால பாதுகாப்பை பாதிக்கக்கூடியவை. ஒருமுறை கடற்கரை இயற்கை அமைப்பில் கடுமையான மாற்றம் ஏற்பட்டால், அதை முந்தைய நிலைக்கு முழுமையாக மீட்டெடுப்பது எப்போதும் சாத்தியமாகாது.

7. வெள்ளப்பெருக்கு மற்றும் நீர்வழி பாதிப்பு

துறைமுக விரிவாக்கத்துடன் தொடர்புடைய நில அமைப்பு மாற்றங்கள், கடலோரக் கட்டமைப்புகள் மற்றும் நீர்வழிகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், மழைக்காலங்களில் நீரின் இயற்கையான வெளியேற்றம் மற்றும் வெள்ளப்பெருக்கு நிலைமை பாதிக்கப்படுமா என்பது மிகத் தீவிரமாக பரிசீலிக்கப்பட வேண்டும். நாகூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் குடியிருப்புகள், விவசாய நிலங்கள் மற்றும் பொதுக் கட்டமைப்புகள் வெள்ள அபாயத்திற்கு உள்ளாகக்கூடிய நிலையில், இதுபோன்ற சாத்தியமான அபாயத்தை புறக்கணித்து திட்டத்திற்கு அனுமதி வழங்க முடியாது.

8. கனரக வாகனப் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு

துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறன் அதிகரித்தால், அதற்கேற்ப லாரிகள் மற்றும் பிற கனரக வாகனங்களின் போக்குவரத்தும் அதிகரிக்கக்கூடும். இதனால்:

- சாலை விபத்துகள்;
- சாலை நெரிசல்;
- தூசி மாசுபாடு;
- ஒலி மாசுபாடு;
- பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு;
- பொதுமக்களின் சாலைப் பாதுகாப்பு;
- குடியிருப்புப் பகுதிகளின் வாழ்க்கைத் தரம்

ஆகியவை பாதிக்கப்படக்கூடிய சாத்தியம் உள்ளது. இதுவும் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை நேரடியாகப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினையாகும்.

9. சட்ட ரீதியான நிலைப்பாடு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் Article 21 கீழ் பாதுகாக்கப்படும் வாழ்வுரிமை என்பது வெறும் உயிருடன் இருப்பதற்கான உரிமை மட்டுமல்ல; மாசற்ற காற்று மற்றும் நீரை அனுபவிக்கும் உரிமையுடனும் தொடர்புடையது என்பதை உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. *Subhash Kumar v. State of Bihar, (1991) 1 SCC 598* வழக்கில், pollution-free water and air ஆகியவை Article 21-ன் கீழ் பாதுகாக்கப்படும் வாழ்வுரிமையின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டுள்ளன.

மேலும், *Vellore Citizens' Welfare Forum v. Union of India, (1996) 5 SCC 647* வழக்கில், Precautionary Principle, Polluter Pays Principle மற்றும் Sustainable Development ஆகியவை இந்திய சுற்றுச்சூழல் சட்டத்தின் முக்கியக் கொள்கைகள் என உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. அதன்படி, தீவிரமான அல்லது மீளமுடியாத சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படக்கூடிய நியாயமான சாத்தியம் இருந்தால், முழுமையான அறிவியல் உறுதி இல்லை என்ற காரணத்தை முன்வைத்து தடுப்பு நடவடிக்கைகளைத் தவிர்க்க முடியாது.

11. மேற்கண்ட காரணங்களால், காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கான Environmental Clearance மற்றும் அதனைத் தொடர்ந்து தேவையான பிற அனுமதிகளை வழங்கும் நடவடிக்கையை நிறுத்தி, முன்மொழியப்பட்ட விரிவாக்கத் திட்டத்தை முழுமையாகத் திரும்பப் பெற/கைவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

EIA-வில் பல்வேறு hazardous/toxic/non-hazardous chemicals மற்றும் liquids, petroleum products, LNG/LPG/CNG, methanol, ethanol, benzene, toluene போன்ற சரக்குகள் கையாளப்படக்கூடியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சரக்குகளின் சேமிப்பு, கையாளுதல், loading/unloading மற்றும் போக்குவரத்து தொடர்பாக off-site emergency plan, fire safety, chemical spill response, evacuation plan மற்றும் அருகிலுள்ள மக்களுக்கு எச்சரிக்கை/பாதுகாப்பு நடைமுறைகள் தெளிவாக வெளியிடப்பட வேண்டும். மாவட்ட நிர்வாகம், தீயணைப்புத்துறை, மருத்துவத்துறை மற்றும் மீனவர் சமூகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த disaster management mechanism தேவைப்படுகிறது.

12. இம்மனுவில் முன்வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆட்சேபனையும், குறிப்பாக "திட்டத்தை முழுமையாகக் கைவிட வேண்டும்" என்ற முதன்மைக் கோரிக்கையும், பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் அதிகாரபூர்வ proceedings-ல் முழுமையாகவும் தெளிவாகவும் பதிவு செய்யப்பட வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தின் கட்டுமானப் பணிகள், bulk cargo handling, கனரக வாகனங்கள், stockyard மற்றும் material transfer ஆகியவற்றால் தூசி மற்றும் காற்று மாசு ஏற்பட வாய்ப்பு உள்ளது. EIA-வில் mitigation measures குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை நடைமுறையில் கண்காணிக்கப்படுவதற்கான real-time monitoring, public disclosure மற்றும் violation ஏற்பட்டால் உடனடி நடவடிக்கை ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும்.

13. EIA-வில் உள்ள தரவு முரண்பாடுகள் மற்றும் வெளிப்படைத்தன்மை

நிலம் கையகப்படுத்தல் மற்றும் மீனவர்/மக்கள் தொகை தொடர்பான எண்ணிக்கைகளில் ஆவணங்களுக்குள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய அடிப்படைத் தரவுகளில் முரண்பாடு இருக்கும் நிலையில், அதன்

அடிப்படையில் செய்யப்பட்ட impact assessment மற்றும் mitigation commitments-ன் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகிறது. எனவே corrected EIA/EMP, அனைத்து annexures, modelling results மற்றும் supporting data ஆகியவை பொதுமக்களுக்கு எளிதில் அணுகக்கூடிய வகையில் வெளியிடப்பட வேண்டும்.

14. பொதுமக்கள் கருத்துக் கேட்பு மற்றும் இறுதி EIA

பொதுமக்கள் கருத்துக் கேட்பில் முன்வைக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும், திட்ட நிறுவனத்தின் பதில்களும், ஏற்கப்படும்/நிராகரிக்கப்படும் காரணங்களும் இறுதி EIA/EMP-ல் முறையாக tabular form-ல், தேவையான budgetary commitment-உடன் சேர்க்கப்பட வேண்டும். பொதுமக்களின் கருத்துக்கள் வெறும் பதிவாக மட்டும் இல்லாமல், திட்டத்தின் design, mitigation measures மற்றும் environmental management commitments-ல் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

15. CRZ மற்றும் பிற சட்டபூர்வ அனுமதிகள்

திட்டப் பகுதியில் CRZ-ன் பல்வேறு வகைப்பாடுகள் தொடர்புடையதாக EIA-வில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே CRZ clearance/recommendation மற்றும் தொடர்புடைய அனைத்து statutory approvals பெறப்பட்டு, அவற்றின் நிபந்தனைகள் பொதுமக்களுக்கு முழுமையாக வெளியிடப்பட்ட பின்னரே சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். ஒரு அனுமதி இன்னும் நிலுவையில் இருக்கும் நிலையில் அதனை முன்கூட்டியே உறுதி செய்யப்பட்டதாகக் கருதி திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது.

எனவே, பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறேன்:

1. மேற்கண்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதிப்புகள் தொடர்பான குறைபாடுகள் மற்றும் தரவு முரண்பாடுகள் முழுமையாக சரிசெய்யப்படும் வரை, காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கக் கூடாது.

2. சுமார் 42 மில்லியன் கன மீட்டர் capital dredging, ஆண்டுதோறும் சுமார் 4.2 மில்லியன் கன மீட்டர் maintenance dredging, 137.14 ஹெக்டேர் reclamation மற்றும்

breakwater/channel விரிவாக்கம் ஆகியவற்றின் cumulative marine impact குறித்து சுயாதீனமான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

3. Puravadaiyanar River/Creek diversion/realignment காரணமாக ஏற்படக்கூடிய வெள்ளம், வடிகால், sediment transport மற்றும் உவர்நீர் ஊடுருவல் பாதிப்புகள் குறித்து சுயாதீன hydrological/hydrodynamic study மேற்கொள்ள வேண்டும்.

4. 15 மீனவக் கிராமங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய மீனவர் குடும்பங்களுக்கான livelihood impact assessment, compensation மற்றும் livelihood restoration plan ஆகியவை தெளிவான காலஅட்டவணை மற்றும் நிதி ஒதுக்கீட்டுடன் உருவாக்கப்பட வேண்டும்.

5. கடற்கரை அரிப்பு/மணல் சேர்க்கை குறித்து long-term shoreline monitoring mechanism அமைத்து, பாதிப்பு ஏற்பட்டால் திட்ட நிறுவனமே முழுச் செலவில் corrective measures மேற்கொள்ளும் வகையில் சட்டபூர்வ நிபந்தனை விதிக்க வேண்டும்.

6. துறைமுக விரிவாக்கத்தால் அதிகரிக்கும் கனரக வாகனப் போக்குவரத்திற்கான தனித்த traffic impact and road safety plan, road strengthening மற்றும் accident prevention measures ஆகியவை முன்கூட்டியே உறுதி செய்யப்பட வேண்டும்.

7. hazardous cargo handling தொடர்பாக off-site emergency plan, disaster management plan மற்றும் பொதுமக்கள்/மீனவர் சமூகத்திற்கான emergency communication mechanism ஆகியவை பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

8. EIA-வில் உள்ள நிலப்பரப்பு, மக்கள் தொகை மற்றும் பிற அடிப்படைத் தரவு முரண்பாடுகள் அனைத்தும் சரிசெய்யப்பட்டு, corrected EIA/EMP மற்றும் தொடர்புடைய annexures பொதுமக்களுக்கு மீண்டும் வெளியிடப்பட வேண்டும்.

9. இன்றைய பொதுமக்கள் கருத்துக் கேட்பில் முன்வைக்கப்படும் ஒவ்வொரு ஆட்சேபனையும் அதன் முழு விவரத்துடன் அதிகாரப்பூர்வ proceedings-ல் பதிவு செய்யப்பட வேண்டும். திட்ட நிறுவனத்தின் பதில்களும் பதிவு செய்யப்பட்டு, இறுதி EIA/EMP-ல் இணைக்கப்பட வேண்டும்.

10. இன்றைய பொதுமக்கள் கருத்துக் கேட்பில் பதிவு செய்யப்படும் ஆட்சேபனைகள் வெறும் சில EIA குறைபாடுகளைத் திருத்தும் நடவடிக்கையாக

மட்டுமே கருதப்படக் கூடாது. இத்திட்டத்தின் அடிப்படைத் தேவையும், மக்களின் பாதுகாப்பிற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் ஒட்டுமொத்த ஆபத்தும் கருத்தில் கொண்டு, திட்டத்தை முழுமையாகக் கைவிடும் முடிவு எடுக்க வேண்டும்.

முடிவாக, இது வெறும் சில குறைபாடுகளைத் திருத்தி செயல்படுத்தக்கூடிய ஒரு சாதாரண விரிவாக்கத் திட்டம் அல்ல. EIA-வில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மிகப்பெரிய அளவிலான dredging, reclamation, கடற்கரை மாற்றம், ஆற்றுப்பாதை மாற்றம், மீனவர் வாழ்வாதார பாதிப்பு, அதிகரிக்கும் போக்குவரத்து மற்றும் hazardous cargo அபாயங்கள் ஆகியவை ஒட்டுமொத்தமாகக் கருதப்படும் போது, இத்திட்டம் மக்களுக்கும் கடலோரச் சூழலுக்கும் ஏற்படுத்தக்கூடிய ஆபத்து ஏற்றுக்கொள்ள முடியாத அளவில் உள்ளது. ஆகையால், பொதுமக்கள் நலன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முன்னிறுத்தி, காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முழுமையாகக் கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இப்படிக்கு,

(கம்பூர். செல்வராஜ்)

ஒருங்கிணைப்பாளர்,

டங்க்ஸ்டன் சுரங்க திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு,
1/267, மேலக்கால்
கம்பூர் அஞ்சல், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம். - 625101
மேலூர்

செல் பேசி: 98847-59526

இடம்: காரைக்கால்

தேதி: 09.09.2026

9.9.2026

மொத்த பக்கங்கள் (7)

அனுப்புநர்,

G.V.மாதவன் (9842360069)

தொகுதி கழக செயலாளர்,

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்,

நிரவி-திரு பட்டினம் தொகுதி,

காரைக்கால் மாவட்டம்,

புதுச்சேரி மாநிலம்.

பெறுநர்:

உறுப்பினர் செயலர் / தலைமைப் பொறியாளர்,

புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCCC),

புதுச்சேரி அரசு.

பொருள்: அதானி காரைக்கால் துறைமுக விரிவாக்கம் (Phase-II) - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிக்கை மீதான பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் 26 கேள்விகள் அடங்கிய மனு

ஐயா / அம்மையீர்,

காரைக்கால் மாவட்டம், திருமலைராயன்பட்டினம் கொம்யூன், கீழ் வாஞ்சூர் கிராமத்தில் அமைந்துள்ள காரைக்கால் துறைமுகத்தின் கொள்ளளவை 21.5 MMTPA லிருந்து 100.1 MMTPA ஆக உயர்த்த உத்தேசித்துள்ள திட்டத்தின் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் (09/09/2026), உள்ளூர் மக்களாகிய நாங்கள் எங்களது கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்து, கீழே கண்ட 26 முக்கியமான ஆதாரப் பூர்வமான கேள்விகளை முன்வைக்கிறோம்:

1. 2011 பழைய அலைக்கோடு (HTL) ஆய்வை வைத்தே ஏமாற்றுதல்

2009-ல் நிலம் கையகப்படுத்தப்பட்டு 2011-ல் இயங்கத் தொடங்கிய இத்துறைமுகம், 2011-ல் எடுக்கப்பட்ட பழைய High Tide Line (HTL / அலைக்கோடு) மற்றும் நிலப்பரப்பு அளவீடுகளையே 2026 EIA அறிக்கையிலும் பயன்படுத்தியுள்ளது ஏன்?

கடந்த 15 ஆண்டுகளில் தீவிரமான கடலோர நில அரிப்பால் (Coastal Erosion) கரைகள் உள்வாங்கியுள்ள நிலையில், புதிய அலைக்கோடு (HTL/ITL) மற்றும் CRZ வரைபடம் தயாரிக்காமல் இந்த EIA அறிக்கை எப்படித் தயாரிப்பீர்கள்?

2. கடலோர நில அரிப்பு மற்றும் தடுப்பச் சுவர் தோல்வி

சுனாமிக்குப் பிறகும், துறைமுக வருகைக்குப் பிறகும் கடல் அரிப்பு தீவிரமடைந்து சவுக்குத் தோப்புகள் மற்றும் கடற்கரை நிலங்கள் கடலுக்குள் மூழ்கியது உண்மையா இல்லையா?

கடற்கரையில் போட்டிருந்த பழைய தடுப்புச் சுவர்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு, தற்போது போடப்பட்டுள்ள கான்கிரீட் தடுப்புகளே நில அரிப்பின் தீவிரத்திற்கு சாட்சி. CRZ விதிகளின்படி "அதி தீவிர நில அரிப்பு உள்ள பகுதிகளில்" (High Erosion Zone) துறைமுக விரிவாக்கத்திற்குத் தடை இருக்கும்போது இத்திட்டத்திற்கு எப்படி அனுமதி கோர முடியும்?

3. பிரவடையான் ஆறு திசை திருப்பப்படும் அபாயம் மற்றும் வரலாற்றுப் பின்னணி

திருமலைராஜன் மன்னர் ஆட்சிக் காலத்தில், அப்பகுதியின் நிலப்பரப்பு மற்றும் இயற்கையான நீர் வடிகால்களை முறைப்படி ஆராய்ந்தே திருமலைராஜன் ஆறு மற்றும் பிரவடையான் ஆறு போன்ற ஆறுகள் அமைக்கப்பட்டன. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பிரவடையான் ஆறை 1.3 கி.மீ தூரம் திசை திருப்புவது, மழைக்காலத்தில் திருமலைராயன்பட்டினம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை முழுமையாக வெள்ளத்தில் மூழ்கடிக்காதா?

இயற்கை ஆற்றுப் பாதையை ஒரு தனியார் நிறுவனத்திற்காக மாற்றுவதற்குப் பொதுப்பணித்துறை (PWD) மற்றும் நீர்வளத்துறை அளித்த சட்டப்பூர்வ அனுமதி கடிதம் எங்கே?

4. நிலக்கரி மாசு மற்றும் போலி 'பசுமைப் பட்டை' (Greenbelt)

துறைமுகத்தில் 2 லட்சம் மரங்கள் வளர்க்கப்பட்டு 'பசுமைப் பட்டை' அமைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எங்கே இருக்கிறது அந்த 2 லட்சம் மரங்கள்? நிலக்கரி தூசியால் பனை, தென்னை மரங்கள் கருகி அழிந்ததுதான் மிச்சம். எஞ்சியிருக்கும் சீமைக்கருவேல மரங்களையா பசுமைப் பட்டை என்கிறீர்கள்?

தற்போதைய 21.5 MMTPA கையாளும்போதே வாஞ்சூர் மக்கள் நிலக்கரி தூசியால் சுவாச நோய்களுக்கு ஆளாகின்றனர். திறனை 100.1 MMTPA ஆக உயர்த்தினால் கரித்தூள் பாதிப்பு 4 மடங்கு அதிகரிக்குமே. நிலக்கரியை சேமிக்க மூடிய சேமிப்பகங்கள் (Closed Silos) ஏன் அமைக்கப்படவில்லை?

5. கடல்வாழ் உயிரினங்கள் அழிவு & ஆமைகள் இறப்பு

மழைக்காலத்தில் திறந்தவெளியில் உள்ள நிலக்கரி மழைநீரில் கரைந்து கடலில் கலப்பதால், சமீபத்தில் ஏராளமான ஆமைகள் செத்து ஒதுங்கியதன் பின்னணியில் இந்த நிலக்கரி நச்சு உள்ளதா? இதுகுறித்த உடற்கூறாய்வு (Autopsy Report) அறிக்கை எங்கே?

கடல் ஆழப்படுத்துதலினாலும் (Dredging) நிலக்கரி கழிவுகளாலும் கரைக்கடலில் மீன்வளம் முற்றிலுமாக அழிந்துவிட்டதை UA அறிக்கை ஏன் மறைத்துள்ளது?

6. மீனவர்களின் இலங்கை சிறைவாசம் & வாழ்வாதார இழப்பு

கரைக்கடலில் மீன்கள் இல்லாததால், பட்டினச்சேரி மற்றும் சிங்காரவேலர் நகர் மீனவர்கள் ஆழ்கடலுக்கும் மன்னார் வளைகுடாவிற்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதற்கும் துப்பாக்கிச் சூட்டிற்கும் ஆளாவதற்கு இத்துறைமுகம் மறைமுகக் காரணம் இல்லையா?

வாழ்வாதாரம் இழந்த மீனவக் குடும்பங்களுக்கு இத்தனை ஆண்டுகளில் இந்த நிறுவனம் அளித்த நஷ்டஈடு எவ்வளவு?

7. நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் & கால்நடை வளர்ப்போர் வஞ்சிக்கப்படுதல்

நில உரிமையாளர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளியேறிவிடுவார்கள். ஆனால், கீழ் வாஞ்சூர், கீழையூர் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் உள்ள நிலத்தை நம்பி வாழும் நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு என்ன மாற்று திட்டம் உள்ளது?

மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால், ஆடு, மாடு வளர்ப்பை மட்டுமே நம்பி வாழும் எளிய மக்களின் வாழ்வாதார இழப்பிற்கு என்ன உத்தரவாதம்?

8. திருமலைராயன்பட்டினத்தின் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு ஒப்பீடு

சென்னை துறைமுகம் (420 ஹெக்டேர்) மற்றும் தூத்துக்குடி துறைமுகம் (840 ஹெக்டேர்) போன்றவை மிகப்பெரிய பரப்பளவு கொண்ட மாநகராட்சிகளில் அமைந்துள்ளன. ஆனால், வெறும் 2,208 ஹெக்டேர் மட்டுமே கொண்ட திருமலைராயன்பட்டினம் கொம்யூனில், 452.21 ஹெக்டேர் நிலத்தை (20.5% நிலப்பரப்பை) ஒரே ஒரு தனியார் துறைமுகத்திற்குத் தருவது நீதியா?

திருமலைராயன்பட்டினத்தின் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தை ஒரு நிறுவனத்திற்குத் தந்தால், உள்ளூர் மக்கள் வாழவும் விவசாயம் செய்யவும் எங்கே போவார்கள்?

9. நிலத்தடி நீர் மற்றும் சுகாதார மறைப்பு

துறைமுகச் செயல்பாடுகளால் நிலத்தடி நீர் உவர்ப்பு நீராக மாறி குடிநீர் பாழாகியுள்ள நிலையில், சுற்றியுள்ள கிராம மக்களின் சுகாதாரப் பாதிப்புகள் (Health Impact Study) பற்றிய உண்மையான தரவுகள் அறிக்கையில் ஏன் முடி மறைக்கப்பட்டுள்ளன?

கடல்நீரை நல்லநீராக்கும் ஆலை (Desalination Plant) அமைப்பதாகக் கூறும் நிறுவனம், அதிலிருந்து வெளியேறும் அடர் உவர்நீரை (Brine Discharge) கடலில் கொட்டுவதால் கடல்வளம் மேலும் அழியாதா?

10. கடலின் செயற்கை ஆழமும் நிலத்தடி நீர் உவர்ப்பாதலும்

கப்பல்கள் வந்து செல்லக் கடலைச் செயற்கையாக 100 அடிக்கும் மேல் ஆழப்படுத்துவதால் (Dredging), கடலின் இயற்கையான மண் சாய்வு (Natural Gradient) முற்றிலும் அழிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் உவர்நீர் அழுத்தத்தால் (Hydraulic Pressure), கடலிலிருந்து 10 முதல் 50 கி.மீ சுற்றளவில் உள்ள நிலத்தடி நன்னீர் பாதைகளுக்குள் கடல்நீர் புகுந்து (Saltwater Intrusion), அப்பகுதியின் நிலத்தடி நீர் முழுமையாக உப்பு நீராக மாறும் ஆபத்து உருவாகிறது. மேலும், இந்தச் செயற்கைப் பள்ளங்களால் கரையோர மண்

சரிந்து கடல் அரிப்பு பல மடங்கு தீவிரமடையும் என்பதை EIA அறிக்கையில் ஏன் ஆராயவில்லை?

11. NGT உத்தரவுகள் மற்றும் தணிக்கை அறிக்கை மீறல்

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) நிலக்கரி மாசைக் கட்டுப்படுத்த அளித்த முந்தைய உத்தரவுகளையும், துறைமுகத்திற்கான முந்தைய சுற்றுச்சூழல் அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளையும் நிறுவனம் முழுமையாகச் செயல்படுத்தவில்லை. அதிகாரிகள் இதன் உண்மையான தணிக்கை அறிக்கையை (Compliance Audit Report) மறைத்துவிட்டு இந்த விரிவாக்கக் கூட்டத்தை நடத்துவது சட்டப்படி தவறானது.

12. பேரிடர் மேலாண்மை திட்டம் இல்லாமை

ஆபத்தான சரக்குகள் மற்றும் நிலக்கரி கையாளுதல் மடங்கு அதிகரிக்கும் போது, விபத்துகள் அல்லது பேரிடர்கள் ஏற்பட்டால் சுற்றியுள்ள கிராம மக்களைப் பாதுகாப்பதற்கான முறையான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (Off-site Emergency Plan) அறிக்கையில் இல்லை. எனவே, மக்கள் உயிருடன் விளையாடும் இந்த விரிவாக்க அறிக்கையை அதிகாரிகள் உடனடியாக நிராகரிக்க வேண்டும்.

13. மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகார வரம்பு மீறல்

ஆண்டுக்கு 100.1 MMTPA போன்ற மிகப்பாரிய அளவிலான ஆபத்தான நிலக்கரி மற்றும் சரக்குகளைக் கையாளும் விரிவாக்கத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) அளிக்கும் முழு அதிகாரம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு (MoEFCC) மட்டுமே உள்ளது. மாநில அரசு மற்றும் PPCCC அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட, சூழலியலைச் சீரழிக்கும் இவ்வளவு பெரிய மெகா திட்டத்திற்கு, உள்ளூர் மக்களின் எதிர்ப்பையும் மீறி மாநில சுற்றுச்சூழல் துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் எந்த அடிப்படையில் முன்னின்று துணை போகிறது?

14. ரயில்வே கேட் அடைப்பால் போக்குவரத்து முடக்கம் & அவசர காலப் பாதிப்புகள்

துறைமுகத்தில் இருந்து சரக்குகளைக் கொண்டு செல்ல ஏற்கனவே உள்ள ஒற்றை ரயில் பாதையால் (Single Track), தினமும் 10 முறைக்கும் மேலாக அரை மணி நேரத்திற்கு மேல் ரயில்வே கேட் மூடப்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்குகிறது. தற்போது 2-வது ரயில் பாதை அமைத்து சரக்குக் கையாளும் திறனை உயர்த்தினால், வாஞ்சூர் மற்றும் திருமலைராயன்பட்டினம் மக்கள் நாள் முழுவதும் வீட்டை விட்டு வெளியேற முடியாத சூழலும், அவசர கால மருத்துவ ஊர்திகள் (Ambulance) செல்ல முடியாத ஆபத்தும் உருவாகுமே. இதற்கான மாற்றுப் பாதை/மேம்பாலத் திட்டம் EIA அறிக்கையில் ஏன் இல்லை?

15. பாரதப் பிரதமரின் விவசாயக் கொள்கைக்கு எதிரான செயல்

நமது பாரதப் பிரதமர் அவர்கள் நாட்டின் முதுகெலும்பான விவசாயத்திற்கு முதன்மை முக்கியத்துவம் அளித்து, விவசாய நிலங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி வருகிறார். ஆனால், வளமிக்க விவசாய நிலங்களையும், நிலத்தடி நீரையும், விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்து, ஒரு தனியார் துறைமுகத்தின் விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் தருவது பிரதமரின் நற்கொள்கைக்கும், நாட்டின் விவசாயப் பாதுகாப்பிற்கும் முற்றிலும் எதிரான செயல் அல்லவா?

16. பொதுமக்கள் கோரிக்கை & தீர்க்கமான முடிவு

சுற்றுச்சூழல் விதிகளை மீறியும், 2011 பழைய தரவுகளை வைத்தும், பொய் தகவல்களைக் கொண்டும் தயாரிக்கப்பட்ட இந்த EIA அறிக்கையை முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

இயற்கை வடிகால்களை அழிக்கும், மீனவர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இந்தத் துறைமுக விரிவாக்கத்திற்குத் தெளிவான சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கக் கூடாது என வன்மையாக வலியுறுத்துகிறோம்.

எங்களின் இறுதியான மற்றும் தீர்க்கமான கோரிக்கை.

"எங்களுக்கு இந்தத் துறைமுக விரிவாக்கமும் வேண்டாம். ஏற்கனவே எங்களின் காற்று, நீர், நிலம் மற்றும் கடல் வளங்களை அழித்துக் கொண்டிருக்கும் இந்தத் துறைமுகமே எங்களுக்கு வேண்டாம்!

போர்க்களத்தில் ரத்தம் சிந்தி உயிரைப் பறிப்பதற்குப் பதிலாக, நச்சுப் புகையினாலும் நிலக்கரி தூசியாலும் எங்களைச் சிறுகச் சிறுகக் கொன்று, ரத்தமே சிந்தாமல் ஒட்டுமொத்த மக்களையும் கொத்துக் கொத்தாகப் படுகுழியில் தள்ளிப் புதைப்பதற்குச் சமமான தூழலை இந்தத் துறைமுகம் உருவாக்கி வருகிறது.

காரைக்கால் மண்ணின் மைந்தர்களாகிய நாங்கள், எந்தவித மாசும் இன்றி, எங்களது நிலத்தையும் கடலையும் நம்பி, இயற்கையான காற்றைச் சுவாசித்து, நிம்மதியாக வாழ விரும்புகிறோம். எங்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தையும், எதிர்காலச் சந்ததியினரின் பாதுகாப்பையும் பறிக்கும் எந்தவொரு தொழில்துறை விரிவாக்கத்தையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்"

இப்படிக்கு,

9.9.2026

நகல் (Copy to):

மாவட்ட ஆட்சியர், காரைக்கால் மாவட்டம்.

இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை (DSTE), புதுச்சேரி அரசு.

உறுப்பினர் செயலர், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), புதுடெல்லி.

9.9.2026

ஏமாந்த பக்கங்கள் (7)

அனுப்புநர்:

கிராமப்புற மக்கள் பாதுகாப்பு இயக்கம்

21, எடத் தெரு, (தொடர்புக்கு: 9842360069)

திருமலைராயன்பட்டினம்,

காரைக்கால் மாவட்டம்,

புதுச்சேரி மாநிலம்.

GOVT. OF PUDUCHERRY DSTE / PPCC, PUDUCHERRY
Date: 9/9/26

பெறுநர்:

உறுப்பினர் செயலர் / தலைமைப் பொறியாளர்,

புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCCC),

புதுச்சேரி அரசு.

பொருள்: அதானி காரைக்கால் துறைமுக விரிவாக்கம் (Phase-II) - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிக்கை மீதான பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் 26 கேள்விகள் அடங்கிய மனு.

ஐயா / அம்மையீர்,

காரைக்கால் மாவட்டம், திருமலைராயன்பட்டினம் கொம்யூன், கீழ் வாஞ்சூர் கிராமத்தில் அமைந்துள்ள காரைக்கால் துறைமுகத்தின் கொள்ளளவை 21.5 MMTPA லிருந்து 100.1 MMTPA ஆக உயர்த்த உத்தேசித்துள்ள திட்டத்தின் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் (09/09/2026), உள்ளூர் மக்களாகிய நாங்கள் எங்களது கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்து, கீழே கண்ட 26 முக்கியமான ஆதாரப் பூர்வமான கேள்விகளை முன்வைக்கிறோம்.

1. 2011 பழைய அலைக்கோடு (HTL) ஆய்வை வைத்தே ஏமாற்றுதல்

2009 ல் நிலம் கையகப்படுத்தப்பட்டு 2011-ல் இயங்கத் தொடங்கிய இத்துறைமுகம், 2011-ல் எடுக்கப்பட்ட பழைய High Tide Line (HTL / அலைக்கோடு) மற்றும் நிலப்பரப்பு அளவீடுகளையே 2026 EIA அறிக்கையிலும் பயன்படுத்தியுள்ளது ஏன்?

கடந்த 15 ஆண்டுகளில் தீவிரமான கடலோர நில அரிப்பால் (Coastal Erosion) கரைகள் உள்வாங்கியுள்ள நிலையில், புதிய அலைக்கோடு (HTL/LTL) மற்றும் CRZ வரைபடம் தயாரிக்காமல் இந்த EIA அறிக்கை எப்படித் தயாரிப்பீர்கள்?

2. கடலோர நில அரிப்பு மற்றும் தடுப்புச் சுவர் தோல்வி

சுனாமிக்குப் பிறகும், துறைமுக வருகைக்குப் பிறகும் கடல் அரிப்பு தீவிரமடைந்து சவுக்குத் தோப்புகள் மற்றும் கடற்கரை நிலங்கள் கடலுக்குள் மூழ்கியது உண்மையா, இல்லையா?

கடற்கரையில் போட்டிருந்த பழைய தடுப்புச் சுவர்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு, தற்போது போடப்பட்டுள்ள கான்கிரீட் தடுப்புகளே நில அரிப்பின் தீவிரத்திற்கு சாட்சி. CRZ விதிகளின்படி "அதி தீவிர நில அரிப்பு உள்ள பகுதிகளில்" (High Erosion Zone) துறைமுக விரிவாக்கத்திற்குத் தடை இருக்கும்போது இத்திட்டத்திற்கு எப்படி அனுமதி கோர முடியும்?

3. பிரவடையான் ஆறு திசை திருப்பப்படும் அபாயம் மற்றும் வரலாற்றுப் பின்னணி

திருமலைராஜன் மன்னர் ஆட்சிக் காலத்தில், அப்பகுதியின் நிலப்பரப்பு மற்றும் இயற்கையான நீர் வடிகால்களை முறைப்படி ஆராய்ந்தே திருமலைராஜன் ஆறு மற்றும் பிரவடையான் ஆறு போன்ற ஆறுகள் அமைக்கப்பட்டன. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பிரவடையான் ஆறை 1.3 கி.மீ தூரம் திசை திருப்புவது, மழைக்காலத்தில் திருமலைராயன்பட்டினம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை முழுமையாக வெள்ளத்தில் மூழ்கடிக்காதா?

இயற்கை ஆற்றுப் பாதையை ஒரு தனியார் நிறுவனத்திற்காக மாற்றுவதற்குப் பொதுப்பணித்துறை (PWD) மற்றும் நீர்வளத்துறை அளித்த சட்டப்பூர்வ அனுமதி கடிதம் எங்கே?

4. நிலக்கரி மாசு மற்றும் போலி 'பசுமைப் பட்டை' (Greenbelt)

துறைமுகத்தில் 2 லட்சம் மரங்கள் வளர்க்கப்பட்டு 'பசுமைப் பட்டை' அமைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எங்கே இருக்கிறது அந்த 2 லட்சம் மரங்கள்? நிலக்கரி தூசியால் பனை, தென்னை மரங்கள் கருகி அழிந்ததுதான் மிச்சம். எஞ்சியிருக்கும் சீமைக்கருவேல மரங்களையா பசுமைப் பட்டை என்கிறீர்கள்?

தற்போதைய 2:1 MMTPA கையாளும்போதே வாஞ்சூர் மக்கள் நிலக்கரி தூசியால் சுவாச நோய்களுக்கு ஆளாகின்றனர். திறனை 100:1 MMTPA ஆக உயர்த்தினால் கரித்தூள் பாதிப்பு 4 மடங்கு அதிகரிக்குமே, நிலக்கரியை சேமிக்க முடிய சேமிப்பகங்கள் (Closed Silos) ஏன் அமைக்கப்படவில்லை?

5. கடல்வாழ் உயிரினங்கள் அழிவு & ஆமைகள் இறப்பு

மழைக்காலத்தில் திறந்தவெளியில் உள்ள நிலக்கரி மழைநீரில் கரைந்து கடலில் கலப்பதால், சமீபத்தில் ஏராளமான ஆமைகள் செத்து ஒதுங்கியதன் பின்னணியில் இந்த நிலக்கரி நச்சு உள்ளதா? இதுகுறித்த உடற்கூறாய்வு (Autopsy Report) அறிக்கை எங்கே?

கடல் ஆழப்படுத்துதலினாலும் (Dredging) நிலக்கரி கழிவுகளாலும் கரைக்கடலில் மீன்வளம் முற்றிலுமாக அழிந்துவிட்டதை EIA அறிக்கை ஏன் மறைத்துள்ளது?

6. மீனவர்களின் இலங்கை சிறைவாசம் & வாழ்வாதார இழப்பு

கரைக்கடலில் மீன்கள் இல்லாததால், பட்டினச்சேரி மற்றும் சிங்காரவேலர் நகர் மீனவர்கள் ஆழ்கடலுக்கும் மன்னார் வளைகுடாவிற்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதற்கும் துப்பாக்கிச் சூட்டிற்கும் ஆளாவதற்கு இத்துறைமுகம் மறைமுகக் காரணம் இல்லையா?

வாழ்வாதாரம் இழந்த மீனவக் குடும்பங்களுக்கு இத்தனை ஆண்டுகளில் இந்த நிறுவனம் அளித்த நஷ்டாடு எவ்வளவு?

7. நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் & கால்நடை வளர்ப்போர் வஞ்சிக்கப்படுதல்

நில உரிமையாளர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளியேறிவிடுவார்கள். ஆனால், கீழ் வாஞ்சூர், கீழையூர் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் உள்ள நிலத்தை நம்பி வாழும் நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு என்ன மாற்று திட்டம் உள்ளது?

மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால், ஆடு மாடு வளர்ப்பை மட்டுமே நம்பி வாழும் எளிய மக்களின் வாழ்வாதார இழப்பிற்கு என்ன உத்தரவாதம்?

8. திருமலைராயன்பட்டினத்தின் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு ஒப்பீடு

சென்னை துறைமுகம் (420 ஹெக்டேர்) மற்றும் தூத்துக்குடி துறைமுகம் (840 ஹெக்டேர்) போன்றவை மிகப்பெரிய பரப்பளவு கொண்ட மாநகராட்சிகளில் அமைந்துள்ளன. ஆனால், வெறும் 2,208 ஹெக்டேர் மட்டுமே கொண்ட திருமலைராயன்பட்டினம் கொம்யூனில், 452.21 ஹெக்டேர் நிலத்தை (20.5% நிலப்பரப்பை) ஒரே ஒரு தனியார் துறைமுகத்திற்குத் தருவது நீதியா?

திருமலைராயன்பட்டினத்தின் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தை ஒரு நிறுவனத்திற்குத் தந்தால், உள்ளூர் மக்கள் வாழவும் விவசாயம் செய்யவும் எங்கே போவார்கள்?

9. நிலத்தடி நீர் மற்றும் சுகாதார மறைப்பு

துறைமுகச் செயல்பாடுகளால் நிலத்தடி நீர் உவர்ப்பு நீராக மாறி குடிநீர் பாழாகியுள்ள நிலையில், சுற்றியுள்ள கிராம மக்களின் சுகாதாரப் பாதிப்புகள் (Health Impact Study) பற்றிய உண்மையான தரவுகள் அறிக்கையில் ஏன் மூடி மறைக்கப்பட்டுள்ளன?

கடல்நீரை நல்லநீராக்கும் ஆலை (Desalination Plant) அமைப்பதாகக் கூறும் நிறுவனம், அதிலிருந்து வெளியேறும் அடர் உவர்நீரை (Brine Discharge) கடலில் கொட்டுவதால் கடல்வளம் மேலும் அழியாதா?

10. கடலின் செயற்கை ஆழமும் நிலத்தடி நீர் உவர்ப்பாதலும்

கப்பல்கள் வந்து செல்லக் கடலைச் செயற்கையாக 100 அடிக்கும் மேல் ஆழப்படுத்துவதால் (Dredging), கடலின் இயற்கையான மண் சாய்வு (Natural Gradient) முற்றிலும் அழிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் உவர்நீர் அழுத்தத்தால் (Hydraulic Pressure), கடலிலிருந்து 10 முதல் 50 கி.மீ சுற்றளவில் உள்ள நிலத்தடி நன்னீர் பாதைகளுக்குள் கடல்நீர் புகுந்து (Saltwater Intrusion), அப்பகுதியின் நிலத்தடி நீர் முழுமையாக உப்பு நீராக மாறும் ஆபத்து உருவாகிறது. மேலும், இந்தச் செயற்கைப் பள்ளங்களால் கரையோர மண்

சரிந்து கடல் அரிப்பு பல மடங்கு தீவிரமடையும் என்பதை EIA அறிக்கையில் ஏன் ஆராயவில்லை?

11. NGT உத்தரவுகள் மற்றும் தணிக்கை அறிக்கை மீறல்

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) நிலக்கரி மாசைக் கட்டுப்படுத்த அளித்த முந்தைய உத்தரவுகளையும், துறைமுகத்திற்கான முந்தைய சுற்றுச்சூழல் அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளையும் நிறுவனம் முழுமையாகச் செயல்படுத்தவில்லை. அதிகாரிகள் இதன் உண்மையான தணிக்கை அறிக்கையை (Compliance Audit Report) மறைத்துவிட்டு இந்த விரிவாக்கக் கூட்டத்தை நடத்துவது சட்டப்படி தவறானது.

12. பேரிடர் மேலாண்மை திட்டம் இல்லாமை

ஆபத்தான சரக்குகள் மற்றும் நிலக்கரி கையாளுதல் 4 மடங்கு அதிகரிக்கும் போது, விபத்துகள் அல்லது பேரிடர்கள் ஏற்பட்டால் சுற்றியுள்ள கிராம மக்களைப் பாதுகாப்பதற்கான முறையான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (On-site Emergency Plan) அறிக்கையில் இல்லை. எனவே, மக்கள் உயிருடன் விளையாடும் இந்த விரிவாக்க அறிக்கையை அதிகாரிகள் உடனடியாக நிராகரிக்க வேண்டும்.

13. மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகார வரம்பு மீறல்

ஆண்டுக்கு 100.1 MMTPA போன்ற மிகப்பாரிய அளவிலான ஆபத்தான நிலக்கரி மற்றும் சரக்குகளைக் கையாளும் விரிவாக்கத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) அளிக்கும் முழு அதிகாரம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு (MoEFCC) மட்டுமே உள்ளது. மாநில அரசு மற்றும் SPCCC அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட, சூழலியலைச் சீரழிக்கும் இவ்வளவு பெரிய மெகா திட்டத்திற்கு, உள்ளூர் மக்களின் எதிர்ப்பையும் மீறி மாநில சுற்றுச்சூழல் துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் எந்த அடிப்படையில் முன்னின்று துணை போகிறது?

14. ரயில்வே கேட் அடைப்பால் போக்குவரத்து முடக்கம் & அவசர காலப் பாதிப்புகள்

துறைமுகத்தில் இருந்து சரக்குகளைக் கொண்டு செல்ல ஏற்கனவே உள்ள ஒற்றை ரயில் பாதையால் (Single Track), தினமும் 10 முறைக்கும் மேலாக அரை மணி நேரத்திற்கு மேல் ரயில்வே கேட் மூடப்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்குகிறது. தற்போது 2 வது ரயில் பாதை அமைத்து சரக்குக் கையாளும் திறனை உயர்த்தினால், வாஞ்சூர் மற்றும் திருமலைராயன்பட்டினம் மக்கள் நாள் முழுவதும் வீட்டை விட்டு வெளியேற முடியாத சூழலும், அவசர கால மருத்துவ ஊர்திகள் (Ambulance) செல்ல முடியாத ஆபத்தும் உருவாகுமே, இதற்கான மாற்றுப் பாதை/மேம்பாலத் திட்டம் EIA அறிக்கையில் ஏன் இல்லை?

15. பாரதப் பிரதமரின் விவசாயக் கொள்கைக்கு எதிரான செயல்

நமது பாரதப் பிரதமர் அவர்கள் நாட்டின் முதுகெலும்பான விவசாயத்திற்கு முதன்மை முக்கியத்துவம் அளித்து, விவசாய நிலங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி வருகிறார். ஆனால், வளமிக்க விவசாய நிலங்களையும், நிலத்தடி நீரையும், விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்து, ஒரு தனியார் துறைமுகத்தின் விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் தருவது பிரதமரின் நற்கொள்கைக்கும், நாட்டின் விவசாயப் பாதுகாப்பிற்கும் முற்றிலும் எதிரான செயல் அல்லவா?

16. பொதுமக்கள் கோரிக்கை & தீர்க்கமான முடிவு

சுற்றுச்சூழல் விதிகளை மீறியும், 2011 பழைய தரவுகளை வைத்தும், பொய் தகவல்களைக் கொண்டும் தயாரிக்கப்பட்ட இந்த EIA அறிக்கையை முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

இயற்கை வடிகால்களை அழிக்கும், மீனவர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இந்தத் துறைமுக விரிவாக்கத்திற்குத் தெளிவான சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கக் கூடாது என வன்மையாக வலியுறுத்துகிறோம்.

எங்களின் இறுதியான மற்றும் தீர்க்கமான கோரிக்கை:

"எங்களுக்கு இந்தத் துறைமுக விரிவாக்கமும் வேண்டாம். ஏற்கனவே எங்களின் காற்று, நீர், நிலம் மற்றும் கடல் வளங்களை அழித்துக் கொண்டிருக்கும் இந்தத் துறைமுகமே எங்களுக்கு வேண்டாம்.

போர்க்களத்தில் ரத்தம் சிந்தி உயிரைப் பறிப்பதற்குப் பதிலாக, நச்சுப் புகையினாலும் நிலக்கரி தூசியாலும் எங்களைச் சிறுகச் சிறுகக் கொன்று, ரத்தமே சிந்தாமல் ஒட்டுமொத்த மக்களையும் கொத்துக் கொத்தாகப் படுகுழியில் தள்ளிப் புதைப்பதற்குச் சமமான சூழலை இந்தத் துறைமுகம் உருவாக்கி வருகிறது.

காரைக்கால் மண்ணின் மைந்தர்களாகிய நாங்கள், எந்தவித மாசும் இன்றி, எங்களது நிலத்தையும் கடலையும் நம்பி, இயற்கையான காற்றைச் சுவாசித்து நிம்மதியாக வாழ விரும்புகிறோம். எங்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தையும், எதிர்காலச் சந்ததியினரின் பாதுகாப்பையும் பறிக்கும் எந்தவொரு தொழில்துறை விரிவாக்கத்தையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்."

இப்படிக்கு,

9.9.2026

நகல் (Copy to)

மாவட்ட ஆட்சியர், காரைக்கால் மாவட்டம்

இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை (DSTE), புதுச்சேரி அரசு.

உறுப்பினர் செயலர், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), புதுடெல்லி

அனுப்புநர்: சுனாமி மறுவாழ்வு நிலம் இயக்கம்

G. துரைசாமி
S/o கோவிந்தசாமி
22, திருவள்ளுவர் வீதி
காரைக்கால்-609602

GOVT OF PUDUCHERRY DSTE / PPCC, KARAIKAL
1487
Date: 7/9/26

பெறுநர்:
உறுப்பினர் செயலர் / தலைமைப் பொறியாளர்,
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCCC),
புதுச்சேரி அரசு.

பொருள்: அதானி காரைக்கால் துறைமுக விரிவாக்கம் (Phase-II) - சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிக்கை மீதான பொதுமக்கள் எதிர்ப்பு மற்றும் 26 கேள்விகள் அடங்கிய மனு

ஐயா / அம்மையீர்,

காரைக்கால் மாவட்டம், திருமலைராயன்பட்டினம் கொம்யூன், கீழ் வாஞ்சூர் கிராமத்தில் அமைந்துள்ள காரைக்கால் துறைமுகத்தின் கொள்ளளவை 21.5 MMTPA-லிருந்து 100.1 MMTPA ஆக உயர்த்த உத்தேசித்துள்ள திட்டத்தின் பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தில் (09/09/2026), உள்ளூர் மக்களாகிய நாங்கள் எங்களது கடுமையான எதிர்ப்பைப் பதிவுசெய்து, கீழே கண்ட 26 முக்கியமான ஆதாரப் பூர்வமான கேள்விகளை முன்வைக்கிறோம்:

1. 2011 பழைய அலைக்கோடு (HTL) ஆய்வை வைத்தே ஏமாற்றுதல்

2009-ல் நிலம் கையகப்படுத்தப்பட்டு 2011-ல் இயங்கத் தொடங்கிய இத்துறைமுகம், 2011-ல் எடுக்கப்பட்ட பழைய High Tide Line (HTL / அலைக்கோடு)

G. Duraisamy

மற்றும் நிலப்பரப்பு அளவீடுகளையே 2026 EIA அறிக்கையிலும் பயன்படுத்தியுள்ளது ஏன்?

கடந்த 15 ஆண்டுகளில் தீவிரமான கடலோர நில அரிப்பால் (Coastal Erosion) கரைகள் உள்வாங்கியுள்ள நிலையில், புதிய அலைக்கோடு (HTL/LTL) மற்றும் CRZ வரைபடம் தயாரிக்காமல் இந்த EIA அறிக்கை எப்படித் தயாரிப்பீர்கள்?

2. கடலோர நில அரிப்பு மற்றும் தடுப்புச் சுவர் தோல்வி

சுனாமிக்குப் பிறகும், துறைமுக வருகைக்குப் பிறகும் கடல் அரிப்பு தீவிரமடைந்து சவுக்குத் தோப்புகள் மற்றும் கடற்கரை நிலங்கள் கடலுக்குள் மூழ்கியது உண்மையா, இல்லையா?

கடற்கரையில் போட்டிருந்த பழைய தடுப்புச் சுவர்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு, தற்போது போடப்பட்டுள்ள கான்கிரீட் தடுப்புகளே நில அரிப்பின் தீவிரத்திற்கு சாட்சி. CRZ விதிகளின்படி "அதி தீவிர நில அரிப்பு உள்ள பகுதிகளில்" (High Erosion Zone) துறைமுக விரிவாக்கத்திற்குத் தடை இருக்கும்போது இத்திட்டத்திற்கு எப்படி அனுமதி கோர முடியும்?

3. பிரவடையான் ஆறு திசை திருப்பப்படும் அபாயம் மற்றும் வரலாற்றுப் பின்னணி

திருமலைராஜன் மன்னர் ஆட்சிக் காலத்தில், அப்பகுதியின் நிலப்பரப்பு மற்றும் இயற்கையான நீர் வடிகால்களை முறைப்படி ஆராய்ந்தே திருமலைராஜன் ஆறு மற்றும் பிரவடையான் ஆறு போன்ற ஆறுகள் அமைக்கப்பட்டன. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க பிரவடையான் ஆறை 1.3 கி.மீ தூரம் திசை திருப்புவது, மழைக்காலத்தில் திருமலைராயன்பட்டினம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை முழுமையாக வெள்ளத்தில் மூழ்கடிக்காதா?

இயற்கை ஆற்றுப் பாதையை ஒரு தனியார் நிறுவனத்திற்காக மாற்றுவதற்குப் பொதுப்பணித்துறை (PWD) மற்றும் நீர்வளத்துறை அளித்த சட்டப்பூர்வ அனுமதி கடிதம் எங்கே?

4. நிலக்கரி மாசு மற்றும் போலி 'பசுமைப் பட்டை' (Greenbelt)

துறைமுகத்தில் 2 லட்சம் மரங்கள் வளர்க்கப்பட்டு 'பசுமைப் பட்டை' அமைக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எங்கே இருக்கிறது அந்த 2 லட்சம் மரங்கள்? நிலக்கரி தூசியால் பனை, தென்னை மரங்கள் கருகி அழிந்ததுதான் மிச்சம். எஞ்சியிருக்கும் சீமைக்கருவேல மரங்களையா பசுமைப் பட்டை என்கிறீர்கள்?

தற்போதைய 21.5 MMTPA கையாளும்போதே வாஞ்சூர் மக்கள் நிலக்கரி தூசியால் சுவாச நோய்களுக்கு ஆளாகின்றனர். திறனை 100.1 MMTPA ஆக உயர்த்தினால் கரித்தூள் பாதிப்பு 4 மடங்கு அதிகரிக்குமே, நிலக்கரியை சேமிக்க முடிய சேமிப்பகங்கள் (Closed Silos) ஏன் அமைக்கப்படவில்லை?

5. கடல்வாழ் உயிரினங்கள் அழிவு & ஆமைகள் இறப்பு

மழைக்காலத்தில் திறந்தவெளியில் உள்ள நிலக்கரி மழைநீரில் கரைந்து கடலில் கலப்பதால், சமீபத்தில் ஏராளமான ஆமைகள் செத்து ஒதுங்கியதன் பின்னணியில் இந்த நிலக்கரி நச்சு உள்ளதா? இதுகுறித்த உடற்கூறாய்வு (Autopsy Report) அறிக்கை எங்கே?

கடல் ஆழப்படுத்துதலினாலும் (Dredging) நிலக்கரி கழிவுகளாலும் கரைக்கடலில் மீன்வளம் முற்றிலுமாக அழிந்துவிட்டதை EIA அறிக்கை ஏன் மறைத்துள்ளது?

6. மீனவர்களின் இலங்கை சிறைவாசம் & வாழ்வாதார இழப்பு

கரைக்கடலில் மீன்கள் இல்லாததால், பட்டினச்சேரி மற்றும் சிங்காரவேலர் நகர் மீனவர்கள் ஆழ்கடலுக்கும் மன்னார் வளைகுடாவிற்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதற்கும் துப்பாக்கிச் சூட்டிற்கும் ஆளாவதற்கு இத்துறைமுகம் மறைமுகக் காரணம் இல்லையா?

வாழ்வாதாரம் இழந்த மீனவக் குடும்பங்களுக்கு இத்தனை ஆண்டுகளில் இந்த நிறுவனம் அளித்த நஷ்டஈடு எவ்வளவு?

G. Damisan

7. நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் & கால்நடை வளர்ப்போர் வஞ்சிக்கப்படுதல்

நில உரிமையாளர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு வெளியேறிவிடுவார்கள் ஆனால், கீழ் வாஞ்சூர், கீழையூர் வடக்கு மற்றும் தெற்கு கிராமங்களில் உள்ள நிலத்தை நம்பி வாழும் நிலமற்ற விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு என்ன மாற்று திட்டம் உள்ளது?

மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதால், ஆடு, மாடு வளர்ப்பை மட்டுமே நம்பி வாழும் எளிய மக்களின் வாழ்வாதார இழப்பிற்கு என்ன உத்தரவாதம்?

8. திருமலைராயன்பட்டினத்தின் நிலப்பரப்பு ஆக்கிரமிப்பு ஒப்பீடு

சென்னை துறைமுகம் (420 ஹெக்டேர்) மற்றும் தூத்துக்குடி துறைமுகம் (840 ஹெக்டேர்) போன்றவை மிகப்பெரிய பரப்பளவு கொண்ட மாநகராட்சிகளில் அமைந்துள்ளன. ஆனால், வெறும் 2,208 ஹெக்டேர் மட்டுமே கொண்ட திருமலைராயன்பட்டினம் கொம்யூனில், 452.21 ஹெக்டேர் நிலத்தை (20.5% நிலப்பரப்பை) ஒரே ஒரு தனியார் துறைமுகத்திற்குத் தருவது நீதியா?

திருமலைராயன்பட்டினத்தின் ஐந்தில் ஒரு பங்கு நிலத்தை ஒரு நிறுவனத்திற்குத் தந்தால், உள்ளூர் மக்கள் வாழவும் விவசாயம் செய்யவும் எங்கே போவார்கள்?

9. நிலத்தடி நீர் மற்றும் சுகாதார மறைப்பு

துறைமுகச் செயல்பாடுகளால் நிலத்தடி நீர் உவர்ப்பு நீராக மாறி குடிநீர் பாழாகியுள்ள நிலையில், சுற்றியுள்ள கிராம மக்களின் சுகாதாரப் பாதிப்புகள் (Health Impact Study) பற்றிய உண்மையான தரவுகள் அறிக்கையில் ஏன் மூடி மறைக்கப்பட்டுள்ளன?

கடல்நீரை நல்லநீராக்கும் ஆலை (Desalination Plant) அமைப்பதாகக் கூறும் நிறுவனம், அதிலிருந்து வெளியேறும் அடர் உவர்நீரை (Brine Discharge) கடலில் கொட்டுவதால் கடல்வளம் மேலும் அழியாதா?

10. கடலின் செயற்கை ஆழமும் நிலத்தடி நீர் உவர்ப்பாதலும்

கப்பல்கள் வந்து செல்லக் கடலைச் செயற்கையாக 100 அடிக்கும் மேல் ஆழப்படுத்துவதால் (Dredging), கடலின் இயற்கையான மண் சாய்வு (Natural Gradient) முற்றிலும் அழிக்கப்படுகிறது. இதனால் ஏற்படும் உவர்நீர் அழுத்தத்தால் (Hydraulic Pressure), கடலிலிருந்து 10 முதல் 50 கி.மீ சுற்றளவில் உள்ள நிலத்தடி நன்னீர் பாதைகளுக்குள் கடல்நீர் புகுந்து (Saltwater Intrusion), அப்பகுதியின் நிலத்தடி நீர் முழுமையாக உப்பு நீராக மாறும் ஆபத்து உருவாகிறது. மேலும், இந்தச் செயற்கைப் பள்ளங்களால் கரையோர மண் சரிந்து கடல் அரிப்பு பல மடங்கு தீவிரமடையும் என்பதை EIA அறிக்கையில் ஏன் ஆராயவில்லை?

11. NGT உத்தரவுகள் மற்றும் தணிக்கை அறிக்கை மீறல்

தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) நிலக்கரி மாசைக் கட்டுப்படுத்த அளித்த முந்தைய உத்தரவுகளையும், துறைமுகத்திற்கான முந்தைய சுற்றுச்சூழல் அனுமதியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளையும் நிறுவனம் முழுமையாகச் செயல்படுத்தவில்லை. அதிகாரிகள் இதன் உண்மையான தணிக்கை அறிக்கையை (Compliance Audit Report) மறைத்துவிட்டு இந்த விரிவாக்கக் கூட்டத்தை நடத்துவது சட்டப்படி தவறானது.

12. பேரிடர் மேலாண்மை திட்டம் இல்லாமை

ஆபத்தான சரக்குகள் மற்றும் நிலக்கரி கையாளுதல் 4 மடங்கு அதிகரிக்கும் போது, விபத்துகள் அல்லது பேரிடர்கள் ஏற்பட்டால் சுற்றியுள்ள கிராம மக்களைப் பாதுகாப்பதற்கான முறையான பேரிடர் மேலாண்மைத் திட்டம் (Off-site Emergency Plan) அறிக்கையில் இல்லை. எனவே, மக்கள் உயிருடன்

G-D ussaisamy

விளையாடும் இந்த விரிவாக்க அறிக்கையை அதிகாரிகள் உடனடியாக நிராகரிக்க வேண்டும்

13. மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அதிகார வரம்பு மீறல்

ஆண்டுக்கு 100.1 MMTPA போன்ற மிகப்பாரிய அளவிலான ஆபத்தான நிலக்கரி மற்றும் சரக்குகளைக் கையாளும் விரிவாக்கத் திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) அளிக்கும் முழு அதிகாரம் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திற்கு (MoEFCC) மட்டுமே உள்ளது. மாநில அரசு மற்றும் PPCCC அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட, சூழலியலைச் சீரழிக்கும் இவ்வளவு பெரிய மெகா திட்டத்திற்கு, உள்ளூர் மக்களின் எதிர்ப்பையும் மீறி மாநில சுற்றுச்சூழல் துறை மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் எந்த அடிப்படையில் முன்னின்று துணை போகிறது?

14. ரயில்வே கேட் அடைப்பால் போக்குவரத்து முடக்கம் & அவசர காலப் பாதிப்புகள்

துறைமுகத்தில் இருந்து சரக்குகளைக் கொண்டு செல்ல ஏற்கனவே உள்ள ஒற்றை ரயில் பாதையால் (Single Track), தினமும் 10 முறைக்கும் மேலாக அரை மணி நேரத்திற்கு மேல் ரயில்வே கேட் மூடப்பட்டு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்குகிறது. தற்போது 2-வது ரயில் பாதை அமைத்து சரக்குக் கையாளும் திறனை உயர்த்தினால், வாஞ்சூர் மற்றும் திருமலைராயன்பட்டினம் மக்கள் நாள் முழுவதும் வீட்டை விட்டு வெளியேற முடியாத சூழலும், அவசர கால மருத்துவ ஊர்திகள் (Ambulance) செல்ல முடியாத ஆபத்தும் உருவாகுமே, இதற்கான மாற்றுப் பாதை/மேம்பாலத் திட்டம் EIA அறிக்கையில் ஏன் இல்லை?

15. பாரதப் பிரதமரின் விவசாயக் கொள்கைக்கு எதிரான செயல்

நமது பாரதப் பிரதமர் அவர்கள் நாட்டின் முதுகெலும்பான விவசாயத்திற்கு முதன்மை முக்கியத்துவம் அளித்து, விவசாய நிலங்களைப் பாதுகாக்க வலியுறுத்தி வருகிறார். ஆனால், வளமிக்க விவசாய நிலங்களையும், நிலத்தடி

நீரையும், விவசாயக் கூலித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் அழித்து, ஒரு தனியார் துறைமுகத்தின் விரிவாக்கத்திற்கு முக்கியத்துவம் தருவது பிரதமரின் நற்கொள்கைக்கும், நாட்டின் விவசாயப் பாதுகாப்பிற்கும் முற்றிலும் எதிரான செயல் அல்லவா?

16. பொதுமக்கள் கோரிக்கை & தீர்க்கமான முடிவு

சுற்றுச்சூழல் விதிகளை மீறியும், 2011 பழைய தரவுகளை வைத்தும், பொய் தகவல்களைக் கொண்டும் தயாரிக்கப்பட்ட இந்த EIA அறிக்கையை முற்றிலும் நிராகரிக்க வேண்டும்.

இயற்கை வடிகால்களை அழிக்கும், மீனவர், விவசாயக் கூலித் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இந்தத் துறைமுக விரிவாக்கத்திற்குத் தெளிவான சுற்றுச்சூழல் அனுமதி (Environmental Clearance) வழங்கக் கூடாது என வன்மையாக வலியுறுத்துகிறோம்.

எங்களின் இறுதியான மற்றும் தீர்க்கமான கோரிக்கை

**எங்களுக்கு இந்தத் துறைமுக விரிவாக்கமும் வேண்டாம்; ஏற்கனவே எங்களின் காற்று, நீர், நிலம் மற்றும் கடல் வளங்களை அழித்துக் கொண்டிருக்கும் இந்தத் துறைமுகமே எங்களுக்கு வேண்டாம்!
போர்க்களத்தில் ரத்தம் சிந்தி உயிரைப் பறிப்பதற்குப் பதிலாக, நச்சுப் புகையினாலும் நிலக்கரி தூசியாலும் எங்களைச் சிறுகச் சிறுகக் கொன்று, ரத்தமே சிந்தாமல் ஒட்டுமொத்த மக்களையும் கொத்துக் கொத்தாகப் படுகுழியில் தள்ளிப் புதைப்பதற்குச் சமமான சூழலை இந்தத் துறைமுகம் உருவாக்கி வருகிறது.
காரைக்கால் மண்ணின் மைந்தர்களாகிய நாங்கள், எந்தவித மாசும் இன்றி, எங்களது நிலத்தையும் கடலையும் நம்பி, இயற்கையான காற்றைச் சுவாசித்து நிம்மதியாக வாழ விரும்புகிறோம். எங்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தையும், எதிர்காலச் சந்ததியினரின் பாதுகாப்பையும் பறிக்கும்

எந்தவொரு தொழில்துறை விரிவாக்கத்தையும் நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்!"

இப்படிக்கு,
பாதிக்கப்படும் காரைக்கால் / திருமலைராயன்பட்டினம் பகுதி பொதுமக்கள், மீனவர்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள்

நகல் (Copy to):

மாவட்ட ஆட்சியர், காரைக்கால் மாவட்டம்.

இயக்குநர், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை (DSTE), புதுச்சேரி அரசு

உறுப்பினர் செயலர், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MOEFCC), புதுடெல்லி

GOVT. OF PUDUCHERRY DSTE., PPCC, PUDUCHERRY
1488
Date: 9/9/24

பெறுநர்:

மாண்புமிகு உறுப்பினர் செயலாளர் அவர்கள்,

புதுச்சேரி மாசு கட்டுப்பாடு குழுமம் (PPCC),

3-ஆம் தளம், Housing Board Complex,

அண்ணா நகர்,

புதுச்சேரி – 605005.

பொருள்:

காரைக்கால் மாவட்டம், வாஞ்சூர் பகுதியில் அமைந்துள்ள அதானி துறைமுகத்தின் சரக்கு கையாளும்/இறக்குமதி திறனை அதிகரிக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு – சுற்றுச்சூழல் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

புதுச்சேரி மாநிலம், காரைக்கால் மாவட்டம், வாஞ்சூர் பகுதியில் அமைந்துள்ள அதானி துறைமுகத்தின் சரக்கு கையாளும் திறனை சுமார் 21 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும் திட்டம் தொடர்பாக நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில், எங்களது கீழ்க்கண்ட ஆட்சேபனைகளைப் பதிவு செய்கிறோம்.

துறைமுகத்தின் செயல்பாடுகள் பல மடங்கு அதிகரிக்கும்போது, அதனுடன் தொடர்புடைய கனரக வாகனப் போக்குவரத்து, தூசி மற்றும் காற்று மாசுபாடு, சத்த மாசுபாடு, கடல் மற்றும் கடற்கரைச் சூழல் பாதிப்பு ஆகியவை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

மேலும், இப்பகுதி மக்களின் மீன்பிடித் தொழில், விவசாயம், குடிநீர் வளம், வாழ்வாதாரம் மற்றும் பொது சுகாதாரம் பாதிக்கப்படக்கூடிய அபாயம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

எங்களது முக்கிய ஆட்சேபனைகள் மற்றும் கோரிக்கைகள்:

துறைமுகத்தின் திறனை 21 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 100 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரிப்பதற்கு எங்களது வலுவான எதிர்ப்பை பதிவு செய்கிறோம்.

திட்டத்தின் காரணமாக ஏற்படக்கூடிய காற்று, நீர், கடல் மற்றும் கடற்கரை மாசுபாடு குறித்து விரிவான மற்றும் சுயாதீனமான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கனரக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஏற்படும் சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து நெரிசல், தூசி மற்றும் சத்த மாசுபாடு குறித்தும் உரிய ஆய்வு செய்ய வேண்டும்.

கடற்கரை மற்றும் கடல் உயிரினங்களின் இயற்கை வாழ்விடத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தால் பாதிக்கப்படக்கூடிய உள்ளூர் மக்களின் கருத்துகள் மற்றும் ஆட்சேபனைகள் அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு தெளிவான பதில் அளிக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதார பாதிப்புகள் முழுமையாகத் தீர்க்கப்படாத நிலையில், துறைமுக விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது.

எனவே,

மக்களின் வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் எதிர்கால தலைமுறையின் நலனை கருத்தில் கொண்டு, வாஞ்சூர் அதானி துறைமுகத்தின் விரிவாக்கத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் திட்டத்தை அனுமதிக்கக் கூடாது என பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,

பெயர்: A. [illegible]

முகவரி: [illegible]

தொலைபேசி: 7373322350

கையொப்பம்:

தேதி: 09-09-2026

கடல்சார்ந்த மகளிர்
சுயஉதவிக்குழு

1489
9/9/26

பெறுநர் :

தாரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய 21.5mm TPA திறனை 100.3 mmTPA ஆக உயர்த்துவதற்கான (MASTEER PLAN) DEVELOPMENT EXPANSION PROPOSAL.) தொடர்பாக 09.09.2026 அன்று நடைபெறவுள்ள பொது கருத்துக் கேட்பிற்கு எங்களின் வாழ்வாதாரம் கடல் வளம், மீன்பிடி உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு மேற்கண்ட திட்டத்தை முற்றிலும் நிராகரிக்க கோருதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா :

மேற்கண்ட துறைமுக விரிவாக்கத்திட்டம் எங்களின் வாழ்வாதாரம் (கடல் வளம், மீன்பிடி உரிமைகள் மீன் இனப்பெருக்கம், சுற்றுச் சூழல்) ஆகிய அனைத்தையும் பாதிக்கும் என்பதற்கான காரணங்களை வலியுறுத்த விரும்புகிறோம்.

சில ஆண்டுகளுக்கு முன் மீன் வளர்ச்சி பெருக்கவைக்கும் செயல்முறையாக பனைப் பாளைகள். உருவாக்குவதற்காக கிரு MS சுவாமிநாதன் Foundation மூலம் மாங்கன் கிராம கடல் பகுதியில் (ARTIFICIAL REEF BOCKS) செயல்கை பவளப்பாறை கான்கள் போடப்பட்டன.

கடல் தீக்கான மகளிர்
சுய உதவிக் குழு

காரணங்கள் :

* இத்திட்டம் கடல் பகுதியை சுரையாடும் திட்டம் சுற்றுலாவை துணைநிலைக்கின் அளவு 243 ஹெக்டேர். இது மேலும் 249.21 ஹெக்டேராக உயர்த்தப்பட உள்ளது. இந்த 249.21 ஹெக்டேராக 137-14 ஹெக்டேர் கடலில் மணலைக் கொட்டி உருவாக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. மணலைக் கொட்டி இதன்மூலம் கடலையே கடல் நீரை வழியும் மீன்வளங்களையே எங்களுக்கு கிடைப்பதை பாதிப்பதை ஏற்படுத்தும். அத்துடன் மீன்பிடி தொழிலும் கடல் உணவும் மீன்பிடி உரிமைகள் மீனவர்கள் இடம்பெயர்க்க நேர். மேலும் பாதிக்கப்படும் எங்களது எதிர்கால சந்ததியை அழிவுக்கு கொண்டாக்கும்

* இதுடன் கடலின் ஓடக்கி மற்றும் சொர்க்கு அலைத்தாங்கியின் நீளத்தை அதிகரிப்பதால் இந்தப் பகுதியின் அலை போக்கை திசை மாற்றி கடல் அரிப்பு ஏற்படும் சுற்றுலாவை துணைநிலைக்கின் 2009 லிருந்து செயல்பட்டு வந்ததிலிருந்து எங்கள் கிராமத்தில் 200 மீட்டருக்கு மேல் (கடல் அரிப்பு அதாவது மண் அரிப்பு) ஏற்படுகிறது. மேலும் துறைமுகம் விரிவாக்கும் திட்டம் மூலம் எங்கள் கிராம் ஆன். T.R. பட்டினம் என்ற மீனவர் கிராம். மிகப் பெரிய அபாயை சந்திக்கும் என்பதை தாங்கள் கவனத்தில் வைக்கிறோம்.

அனுப்புதல் : தூய்மை சக்தி மகளிர் சுய உதவி குழு
பட்டினச்சேரி
திருப்பட்டினம்

தூய்மை சக்தி மகளிர் சுய உதவி குழு
பட்டினச்சேரி, திரு - பட்டினம்.

1490
21/11/24

பெறுநர் :

நாகைக்காரை துறைமுகத்தின் நற்போதைய 21.5 MM TPA திறனை 100.3 MMTPA ஆக உயர்த்துவதற்கான MASTER PLAN DEVELOPMENT / EXPANSION PROPOSAL தொடர்பாக 09.09.2024 அன்று நடைபெறுவுள்ள பொது கருத்துக் கேட்பினில் எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீன்பிடி உரிமைகள், மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு மேற்கண்ட திட்டத்தை முற்றிலும் நிராகரிக்க கோருதல் தொடர்பாக,

ஐயா :

மேற்கண்ட துறைக்கு விரிவாக்கத்திட்டம் எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீன்பிடி உரிமைகள், மீன் இனப்பெருக்கம் சுற்றுச்சூழல் அனையவற்றை எவ்வாறு பாதிக்கும் என்பதற்கும், இத்திட்டம் முற்றிலும் நிராகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணங்களை வலியுறுத்த விரும்புகிறோம்.

காரணங்கள் :

1. இத்திட்டம் கடல் பகுதியை சார்ந்தமையும் திட்டம் நற்போதைய துறைமுகத்தின் அளவு 243 ஹெக்டேர். இதுவரையும் 249.21 ஹெக்டேராக அமைத்தப்பட உள்ளது. இந்த 249.21 ஹெக்டேரில் 187-14 ஹெக்டேர் கடலில் மணலைக் கொட்டி உருவாக்கப்படுவதாக கூறப்படுகிறது. மணலைக் கொட்டி இதனுடனும் கடலையும்

நம்பி வாழும் மீனவர்களாகிய எங்களுக்கு மிகப்பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும். அதுடன் மீன்பிடி தொழிலும், கடல் வளமும், மீன்பிடி உபகரணமும். மீன்களின் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டு எங்களது எதிர்கால சந்ததிகளை அழிவுக் குள்ளாக்கும்.

(ii) அதுடன் கடலின் வடக்கு மற்றும் தெற்கு அலைதாங்கியின் நீளத்தை அதிகரிப்பதால் அந்தப் பகுதியின் அலைவேகங்கள் திசைமாறி கடல் அரிப்பு ஏற்படும். நற்போதை துறைமுகம் அமைவதற்கு முன்பு பாடுக்கு வந்ததிலிருந்து எங்கள் கிராமத்தில் அமைந்திருக்கும் கடல் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் துறைமுக விரிவாக்கம் செய்யப்பட்டால் வரும் காலங்களில் எங்கள் கிராமம் மிகப்பெரிய அழிவை சந்திக்கும் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(iii) சில ஆண்டுகளுக்கு முன்பு மீன்வளத்தைப் பெருக்குவதற்கும் செயற்கையாக பவளப் பாறைகள் உருவாக்குவதற்காக திரு M.S. சுவாமிநாதன் Foundation மூலமாக எங்கள் கிராம கடல் பகுதியில் ARTIFICIAL REEF BLOCKS (செயற்கை பவழப்பாறை கற்கள்) போடப்பட்டன. நற்போதை துறைமுகத்திற்காக கடலை ஆழப்படுத்த எடுக்கப்பட்ட மணலைக் கொட்டியதன் விளைவாக அவற்றுள் கற்கள் முற்றிலும் மணலால் மூடப்பட்டு பவளப்பாறைகள் உருவாக்கம் நடைபெறாமல், மீன் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

(iv) PURAVADAIYANAR ஆற்றின் நிலையணை 1.3 km அளவு தூர்வாரி DIVERSION / REALIGNMENT செய்வது மன்னெடுங்காலமாக நடந்து வரும் மீன் இனப்பெருக்கம், பல்லுயிர்ப்பெருக்கம் ஏற்படாமல் நடைபெற்று மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும். இதற்கிடந்தினை பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

(4) நீர்வளமுள்ள துணைமுகத்தில் கைமாளப்படும் நிலக்கரியினால் காற்றின் நிலை மாறுபட்டால் சுற்றியுள்ள கிராம மக்கள் பலவித சுகாதாரக்கேட்டு ஆளாகி வருகிறோம். இந்த பகுதியில் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் துணைமுகம் விரிவாக்கப்பட்டால் நீர்வழி கைமாளப்படும் நிலக்கரியின் அளவைவிட பலமடங்கு நிலக்கரி கைமாளப்படும் நிலையில் துணைமுகத்தை சுற்றியுள்ள கிராமங்கள் வாழவே தகுதியில்லாத நிலைக்கு தள்ளப்படும்.

(5) எங்களுக்கு கடல் எண்ணெய் வெறும் நீர் நிரம்பிய பகுதி அல்ல, அது எங்களுக்கு

- குடும்பத்தின் வாழ்வாதாரம்,
- குழந்தைகளின் கல்விக்கான உறுமானம்
- எங்கள் குடிகத்தின் அடையாளம்
- எங்கள் எதிர்காலம்.

கடலை அழித்து வளர்ச்சியை உருவாக்க முடியாது கடலை பாதுகாக்க வேண்டியது மின்வளத்துறை மட்டும் அல்ல அனைவரது கடமையாகும்.

திரிபுர சக்தி மகளிர் சுய உதவிக் குழு
பட்டினச்சேரி, திரு - பட்டினம்.

E. தனலட்சுமி
தலைவி

P. மகாலெட்சுமி
செயலாளர்

உறுப்பின் கையொப்பம்

1 E. தனலட்சுமி

2 K. இந்திராகாந்தி

3 P. சந்தனவள்ளி

4 S. ஜோதி

5 R. சுந்தரவள்ளி

6 P. அன்னலெட்சுமி

7 M. செல்லையம்மாள்

8 R. சுமதி

9 M. சிதாலட்சுமி

10 K. லெட்சுமி

11 S. செல்வி

12 T. பாலம்மாள்

13 S. அச்சம்மாள்

14 S.M. செல்வி

15 P. மகாலெட்சுமி

அனுப்புநர்,

மாதர் சுய உதவிக் குழு,
பட்டினச்சேரி.

GOVT. OF PUDUCERRY DSTE / PPCC KARAIKAL
1432
Date: 09/04/26

பெறுநர்,

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காரைக்கால்.

பொருள் : அதானி குழுமம் கூறைமுக விரிவாக்கம் தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். அதானி குழுமத்தின் கூறைமுக விரிவாக்கத்தால் பட்டினச்சேரி மீனவ கிராமத்தில் வாழும் மீனவ மக்களின் வாழ்வாதாரமும், உடல் நலக் குறைபாடுகளும், குழந்தைகளுக்கு கை, கால் ஊனம் ஆவதுடன், கார்ப்பு மாசுபாடும் ஏற்படுகிறது. மேலும் கண் கோளாறுகள், பெண்களுக்கு மலட்டுத் தன்மையும் ஏற்படுகிறது. கூறைமுகத்தில் உள்ள நிலக்கரியால் மண் வளம் பாதிக்கப்படுவதுடன், அந்த நீர் கடலில் கலந்து மீன் வளமும் பாதிக்கப்படுகிறது. இதுவரை இல்லாத அளவிற்கு மீனவ மக்களுக்கு புற்றுநோய் ஏற்பட்டு அதனால் மருத்துவ செலவுகள் செய்யும் பலர் புற்றுநோயால் இறந்து வருகின்றனர். இதனால் ஒவ்வொரு நாளும் மீனவ குடும்ப மக்களுக்கு பல. இடர்பாடுகளை தொடுக்கும் அதானி கூறைமுகத்தையும் அதன் விரிவாக்கத்தையும் எதிர்த்து நாங்கள் எங்கள் கோரிக்கையை தெரிவிக்கின்றோம். இதன்மேல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனே இரைந்து நடவடிக்கை எடுத்து பட்டினச்சேரி மீனவ மக்கள் சார்பாக தாய்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

[illegible]
[illegible] நகர், பட்டினச்சேரி, திரு-பட்டினம்

G. புஷ்பா
தலைவி

V. Kayalvizhi
செயலாளர்

அனுப்புநர்

G. பத்மா

S. [illegible]

M. Manimozhi

V. Valli

V. Jagabarathi

M. Kanaki

B. [illegible]

E. வெண்ணிலா

K. Kavitha

V. Kayvizh

D. [illegible]

M. [illegible]

V. Davi

A. SAVIRA

மாதர் முன்னேற்றக் [illegible]
[illegible]

[illegible] செயலாளர்

ப.உ.மகளிர் சுய உதவிக் குழு
[illegible] நகர், [illegible]-[illegible]

[illegible] V. Kayvizh
தலைவி செயலாளர்

அனுப்புநர்:

மாதா மகளிர் யூத்தப்பக்குழு
சுனாமி நகர், பட்டினச்சே
கிருப்பட்டினம்-609 6[illegible]

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் மேற்கண்ட மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நாங்கள் முழுவதும் கடல் தொழில் செய்யும் ஓர் மீனவர் கிராமம் கடந்து 2009 ஆம் ஆண்டு மேற்கண்ட துறைமுகம் வந்த நாள் முதல் இன்று வரை கடலில் சுதந்திரமாக எங்களால் தொழில் செய்ய முடியவில்லை கடலில் தொழில் வளம் குறைந்து வாழ்வாதாரத்தை இழந்து இந்த துறைமுகத்தினால் நாங்கள் முழுவதும் பாதிப்பு உள்ளாகி நிற்கதியாய் நிற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே பெரிதும் பாதிக்கப்பட்ட நாங்கள் கீழ்கண்ட பாதிப்பினை தங்களின் கவனத்திற்கு வைக்கின்றோம்.

1) கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2) நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

3) அதானி துறைமுகம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி அவர்களுக்கு நோய்களைத் தான் தருகிறார்கள்.

4) எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

5) இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

6) துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.குறிப்பாக கடலில் செல்லும் பாதைகள்,பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்,மீன் இனப்பெருக்கப் பகுதிகள், வலை வீசும் பகுதிகள்,மீன் இறங்குதளங்கள், கரையோர அணுகுமுறை படகு நிறுத்துமிடங்கள்,கடற்கரைப் பயன்பாடு ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.

7) கடலில் கப்பல்கள் நிறுத்தும் ஒரு தளம் அமைத்து அதில் எல்பிஜி கப்பல்கள் வந்து செல்லும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என அறிகிறோம், அப்படி ஒரு திட்டம் விரிவாக்கப்பட்டால் எல்பிஜி கப்பல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நாங்கள் யாரும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். இதனால் எங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும் நிலை ஏற்படும்.

8) துறைமுகத்தினால் ஏற்படும் நிலக்கரி துகள்கள் கிராம அருகில் இருக்கக்கூடிய மற்றும் தோட்டங்களில் படிவதனால் தோட்டப்பயிர்கள் விஷத்தன்மை நிறைந்ததாக மாறி அதை உண்ணும் பெரியவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது இனி மேலும் விரிவுபடுத்தப்பட்டால் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான வாழ்க்கை முற்றிலுமாக பறிபோகும் நிலை ஏற்படும்.
2. உயர்திரு துணை இயக்குனர் அவர்கள், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை காரைக்கால்

بسم الله الرحمن الرحيم

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்
TAMIL NADU MUSLIM MUNNETRA KAZHAGAM

திரு-பட்டினம் கிளை - காரைக்கால் மாவட்டம்
அலுவலக முகவரி : 2/2 பெரியப்பள்ளி சன்னதி தெரு,திரு-பட்டினம் - 609606.

No. /TMMK/TRP/ தேதி : 9/9/26

1498 9/9/26

புகார் மனு

பெறுநர்:
மாண்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காரைக்கால்.

பொருள்: அதானி நிலக்கரி துறைமுக இயக்கம் மற்றும் விரிவாக்கத் திட்டத்தை உடனடியாகக் கைவிடக் கோருதல் - சார்பு.

ஏற்கனவே நமது புதுச்சேரி அரசால் அனுமதி வழங்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் அதானி நிலக்கரி துறைமுகத்தால், அதனைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் வாழும் பொதுமக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இத்துறைமுகத்தின் செயல்பாடுகளால் பலவிதமான சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன. நாம் சுவாசிக்கும் காற்று கடுமையாக மாசு அடைந்துள்ளது. இதன் காரணமாக, அப்பகுதி மக்களுக்குப் பலவிதமான நோய்களால், குறிப்பாக நுரையீரல் சார்ந்த கடுமையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும், இதன் நச்சுப் பாதிப்பால் உயிர் கொல்லி நோயான புற்றுநோய் (கேன்சர்) தாக்கி, ஏற்கனவே சிலர் உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சிகரமான உண்மையையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

பொதுமக்கள் மட்டுமன்றி, இப்பகுதி விவசாயிகளால் வளர்க்கப்படும் ஆடு, மாடு, கோழிகள் உள்ளிட்ட அனைத்துக் கால்நடைகளும், பறவைகளும் இம்மாசுபாட்டினால் பெருமளவில் பாதிக்கப்பட்டுப் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகியுள்ளன. இதனால் விவசாயிகளும்,

بسم الله الرحمن الرحيم

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம்
TAMIL NADU MUSLIM MUNNETRA KAZHAGAM

திரு-பட்டினம் கிளை - காரைக்கால் மாவட்டம்
அலுவலக முகவரி : 2/2 பெரியப்பள்ளி சன்னதி தெரு,திரு-பட்டினம் - 609606.

No. / TMMK / TRP/ தேதி : 9/9/26

பொதுமக்களும் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருகின்றனர்.

இத்தகைய தழ்நிலையில், இத்துறைமுகம் இனி இயங்கக் கூடாது என்றும், அதன் உரிமத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும் பொதுமக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். மக்களின் இப்போராட்டக் குரலுக்குச் செவிசாய்க்காமல், இத்துறைமுகத்தை மேலும் விரிவாக்கம் செய்ய அரசு எண்ணி இருப்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல மக்களுக்குப் பெருத்த வேதனையை அளிக்கிறது. எனவே, கஞ்சியோ கூழையோ குடித்துக் கொண்டு தங்களது எஞ்சிய வாழ்நாளைக் கழிக்க நினைக்கும் ஏழை எளிய மக்களை நிம்மதியாக வாழ விடுமாறு இம்மாநில அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். பொதுமக்களின் உடல்நலனையும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் கருத்தில் கொண்டு, இந்த விரிவாக்கத்தை மக்கள் பயன்பாடு இல்லாத வேறு இடத்திற்கு மாற்றி கொடுக்குமாறு கேட்டுகொள்கிறோம்.

இந்த அதானி துறைமுக விரிவாக்கத் திட்டத்தை இந்த பகுதியில் அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் எனப் புதுச்சேரி மாநில அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

இப்படிக்கு,

H. Jafar தலைவர் 8754790889

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம்
திருபட்டினம் கிளை.

Head Quarters : 7, Vada Maraicoir Street, Mannady, CHEENNAI - 600 001.
District Quarters : 95,Maideen Palli Street, KARAIKAL - 609602.

அனுப்புநர்:- சிந்தனைப் பூக்கள் மகளிர் சுய உதவிக்குழு
பட்டினச்சேரி,
திருப்பட்டினம்.

சிந்தனை பூக்கள்
மகளிர் சுய உதவிக்குழு
சுனாமி நகர் தெற்கு
பட்டினச்சேரி

GOVT OF PUDUCHERRY DISTRICT COLLECTORATE
Date: 19/9/26
1500

பெறுநர்:-
உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
பொது விசாரணை அதிகாரி,
காரைக்கால் மாவட்டம்.

பொருள்:-
காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய 21.5 MMTPA திறனை 100.3 MMTPA ஆக உயர்த்துவதற்கான MASTER PLAN DEVELOPMENT / EXPANSION PROPOSAL தொடர்பாக 09.09.2026 அன்று நடைபெறவுள்ள பொது கருத்தறி கேட்பிற்கு எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீனவர் உரிமைகள், மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பொருட்டு மேற்கண்ட திட்டத்தை முற்றிலும் நிராகரிக்க கோருதல் தொடர்பாக,

ஐயா:-
மேற்கண்ட துறைமுக விரிவாக்கத்திட்டம் எங்களின் வாழ்வாதாரம், கடல்வளம், மீனவர் உரிமைகள், மீன் இனப்பெருக்கம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை எவ்வாறு பாதிக்கும் என்பதற்கும், இத்திட்டம் முற்றிலும் நிராகரிக்கப் - பட வேண்டும் என்பதற்கான காரணங்களை வலியுறுத்த விரும்புகிறோம்.

காரணங்கள்:-
1. இத்திட்டம் கடல் பகுதியை சூறையாடும் திட்டம் தற்போதைய துறைமுகத்தின் அளவு 3x43 ஏக்கர்.

கிழமேலும் 2014 ல் ஹெக்டேராக உயர்ந்தபோட உள்ளது. இந்த 2014 ல் ஹெக்டேரில் 137-14 ஹெக்டேர் கடலில் மணலைக் கொட்டி உருவாக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. இதன்மூலம் கடலையே நம்பி வாழும் மீனவர்களாகிய எங்களுக்கு மிகப்பெரிய பாதிப்பினை ஏற்படுத்தும். அதுடன் மீன்பிடி தொழிலும், கடல் வளமும், மீன்பிடி உரிமையும், மீன்களின் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டு எங்கள் எதிர்கால சந்ததிகளை அழிவுக் குள்ளாக்கும்.

(ii) இந்துடன் கடலின் வடக்கு மற்றும் தெற்கு அலைதாங்கி-யின் நீளத்தை அதிகரிப்பதால் இந்தப்பகுதியின் அலையோட்ட திசை மாற்றி கடல் அரிப்பு ஏற்படும். தற்போதைய துறைமுகம் 2009 லிருந்து ரூயல் பாட்டுக்கு வந்ததிலிருந்து எங்கள் கிராமத்தில் 200 மீட்டருக்கு மேல் கடல் அரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் துறைமுக விரிவாக்கம் செய்யப்பட்டால் வரும் காலங்களில் எங்கள் கிராமம் மிகப்பெரிய அழிவை சந்திக்கும் என்பதை தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(iii) சில ஆண்டுகளுக்கு முன்பு மீன்வளத்தைப் பெருக்குவதற்கும் செயற்கையாக பவளப் பாறைகள் உருவாக்குவதற்காக திரு M.S. சுவாமிநாதன் Foundation மூலமாக எங்கள் கிராம கடல் பகுதியில் ARTIFICIAL REEF BLOCKS (செயற்கை பவுடிப்பாறை கற்கள்) போடப்பட்டன. தற்போதைய துறைமுகத்திற்காக கடலை அடிப்பகுதி எடுக்கப்பட்ட மணலைக் கொட்டியதன் விளைவாக மேற்கண்ட கற்கள் முற்றிலும் மணலால் மூடப்பட்டு பவளப்பாறைகள் உருவாக்கம் தடைபட்டு, மீன் இனப்பெருக்கமும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

(iv) PURAVADAIYANAR ஆற்றின் திசையினை 1.3 km வடக்கு நோக்கு DIVERSION / REALIGNMENT செய்வது

பண்ணைகுங்காலமாக கடந்த ஊரும் மீன் இனப்பெருக்கம், பல்லுயிரியப்பெருக்கம் ஏற்பட்டதை நடைமுறையிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும். இத்திட்டத்தினை பரிசீலிக்க வேண்டாமென கேட்கிறோம்.

(v) தற்போதுள்ள துறைமுகத்தில் கையாளப்படும் நிலக்கரியின் காற்றின் தரத்தை மாறுபட்டால் சுற்றியுள்ள கிராம மக்கள் பலவித நோய்களுக்கு ஆளாக உருகிறோம். இந்த பகுதியில் காற்றின் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் துறைமுகம் விரிவாக்கப்பட்டால் தற்போது கையாளப்படும் நிலக்கரியின் அளவைவிட பலமடங்கு நிலக்கரி கையாளப்படும் நிலையில் துறை முகத்தை சுற்றியுள்ள கிராமங்கள் வாழவே தகுதியில்லாத நிலைக்குத்தள்ளப்படும்.

(vi) எங்களுக்கு கடல் என்பது வெறும் நீர் நிரம்பிய பகுதி அல்ல, இது எங்களுக்கு

- நம்பகத்தின் வாழ்வாதாரம்,
- குடிநீர்களின் கனிவிக்கான உபமானம்.
- எங்கள் முழுகத்தின் அடையாளம்
- எங்கள் எதிர்காலம்.

கடலை அழித்து வளர்ச்சியை உருவாக்க முடியாது கடலை பாதுகாக்க வேண்டியது மீனவர்களுக்கு மட்டும் அல்ல அனைவருக்கு கடமையாகும்

உறுப்பினர்	கையொப்பம்
1. S. Mythamaki	
2. P. [illegible]	
3. [illegible]	
4. [illegible]	
5. B. Nalini	
6. [illegible]	
7. R. [illegible]	
8. S. தமிழ்மணி	தமிழ்மணி
9. N. Naglly	
10. B. சாந்தி	
11. P. வெண்ணிலா	
12. V. [illegible]	
13. B. Usha	

Reg. No. 333/2003

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்

TAMILNADU THOWHEED JAMATH

(முஸ்லிம் சமுதாய பேரியக்கம்)

திரு-பட்டினம் கிளை - 609 606.

கிளை அலுவலகம் : எண். 7, காஜியார் வீதி, திரு-பட்டினம், காரைக்கால் மாவட்டம்.

செல் :

150/
Date 9/9/26

பெறுநர்:

1. உயர்திரு. மாவட்டாட்சியர் அவர்கள், காரைக்கால்.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புதுச்சேரி.
3. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், புதுச்சேரி.
4. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நிரவி – திருப்பட்டினம் தொகுதி.
5. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் அவர்கள், புதுச்சேரி.
6. உயர்திரு. கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அவர்கள், திருப்பட்டினம்.

பொருள்:

காரைக்கால் துறைமுக விரிவாக்கத்தால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல், சுகாதாரம், போக்குவரத்து மற்றும் வாழ்வாதார பாதிப்புகள் குறித்த மக்களின் அச்சத்தைப் போக்கவும், முழுமையான ஆய்வு மற்றும் மக்கள் கருத்தைக் கேட்டறிந்த பின்னரே நடவடிக்கை எடுக்கவும் கோரிக்கை – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

காரைக்கால் துறைமுகம் கடந்த பல ஆண்டுகளாக செயல்பட்டு வரும் நிலையில், காரைக்கால் மற்றும் அதனைச் சுற்றியுள்ள வாஞ்சூர், போலகம், திருப்பட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள், துறைமுகத்தின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் எதிர்கால விரிவாக்கம் குறித்து பல்வேறு அச்சங்களையும் சந்தேகங்களையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

துறைமுகத்தின் செயல்பாடுகள் காரணமாக நிலக்கரி உள்ளிட்ட சரக்குகளை கையாள்வதால் காற்று மாசுபாடு, தூசு, சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படுகின்றனவா என்பது குறித்து அப்பகுதி மக்களிடையே தொடர்ந்து கவலை நிலவி வருகிறது. குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட பொதுமக்களின் சுவாச நலன் குறித்து மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். அதேபோல், துறைமுகச் செயல்பாடுகளால் விவசாய நிலங்கள், நிலத்தடி நீர், காய்நடைகள், தாவரங்கள், கடல் வளங்கள் மற்றும் மீன்வளம் பாதிக்கப்படுகின்றனவா என்பதையும் அறிவியல் ரீதியாக ஆய்வு செய்து மக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

மாவட்ட அலுவலகம் : 41, முஸ்தபா கமால் வீதி, காரைக்கால் - 609 602.

தலைமை அலுவலகம் : எண். 25, அரண்மனைக்காரன் சிதிரு, மண்ணடி, சென்னை - 600 001. போன் : 25215226

சொந்த மண்ணில் வாழும் மக்களின் வீடுகளிலேயே அவர்கள் சுவாசிக்கும் காற்றின் தரம் குறித்து அச்சப்பட வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. தொழில் வளர்ச்சியும் துறைமுக வளர்ச்சியும் அவசியமானதாக இருந்தாலும், அது அப்பகுதி மக்களின் உயிர், உடல்நலம், சுற்றுச்சூழல் மற்றும் வளர்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் இருக்கக் கூடாது என்பதே எங்களுடைய முக்கியமான கோரிக்கையாகும்.

ரயில்வே கேட் – போக்குவரத்து பிரச்சினை

துறைமுகத்திற்கு நிலக்கரி உள்ளிட்ட சரக்குகளை ஏற்றிச் செல்லும் ரயில்களின் இயக்கம் காரணமாக ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருகின்றனர்.

இதனால் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள், வியாபாரிகள், வழக்கறிஞர்கள், நோயாளிகள், அவசர மருத்துவ சேவை வாகனங்கள் மற்றும் அன்றாடப் பயணம் மேற்கொள்ளும் பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுகின்றனர்.

துறைமுகம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டால் ரயில்களின் எண்ணிக்கையும் அதிகரித்து, ரயில்வே கேட் மூடப்படும் நேரமும் அதிகரிக்குமா? என்ற அச்சம் மக்களிடம் உள்ளது.

எனவே, துறைமுக விரிவாக்கத்திற்கு முன்பாக:

– ரயில்வே கேட் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்ன?
– மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைக்கும் திட்டம் உள்ளதா?
– அவசர ஊர்திகள் தடையின்றி செல்ல என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?
– எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய ரயில் மற்றும் கனரக வாகனப் போக்குவரத்தை எவ்வாறு கையாளப் போகிறார்கள்?

என்பது குறித்து அரசாங்கம் தெளிவான திட்டத்தையும் காலக்கெடுவையும் மக்களிடம் வெளியிட வேண்டும்.

விவசாயம் மற்றும் மீன்வளம்

கரையோரக்கால் பகுதி விவசாயத்திற்கும் மீன்பிடித் தொழிலுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும்.

துறைமுக விரிவாக்கத்தால் ஏற்படக்கூடிய தூசு மாசுபாடு, கடல் மாசுபாடு, நீரின் தரத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் பிற சுற்றுச்சூழல் தாக்கங்கள் காரணமாக விவசாயிகளின் வாழ்வாதாரமும் மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுமா? என்ற கேள்வி மக்களிடம் உள்ளது.

எனவே விரிவாக்கப் பணிகளுக்கு முன்பாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, காற்றின் தரம், நீரின் தரம், நிலத்தடி நீர், கடல் உயிரியல், விவசாயம் மற்றும் மீன்வளம் ஆகியவற்றில் முழுமையான அறிவியல் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அந்த ஆய்வு அறிக்கைகள் பொதுமக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் மக்களுக்கு என்ன பயன்?

துறைமுக விரிவாக்கம் நடைபெறுவதால் இப்பகுதி மக்களுக்கு:

- எத்தனை நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும்?
- எத்தனை உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்?
- உள்ளூர் வியாபாரிகளுக்கு என்ன பொருளாதார பயன் கிடைக்கும்?
- உள்ளூர் மக்களின் அடிப்படை வசதிகள் எவ்வாறு மேம்படுத்தப்படும்?
- சாலை, குடிநீர், சுகாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?
- சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன?

என்பது போன்ற கேள்விகளுக்கு அரசாங்கமும் சம்பந்தப்பட்ட நிர்வாகமும் தெளிவான பதிலை மக்களுக்கு வழங்க வேண்டும்.

எங்களுடைய முக்கிய கோரிக்கை

தொழில் வளர்ச்சிக்கு நாங்கள் எதிராளவர்கள் அல்ல. ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் மக்களின் உடல்நலம், விவசாயம், மீன்வளம், சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே, காரைக்கால் துறைமுக விரிவாக்கம் தொடர்பாக மக்களிடம் நிலவும் அச்சத்தையும் சந்தேகங்களையும் கருத்தில் கொண்டு,

1. துறைமுக விரிவாக்கத்தின் முழுமையான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார தாக்கம் குறித்து சுயாதீனமான அறிவியல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

2. ஆய்வு அறிக்கையை பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளியிட வேண்டும்.

3. பாதிக்கப்படும் பகுதிகளில் மக்கள் கருத்துக் கேட்பு கூட்டங்களை முறையாக நடத்த வேண்டும்.

4. காற்று, நீர், நிலத்தடி நீர் மற்றும் கடல் சூழலின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் நிரந்தர அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

5. ரயில்வே கேட் மற்றும் கனரக வாகனப் போக்குவரத்து பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணாமல் துறைமுக விரிவாக்கத்தை முன்னெடுக்கக் கூடாது.

6. உள்ளூர் மக்களுக்கு கிடைக்கப்போகும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பயன்கள் குறித்து தெளிவான திட்டத்தை அரசு வெளியிட வேண்டும்.

7. துறைமுக விரிவாக்கத்தால் மக்களின் உடல்நலம், சுற்றுச்சூழல் அல்லது வாழ்வாதாரத்தில் பாதிப்பு ஏற்படும் என்பது ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டால், அந்த விரிவாக்கத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து, நேர்மையான பட்சத்தில் கைவிட வேண்டும்.

மக்களின் அச்சத்தை அலட்சியப்படுத்தாமல், அவர்களின் கருத்தை மதித்து, அவர்களின் உயிர், உடல்நலம் மற்றும் வாழ்வாதாரத்தை முதன்மையாகக் கருதி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எங்களுடைய பணிவான கோரிக்கையாகும்.
எனவே, மேற்கண்ட கோரிக்கைகளை உடனடியாக பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுத்து, அதன் விவரங்களை பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
காரைக்கால் பகுதி பொதுமக்கள் சார்பாக,
காரைக்கால் மாவட்டம் மற்றும்
திருப்பட்டிணம் கிளை நிர்வாகிகள்,
மற்றும் ஊர் ஜமாத்தார்கள்.
தொடர்பு எண்: 9788899972-
897375373 -9842532183-
9942626886

இடம்: திருப்பட்டிணம்
தேதி: 09/09/2026

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்

Date:- 9.9.2026

From,

P. Sathiyan (B.Tech- Mechanical Eng.)
38.1 pattinacherry road,
Pattinacherry. T.R. Pattinam
Karaikal- 609606
Mobile:- +919042791351

To,

District Collector,
Karaikal District,
Govt. of Puducherry,
Karaikal - 609606

GOVT OF PUDUCHERRY DSTE / PCC KARAIKAL
Date 9/9/26

Sub:- Representation Requesting removal of temprary tar-producing facity near my residential area.

Respected Madam,

Im submiting this personal representation to request your immidiate intervention regarding the temprary implementation of thar-producing facity Near my home.

My family Live in close proximity to the facility, and we are seriusly concern about the possible effects of the fumes, dust, ordour and other polutanty by that facility during production.

These condition may worsen existing health problems and creat serius risk to my father (who is a tracheostomy patient) and also to my family members.

Particulary elederly persons, and childrens and anyone suffering respiratory or other medical condition.

We are particulary concerned about following issues

1) Impact to pubic and my family health.

2) Air pollution and unpleasant odour

3) Environmental pollution.

4) Fire and safety risk.

Therefore, I hubly request your good office to examine this representation on priority, considering the health cond. of my father and my family, and take immediate proper action in Large public intrest.

Thanking You,

Yours faithfully,
P. Sathiyan.

By e-mail / Speed Post

M. Rajadurai, B.A.,(SW) C.O.M.P.
President
Thirumalairayanpattinam Consumer Forum
திருமலைராயன்பட்டினம் கன்சியூமர் பாரம்
Regd.SI.No. 215/1989
Member- District Level Vigilence Committee

No. 26, Mahathoppu Street,
Thirumalairayanpattinam - 609 606.
Karaikal (Dist). UT of Puducherry.
Cell : 94436 54185,
email : meeraarmnp@gmail.com

1507
9/9/26

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து, போலகம் பல்நோக்கு மண்டபத்தில் 09.09.2026ல் பொதுஅறிவிப்பு வாயிலாக கீழவாஞ்சூரில் இயங்கி வரும் M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் (MASTER PLAN) மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சரக்கு கையாளுவதை நுறைமுகம் விரிவாக்க திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் நலனுக்காக திருமலைராயன்பட்டினம் கன்சியூமர் பாரம் நேரில் அளிக்கும் கோரிக்கை மனு:

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் அறிவிப்பு

பெறுதல்;

1. உயர்திரு. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. உயர்திரு. உறுப்பினர் செயலாளர்,
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்,
3வது மாடி, புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம்,
அண்ணா நகர் புதுச்சேரி-5.
3. M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட்,
கீழவாஞ்சூர் கிராமம், திருமலைராயன்பட்டினம்,
காரைக்கால் 609606.

மதிப்பிற்குரிய ஐயா / மேடம்,

பாரத தேசத்தின் உயரிய வளர்ச்சிக்கு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றக்கூடியதில் மத்திய, மாநில அரசு மற்றும் தனியார் துறைமுக திட்டங்களும் ஒன்றாகும். இப் பகுதி மக்களின் நலன் கருதி பின்வரும் கோரிக்கைகளை பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்த ஆவண செய்யுமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றேன்.

M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் அமைந்துள்ள கிராமங்களிலும், இதனை விரிவாக்கம் செய்யும் கிராம பகுதிகளில் வசித்து வரும் மக்களின் விவசாயம் மீன்பிடி தொழில் செய்து வருபவர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ள குடும்பத்தினரின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் திட்டப்பணிகள் நடைபெற வேண்டியது அவசியமாகும்.

காரைக்கால் மாவட்டத்தில் வசிக்கும் ஏராளமான படித்த வேலையில்லாத உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் விரிவாக்கம் பணிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் குடியிருப்பவர்கள் வேறு இடங்களில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்தால் அருகில் உள்ள இடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய இன்றைய சூழலுக்கு ஏற்ற நவீன நகரை உருவாக்கி குடி அமர்த்த வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் மற்றும் நிரவி கொம்யூன் கிராமங்கள் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் பயன்பாட்டினால் கடந்த காலங்களில் அதிக நிலத்தடி நீர் எடுத்ததின் விளைவாக கடல் நீர் உள் புகுந்து குடிநீர் உவர்ப்பு நீராக மாறியது. பின்னர் அரசு எடுத்த துரித நடவடிக்கைகளின் பேரில் நகரின் மேற்கு பகுதிகளிலிருந்து பல்வேறு திட்டங்கள் வாயிலாக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது துறைமுக விரிவாக்க காரணமாக நிலத்தடி நீர் ஆதாரம் பெருமளவில் உவர்ப்பாக மாறிவிடும் என்ற ஐயப்பாடு உள்ளது மனித இயல்புதானே.

இதற்கு தீர்வாக திருமலைராயன் என்ற பேரரசர் காலத்தில் 108 திருக்கோயில்கள் 108 திருக்குளங்கள் இருந்ததாக முன்னோர் கூறிய செய்தியின் அடிப்படையில் தற்போது எஞ்சியுள்ள குளங்கள் அனைத்தும் தூர்வாரி நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்க ஆவண செய்ய வேண்டும்.

பொழுதுபோக்கு அம்சங்கள் ஏதும் இப் பகுதியில் இல்லாத நிலையில் குறிப்பாக நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள பெரியகுளம் மற்றும் படுதார்கொல்லையில் உருவாகியுள்ள ஏரியினை சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் வகையில் (சுற்றுலா ஸ்பாட்டாக) சுற்றுலா மையமாக மாற்றி தர ஆவண செய்ய வேண்டும்.

எதிர்கால தொலைநோக்கு திட்டங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியவை பின்வருமாறு:

24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைக்க PPCL மின் குழுமத்தை மேம்படுத்த வேண்டும் அல்லது புதுச்சேரி அரசு, துறைமுக நிர்வாகமும் இணைந்து புதிய மின் திட்டத்தை தர முன் வர வேண்டும்.

புதுச்சேரி அரசு போலகம் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு கிடப்பில் உள்ளது. பேரிடர் காலங்களிலும், தீ விபத்து போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படும்போதும் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க அவசியம் கருதி தொழிற்பேட்டையில் இடம் உள்ளதால் துறைமுக நிர்வாகம் தீயணைப்பு வாகனங்கள் வழங்கி விரைவில் தீயணைப்பு நிலையம் அமைக்க ஆவண செய்ய வேண்டும்.

துறைமுக விரிவாக்க பணிகளால் அதிக அளவு கனரக வாகன போக்குவரத்து நடைபெறும். ஆண்டுதோறும் மும்மதங்கள் போற்றும் திருநள்ளார் ஸ்ரீ சனீஸ்வர பகவான், நாகூர் ஆண்டவர் தர்கா, அன்னை வேளாங்கண்ணி ஆலயங்களின் திருவிழாவிற்கு பக்தர்கள் வாகனங்கள் மற்றும் பாதயாத்திரையாக சென்று வருகின்றார்கள். பட்டினச்சேரி கடற்கரைக்கு மாசி மக தீர்த்தவாரி நிகழ்ச்சிக்கு ஸ்ரீ சௌரி ராஜப்பெருமாள் திருக்கண்ணபுரத்திலிருந்து சாலை மார்க்கமாக பட்டினச்சேரி கடற்கரைக்கு செல்லும் பொழுது பல ஆயிரம் பக்தர்கள் உடன் சென்று வருவது சிறப்பு நிகழ்வாகும். அதே நாளில் திருமருகல் ஸ்ரீ வரதராஜ பெருமாள், திருமலைராயன்பட்டினம் ஸ்ரீராமசாமி பெருமாள், ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள், ஸ்ரீவீழி வரதராஜ பெருமாள், நிரவி ஸ்ரீ கரியமாணிக்க பெருமாள், காரைக்கால் ஸ்ரீ நித்யகல்யாண பெருமாள், கோவில்பத்து ஸ்ரீ கோதண்டராமர் பெருமாள் பட்டினச்சேரி சமுத்திர தீர்த்தவாரிக்கு திருக்கண்ணபுரம் ஸ்ரீசௌரிராஜ பெருமாள் உடன் சென்று பக்தர்களுக்கு அருள்பாளிப்பார்கள். இராமாயண வரலாற்றில் இராவணன் வஞ்சகமாக சீதாதேவியை கவர்ந்துசெல்லும் போது பறவைகளின் அரசன் ஜடாயு இராவணனுடன் யுத்தம் செய்து இறக்கும் நிலையில், இந்த செய்தியை ஸ்ரீ இராமரிடம் சேர்த்து மோட்சம் அடைந்த தலம் ஸ்ரீ ஜடாயுபுரீஸ்வரர் திருக்கோவில். இக்கோவிலில் பத்து நாட்கள் மாசி மக திருவிழாவும் விமரிசையாக நடைபெறும்.

மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஸ்ரீ ஆயிரம் காளியம்மன் ஆலய திருவிழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதும் சிறப்பான ஒன்று. மீன்பிடி தொழில் செய்பவர்கள், ரெயில் நிலையம் செல்பவர்கள், அமாவாசை தினம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய செல்பவர்கள், ஏராளமான பொதுமக்கள் அன்றாடம் சென்று வரும் நிலையில், பட்டினச்சேரி செல்லும் சாலை - திருமலைராயன்பட்டினம் ரயில் நிலையம் (ஹால்ட் ஸ்டேஷன்) பகுதியில் கலபமாக கடந்து செல்லும் வகையில் சிறப்பான போக்குவரத்து வசதிக்காக, திருமலைராயன்பட்டினம் - புறவழிச் சாலை மையமாக வைத்து பட்டினச்சேரி (ரயில் நிலையம்) சாலை, மேற்கு பகுதியில் திட்டச்சேரி சாலை, தெற்கு பகுதியில் PPCL ரவுண்டானா, வடக்கு பகுதியில் திருமலைராஜன் ஆற்றுப்பாலம் வரை மாற்று ஏற்பாடாக ஒரு உயர்மட்ட மேம்பாலம் (ROB) சாலையின் நேர் எதிரே பாலம் அமைத்து தர ஆவண செய்ய வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் ஹால்ட் ரயில் நிலையத்தில் துறைமுகம் சரக்கு போக்குவரத்திற்காக எதிர்கால துறைமுக விரிவாக்கத்தினை கருத்தில் கொண்டு கூடுதல் பாதைகள் அமைத்து நிலைய அதிகாரி (ஸ்டேஷன் மாஸ்டர்) உடன் கூடிய முழுமையான ரயில் நிலையம் தரம் உயர்த்தி தரவும். தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் நாகப்பட்டினம் காரைக்கால் திருநள்ளார் பேரளம் மார்க்கத்தில் இரட்டை ரயில் பாதை அமைத்து போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான ஏற்பாட்டினையும் செய்து தர ஆவண செய்ய வேண்டுகிறோம்.

கீழவாஞ்சூர், மேலவாஞ்சூர், PIPDIC தொழிற்பேட்டை பகுதிகளில் இயங்கி வரும் இரும்பு மற்றும் ரசாயன, இதர தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், சாலை விபத்துகள் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கும் உயிர் காக்க உயரிய சிகிச்சைகள் பெறுவதற்கும், சிறப்பு ஏற்பாடாக (நிர்வாக குளறுபடிகள், அறிவிப்பில் மட்டுமே உள்ள திட்டங்களால் தற்பொழுது காரைக்காலில் போதிய வசதிகள் இன்றி அவசர மருத்துவ உதவிகளுக்கு தஞ்சாவூர் புதுச்சேரி செல்ல வேண்டி உள்ளது) வெளியூர் சென்றாலும் உயிரைக் காப்பாற்ற இயலாத சூழலும் உள்ள நிலையில் பெரும் நகரங்களில் இருப்பது போன்று 24 மணி நேரமும் இயங்கக்கூடிய பல்நோக்கு மருத்துவமனை ஏற்படுத்தி தர ஆவண செய்ய வேண்டும்.

இப்பகுதி மக்களுக்காக வருங்காலங்களில் பல்வேறு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு M/S. காரைக்கால் போர்ட் துறைமுக நிர்வாகமும், காரைக்கால் மாவட்ட நிர்வாகமும் இணைந்து இப்பகுதிக்கு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க இக்கருத்து கேட்பு கூட்டத்தின் வாயிலாக கோரிக்கை வைக்கின்றேன்.

நன்றி...

தரவுகள் உண்மையுள்ள,

Thirumalairayanpattinam Consumer Forum Regd. Sl. No 215/1989 Karaikal (UT) 609 605

M. RAJADURAI
President

நகல் பெறுதல் :
மாண்புமிகு துணை நிலை ஆளுநர்
ராஜ் நிவாஸ், புதுச்சேரி.

By e-mail / Speed Post

M. Rajadurai, B.A.,(SW) C.O.M.P.
President
Thirumalairayanpattinam Consumer Forum
திருமலைராயன்பட்டினம் கன்சியூமர் பாரம்
Regd.Sl.No. 215/1989
Member- District Level Vigilence Committee

No. 26, Mahathoppu Street,
Thirumalairayanpattinam - 609 606.
Karaikal (Dist). UT of Puducherry.
Cell : 94436 54185,
email : meeraarmnp@gmail.com

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து, போலகம் பல்நோக்கு மண்டபத்தில் 09.09.2026ல் பொதுஅறிவிப்பு வாயிலாக கீழவாஞ்சூரில் இயங்கி வரும் M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் (MASTER PLAN) மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சரக்கு கையாளுவதை துறைமுகம் விரிவாக்க திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் நலனுக்காக திருமலைராயன்பட்டினம் கன்சியூமர் பாரம் நேரில் அளிக்கும் கோரிக்கை மனு:

பெறுதல்:
1. உயர்திரு. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. உயர்திரு. உறுப்பினர் செயலாளர்,
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்,
3வது மாடி, புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம்,
அண்ணா நகர் புதுச்சேரி-5.
3. M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட்,
கீழவாஞ்சூர் கிராமம், திருமலைராயன்பட்டினம்,
காரைக்கால் 609606.

மதிப்பிற்குரிய ஐயா / மேடம்,

பாரத தேசத்தின் உயரிய வளர்ச்சிக்கு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றக்கூடியதில் மத்திய, மாநில அரசு மற்றும் தனியார் துறைமுக திட்டங்களும் ஒன்றாகும். இப் பகுதி மக்களின் நலன் கருதி பின்வரும் கோரிக்கைகளை பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்த ஆவண செய்யுமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றேன்.

M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் அமைந்துள்ள கிராமங்களிலும், இதனை விரிவாக்கம் செய்யும் கிராம பகுதிகளில் வசித்து வரும் மக்களின் விவசாயம் மீன்பிடி தொழில் செய்து வருபவர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ள குடும்பத்தினரின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் திட்டப்பணிகள் நடைபெற வேண்டியது அவசியமாகும்.

காரைக்கால் மாவட்டத்தில் வசிக்கும் ஏராளமான படித்த வேலையில்லாத உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் விரிவாக்கம் பணிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் குடியிருப்பவர்கள் வேறு இடங்களில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்தால் அருகில் உள்ள இடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய இன்றைய சூழலுக்கு ஏற்ற நவீன நகரை உருவாக்கி குடி அமர்த்த வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் மற்றும் நிரவி கொம்யூன் கிராமங்கள் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் பயன்பாட்டினால் கடந்த காலங்களில் அதிக நிலத்தடி நீர் எடுத்ததின் விளைவாக கடல் நீர் உள் புகுந்து குடிநீர் உவர்ப்பு நீராக மாறியது. பின்னர் அரசு எடுத்த துரித நடவடிக்கைகளின் பேரில் நகரின் மேற்கு பகுதிகளிலிருந்து பல்வேறு திட்டங்கள் வாயிலாக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது துறைமுக விரிவாக்க காரணமாக நிலத்தடி நீர் ஆதாரம் பெருமளவில் உவர்ப்பாக மாறிவிடும் என்ற ஐயப்பாடு உள்ளது மனித இயல்புதானே.

இதற்கு தீர்வாக திருமலைராயன் என்ற பேரரசர் காலத்தில் 108 திருக்கோயில்கள் 108 திருக்குளங்கள் இருந்ததாக முன்னோர் கூறிய செய்தியின் அடிப்படையில் தற்போது எஞ்சியுள்ள குளங்கள் அனைத்தும் தூர்வாரி நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்க ஆவண செய்ய வேண்டும்.

பொழுதுபோக்கு அம்சங்கள் ஏதும் இப் பகுதியில் இல்லாத நிலையில் குறிப்பாக நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள பெரியகுளம் மற்றும் படுதார்கொல்லையில் உருவாகியுள்ள ஏரியினை சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் வகையில் (சுற்றுலா ஸ்பாட்டாக) சுற்றுலா மையமாக மாற்றி தர ஆவண செய்ய வேண்டும்.

எதிர்கால தொலைநோக்கு திட்டங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியவை பின்வருமாறு:

24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைக்க PPCL மின் குழுமத்தை மேம்படுத்த வேண்டும் அல்லது புதுச்சேரி அரசு, துறைமுக நிர்வாகமும் இணைந்து புதிய மின் திட்டத்தை தர முன் வர வேண்டும்.

புதுச்சேரி அரசு போலகம் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு கிடப்பில் உள்ளது. பேரிடர் காலங்களிலும், தீ விபத்து போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படும்போதும் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க அவசியம் கருதி தொழிற்பேட்டையில் இடம் உள்ளதால் துறைமுக நிர்வாகம் தீயணைப்பு வாகனங்கள் வழங்கி விரைவில் தீயணைப்பு நிலையம் அமைக்க ஆவண செய்ய வேண்டும்.

துறைமுக விரிவாக்க பணிகளால் அதிக அளவு கனரக வாகன போக்குவரத்து நடைபெறும். ஆண்டுதோறும் மும்மதங்கள் போற்றும் திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான், நாகூர் ஆண்டவர் தர்கா, அன்னை வேளாங்கண்ணி ஆலயங்களின் திருவிழாவிற்கு பக்தர்கள் வாகனங்கள் மற்றும் பாதயாத்திரையாக சென்று வருகின்றார்கள். பட்டினச்சேரி கடற்கரைக்கு மாசி மக தீர்த்தவாரி நிகழ்ச்சிக்கு ஸ்ரீ சௌரி ராஜப்பெருமாள் திருக்கண்ணபுரத்திலிருந்து சாலை மார்க்கமாக பட்டினச்சேரி கடற்கரைக்கு செல்லும் பொழுது பல ஆயிரம் பக்தர்கள் உடன் சென்று வருவது சிறப்பு நிகழ்வாகும். அதே நாளில் திருமருகல் ஸ்ரீ வரதராஜ பெருமாள், திருமலைராயன்பட்டினம் ஸ்ரீராமசாமி பெருமாள், ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள், ஸ்ரீவீழி வரதராஜ பெருமாள், நிரவி ஸ்ரீ கரியமாணிக்க பெருமாள், காரைக்கால் ஸ்ரீ நித்யகல்யாண பெருமாள், கோவில்பத்து ஸ்ரீ கோதண்டராமர் பெருமாள் பட்டினச்சேரி சமுத்திர தீர்த்தவாரிக்கு திருக்கண்ணபுரம் ஸ்ரீசௌரிராஜ பெருமாள் உடன் சென்று பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள். இராமாயண வரலாற்றில் இராவணன் வஞ்சகமாக சீதாதேவியை கவர்ந்துசெல்லும் போது பறவைகளின் அரசன் ஜடாயு இராவணனுடன் யுத்தம் செய்து இறக்கும் நிலையில், இந்த செய்தியை ஸ்ரீ இராமரிடம் சேர்த்து மோட்சம் அடைந்த தலம் ஸ்ரீ ஜடாயுபுரீஸ்வரர் திருக்கோவில். இக்கோவிலில் பத்து நாட்கள் மாசி மக திருவிழாவும் விமரிசையாக நடைபெறும்.

மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஸ்ரீ ஆயிரம் காளியம்மன் ஆலய திருவிழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதும் சிறப்பான ஒன்று. மீன்பிடி தொழில் செய்பவர்கள், ரெயில் நிலையம் செல்பவர்கள், அமாவாசை தினம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய செல்பவர்கள், ஏராளமான பொதுமக்கள் அன்றாடம் சென்று வரும் நிலையில், பட்டினச்சேரி செல்லும் சாலை - திருமலைராயன்பட்டினம் ரயில் நிலையம் (ஹால்ட் ஸ்டேஷன்) பகுதியில் கலபமாக கடந்து செல்லும் வகையில் சிறப்பான போக்குவரத்து வசதிக்காக, திருமலைராயன்பட்டினம் - புறவழிச் சாலை மையமாக வைத்து பட்டினச்சேரி (ரயில் நிலையம்) சாலை, மேற்கு பகுதியில் திட்டச்சேரி சாலை, தெற்கு பகுதியில் PPCL ரவுண்டானா, வடக்கு பகுதியில் திருமலைராஜன் ஆற்றுப்பாலம் வரை மாற்று ஏற்பாடாக ஒரு உயர்மட்ட மேம்பாலம் (ROB) சாலையின் நேர் எதிரே பாலம் அமைத்து தர ஆவண செய்ய வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் ஹால்ட் ரயில் நிலையத்தில் துறைமுகம் சரக்கு போக்குவரத்திற்காக எதிர்கால துறைமுக விரிவாக்கத்தினை கருத்தில் கொண்டு கூடுதல் பாதைகள் அமைத்து நிலைய அதிகாரி (ஸ்டேஷன் மாஸ்டர்) உடன் கூடிய முழுமையான ரயில் நிலையம் தரம் உயர்த்தி தரவும். தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் நாகப்பட்டினம் காரைக்கால் திருநள்ளாறு பேரளம் மார்க்கத்தில் இரட்டை ரயில் பாதை அமைத்து போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான ஏற்பாட்டினையும் செய்து தர ஆவண செய்ய வேண்டுகிறோம்.

கீழவாஞ்சூர், மேலவாஞ்சூர், PIPDIC தொழிற்பேட்டை பகுதிகளில் இயங்கி வரும் இரும்பு மற்றும் ரசாயன, இதர தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், சாலை விபத்துகள் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கும் உயிர் காக்க உயரிய சிகிச்சைகள் பெறுவதற்கும், சிறப்பு ஏற்பாடாக (நிர்வாக சூளறுபடிகள், அறிவிப்பில் மட்டுமே உள்ள திட்டங்களால் தற்பொழுது காரைக்காலில் போதிய வசதிகள் இன்றி அவசர மருத்துவ உதவிகளுக்கு தஞ்சாவூர் புதுச்சேரி செல்ல வேண்டி உள்ளது) வெளியூர் சென்றாலும் உயிரைக் காப்பாற்ற இயலாத சூழலும் உள்ள நிலையில் பெரும் நகரங்களில் இருப்பது போன்று 24 மணி நேரமும் இயங்கக்கூடிய பல்நோக்கு மருத்துவமனை ஏற்படுத்தி தர ஆவண செய்ய வேண்டும்.

இப்பகுதி மக்களுக்காக வருங்காலங்களில் பல்வேறு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு M/S. காரைக்கால் போர்ட் துறைமுக நிர்வாகமும், காரைக்கால் மாவட்ட நிர்வாகமும் இணைந்து இப்பகுதிக்கு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க இக்கருத்து கேட்பு கூட்டத்தின் வாயிலாக கோரிக்கை வைக்கின்றேன்.

நன்றி...

தங்கள் உண்மையுள்ள,

M. RAJADURAI
President

Thirumalairayanpattinam Consumer Forum
Regd. SL. No. 215/1989
Karaikal (Pdy)

நகல் பெறுதல் :
மாண்புமிகு துணை நிலை ஆளுநர்
ராஜ் நிவாஸ், புதுச்சேரி.

By e-mail / Speed Post

M. Rajadurai, B.A.,(SW) C.O.M.P.
President
Thirumalairayanpattinam Consumer Forum
திருமலைராயன்பட்டினம் கன்சியூமர் பாரம்
Regd.SI.No. 215/1989
Member- District Level Vigilence Committee

No. 26, Mahathoppu Street,
Thirumalairayanpattinam - 609 606.
Karaikal (Dist). UT of Puducherry.
Cell : 94436 54185,
email : meeraarmnp@gmail.com

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து, பொலகம் பல்நோக்கு மண்டபத்தில் 09.09.2026ல் பொதுஅறிவிப்பு வாயிலாக கீழவாஞ்சூரில் இயங்கி வரும் M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் (MASTER PLAN) மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சரக்கு கையாளுவதை துறைமுகம் விரிவாக்க திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதிக்கு பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் நலனுக்காக திருமலைராயன்பட்டினம் கன்ஸ்யூமர் பாரம் நேரில் அளிக்கும் கோரிக்கை மனு:

பெறுதல்;
1. உயர்திரு. மாவட்ட ஆட்சியர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. உயர்திரு. உறுப்பினர் செயலாளர்,
புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம்,
3வது மாடி, புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம்,
அண்ணா நகர் புதுச்சேரி-5.
3. M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட்,
கீழவாஞ்சூர் கிராமம், திருமலைராயன்பட்டினம்,
காரைக்கால் 609606.

மதிப்பிற்குரிய ஐயா / மேடம்,

பாரத தேசத்தின் உயரிய வளர்ச்சிக்கு பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க வகையில் பங்காற்றக்கூடியதில் மத்திய, மாநில அரசு மற்றும் தனியார் துறைமுக திட்டங்களும் ஒன்றாகும். இப் பகுதி மக்களின் நலன் கருதி பின்வரும் கோரிக்கைகளை பரிசீலனை செய்து நடைமுறைப்படுத்த ஆவண செய்யுமாறு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கின்றேன்.

M/S. காரைக்கால் போர்ட் பிரைவேட் லிமிடெட் அமைந்துள்ள கிராமங்களிலும், இதனை விரிவாக்கம் செய்யும் கிராம பகுதிகளில் வசித்து வரும் மக்களின் விவசாயம் மீன்பிடி தொழில் செய்து வருபவர்கள் மற்றும் அவர்களை சார்ந்துள்ள குடும்பத்தினரின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் திட்டப்பணிகள் நடைபெற வேண்டியது அவசியமாகும்.

காரைக்கால் மாவட்டத்தில் வசிக்கும் ஏராளமான படித்த வேலையில்லாத உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மேலும் விரிவாக்கம் பணிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் குடியிருப்பவர்கள் வேறு இடங்களில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்தால் அருகில் உள்ள இடங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய இன்றைய சூழலுக்கு ஏற்ற நவீன நகரை உருவாக்கி குடி அமர்த்த வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் கொம்யூன் மற்றும் நிரவி கொம்யூன் கிராமங்கள் கடற்கரை ஓரம் அமைந்துள்ளது. தொழிற்சாலைகள் பயன்பாட்டினால் கடந்த காலங்களில் அதிக நிலத்தடி நீர் எடுத்ததின் விளைவாக கடல் நீர் உள் புகுந்து குடிநீர் உவர்ப்பு நீராக மாறியது. பின்னர் அரசு எடுத்த துரித நடவடிக்கைகளின் பேரில் நகரின் மேற்கு பகுதிகளிலிருந்து பல்வேறு திட்டங்கள் வாயிலாக குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது துறைமுக விரிவாக்க காரணமாக நிலத்தடி நீர் ஆதாரம் பெருமளவில் உவர்ப்பாக மாறிவிடும் என்ற ஐயப்பாடு உள்ளது மனித இயல்புதானே.

இதற்கு நீர்வாக திருமலைராயன் என்ற பேரரசர் காலத்தில் 108 திருக்கோயில்கள் 108 திருக்குளங்கள் இருந்ததாக முன்னோர் கூறிய செய்தியின் அடிப்படையில் தற்போது வஞ்சியுள்ள குளங்கள் அனைத்தும் தூர்வாரி நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்க ஆவண செய்ய வேண்டும்.

பொழுதுபோக்கு அம்சங்கள் ஏதும் இப் பகுதியில் இல்லாத நிலையில் குறிப்பாக நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள பெரியகுளம் மற்றும் படுதார்கொல்லையில் உருவாகியுள்ள ஏரியினை சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் வகையில் (சுற்றுலா ஸ்பாட்டாக) சுற்றுலா மையமாக மாற்றி தர ஆவண செய்ய வேண்டும்.

எதிர்கால தொலைநோக்கு திட்டங்களில் முன்னுரிமை அளிக்க வேண்டியவை பின்வருமாறு:

24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் கிடைக்க PPCL மின் குழுமத்தை மேம்படுத்த வேண்டும் அல்லது புதுச்சேரி அரசு, துறைமுக நிர்வாகமும் இணைந்து புதிய மின் திட்டத்தை தர முன் வர வேண்டும்.

புதுச்சேரி அரசு போலகம் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு கிடப்பில் உள்ளது. பேரிடர் காலங்களிலும், தீ விபத்து போன்ற அசம்பாவிதங்கள் ஏற்படும்போதும் உயிர் மற்றும் உடமைகளை பாதுகாக்க அவசியம் கருதி தொழிற்பேட்டையில் இடம் உள்ளதால் துறைமுக நிர்வாகம் தீயணைப்பு வாகனங்கள் வழங்கி விரைவில் தீயணைப்பு நிலையம் அமைக்க ஆவண செய்ய வேண்டும்.

துறைமுக விரிவாக்க பணிகளால் அதிக அளவு கனரக வாகன போக்குவரத்து நடைபெறும். ஆண்டுதோறும் மும்மதங்கள் போற்றும் திருநள்ளார் ஸ்ரீ சனீஸ்வர பகவான், நாகூர் ஆண்டவர் தர்கா, அன்னை வேளாங்கண்ணி ஆலயங்களின் திருவிழாவிற்கு பக்தர்கள் வாகனங்கள் மற்றும் பாதயாத்திரையாக சென்று வருகின்றார்கள். பட்டினச்சேரி கடற்கரைக்கு மாசி மக தீர்த்தவாரி நிகழ்ச்சிக்கு ஸ்ரீ சௌரி ராஜப்பெருமாள் திருக்கண்ணபுரத்திலிருந்து சாலை மார்க்கமாக பட்டினச்சேரி கடற்கரைக்கு செல்லும் பொழுது பல ஆயிரம் பக்தர்கள் உடன் சென்று வருவது சிறப்பு நிகழ்வாகும். அதே நாளில் திருமருகல் ஸ்ரீ வரதராஜ பெருமாள், திருமலைராயன்பட்டினம் ஸ்ரீராமசாமி பெருமாள், ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள், ஸ்ரீவீழி வரதராஜ பெருமாள், நிரவி ஸ்ரீ கரியமாணிக்க பெருமாள், காரைக்கால் ஸ்ரீ நித்யகல்யாண பெருமாள், கோவில்பத்து ஸ்ரீ கோதண்டராமர் பெருமாள் பட்டினச்சேரி சமுத்திர தீர்த்தவாரிக்கு திருக்கண்ணபுரம் ஸ்ரீசௌரிராஜ பெருமாள் உடன் சென்று பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்கள். இராமாயண வரலாற்றில் இராவணன் வஞ்சகமாக சீதாதேவியை கவர்ந்துசெல்லும் போது பறவைகளின் அரசன் ஜடாயு இராவணனுடன் யுத்தம் செய்து இறக்கும் நிலையில், இந்த செய்தியை ஸ்ரீ இராமரிடம் சேர்த்து மோட்சம் அடைந்த தலம் ஸ்ரீ ஜடாயுபுரீஸ்வரர் திருக்கோவில். இக்கோவிலில் பத்து நாட்கள் மாசி மக திருவிழாவும் விமரிசையாக நடைபெறும்.

மேலும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஸ்ரீ ஆயிரம் காளியம்மன் ஆலய திருவிழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதும் சிறப்பான ஒன்று. மீன்பிடி தொழில் செய்பவர்கள், ரெயில் நிலையம் செல்பவர்கள், அமாவாசை தினம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய செல்பவர்கள், ஏராளமான பொதுமக்கள் அன்றாடம் சென்று வரும் நிலையில், பட்டினச்சேரி செல்லும் சாலை - திருமலைராயன்பட்டினம் ரயில் நிலையம் (ஹால்ட் ஸ்டேஷன்) பகுதியில் கலபமாக கடந்து செல்லும் வகையில் சிறப்பான போக்குவரத்து வசதிக்காக, திருமலைராயன்பட்டினம் - புறவழிச் சாலை மையமாக வைத்து பட்டினச்சேரி (ரயில் நிலையம்) சாலை, மேற்கு பகுதியில் திட்டச்சேரி சாலை, தெற்கு பகுதியில் PPCL ரவுண்டானா, வடக்கு பகுதியில் திருமலைராஜன் ஆற்றுப்பாலம் வரை மாற்று ஏற்பாடாக ஒரு உயர்மட்ட மேம்பாலம் (ROB) சாலையின் நேர் எதிரே பாலம் அமைத்து தர ஆவண செய்ய வேண்டும்.

திருமலைராயன்பட்டினம் ஹால்ட் ரயில் நிலையத்தில் துறைமுகம் சரக்கு போக்குவரத்திற்காக எதிர்கால துறைமுக விரிவாக்கத்தினை கருத்தில் கொண்டு கூடுதல் பாதைகள் அமைந்து நிலைய அதிகாரி (ஸ்டேஷன் மாஸ்டர்) உடன் கூடிய முழுமையான ரயில் நிலையம் தரம் உயர்த்தி தரவும். தஞ்சாவூரிலிருந்து திருவாரூர் நாகப்பட்டினம் காரைக்கால் திருநள்ளார் பேரளம் மார்க்கத்தில் இரட்டை ரயில் பாதை அமைத்து போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான ஏற்பாட்டினையும் செய்து தர ஆவண செய்ய வேண்டுகிறோம்.

கீழவாஞ்சூர், மேலவாஞ்சூர், PIPDIC தொழிற்பேட்டை பகுதிகளில் இயங்கி வரும் இரும்பு மற்றும் ரசாயன, இதர தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் குடும்பத்தினர் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், சாலை விபத்துகள் ஏற்பட்டு அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கும் உயிர் காக்க உயரிய சிகிச்சைகள் பெறுவதற்கும், சிறப்பு ஏற்பாடாக (நிர்வாக குளறுபடிகள், அறிவிப்பில் மட்டுமே உள்ள திட்டங்களால் தற்பொழுது காரைக்காலில் போதிய வசதிகள் இன்றி அவசர மருத்துவ உதவிகளுக்கு தஞ்சாவூர் புதுச்சேரி செல்ல வேண்டி உள்ளது) வெளியூர் சென்றாலும் உயிரைக் காப்பாற்ற இயலாத சூழலும் உள்ள நிலையில் பெரும் நகரங்களில் இருப்பது போன்று 24 மணி நேரமும் இயங்கக்கூடிய பல்நோக்கு மருத்துவமனை ஏற்படுத்தி தர ஆவண செய்ய வேண்டும்.

இப்பகுதி மக்களுக்காக வருங்காலங்களில் பல்வேறு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு M/S. காரைக்கால் போர்ட் துறைமுக நிர்வாகமும், காரைக்கால் மாவட்ட நிர்வாகமும் இணைந்து இப்பகுதிக்கு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க இக்கருத்து கேட்பு கூட்டத்தின் வாயிலாக கோரிக்கை வைக்கின்றேன்.

நன்றி...

நகல் பெறுதல் :
மாண்புமிகு துணை நிலை ஆளுநர்
ராஜ் நிவாஸ், புதுச்சேரி.

தங்கள் உண்மையுள்ள,

Thirunallaryanpattinam Consumer Forum Regd. SL.No. 215/1999 Karaikal (01) 609 606

M. RAJADURAI
President

தேதி : 09-09-2026

அனுப்புனர் :

திருமதி மனோரி ஸ்வ உதவிக்குடா
பட்டினச்சேரி, திருப்பட்டினம்

15/9/26

பெறுநர் :

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
பொது விசாரணை துணைமை அதிகாரி,
காரைக்கால்.

பொருள் : காரைக்கால் துறைமுக விரிவாக்கம் - மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல் சூழல் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள்.

மதிப்பிற்குரிய ஐயா/அம்மா

காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட விரிவாக்க தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையை ஆய்வு செய்ததில், இத்திட்டம் மீனவர்களாகிய எங்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய முக்கியமான தாக்கங்கள் குறித்து எங்களது பின்வரும் எதிர்ப்புகளையும் கோரிக்கையையும் பதிவு செய்கிறோம்.

1) எங்களின் கடலில் மண்ணையும், கல்லையும் கொட்டி நிரப்புவதால் கடல் வளமும், மீன் வளமும் அழியும். அதனால் மீனவர்களாகிய எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

ii) இந்த தனியார்த்தின் மூலம் நிலக்கரி இறக்குமதி செய்வதால் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்கள் பாதிக்கப் படுகின்றது. இதனால், சுவாசம், இதய நோய், அஸ்துமா போன்ற நோய்களால் பாதிக்கப் படுகின்றார்கள்.

iii) எங்கள் கிராமத்தின் அருகில் இரயில் தண்டவாளம் உள்ளது. இதில் பயணிகளை ஏற்று செல்வதற்கு தான் இந்த இரயில் தண்டவாளம் என்று நினைத்தோம், ஆனால் நிலக்கரி இரயில் மட்டும் நாளைக்கு 16 முறை செல்கிறது. 1 முறை சென்றால் 20 நிமிடம் கேட் போடப் படுகிறது. இதனால் பள்ளி செல்லும் மாணவர்கள் வரை பாதிக்கப் படுகிறார்கள்.

iv) எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், அதிகாக திருமணமானவர்களுக்கு குழந்தை இன்மை பிரச்சனைகளும் பாதிக்கப் படுகிறார்கள்.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த தனியார்மயம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து விடுவோம். அதனால் இத்திட்டத்தினை நாங்கள் அரசு கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து நம்மிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு

1. V. Sellapapa.
2. R. Marijam.
3. V. Rathnapriya
4. M. Rayammal
5. S. Selvi
6. V. Senthamil
7. P. [illegible]
8. M. [illegible]
9. A. [illegible]
10. V. Veni
11. ?. Meena
12. W. Kogila
13. S. [illegible]
14. M. Sangari
15. V. Nisha
16. A. [illegible]
17. K. [illegible]
18. R. [illegible]

காரைக்கால் மாவட்ட மீனவர் பெண்கள் பேரவை
1 சிங்காரவேலர் சாலை, காரைக்கால்மேடு, காரைக்கால் மாவட்டம்,
புதுச்சேரி

பெறுநர்:

மாவட்ட ஆட்சியர் அவர்கள் /
பொது விசாரணை தலைமை அதிகாரி,
காரைக்கால் மாவட்டம்

பொருள்: **காரைக்கால் துறைமுக Master Plan விரிவாக்கம் - மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கடல் சூழல் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கைகள் - பொது விசாரணையில் பதிவு செய்யக் கோருதல்.**

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,

காரைக்கால் துறைமுகத்தின் முன்மொழியப்பட்ட Master Plan விரிவாக்கம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை ஆய்வு செய்ததில், இத்திட்டம் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய முக்கியமான தாக்கங்கள் குறித்து எங்களது பின்வரும் எதிர்ப்புகளையும் கோரிக்கைகளையும் பதிவு செய்கிறோம்.

1. மிகப்பெரிய அளவில் துறைமுக விரிவாக்கம்

தற்போதைய சரக்கு கையாளும் திறன் 21.5 MMTPA-லிருந்து 100.3 MMTPA ஆக உயர்த்தப்பட உள்ளது. மேலும் மொத்தம் 14 berth-கள், SPM மற்றும் கடலுக்கடியில் குழாய்கள் அமைக்கப்பட உள்ளன.

ஆதாரம்: EIA Executive Summary, பக்கம் 4–5.

2. 42 மில்லியன் கனமீட்டர் கடலடி அகழ்வு

திட்டத்திற்காக 42 மில்லியன் கனமீட்டர் (M.Cum) அளவுக்கு Capital Dredging செய்யப்பட உள்ளது. கால்வாய், துறைமுகக் கரை மற்றும் கப்பல் திரும்பும் பகுதி ஆழப்படுத்தப்பட உள்ளது.

ஆதாரம்: EIA, பக்கம் 5, வரிகள் 40E–413.

இது கடலடி வாழ்விடங்கள், மீன் இனப்பெருக்கம் மற்றும் மீன்வளத்தை பாதிக்கும் அபாயம் கொண்டது. அறிக்கையே dredging, SPM, submarine pipeline

துறைமுகத்தால் மீன்பிடிக்கு ஏற்படும் எந்தவொரு தடையும் காரணமாகும் வருமான இழப்புக்கு உரிய இழப்பீடு மற்றும் வாழ்வாதார மறுசீரமைப்பு திட்டம் உருவாக்க வேண்டும்.

மீனவர் பிரதிநிதிகள் இடம்பெறும் தொடர் கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்.

துறைமுக விரிவாக்கத்தால் கடல் சூழல் மற்றும் மீன்வளம் பாதிக்கப்படாது என்பதை உறுதி செய்யும் வரை சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக் கூடாது.

இம்மனுவில் உள்ள அனைத்து கோரிக்கைகளும் இன்றைய பொது விசாரணை நடவடிக்கைகளில் முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும்.

எனவே, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் கடல் வளத்தையும் பாதுகாக்கும் வகையில் மேற்கண்ட கோரிக்கைகளை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,

G. Imutha M. Thilogavathi

காரைக்கால் மாவட்ட மீனவர் பெண்கள் பேரவை

தேதி: 09.09.2026

இடம்: காரைக்கால்

C. Jayanthi.

P. Valliyammal.

I. Mageswari

G. Geetha

K. Bakiya.

G. Hamithey

S. Pithilli

M. Magesh

H. Begyammal

GOVT. OF PUDUCHERRY DSTE
1506
Date: 9/9/26

தேதி: 9.9.2026

அனுப்புநர்:

E. தனவேல்

353 சுனாமி நகர் பட்டினச்சேரி

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

E. தனலட்சுமி

அனுப்புநர்

9/924
1507

தேதி: 9.9.2026
R. அருள்மொழி
231. ஆனைக் கலன் மப்பேடு
T.R பட்டினம்

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி. மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல் புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும் மற்றும் திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

R. அருவாள்

இப்படிக்கு,

தேதி: 9.9.2026

அனுப்புநர்:

1508
9/9/26

V. மணிமேகலா
392, தெரு
பட்டினச்சேரி, T.R.பட்டினம்

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

V. மனோகரன்

இப்படிக்கு,

அனுப்புநர்:

GOVT OF PUDUCERRY DSTE PPE Date: 9/9/26 150

தேதி: 9.9.2026

P. Mahalakshmi
352, தோப்பு தெரு
மடுகரை, T.R. பட்டினம்

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

ஸ்ரீ வெட்காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு
பட்டாச்சேரி, திருப்பூவனம்

தலைவி

செயலாளர்

அனுப்புநர் :

ஸ்ரீ வெங்கடேஸ்வரா மகளிர் கலை உயர்நிலைப்
பள்ளி, திருப்பூர்

பெறுநர் :- உயர் திரு மாவட்ட ஆட்சியர்
அவர்கள் நாமக்கல்

திரு உறுப்பினர்கள் :

1. [illegible]
2. S. [illegible]
3. Lakshmi A.
4. R. Archana
5. V. [illegible]
6. M. Jayanthi
7. P. Geetha
8. V. Maheshwari
9. C. Jaya
10. K. Kamalavalli

அனுப்புநர்: "கடல்புர மக்கள்"
மகளிர் [illegible]
[illegible]
திரு-[illegible]

GOVT OF PUDUCHERRY DSTE / PTCL KARAIKAL
153/
Date: 9/9/20

பெறுநர்:

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம் மேற்கண்ட மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நாங்கள் முழுவதும் கடல் தொழில் செய்யும் ஓர் மீனவர் கிராமம் கடந்து 2009 ஆம் ஆண்டு மேற்கண்ட துறைமுகம் வந்த நாள் முதல் இன்று வரை கடலில் சுதந்திரமாக எங்களால் தொழில் செய்ய முடியவில்லை கடலில் தொழில் வளம் குறைந்து வாழ்வாதாரத்தை இழந்து இந்த துறைமுகத்தினால் நாங்கள் முழுவதும் பாதிப்பு உள்ளாகி நிற்கதியாய் நிற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே பெரிதும் பாதிக்கப்பட்ட நாங்கள் கீழ்கண்ட பாதிப்பினை தங்களின் கவனத்திற்கு வைக்கின்றோம்.

1) கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2) நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

3) அதானி துறைமுகம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி அவர்களுக்கு நோய்களைத் தான் தருகிறார்கள்.

4) எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

5) இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

6) துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.குறிப்பாக கடலில் செல்லும் பாதைகள்,பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்,மீன் இனப்பெருக்கப் பகுதிகள், வலை வீசும் பகுதிகள்,மீன் இறங்குதளங்கள், கரையோர அணுகுமுறை படகு நிறுத்துமிடங்கள்,கடற்கரைப் பயன்பாடு ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.

7) கடலில் கப்பல்கள் நிறுத்தும் ஒரு தளம் அமைத்து அதில் எல்பிஜி கப்பல்கள் வந்து செல்லும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என அறிகிறோம், அப்படி ஒரு திட்டம் விரிவாக்கப்பட்டால் எல்பிஜி கப்பல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நாங்கள் யாரும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். இதனால் எங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும் நிலை ஏற்படும்.

8) துறைமுகத்தினால் ஏற்படும் நிலக்கரி துகள்கள் கிராம அருகில் இருக்கக்கூடிய மற்றும் தோட்டங்களில் படிவதனால் தோட்டப்பயிர்கள் விஷத்தன்மை நிறைந்ததாக மாறி அதை உண்ணும் பெரியவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது இனி மேலும் விரிவுபடுத்தப்பட்டால் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான வாழ்க்கை முற்றிலுமாக பறிபோகும் நிலை ஏற்படும்.

9) அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA

கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

எனவே மேற்படி இத்தகைய பாதிப்புகளை கடந்த பல ஆண்டுகளாக சந்தித்து வரும் நாங்கள் அதானி துறைமுகத்தினால் கடலும் கடல் சார்ந்த நிலங்களும் வாழத் தகுதியற்ற நிலையாக மாறிவிடும். கடலை சார்ந்து வாழக்கூடிய எங்களது மீனவ சமூக மக்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு மாற்று இடம் தேடி நாடோடிகளாக செல்லும் நிலை ஏற்படும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் எங்கள் மீது வேந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மீண்டும் பன்மடங்கு விரிவாக்கம் என்பதை எந்த சூழ்நிலையிலும் எந்த நிலையிலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதனை இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம் மேலும் எங்களது கருத்தினை அரசு உதாசீனப்படுத்துமானால் எங்களால் துளி அளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.எங்களின் வாழ்வையும் எங்களின் எதிர்கால சங்கதியரின் வாழ்வையும் கருத்தில் கொண்டு திட்டத்தின் விரிவாக்கத்தினை ஆரம்ப கட்டத்திலேயே அரசு தடுத்து நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் இதனை அனுமதிக்க கூடாது என்பதனை எங்கள் கிராமத்தின் சார்பாக நாங்கள் ஆணித்தனமாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்.எனவே இந்த திட்டத்தினை ஆரம்ப கட்டத்திலேயே எதிர்க்கின்றோம்! எதிர்கின்றோம்! எதிர்கின்றோம்!.

தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம்.
ஆனால் மீன்பிடி தொழிலுக்கு மாற்று இடம் கிடையாது

கைவிடு! கைவிடு! துறைமுக விரிவாக்கத்தை கைவிடு!

வாழவிடு! வாழவிடு! மீனவனை வாழவிடு!

நன்றி!

"கடல்புறாக்கள்"
மகளிர் சேவை உதவிக் குழு
சுனாமி நகர், பட்டினச்சேரி
சீர்காழி - 609 304

Sound:
M. Usha
L. மாலதி
R. ஜெகேஸ்வரி
M. வள்ளி
S. சுந்தரவள்ளி
R. கல்யாணி
P. Geetha
M. [illegible]
M. Anu
A. Mahalakshmi
N. Sabitha
M. வள்ளி
ஜெகேஸ்வரி

தேதி: 9.9.26.

அனுப்புநர்:
செல்வந்தி மகளிர் சுயஉதவிக்குழு
பம்பைகன்னார், திருப்பழனம்

7/9/26
1532

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

2. கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

3. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

4. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

தேதி:

அனுப்புநர்:

கடலோரக் காவல் குழு
பட்டினச்சேரி, திரு-பட்டினம்

GOVT OF PUDUCHERRY DSTE
Date: 9/9/26
1533

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமதித்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

2. கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது..

3. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

4. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

கடல்புறா மகளிர் சுயஉதவிக் குழு
பாஞ்சாலங்குறிச்சி, திருப்பாலைவனம்
தலைவி செயலாளர்

கடலூர் மகளிர் சுயஉதவிக் குழு
பட்டினச்சேரி, திரு-பட்டினம்

உறுப்பினர்கள் கையொப்பம் :-

1. N. [illegible]
2. K. மகாலட்சுமி
3. V. Jothi
4. K. ராணி
5. R. [illegible]
6. S. [illegible]
7. V. Sathiavathy
8. M. Sudha
9. S. Ravathy
10. C. Maheswari
11. S. Manjula
12. S. தேவகி
13. Padmavathy

கடலூர் மகளிர் சுயஉதவிக் குழு
பட்டினச்சேரி, திரு-பட்டினம்
M. [illegible] Sathiya
தலைவர் செயலாளர்

தேதி: 9/9/2026

அனுப்புநர்:

T.R.பட்டினம்-பட்டினச்சேரி

9/9/26
1534

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமதித்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

T.R.

கையெழுத்து

G. Ananthalu

G. [illegible]

V. Mahaswari

K. Selvavaji

K. Mahaswari

A. Gandhika

P. [illegible]

[illegible]

E. S. [illegible]

S. [illegible]

B. Sabhashini

T. K. [illegible]

A. [illegible]

B. Sabhashini

V. வெள்ளிக்கண்ணி

K. தெய்வானை

M. [illegible]

தேதி:

அனுப்புநர்:

மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு
பட்டினச்சேரி, திருப்பட்டினம் - 609 608

1535
9/9/26

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

2. கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது..

3. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

4. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு
பட்டினச்சேரி, திருப்பட்டினம் - 609 608

D. Ramalingam S. Leonard

அனுப்புநர் :

மல்லிகை மகளிர் சுய உதவி குழு.
பட்டிணச்சேரி.

பெறுநர் : மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்.

Date: 9/9/26

பொருள் : அரசாணை நடைமுறை அறிவிக்க விடுத்தல் கோரி மனு.

ஐயா : மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு எங்களது கிராமமான பட்டிணச்சேரியின் மக்கள் மற்றும் அவர்களின் வாழ்வாதாரமானது கடல் அரிப்பினை சார்ந்தது ஆகும். அதனை முறையாக அறிவாகத்தினால் எங்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படுகிறது. அரிக்கால் மற்றும் எங்களின் வாழ்க்கையும் ஒரு கேள்வி குறியாகவே மாறிவிடும் என்பதனால் அரசாணை முழுமையாக நடைமுறை படுத்த வேண்டும் என்று மிக்க மகிழ்ச்சி கலந்த கோரிக்கை மனுவை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

மல்லிகை மகளிர் சுய உதவிக் குழு
பட்டிணச்சேரி, திருப்பட்டிணம் - 609 606
D. Kali
(செயலாளர்)

S. Pay.
D. Kali
S. பாலா
B. பொன்மணி

V. Amirthavally

M. Sona

S. மகேஸ்வரி

A. ரேஷ்மா

T. சாந்திமதி

அனுப்புநர் :

செவ்வந்தி மகளிர் சுயஉதவி குழு.
பட்டிணஞ்சேரி.

1537
Date: 9/9/26

பெறுநர் : மாவட்ட ஆட்சியர் அவர்கள்.
காரைக்கால்.

பொருள் :
அதனி நுகர்வுக் வரிவாங்க நிட்டத்தினை வைக்கக் கோரி.

ஐயா :
மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு. எங்களது கிராமமான திருமலைராயன் பட்டினம், பட்டினஞ்சேரி மீனவக்கிராமம் கிழக்கு மீன்பாடம் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு. நிலக்கரி தொழிலால் தொடர்ந்து மாசுபாடு அபாயம், பொதுமக்களின் உடல் நலம் பாதிப்பும். குழந்தைகளின் உடல் நலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அதானி குழுமம் அதானி நுகர்வுக் வரிவாகத்தினை எதிர்த்து நாங்கள் எங்களின் கொதுல் வாம் பாதிப்பு அடைவதால் அதனை எதிர்த்து அணைத்து மக்களும் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

G. Thulasi Bai

1. ரேவதி
2. S. நீலகுமாரி
3. K. Uma
4. M. Sowmya
5. S. மாணிக்கவள்ளி
6. P. லில்லிகா
7. Amala-A.
8. A. Umarathi

செவ்வந்தி மகளிர் சுயஉதவிக்குழு
பட்டிணஞ்சேரி, தே.பட்டினம்
E. Sowmya K. Malathavi

தேதி : 9/9/26

153
9/9/26

அனுப்புநர் :-

ரோஷனாஷனம் மகளிர் சுய உதவிக்குழு
சுனாமி நகர், புதுச்சேரி
த/பு. புதுச்சேரி.
காரைக்கால்.

ரோஷனாஷனம்
மகளிர் சுய உதவிக்குழு
சுனாமி நகர், புதுச்சேரி
த/பு. புதுச்சேரி - 609 606

பெறுநர் :-

உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
காரைக்கால்

பொருள் :- அதனை நிறைவேற்ற வேண்டி
சம்பந்தமாக.

மதிப்புக்குரிய ஐயா :-

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுகளாக மேலாக எங்கள் கோரிக்கையை மிக அருகில் இயங்கி வருகிறது. நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோர, மேலும் மேற்கண்ட நிறைகுறைகளை நாங்கள் இதுவரையில் அனுபவித்த பாதிப்புகளை மற்றும் இந்த நிறைகுறை வரவுகளால் இனி வரும் காலங்களில் நாங்கள் அனுபவிக்க போகும் பாதிப்புகள் பற்றிய பார்வைகள்.

1. கிழக்கு கரையில் கிழவ்வர்களை குடிநீரைக்கும்
எரியவர்களும் . அவரக்கு தொளாரு ஏற்படுவதும் , நுரையீரல்
புற்றுநோய் பாதிப்புகள். அதில் உள்ள கிராமங்களில்
அதிகமாக உள்ளது. எனவே மேலும் ஒரு மடங்கு
விரிவாக்கம் செய்வதனால் எங்கள் கிராமத்தில் இது
போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சுற்றி பெண்களுக்கு மாதவிடாய்
தொளாருகளும், புதிதாக திருமணமானவர்களுக்கு குழந்தை
பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடல் தப்பல் சென்று வர சுவர்வாய்
அமைத்தனால் கடல் அரி உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.
மற்றும் இயற்கையான கடல் வளம் கேடும்
மாறிவிடுகிறது.

4. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 mmtpa
திறனுடன் இந்த பொழுது எங்கள் பகுதியில்
ஒரு நாளைக்கு பற்றாக்குறை பற்றாக்குறை முறை
சுற்றி உயர் கடப்பாரை ஒரு முறைக்கு 20 நிமிடங்கள்
காத்திருக்கும் அவல நிலை உள்ளது. மேலும்
இதனை 100.3 mmtpa நோக்கமாக விரிவாக்கம் செய்வதனால்
எங்கள் கிராமத்தில் வரும் அவலம் கால்வாய்
மூலம் மழைநீர் வடிகால் உயர் பாதையை
கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

5 இது மட்டுமல்லாமல் இயற்கை பாக நமக்கு கிடைக்க வேண்டிய கனிம்பொருட்களை நமக்கு கிடைப்பதில்லை இதனால் நீர்வற்று நீர்மட்டம் குறைந்தும் குறைந்து அடிக்கடி உள்ள நிலவளம் பாதிப்பும் செய்யும் சுவர்களில் தன்மையும் குறைந்து விவசாயங்களும், பாதிப்பு அடைந்து, வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றன.

மேலும் இந்தியாவை பாதுகாக்க அந்நிய நாடுகள் இந்த முறைகேடு மரங்கள் செய்யப்பட்டால் இனி அடுத்த நாடுகளின் வாழ்வாதாரத்தையும் இதனால் பாதுகாப்பு நீர்வளம் நிலங்கள் ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. எனவே மேற்படி முறைகேடு மரங்கள் செய்ய வேண்டாம் என்று நாங்கள் தாழ்மையுடன் இதனை எடுத்து தங்களிடம் கோரிக்கை மனுவை பணிவாக வைக்கிறோம்

நன்றி

இப்படிக்கு

ரோகிணி மகளிர் சுய உதவிக்குழு

உறுப்பினர்கள்:

V. Gowthavali

S. தெய்வானை

A. அன்னம்மாள்

K. பரமு

S. [illegible]

K. தங்கலட்சுமி

S. மகாலட்சுமி

K. அமுதா

V. தெய்வானை

தேதி:

அனுப்புநர்:

கடல் கிராம ஆதீனமா கிரு
பட்டினச்சேரி

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,
காரைக்கால்.

பொருள்: அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

T. Banithya N. Kamala Anugya

கல்லூரி செயலாளர் பொருளாளர்

(இ) உறுப்பினர்களின் கையொப்பம் :

M. Parimala
K. [illegible]
A. Bhuvana
S. [illegible]
N. Elathi
V. Priya
[illegible]
T. [illegible]
V. Subha
T. Bavani
R. Thilagavathi

09.9.2026
திரு. பட்டாபட

அனுப்புநர் :
M. மாரியம்மாள்
31. மாரியம்மன் கோவில் தெரு
நிரவி புதுச்சேரி - திருபுவனை

பெறுனர் :
உயர் திரு
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்

பொருள் : ஆதரவு அற்ற முதியோர் விடுதிக்கு
விண்ணப்பம் சமர்ப்பித்தல்

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு வணக்கம் நான் வளர்மதி என்ற விதவை மாற்றுத்திறனாளி நிலக்கடிநீர் ஆதரவு மறுப்பு அனாதரவு நிர்கதி திருக்குறைகள் முதிய பெரியவர்களை மற்றும் நோய், மற்றும் நலையில் பாதிப்பு சுவாச கோளாறு மற்றும் வாழ்வாதார பாதிப்பு ஆதரவாக் மலைமாவில்லை இருந்து விடுதிக்கு விடுதலை எதிர்க்கிறேன்

இப்படிக்கு.
M. மாரியம்மாள்

09. 09. 2021
திரு. பட்டிணம்

அனுப்புநர் :

P. கலையரசி
வெங்கந்தடி தெரு
சீவலபுரம் திரு-பட்டிணம்

பெறுநர் :

உயர்திரு
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்.

பொருள்.

அதானி நுண்ணுயிரி
விரிவாக்கம் எதிர்ப்பு சம்மந்தமாக

மதிப்பிற்கு உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்களே எங்களுக்கு அருகாமை மழை பெய்ய மாட்டேன் பெண்களுக்கு கூட தெரிக்க மாட்டேன் நல்ல காற்றை சுவாசிக்காமல் நாங்கள் ரொம்ப கஷ்டப்படுகிறோம் அதனால் எங்களுக்கு ஒரு நல்ல தீர்ப்பை வழங்க மிகவும் தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்

இப்படிக்கு
வெங்கந்தடி தெரு

09.09.2024
திரு - புதுவை

GOVT. OF PUDUCHERRY DSTE / PPCC
Date: 9/9/24
1549

அனுப்புநர்

J. சாமிநாதன்
26. மாரியம்மன் கோவில் வீதி
திலாஸ்பேட்டை - புதுவை

பெறுனர் :

உயர்திரு
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்

பொருள் :

அதான் நூலை ஒரு விரிவாக்கம்
செய்ய சம்மதம்

மதிப்பிற்குரிய அம்மா அவர்களுக்கு
நான் வளர்ச்சியான விவசாய மாநிலம்
நெல்லுடன் அதிக மகசூல் தரக்கூடிய
சிறு குறுங்கைகள் முதல் பெரியவர்வரை
பசி போக்கி, உலகம் நோயுறாமல் மருந்து
இல்லாத சோளம் உலகம் வாழ்வதற்கு
மருந்து அதுவால் இந்த விரிவாக்க
திட்டத்தை எதிர்க்கின்றேன்

இப்படிக்கு
J. சாமிநாதன்

09.09.2026
நீரு - மடுவளம்

அனுப்புநர் : S. மோகன்
13. மாரியம்மன் கோவில் தெரு.
திருபுவனை - திருப்பட்டினம்

பெறுனர் :
உயர் நீரு.
மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்

பொருள் : அதானி துறை முகம் விரிவாக்கம் எதிர்ப்பு கூட்டமாக

மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு எங்கள் கிராம வளர்ச்சியை விவசாய பாதிப்பு நிலத்துடிர் இதனால் பாதிப்பு சுகாதாரம் சீர்கெட்டு சிறு குழந்தைகள் முதல் பெரியவர்வரை புற்று நோய், மற்றும் நுரையீரல் பாதிப்பு சுவாச நோய்கள் மற்றும் வாழ்வாதார பாதிப்பு அதனை இந்த விரிவாக்க ஒரு திட்டத்தை எதிர்க்கின்றோம்

இப்படிக்கு :
S. மோகன்

அனுப்புநர் !.

தீபாபுரம் மாநகராட்சி
கோரிக்கை குழு,
கிராம மக்கள்,
தூய்மைபுரம்.

1497
Date 7/9/06

பெறுநர் !- உயர்திரு. மாவட்ட ஆட்சியர்
அவர்கள்,
காஞ்சிபுரம்.

ஐயா !

எங்கள் ஊரில் சுமார் '50' குடும்பங்கள் வசித்து வருகிறோம். எங்கள் பகுதியில் குடிநீர் தண்ணீர் வசதி, சாலை வசதி, மின்சார வசதி, கழிவுநீர் வடிகால் வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே தயவு உள்ளம் கொண்ட மனு பட்டா வழங்கவும், இந்த அதிகாரி (ஆபீசர்) வர்க்கம். இதை மக்களின் வாழ்வாதாரம் கருதி பரிசீலிக்கப்படும், சார் 5.6 ஏக்கர் இடத்தில் அப்பாவி உள்ள விவசாயம் போதுமே கருதி எங்கள் சார்பு வழியாக எங்கள் உடைமைகளின் வர்க்க மேம்பாடு.

இந்த நிலைக் ஒருவன்
யார்? என்பதில்; என்னைப்பொறுத்தக்
கொள்கிறேன்;

நெற்கிக் கிக்கூடாம்
எதையும் விஞ்ஞானம்
என்பதை உணர்ந்து
உண்மை உழைப்பை நம்பி
உயிரே நோக்குடன்
என்னை இகவும்
இணைந்து பயணம்-வாழ்க்கிறோம்
இதுதான் எங்கள் வாழ்க்கையாக
இந்த நாடியும்யாகுது வரை
வாழ்ந்து வருகிறோம் - இதை
நீங்கள் உணர்ந்து நடந்தால்
நல்லது நடக்கும்! கல்லை மேல்
எதாவ்வைகள் காண்பீர்கள்!

கடலும் - கடற் கரையும்
கடலானிக்கே சொந்தம் - இதை
கொண்டவருக்கு ஏன்
இந்த வஞ்சம்!

நாங்கள் வாழும் இடம்
நாளையை தலைமுறை - தலைமுறையாய்

வாழும் வாழ்வான தூய்
சிறந்த வழிகள் விளைவிக்கும்
எவனாக இருந்தாலும்
இருக்கும் இடம் தெரியாமல்
இரும்பறை கிடந்து; தவிப்பீர்கள்!

இங்கு வாழும் ஒவ்வொரு உயிரும்
உடலில் ஒவ்வொரு சொட்டு இரத்தம்
இருக்கும் வரை போராடி வெல்வோம்!
வென்று மீட்போம்! காப்போம்
மீண்டும் ஒரு சுதந்திர இந்தியாவை!

உறுதியாய் போராடுவோம்
சிறுதியாய் வெல்வோம்
வாடிக்கை ஆனாநாயகன்
மகிழ்ச்சி; நன்றி!

விலைக்கு மோகவாக்
எங்களை விலைக்கு வாங்க
எவனாலையும் முடியாது! - மதனால்

பாவத்தை சுமந்து
பாதாளத்தில் வீழாதீர்கள் - இது நியதி
பார்த்து நடந்து கொள்வீர்கள்
பாரதத்தை மறந்த மானிடர்களே!

யாருக்காக இந்த நாடு
எதற்காக இந்த சுதந்திரமென்று
சிந்தி உணர்ந்து
எமன் கையில் விடாமல்
ஏணிபோல் மக்களை
ஏணியாய் நின்று காத்திடுவீர்கள்!

- இல்லையேல்;

நாங்கள் வாழும்
பகுதிக்கு ஒரு கிராமம்
நாட்டுக்காக போரிட்ட
ஒரு சுதந்திர போராட்ட
தியாகியை அளித்த பூமி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (CPI)

(நகர கிளை) திரு.பட்டினம்

32, திட்டச்சேரி சாலை, கன்னியம்மன் கோயில் தெரு,

திரு.பட்டினம் - 609 606.

A.S. குமார் - செயலாளர் , Cell: 9965187245

தேதி: 9-9-2026

அனுப்புநர்:

A.S. குமார், (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி காரை மாவட்ட துணை செயலாளர்),
32, கன்னியம்மன் கோவில் தெரு,
T.R. பட்டிணம்.
Cell: 9965187245

பெறுநர்:

1) திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள், காரைக்கால்.
2) திரு. சட்ட மன்ற உறுப்பினர், நிரவி- திருபட்டிணம் தொகுதி.

பொருள்: மேலவாஞ்சூர் போர்ட் மக்களுக்கு இடையூறாக இருப்பதால் இந்தபோர்ட் தேவையில்லை , மேலும்புதிதாக வர இருக்கும் கார்கோ தொழிற்சாலை போர்ட் விரிவாக்கமும் வேண்டாம் என்றும் – கோரிக்கை.

உயர் திரு ஐயா,

மேலவாஞ்சூரில் இயங்கி வரும் நிலக்கரி ஏற்றுமதி இறக்குமதி செய்யும் துறைமுக போர்ட்டினால் மக்களுக்கு கேடு விளைவிக்கும் நோய்களும், இதய நோய்களும், சாலைகள் பழுதடைவதும், மரங்களில் கரி படிந்து சுற்றுபுற சூழ்நிலைகள் மாசு படுவதும், நீர் நிலைகள், விலங்கினங்கள், கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் சொல்லொன்ன பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. இதனால் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரம் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வரும் சூழ் நிலையில் மீண்டும் இந்த போர்ட்டை (கார்க்கோதொழிற்சாலை) விரிவாக்கம் செய்வதினால் இன்னும் பல பிரச்சினைகளை அப்பகுதி மக்களும், காரைக்கால் மாவட்டம் முழுவதும் எதிர் கொள்ள நேரிடும். மேலும் நிலக்கரி போட்டிற்கு ஏற்றி செல்லும் ரெயில்கள் ஒரு நாளைக்கு பலமுறை போய்வருவதால் இரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதால் பள்ளிக்கு செல்லும் மாணவர்கள், கோர்ட்டுக்கு செல்லும் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், அலுவலக ஊழியர்கள், வியபாரிகள், தொழிலாளர்கள் குறிப்பிட்ட நேரத்தில் அலுவலகம் செல்ல முடியாமல் ரயில்வே கேட்டில் காத்து கிடக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே புதிதாக அமைய உள்ள கார்கோ என்ற புதிய தொழிற்சாலை அமைக்க போர்ட்டை விரிவாக்கம் செய்ய வேண்டாம் என்பதை மாவட்ட ஆட்சியாளருக்கும், நிரவி திருப்பட்டிணம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு காரைக்கால் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் இந்த கார்கோ தொழிற்சாலையை அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு

A.S. குமார்

(A.S.குமார்)
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும்,
பொது மக்களும்,
கட்சி தோழர்களும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் : 09/09/2026

1577
Date 09/09/26

பெறுநர் :

உறுப்பினர் செயலர் அவர்கள்,
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் (PPCC)
புதுச்சேரி – UT.

பொருள் : காரைக்கால் துறைமுகம் (KPPL) விரிவாக்கம் செய்வது சம்பந்தமாக, புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக 09/09/2026-அன்று காரைக்கால் மாவட்டம் திருமலைராயன்பட்டினம் கொம்யூன் போலகம் பல்நோக்கு கூடத்தில் நடைபெற்றும் பொது கருத்து கேட்பு கூட்டத்தில். ஆட்சேபனை கடிதம் சமர்ப்பித்தல் தொடர்பாக...

அய்யா,

புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (PPCC) நடத்தும் பொது கருத்து கேட்பு தொடர்பாக எழும் முக்கிய கேள்விகள் :

1. புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCC), இந்த பொது கருத்து கேட்பை எந்த அடிப்படையில் நடத்துகிறது?
2. இந்த பொது கருத்து கேட்புக்கான தேதி, நேரம் மற்றும் இடத்தை காரைக்கால் மாவட்ட ஆட்சியரிடம் கோருவதற்கு புதுச்சேரி அரசின் எந்த அதிகாரி அல்லது துறை புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் அல்லது அனுமதி வழங்கியுள்ளது?
3. காரைக்கால் துறைமுகத்தின் இத்தகைய மிகப்பெரிய விரிவாக்க திட்டம் குறித்து, பொது கருத்து கேட்பிற்கான தேதியை கோருவதற்கு முன்பாக புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஏன் புதுச்சேரி அரசுக்கு முறையாக தெரிவிக்கவில்லை?
4. காரைக்கால் துறைமுகத்தின் இந்த மிகப்பெரிய விரிவாக்க திட்டம் குறித்து புதுச்சேரி அரசின் துறைமுகத் துறைக்கு முழுமையான தகவல் உள்ளதா?
5. இந்த விரிவாக்க திட்டத்திற்காக பொது கருத்து கேட்பை நடத்துவதற்கு, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அரசு துறைமுகத்துறை அல்லது புதுச்சேரி அரசு ஏதேனும் அனுமதி அல்லது ஒப்புதல் வழங்கியுள்ளதா?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

6. காரைக்கால் துறைமுகத்தின் நிலப்பரப்பு, அரசு நிலங்கள், கடற்கரைப் பகுதி, கடல் நீர்ப்பரப்பு, நில மீட்பு (Reclamation), ஆற்று திசை மாற்றம் மற்றும் துறைமுகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மாஸ்டர் பிளானில் மாற்றம் போன்ற முக்கியமான விஷயங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் புதுச்சேரி அரசின் முன் நிர்வாக அல்லது கொள்கை ரீதியான ஒப்புதல் இன்றி இந்த பொது கருத்து கேட்பு எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது?

7. இந்தத் திட்டத்தின் நிர்வாகத்துறையான துறைமுகத்துறையின் தெளிவான நிலைப்பாடு மற்றும் அரசின் அனுமதி பெறப்படாமல் நடத்தப்படும் பொது கருத்து கேட்பு, பொதுமக்களுக்கு முழுமையான மற்றும் சரியான தகவல்களை வழங்கும் வகையில் இருக்குமா?

8. அரசின் அனுமதி இன்னும் பரிசீலனையில் இருந்தால், இத்தகைய மிகப்பெரிய திட்டம் ஏன் பொதுமக்கள் விசாரணைக்காக முன்னெடுக்கப்படுகிறது?

9. பொதுமக்களுக்கு முன்வைக்கப்படும் இந்தத் திட்டத்தின் தற்போதைய சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக நிலை என்ன?

10. பிரவடியனாறு நதியை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தகுதியான அதிகாரிகள் உண்மையில் அனுமதி அளித்துள்ளனரா? அல்லது அது EIA-வில் இடம் பெற்றுள்ள ஒரு முன்மொழிவு மட்டுமா?

11. அகழ்வுப் பகுதிகள், நில மீட்பு பகுதிகள், மற்றும் கடலில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படும் இடங்களை தெளிவாக காட்டும் வரைபடங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

12. கடல் நீர் நிலத்தடி நீருக்குள் ஊடுருவும் அபாயம் குறித்து அறிவியல் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

13. வாஞ்சூர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் தற்போதைய நிலத்தடி நீரின் உப்பு தன்மை நிலை என்ன?

14. திட்டம் தொடங்கிய பின்னர் நிலத்தடி நீரின் தரம் எவ்வாறு கண்காணிக்கப்படும்?

15. குடிநீர் ஆதாரங்கள் உப்பாகிவிட்டால் பாதிக்கப்படும் மக்களுக்கு யார் பொறுப்பேற்பார்கள்?

16. இவ்வளவு பெரிய திட்டத்திற்கான கூடுதல் நீர் தேவையை காரைக்கால் மாவட்டம் தாங்கக்கூடிய நிலையிலா உள்ளது?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
காரைக்கால் மாவட்ட குழு
தோழர். வெ. தாண்டவசாமி நினைவகம்
நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.
COMMUNIST PARTY OF INDIA (MARXIST)
KARAIKAL DISTRICT COMMITTEE
No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.
செயலாளர் : S.M. தமீம் அன்சாரி
அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

17. ஏற்படக்கூடிய பாதிப்புகள் போக்குவரத்து நெரிசல், சாலை விபத்துக்கள், கிராம சாலைகள் சேதம்,தூசு மாசுபாடு,ஒலி மாசுபாடு, டீசல் புகை, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு பாதிப்பு போன்றவை ஏற்படும். ஆகவே, முழுமையான Traffic Impact Assessment பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

18. தனியார் வர்த்தக நடவடிக்கையால் சேதம் அடையும் பொது உட்கட்டமைப்பை சீரமைக்க பொதுமக்களின் வரிப்பணம் பயன்படுத்தப்படுமா?

19. முழு விரிவாக்கத்திற்கு பிறகு ஆண்டிற்கு அதிகபட்சமாக எவ்வளவு நிலக்கரி கையாளப்படும்? **'தேவையை பொருத்தது'** என்ற பதில் பொதுமக்களின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கவலைகளுக்கு போதுமானதல்ல.

EIA-வில் தெளிவாக குறிப்பிட வேண்டியது :

- அதிகபட்ச நிலக்கரி கையாளும் திறன்,
- நிலக்கரி சேமிப்பு அளவு,
- நிலக்கரி யார்டுகளின் எண்ணிக்கை,
- மூடிய/திறந்த சேமிப்பு,
- கன்வேயர் அமைப்புகள்,
- தூசு கட்டுப்பாட்டு அமைப்புகள்,
- காற்று மாசுபாட்டு மாதிரிகள்.

வடக்கு வாஞ்சூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் புற்று நோயாளிகள்/புற்றுநோய் சம்பவங்கள், சுவாச நுரையீரல் நோய் பாதிப்புகள், பெண்களுக்கு கருச்சிதைவுகள் ஏற்படுவது போன்ற சம்பவங்கள் குறித்து பொதுமக்களிடையே பெரும் கவலைகள் எழுந்துள்ளன. இத்தகைய கவலைகள் தகுதியான பொது சுகாதார மற்றும் அறிவியல் அமைப்புகளால் சுயாதீனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் தற்போதைய காரைக்கால் துறைமுகத்தின் சுற்றுச்சூழல் செயல்திறன் என்ன?

இந்தத் திட்டத்தில் நதிமாற்றம் பெரிய அளவிலான அகழ்வுப் பணி, கடலோர நிலமீட்பு, புதிய பெர்த்துக்கள், அதிகரிக்கும் கப்பல் போக்குவரத்து ஆகியவை இடம்பெறுகின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

விரிவான Fisheries Impact Assessment அவசியம் வெளியிட வேண்டும் :

- காலநிலை மாற்றம் மற்றும் எதிர்கால கடல்மட்ட உயர்வை கருத்தில் கொண்டு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதா? மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டால் என்ன நடக்கும்?
- சூறாவளி+கடல் அலை எழுச்சி+கனமழை ஒரே நேரத்தில் ஏற்பட்டால் புதிய நதி வழித்தடம் பாதுகாப்பாக செயல்படுமா?
- 100.3 MMTPA அளவிலான துறைமுக விரிவாக்கம் முழு காரைக்கால் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்படுத்தும் மொத்த தாக்கம் என்ன?

காரைக்கால் துறைமுகத்தை கிட்டத்தட்ட ஐந்து மடங்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கு, அதே அளவிலான வலுவான சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொது பாதுகாப்பு உத்தரவாதங்களும் அவசியம்.

காரைக்கால் மக்களின் உடல்நலம், குடிநீர், நிலம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பை விலையாக கொடுத்து இத்தகைய துறைமுக விரிவாக்க திட்டம் கொண்டுவரப்படுவதை ஏற்க முடியாது.

ஆகையால், துறைமுகம் விரிவாக்க திட்டத்தை முழுவதுமாக கைவிட வேண்டும் என்று எங்களது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) காரைக்கால் மாவட்ட க்குழு சார்பாக, காரைக்கால் மக்கள் நலன் கருதி முன் வைக்கிறோம்.

நன்றி! வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

(எஸ். எம். தமீம்அன்சாரி)

நகல் பெறுவோர் :

1. உயர்திரு. **மாவட்ட ஆட்சியர்,** அவர்கள்
   மாவட்ட ஆட்சியரகம், காரைக்கால்.

பதிவு எண் : 208/2025

திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம்

THIRUMALAIRAYANPATTINAM NUGARVOR VIZHIPPUNARVU SANGAM

எண். 1, அல்லிநொத் தெரு, திருமலைராயன்பட்டினம் - 609 606.
காரைக்கால் மாவட்டம்.
செல் : 93440 50163
94429 31942

கௌரவத் தலைவர் :
K.G. காளிதாஸ்

தலைவர் :
V. ராஜேந்திரன்

துணைத் தலைவர் :
G. ஆனந்தகிருஷ்ணன்

செயலாளர்:
S. கணேசன்

இணைச் செயலாளர் :
D. தியாகராஜன்

பொருளாளர் :
M. சந்தனசாமி

செயற்குழு உறுப்பினர்கள் :
M. ரவி
K.T. ராஜவேல்
V. அமிர்தலிங்கம்
U.M. கபீர் மரைக்காயர்
P. சிவக்குமார்
G. கிருஷ்ணசாமி
T. முத்துகிருஷ்ணன்
V. ராஜாராமன்
A. திவ்யநாதன்

ஆலோசகர்கள் :
V. சுப்ரமணியன்
P. விஜயன்

சட்ட ஆலோசகர் :
வழக்கறிஞர் R. சுரேஷ்

ஆடிட்டர் :
M. கணேசன்

எண்: 14/TNVS/TRP/2026 தேதி: 09-09-2026

To
மாண்புமிகு உறுப்பினர் செயலாளர், அரசுக்கு
புதுச்சேரி மாசு கட்டுப்பாடு வாரியம் (PPCC),
3-ஆம் தளம், Housing Board Complex,
அண்ணா நகர்,
புதுச்சேரி - 605005.

15/09/26

Sir,

பொரு: காரைக்கால் துறைமுகம் - 21.5 MTPA திறனை படிப்படியாக திறனை 100.3 MTPA ஆக உயர்த்துவது - திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தல் - சம்பந்தமாக.

— —

காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய கையாளும் திறனை ஆண்டுக்கு 21.5 மில்லியன் டன்னிலிருந்து 100.3 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள Master Plan Development of Karaikal Port திட்டத்திற்கு திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம் கடுமையான எதிர்ப்பையும், ஆட்சேபணையையும் இப்புகார் மூலம் பதிவு செய்கிறது.

காரைக்கால் மாவட்டம் இயல்பாகவே வண்டல் நிலம், நிலநடுக்கோட்டு வெப்பமண்டல காலநிலை, மழைப்பொழிவு, மீன்வளம், மீன்வளம் மற்றும் பவளப்பாறைகளின் வளர்ச்சிக்கு சிறந்த பகுதியாகவும் உள்ளது. தற்போது 21.5 மில்லியன் டன் திறனில் இயங்கியபோதே துறைமுகத்தை சுமார் 4.7 மடங்கு அதிகரித்து 100.3 மில்லியன் டன் ஆகிறது உயர்த்துவது காரைக்கால் - கடலோர சுற்றுச்சூழல் மற்றும் கடலோர நிலப்பரப்பு மேலாண்மை சார்ந்த அச்சம் பொதுமக்களிடம் உள்ளது, தற்போதுள்ள கட்டமைப்பையே கொண்டு, அதாவது மேம்படுத்து மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறைவாக பொதுமக்களின் மனதை பாதிக்கப்படுகிறது. எனவே 100.3 MTPA Master of Karaikal Port திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என ஆட்சேபத்தின் பேரில் வலியுறுத்துகிறோம்.

நன்றி

இயற்கை
நல்லூர் பொன்னையன்
செயலாளர்

திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம் காரைக்கால் - 609 606

மனித நேயம் காப்போம்! சட்டத்தை மதிப்போம்!! நீதியை நிலைநாட்டுவோம்!!!

இந்திய மக்கள் உரிமை நீதி பொது நலச்சங்கம்

INDIA PEOPLE RIGHTS JUSTIC PUBLIC WELFARE ASSOCIATION

பதிவு எண் .1145/2020. ISO 9001 : 2015 - 25ZGZ0025220, MSME UDYAM-TN-31-0078710

அரசியல் சார்பற்ற மனித உரிமைகள் அமைப்பு, தமிழ்நாடு-புதுச்சேரி.

பாரத் சேவா ரத்னா, சேவா ஸ்ரீ, பத்ம ஸ்ரீ

முனைவர். பால.கன்னியப்பன் MA,M.St.,

நிறுவனர் & தேசிய தலைவர்

காரைக்கால் தனியார் துறைமுகத்திற்கு எதிரான ஆட்சேபனை மனு

1579
09/04/26

பெறுநர்

மாண்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
காரைக்கால் மாவட்டம்,
புதுச்சேரி.

பொருள்: காரைக்கால் துறைமுகத்தை தற்போதைய திறனிலிருந்து 100 மில்லியன் டன் அளவிற்கு விரிவாக்கும் திட்டத்திற்கு எதிர்ப்பு - ஏற்கனவே ஏற்பட்டுள்ள சுற்றுச்சூழல், கடலோரம், நிலத்தடி நீர், மீனவர் வாழ்வாதாரம் மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்வாதார பாதிப்புகளை கருத்தில் கொண்டு விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது - தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் துறைமுகத்தை மிகப்பெரிய அளவில் விரிவாக்கி, அதன் சரக்கு கையாளும் திறனை 100 மில்லியன் டன் அளவிற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் கருத்துகள் கேட்கப்பட்டு வருகின்றன.

இந்த விரிவாக்கத்திற்கு இந்தியமக்கள் உரிமை பொதுநல சங்கம் சார்பாக முழுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறேன்.

காரைக்கால் துறைமுகம் 2009-ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கிய காலத்திலிருந்து, குறிப்பாக நிலக்கரி போன்ற தூசி ஏற்படுத்தும் சரக்குகளை கையாள்வதால், துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து முதலில் முழுமையான ஆய்வு செய்ய வேண்டியது அவசியம். அதிகாரப்பூர்வ ஆவணங்களிலும் துறைமுகம் 2009 முதல் செயல்படுவதாகவும், நிலக்கரி

நிர்வாக அலுவலகம்

3/947, தமிழன்னை நகர், கண்டமங்கலம் & அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் 605102

செல் : 9080375677, 9655875217, EMAIL : balakan1967@gmail.com

பதிவு அலுவலகம்: 75 முதல்தளம், மேற்கு மாதா தெரு, ராயபுரம், சென்னை 600 013.

கையாளுதல் துறைமுகத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நிலக்கரி தூசி மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு

நிலக்கரி கையாளுதல், சேமித்தல், ஏற்றுதல் மற்றும் இறக்குதல் போன்ற செயல்பாடுகளின்போது உருவாகும் நுண்துகள்கள் காற்றில் கலந்து சுற்றுப்புறப் பகுதிகளுக்கு பரவும் அபாயம் உள்ளது.

ஏற்கனவே துறைமுகத்தால் தூசி மாசு ஏற்படுவதாக பொதுமக்களிடையே நீண்டகாலமாக குற்றச்சாட்டுகள் இருந்து வந்துள்ளன. 2011-ஆம் ஆண்டிலேயே காரைக்கால் துறைமுக நிலக்கரி கையாளுதலுக்கு எதிராக உள்ளூர் மக்கள் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து புகார் தெரிவித்ததாக செய்தி பதிவுகள் உள்ளன.

தற்போதைய துறைமுக சுற்றுச்சூழல் அறிக்கையிலேயே தூசி கட்டுப்படுத்த Dust Suppression System, road sweeping, road wetting மற்றும் 24 மணி நேர கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்படியிருக்க, தற்போதைய அளவிலேயே தூசி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தேவைப்படும் நிலையில், சரக்கு கையாளும் அளவை பல மடங்கு அதிகரித்தால் சுற்றுச்சூழல் மீது ஏற்படும் கூடுதல் சுமை குறித்து முழுமையான சுயாதீன மதிப்பீடு இல்லாமல் விரிவாக்கம் செய்வது பொதுமக்களின் நலனுக்கு எதிரானதாகும்.

2. கடற்கரை மற்றும் கடல் சூழலியல் பாதிப்பு

துறைமுகத்தின் breakwater, dredging மற்றும் கடல் கட்டமைப்புகள் கடலின் இயற்கையான மணல் நகர்வு மற்றும் sediment transport-ஐ மாற்றக்கூடியவை.

காரைக்கால் துறைமுகப் பகுதியில் 2009-ஐ அடிப்படையாகக் கொண்டு 2013, 2016, 2017 மற்றும் 2022 ஆண்டுகளின் shoreline மற்றும் seabed மாற்றங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

மேலும், செயற்கைக்கோள் மற்றும் GIS ஆய்வுகளில் துறைமுகத்தின் வடக்குப் பகுதியில் கடற்கரைப் பரப்பு குறைந்ததும், தெற்குப் பகுதியில் sediment accumulation ஏற்பட்டதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே 100 மில்லியன் டன் விரிவாக்கத்திற்கு முன்பு குறைந்தது 2009 முதல் தற்போதுவரை ஏற்பட்ட கடற்கரை மாற்றங்களை அரசு சுயாதீனமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

3. மீனவர்களின் வாழ்வாதாரம்

காரைக்கால் கடலோரப் பகுதிகளில் தலைமுறைகளாக மீன்பிடியை நம்பி வாழும் மக்கள் உள்ளனர்.

துறைமுக விரிவாக்கம், கப்பல் போக்குவரத்து அதிகரிப்பு, dredging, கடல் கட்டமைப்புகள் மற்றும் கடலோர மாற்றங்கள் ஆகியவை மீன்பிடிப் பகுதிகளையும் மீனவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தையும் பாதிக்கக்கூடும்.

மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான உறுதியான அறிவியல் ஆதாரம் இல்லாமல் இவ்வளவு பெரிய விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்கக்கூடாது.

4. நிலத்தடி நீர் மற்றும் குடிநீர் பாதுகாப்பு

கடலோரப் பகுதியில் அதிகமான தொழில்துறை மற்றும் துறைமுக நடவடிக்கைகள் அதிகரிக்கும் போது நீர் தேவையும் அதிகரிக்கிறது.

நிலத்தடி நீர் எடுப்பு, உவர்நீர் ஊடுருவல், நிலத்தடி நீர்மட்ட மாற்றம் மற்றும் சுற்றுப்புற நீர்நிலைகளின் தரம் ஆகியவை குறித்து 2009-க்கு முந்தைய நிலவரத்தையும் தற்போதைய நிலவரத்தையும் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு தேவையான நிலத்தடி நீர் வளத்தை பாதிக்கும் எந்தவொரு திட்டமும் பொதுமக்களின் எதிர்கால நீர் உரிமையை பாதிக்கக்கூடியதாகும்.

5. இயற்கை வளங்கள் மற்றும் மரங்கள்

துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் மற்றும் இயற்கைத் தாவரப் பரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து செயற்கைக்கோள் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும்.

காரைக்கால் பகுதி தொடர்பான remote-sensing ஆய்வுகளில் 2000–2022 காலகட்டத்தில் விவசாய நிலம், கடற்கரைப் பகுதிகள், mangrove/இயற்கைத் தாவரப் பகுதிகள் உள்ளிட்ட நிலப் பயன்பாடுகளில் மாற்றங்கள் பதிவாகியுள்ளன.

6. உள்ளூர் மக்களுக்கு கிடைத்த பயன் என்ன?

இத்தனை ஆண்டுகளாக துறைமுகம் இயங்கி வந்தும், துறைமுகத்தைச் சுற்றியுள்ள உள்ளூர் மக்களுக்கு கிடைத்த நிரந்தர வேலைவாய்ப்பு, உள்ளூர் தொழில் வாய்ப்பு மற்றும் சமூகப் பொருளாதார முன்னேற்றம் குறித்து வெளிப்படையான ஆய்வு செய்யப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதிப்பு உள்ளூர் மக்களுக்கே; ஆனால் பொருளாதாரப் பயன் வேறு பகுதிகளுக்கு சென்றால், அது சமநிலையான வளர்ச்சி அல்ல.

எனவே எனது முக்கிய கோரிக்கைகள்:

மனித நேயம் காப்போம்! சட்டத்தை மதிப்போம்!! நீதியை நிலைநாட்டுவோம்!!!

இந்திய மக்கள் உரிமை நீதி பொது நலச்சங்கம்

INDIA PEOPLE RIGHTS JUSTIC PUBLIC WELFARE ASSOCIATION

பதிவு எண் : 1145/2020. ISO 9001 : 2015 - 25ZGZ002522Q, MSME UDYAM-TN-31-0078710

அரசியல் சார்பற்ற மனித உரிமைகள் அமைப்பு, தமிழ்நாடு-புதுச்சேரி.

பாரத் சேவா ரத்னா, சேவா ஸ்ரீ, பத்ம ஸ்ரீ

முனைவர். பால.கன்னியப்பன் MA,M.St.,

நிறுவனர் & தேசிய தலைவர்

1. 100 மில்லியன் டன் துறைமுக விரிவாக்கத்திற்கு தற்போது அனுமதி வழங்கக்கூடாது.

2. 2009-ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலவரத்தையும் தற்போதைய நிலவரத்தையும் ஒப்பிட்டு சுயாதீன சுற்றுச்சூழல் ஆய்வு நடத்த வேண்டும்.

3. கடந்த ஆண்டுகளின் காற்றுத் தரம், நிலத்தடி நீர், கடல் நீர், கடற்கரை அரிப்பு, மீன்வளம் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் குறித்து அறிவியல் அடிப்படையிலான ஆய்வு செய்ய வேண்டும்.

4. 2009-2026 செயற்கைக்கோள் படங்களை பயன்படுத்தி துறைமுகத்தைச் சுற்றியுள்ள கடற்கரை, பசுமைப் பகுதி, நீர்நிலைகள் மற்றும் நிலப் பயன்பாட்டு மாற்றங்களை அரசு மதிப்பீடு செய்ய வேண்டும்.

5. மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பு குறித்து தனிப்பட்ட Social Impact Assessment நடத்த வேண்டும்.

6. உள்ளூர் மக்களுக்கு கிடைத்த வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பயன் குறித்து வெளிப்படையான அறிக்கை வெளியிட வேண்டும்.

7. மேற்கண்ட ஆய்வுகள் அனைத்தும் முடிவடையும் வரை 100 மில்லியன் டன் விரிவாக்கத்திற்கான எந்தவொரு இறுதி அனுமதியும் வழங்கக்கூடாது.

8. ஏற்கனவே ஏற்பட்டுள்ள பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டால், முதலில் தற்போதைய சுற்றுச்சூழல் பாதிப்புகளை சரிசெய்த பிறகே புதிய விரிவாக்கம் குறித்து பரிசீலிக்க வேண்டும்.

நிர்வாக அலுவலகம்

3/947, தமிழன்னை நகர், கண்டமங்கலம் & அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் 605102

செல் : 9080375677, 9655875217, EMAIL : balakan1967@gmail.com

பதிவு அலுவலகம்: 75 முதல்தளம், மேற்கு மாநா தெரு, ராயபுரம், சென்னை 600 013.

மனித தேயம் காப்போம்! சட்டத்தை மதிப்போம்!! நீதியை நிலைநாட்டுவோம்!!!

இந்திய மக்கள் உரிமை நீதி பொது நலச்சங்கம்

INDIA PEOPLE RIGHTS JUSTIC PUBLIC WELFARE ASSOCIATION

பதிவு எண் :1145/2020. ISO 9001 : 2015 - 25ZGZ002522Q. MSME UDYAM-TN-31-0078710

அரசியல் சார்பற்ற மனித உரிமைகள் அமைப்பு, தமிழ்நாடு–புதுச்சேரி.

பாரத் சேவா ரத்னா, சேவை ஸ்ரீ, பத்ம ஸ்ரீ

முனைவர். பாலகன்னியப்பன் MA,M.St.,

நிறுவனர் & தேசிய தலைவர்

"வளர்ச்சி" என்ற பெயரில் காரைக்காலின் கடல், நிலம், குடிநீர், மீன்வளம், விவசாயம் மற்றும் எதிர்கால தலைமுறையின் இயற்கை வளங்கள் அழிக்கப்படக்கூடாது.

எனவே, 100 மில்லியன் டன் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு எனக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்றும், இத்திட்டத்தை தற்போதைய நிலையில் அனுமதிக்கக் கூடாது என்றும் இம்மனுவின் மூலம் வலுவாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இந்தியமக்கள் உரிமை பொதுநல சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,

தேதி: 09/09/2026
இடம்: திருமலைராயன்பட்டினம்

திருமதி. P. சித்ரா. B.Com.,
இந்திய மக்கள் உரிமை நீதி பொது நலச்சங்கத்தின்
தேசிய மகளிர் அணி துணை செயலாளராக

நிர்வாக அலுவலகம்

3/947, தமிழன்னை நகர், கண்டமங்கலம் & அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் 605102

செல் : 9080375677, 9655875217, EMAIL : balakan1967@gmail.com

பதிவு அலுவலகம்: 75 முதல்தளம், மேற்கு மாதா தெரு, ராயபுரம், சென்னை 600 013.

உழுவோம் ! உழைப்போம் !! உயர்வோம் !!!

பதிவு எண் : 167/2023

காரைக்கால் மாவட்ட டெல்டா விவசாயிகள் நலச்சங்கம்

KARAIKAL MAAVATTA DELTA VIVASAAYIGAL NALA SANGAM

எண் : 19 - A. சவரிராயப் பிள்ளை வீதி, காரைக்கால் - 609 602

நிறுவனர்
R.A.R. கேசவன்
செல் : 98425 65720

நிர்வாகக்குழு தலைவர்
P. ராஜேந்திரன்
செல் : 99422 45494

துணைத்தலைவர்
M. ஷேக் முகமது
செல் : 94433 96221

செயலாளர்
P. திருநாராயணன்
செல் : 94436 08766

இணைச்செயலாளர்
P.G. சோமு (எ) பாவாடைசாமி
செல் : 96941 83102

பொருளாளர்
S. சண்முகநாதன்
செல் : 99421 45465

செய்தி தொடர்பாளர்
M. செல்வகணபதி
செல் : 93629 10265

செயற்குழு
T. ராமசாமி
செல் : 94429 02563
S. ராஜமாணிக்கம்
செல் : 93002 04570
P.A.T. ஆறுமுகம்
செல் : 98425 40100
A. ஆரோக்கியதாஸ்
செல் : 94438 75583
R. ஞானசேகரன்
செல் : 93629 10339
N.முகமது இப்ராஹிம்
செல் : 85239 07709
R. அருணாச்சலம்
செல் : 80564 80535

தேதி : 09/09/26

கருத்து கேட்பு கூட்டம் வாயிலாக கொடுக்கப்படும் மனு.

பெறுநர்

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால் 609 602.,

ஐயா /அம்மா வணக்கம்

காரைக்கால் மாவட்டம்திரு பட்டினம் வாஞ்சூர் அதானி துறைமுகம் 21.5மில்லியன் மெட்ரிக் டன் கையாளும் திறனை 100.5மில்லியன் மெட்ரிக்டன் கையாளும் திறனாக உயிர்த்திக் கொள்ளஅனுமதிஅளிக்க எடுக்கப்பட்டு முடிவினை அரக கைவிட வேண்டும் என கேட்டு கொள்கிறோம்

காரணங்கள்

1.157கிலோ மீட்டர் கற்றுலவு உள்ள காரைக்கால் மாவட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி வேளாண்மை தொழிலேயே பிரதானமாக இருந்து வருகிறது வேளாண்மை தொழில் மற்றும் அதனை சார்ந்த தொழில் செய்யும் மக்கள் காரைக்கால் மக்கள் தொகையில் 40%பேர் உள்ளனர். மேற்கண்ட 40%மக்கள் இப்பொழுதே வறுமையை நோக்கி சென்று கொண்டு இருக்கிறோம் காரணம் இந்த துறைமுகம் வந்தகாலம் தொட்டே உரிய பருவ மழை பெய்வதுசரியாகஇல்லை என்பது அனைவரும் அறிந்ததே. வானிலை ஆராய்ச்சியாளர்களின் கருத்தும் அதனை உறுதி படுத்தி உள்ளது. என்றைய தினம் காரைக்கால் துறைமுகத்தில் நிலக்கரி இறக்கப்பட்டதோ அன்றைய தினத்திலிருந்து காரைக்கால் மாவட்டத்தில் பெய்யும் பருவமழைஅளவு குறைந்துகொண்டே வந்து உள்ளது என்பது நாம்அனைவரும் கண் கூடாக அறிந்ததே இந்த நிலையில் ஐந்து மடங்கு அதிகமாக கையாளும் திறன் அதிகரிக்கப்பட்டால் அதில் ஏறத்தாழ 50 சதவிதம் நிலக்கரி மட்டுமே இறக்குமதி செய்யப்படும். அந்த நிலைமை வந்தால் கண்டிப்பாக காரைக்கால் மாவட்டம் முழுவதும்பருவ மழையே இருக்காது என்பதே வானிலை ஆராய்ச்சியாளர்களின் அச்சம் நிறைந்த கருத்தாக ஏழுந்து உள்ளது. அவ்வாறு பருவமழை காரைக்கால் மாவட்டத்தில் இல்லாவிட்டால் காரைக்கால் மாவட்டம் வறண்ட பூமியாக மாறிடும் நிலைமையே உருவாகும். இது ஒட்டுமொத்தமாக காரைக்கால் மாவட்ட விவசாய நிலங்களை பாதிக்கும் என்பதை அரக கருத்தில் கொள்ள வேண்டும்

5. மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பு குறித்து தனிப்பட்ட Social Impact Assessment நடத்த வேண்டும்.

6. உள்ளூர் மக்களுக்கு கிடைத்த வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரப் பயன் குறித்து வெளிப்படையான அறிக்கை வெளியிட வேண்டும்.

7. மேற்கண்ட ஆய்வுகள் அனைத்தும் முடிவடையும் வரை 100 மில்லியன் டன் விரிவாக்கத்திற்கான எந்தவொரு இறுதி அனுமதியும் வழங்கக்கூடாது.

8. ஏற்கனவே ஏற்பட்டுள்ள பாதிப்புகள் உறுதி செய்யப்பட்டால், முதலில் தற்போதைய சுற்றுச்சூழல் பாதிப்புகளை சரிசெய்த பிறகே புதிய விரிவாக்கம் குறித்து பரிசீலிக்க வேண்டும்.

"வளர்ச்சி" என்ற பெயரில் காரைக்காலின் கடல், நிலம், குடிநீர், மீன்வளம், விவசாயம் மற்றும் எதிர்கால தலைமுறையின் இயற்கை வளங்கள் அழிக்கப்படக்கூடாது.

எனவே, 100 மில்லியன் டன் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு எனக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்றும், இத்திட்டத்தை தற்போதைய நிலையில் அனுமதிக்கக் கூடாது என்றும் இம்மனுவின் மூலம் வலுவாக தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,

தேதி: 09/09/2026
இடம்: திருமலைராயன்பட்டினம்

Google Earth Engine
Google Earth Timelapse

அவசரப் பொது மனு

அனுப்புநர்

சு. விடுதலைகனல்
மாநில துணை செயலாளர்,
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி,
புதுச்சேரி – காரைக்கால்.

GOVT. OF PUDUCHERRY DSTA
Date 09/09/26
1588

பெறுநர்

உயர்திரு. உறுப்பினர் செயலர் அவர்கள்,
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டுக் குழுமம் (PPCC),
புதுச்சேரி – 605 005.

மற்றும்

உயர்திரு. செல்வி. இஷிதா ரதி, I.A.S., அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நடுவர்,
மாவட்ட ஆட்சியரகம்,
டூப்ளெக்ஸ் வீதி,
காரைக்கால் – 609 602,
புதுச்சேரி யூனியன் பிரதேசம்.

பொருள்:

காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முற்றிலும் கைவிடக் கோரியும், தற்போதைய துறைமுக நடவடிக்கைகளால் பொதுமக்களுக்கு ஏற்பட்டு வரும் சுற்றுச்சூழல், காற்று மாசு, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் சமூகப் பாதிப்புகள் குறித்து சுயாதீனமான முழுமையான ஆய்வு நடத்தக் கோரியும் 09.09.2026 அன்று நடைபெறும் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் அளிக்கப்படும் மனு – தொடர்பாக.

குறிப்பு

நாள்: 09.09.2026, புதன்கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: போலகம் மண்டபம், திரு.பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.

மதிப்பிற்குரிய ஐயா / அம்மா

காரைக்கால் துறைமுகத்தை மேலும் விரிவாக்குவது தொடர்பாக பொதுமக்களிடம் கருத்து கேட்கும் கூட்டம் மேற்கண்ட இடத்தில் நடைபெற உள்ளது

இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தில் காரைக்கால் மக்களின் சார்பாக எங்களது நிலைப்பாட்டை மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் பதிவு செய்கிறோம்

எங்களது நிலைப்பாடு

"துறைமுக விரிவாக்கம் வேண்டாம்!"

"இருக்கின்ற துறைமுகமும் வேண்டாம்!"

"மொத்தத்தில் காரைக்காலுக்கு துறைமுகமே வேண்டாம்!"

பழைய கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டு துறைமுகத்தை விரிவாக்குங்கள் என்பது எங்களது கோரிக்கை அல்ல

துறைமுக விரிவாக்கமே வேண்டாம் என்பதுடன், தற்போதுள்ள துறைமுகத்தால் ஏற்பட்டுவரும் பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, காரைக்கால் மக்களின் வாழ்வுரிமை, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க துறைமுகத்தின் செயல்பாடுகள் குறித்தும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே எங்களது உறுதியான நிலைப்பாடு

1. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வாக்குறுதி என்ன ஆனது?

காரைக்காலில் துறைமுகம் கொண்டு வரப்பட்டபோது, உள்ளூர் மக்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும், காரைக்கால் இளைஞர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்றும் கூறப்பட்டது

ஆனால் இன்று உள்ளூர் மக்களின் நிலை என்ன?

உள்ளூர் மக்களுக்கு கிடைக்கும் வேலைகள் பெரும்பாலும் குறைந்த ஊதியத்திலான சிறிய வேலைகளாகவே இருப்பதாக பொதுமக்களிடையே குற்றச்சாட்டு உள்ளது

அதே நேரத்தில் உயர் சம்பளப் பணிகள், நிர்வாகப் பொறுப்புகள், தொழில்நுட்பப் பணிகள் உள்ளிட்ட முக்கிய பணிகளில் உள்ளூர் மக்களுக்கு உரிய முன்னுரிமை வழங்கப்படவில்லை என்ற வேதனையும் மக்களிடையே உள்ளது

எனவே கீழ்க்கண்ட விவரங்களை துறைமுக நிர்வாகம் பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளியிட வேண்டும்

- துறைமுகம் தொடங்கிய நாள் முதல் எத்தனை உள்ளூர் மக்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது?
- எத்தனை காரைக்கால் இளைஞர்களுக்கு நிரந்தர வேலை வழங்கப்பட்டுள்ளது?
- எத்தனை பேருக்கு உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன?
- உள்ளூர் பணியாளர்களின் ஊதிய விவரம் என்ன?
- வெளிமாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த பணியாளர்கள் எத்தனை பேர்?
- உயர் நிர்வாகப் பதவிகளில் உள்ளூர் மக்களின் எண்ணிக்கை என்ன?

"உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு" என்ற வாக்குறுதி உண்மையில் எவ்வளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை மக்கள் அறிய முழுமையான புள்ளிவிவரம் வெளியிடப்பட வேண்டும்

---

2. நிலக்கரி – காரைக்கால் மக்களின் மிகப்பெரிய அச்சுறுத்தல்

காரைக்கால் துறைமுகத்தில் நடைபெறும் முக்கிய நடவடிக்கைகளில் நிலக்கரி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இடம்பெறுகிறது

நிலக்கரியை கையாளுதல், இறக்குதல், ஏற்றுதல், குவித்தல், இடமாற்றம் செய்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய வாகனப் போக்குவரத்து போன்ற நடவடிக்கைகளில் தூசி உருவாகும் அபாயம் உள்ளது

இந்த தூசிகள் கட்டுப்பாடின்றி சுற்றுப்புறத்தில் பரவினால் குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொடர்ந்து காற்று மாசுக்கு உள்ளாகும் நிலை ஏற்படலாம்

இது வெறும் தூசி பிரச்சினை அல்ல

இது

மக்களின் சுவாசிக்கும் உரிமை!

மக்களின் உடல்நல உரிமை!

குழந்தைகளின் எதிர்காலம்!

என்பவற்றுடன் தொடர்புடைய மிகப்பெரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகும்.

---

3. நிலக்கரி தூசி மற்றும் நுண்துகள்களின் உடல்நல ஆபத்து

PM10 மற்றும் PM2.5 போன்ற நுண்துகள்கள் மனித உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய காற்று மாசுபடுத்திகளாக உலக சுகாதார நிறுவனம் குறிப்பிடுகிறது.

குறிப்பாக PM2.5 நுண்துகள்கள் நுரையீரலின் ஆழப்பகுதிகளுக்குள் சென்று இரத்த ஓட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சிறியவை.

நீண்டகால காற்று மாசுபாட்டுடன் சுவாச மற்றும் இருதய நோய்கள் உள்ளிட்ட பல்வேறு உடல்நலப் பாதிப்புகள் தொடர்புடையதாக அறிவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே நிலக்கரி தூசியை "தொழிலின் இயல்பான விளைவு" என்று கூறி புறக்கணிக்க முடியாது.

மக்களின் உடல்நலத்தைக் கருத்தில் கொண்டு அதன் தாக்கம் அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

---

4. சுற்றியுள்ள கிராமங்களின் நிலை என்ன?

துறைமுகத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் பொதுமக்கள் நிலக்கரி தூசி மற்றும் காற்று மாசு குறித்து தொடர்ந்து அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

வீடுகள், சாலைகள், விவசாய நிலங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் தூசி படிவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே

எந்தெந்த கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன?

அங்கு காற்றின் தரம் என்ன?

PM2.5 அளவு என்ன?

PM10 அளவு என்ன?

நிலக்கரி தூசி படிவதன் அளவு என்ன?

இந்த மாசு மக்களின் உடல்நலத்தில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

என்பது குறித்து அரசு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டு அமைப்புகள் அறிவியல் ரீதியாக ஆய்வு செய்ய வேண்டும்

...

5. குழந்தைகள் மற்றும் எதிர்கால தலைமுறை

இன்று நாம் சுவாசிக்கும் காற்றையே நாளைய தலைமுறையும் சுவாசிக்க வேண்டியுள்ளது

ஒரு தொழில் திட்டம் இன்று வருமானத்தை உருவாக்கலாம்

ஆனால் அதன் காரணமாக எதிர்கால தலைமுறைக்கு

மாசடைந்த காற்று,
மாசடைந்த சுற்றுச்சூழல்,
உடல்நல அச்சம்,
வாழ்வாதாரப் பிரச்சினை

ஆகியவற்றை விட்டுச் செல்லக்கூடாது

"நிலக்கரி தூசி படிந்து எங்கள் குழந்தைகள் வாழ வேண்டுமா?"

என்பதே காரைக்கால் மக்களின் வேதனையான கேள்வியாக உள்ளது

...

6. சுயாதீனமான சுகாதார ஆய்வு வேண்டும்

துறைமுகத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்காக அரசு சார்பில் சுயாதீனமான மருத்துவ ஆய்வு நடத்தப்பட வேண்டும்

குறிப்பாக

- குழந்தைகள்
- முதியவர்கள்
- கர்ப்பிணிப் பெண்கள்
- தொழிலாளர்கள்
- நீண்டகாலமாக அப்பகுதியில் வசிப்பவர்கள்

ஆகியோரின் உடல்நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும்

சுவாச நோய்கள், ஆஸ்துமா, COPD, இதய நோய் மற்றும் பிற காற்று மாசு தொடர்பான உடல்நலப் பிரச்சினைகள் குறித்து மருத்துவ நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும்

---

7. காற்றின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்

துறைமுகத்தைச் சுற்றியுள்ள குடியிருப்பு பகுதிகளில் நிரந்தர காற்றுத் தரக் கண்காணிப்பு மையங்கள் அமைக்க வேண்டும்

குறிப்பாக

PM2.5
PM10
SO_2
NO_2
மற்றும் நிலக்கரி தூசி சார்ந்த மாசுகள்

தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்

அதன் முடிவுகள்

பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வெளியிடப்பட வேண்டும்

---

8. துறைமுக விரிவாக்கம் மேலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது

ஏற்கனவே துறைமுக நடவடிக்கைகளால் மக்கள் பாதிக்கப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டால் அதன் தாக்கம் அதிகரிக்கும் என்ற அச்சம் பொதுமக்களிடையே உள்ளது

எனவே

"முதலில் பிரச்சினைகளை தீர்த்துவிட்டு விரிவாக்கம் செய்யுங்கள்"

என்பது எங்களது கோரிக்கை அல்ல

அதற்கு பதிலாக

"துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முற்றிலும் கைவிட வேண்டும்."

என்பதே எங்களது தெளிவான கோரிக்கை

---

9. மீனவர்கள் மற்றும் பாரம்பரிய வாழ்வாதாரம்

காரைக்கால் கடலோர மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களில் மீன்பிடித் தொழில் முக்கியமானதாகும்

துறைமுக விரிவாக்கம் கடல்சார் சூழல், மீன்பிடிப் பகுதிகள், கடற்கரை மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்து முழுமையான சுயாதீன ஆய்வு நடத்த வேண்டும்.

வளர்ச்சி என்ற பெயரில் பாரம்பரிய வாழ்வாதாரத்தை அழிக்கக் கூடாது

---

10. துறைமுகத்தால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகள் குறித்தும் ஆய்வு வேண்டும்

துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்படுவதாக பொதுமக்கள் கூறும் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் குறித்தும் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறை உரிய ஆய்வு மேற்கொள்ள வேண்டும்

வெளியூர்களிலிருந்து தொழிலாளர்கள் வருகை, போதைப்பொருள் பயன்பாடு, பெண்கள் பாதுகாப்பு, பாலியல் சுரண்டல், சட்டம்-ஒழுங்கு மற்றும் இளைஞர்களின் பாதுகாப்பு போன்ற சமூகப் பிரச்சினைகள் குறித்து

தேவையான கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

எந்த குற்றச்சாட்டையும் ஆதாரமின்றி உண்மை எனக் கூறாமல், உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களது கோரிக்கை

---

11. துறைமுகத்தில் என்னென்ன நடவடிக்கைகள் நடைபெறுகின்றன?

நிலக்கரி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி போன்ற நடவடிக்கைகள் பொதுமக்களின் கவனத்திற்கு வெளிப்படையாகத் தெரிகின்றன

ஆனால் துறைமுகத்தின் உள்ளே நடைபெறும் அனைத்து நடவடிக்கைகள், கையாளப்படும் சரக்குகள், அவற்றின் அளவு, சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து பொதுமக்களுக்கு போதுமான வெளிப்படைத்தன்மை இல்லை என்ற கேள்வி எழுகிறது

எனவே

துறைமுகத்தில் கையாளப்படும் அனைத்து வகையான சரக்குகள், அவற்றின் அளவு, அனுமதிகள், சுற்றுச்சூழல் நிபந்தனைகள் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய முழுமையான விவரங்கள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்

---

12. பொதுமக்களின் கருத்து உண்மையாக பதிவு செய்யப்பட வேண்டும்

பொதுமக்கள் கருத்துக்கேட்பு என்பது ஒரு நிர்வாக நடைமுறை மட்டுமல்ல

அது

மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் ஜனநாயக உரிமையாகும்

எனவே துறைமுக விரிவாக்கத்திற்கு எதிராக மக்கள் தெரிவிக்கும் கருத்துகள் அனைத்தும் முழுமையாகப் பதிவு செய்யப்பட வேண்டும்

எதிர்ப்பு தெரிவித்தவர்களின் எண்ணிக்கையும், அவர்களின் முக்கிய காரணங்களும் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டும்

எங்களது முக்கிய கோரிக்கைகள்

1. காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை உடனடியாகவும் முழுமையாகவும் கைவிட வேண்டும்

2. துறைமுகத்தைச் சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் சுயாதீனமான காற்றுத் தர ஆய்வு நடத்த வேண்டும்

3. PM2.5 மற்றும் PM10 உள்ளிட்ட நுண்துகள்களின் அளவை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்

4. நிலக்கரி கையாளுதல் மற்றும் சேமிப்பால் ஏற்படும் தூசி மாசு குறித்து அறிவியல் ஆய்வு நடத்த வேண்டும்

5. துறைமுகத்தைச் சுற்றியுள்ள பொதுமக்களுக்கான சுயாதீனமான பொது சுகாதார ஆய்வு நடத்த வேண்டும்

6. குழந்தைகள், முதியவர்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய மக்களுக்காக சிறப்பு மருத்துவ ஆய்வு நடத்த வேண்டும்

7. துறைமுகத்தால் பாதிக்கப்படும் கிராமங்கள் மற்றும் குடும்பங்கள் குறித்த முழுமையான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்

8. துறைமுகத்தின் சுற்றுச்சூழல் அனுமதிகள் மற்றும் அவற்றின் நிபந்தனைகள் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்பட வேண்டும்

9. சுற்றுச்சூழல் விதிமீறல்கள் ஏதேனும் இருந்தால் அவற்றின் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

10. துறைமுகம் தொடங்கிய நாள் முதல் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் முழுமையான புள்ளிவிவரத்தை வெளியிட வேண்டும்

11. உயர் பதவிகள் மற்றும் நிர்வாகப் பணிகளில் உள்ளூர் மக்களுக்கு வழங்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் விவரங்களை வெளியிட வேண்டும்

12. துறைமுகத்தில் கையாளப்படும் அனைத்து சரக்குகள் மற்றும் அவற்றின் அளவு குறித்த வெளிப்படையான விவரங்களை வெளியிட வேண்டும்

13. மீனவர்கள் மற்றும் கடலோர மக்களின் வாழ்வாதாரத்தின் மீது ஏற்படும் தாக்கத்தை சுயாதீனமாக ஆய்வு செய்ய வேண்டும்.

14. துறைமுகத்தைச் சுற்றியுள்ள மக்களின் அனைத்து புகார்களையும் பதிவு செய்து, அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும்.

15. பொதுமக்களின் எதிர்ப்பை வெறும் கருத்தாகக் கருதாமல், அவர்களின் வாழ்வுரிமை மற்றும் சுற்றுச்சூழல் உரிமையாக அரசு கருத வேண்டும்.

இறுதி வேண்டுகோள்

காரைக்கால் என்பது வெறும் சரக்குகளை ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் இடம் அல்ல.

இது எங்கள் மண்!

இது எங்கள் காற்று!

இது எங்கள் கடல்!

இது எங்கள் வாழ்வாதாரம்!

இது எங்கள் குழந்தைகளின் எதிர்காலம்!

ஏழை, எளிய மக்கள் தங்களது உழைப்பின் மூலம் கால் வயிற்றுக் கஞ்சி குடித்தாலும் நிம்மதியாக வாழ்ந்த வாழ்க்கையை இழந்து, தொழில் வளர்ச்சி என்ற பெயரில் மாசு, நோய், பாதுகாப்பின்மை மற்றும் வாழ்வாதார அச்சத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகக் கூடாது.

மக்களின் உயிரைவிட எந்த தொழில் திட்டமும் பெரியது அல்ல.

மக்களின் சுகாதாரத்தைவிட எந்த பொருளாதார வளர்ச்சியும் முக்கியமானது அல்ல.

எனவே,

காரைக்கால் துறைமுக விரிவாக்கம் வேண்டாம்!

நிலக்கரி மாசு வேண்டாம்!

மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் தொழில் வளர்ச்சி வேண்டாம்!

காரைக்கால் மக்களின் உயிரும் உடல்நலமும் பாதுகாக்கப்பட வேண்டும்!

மொத்தத்தில் – காரைக்காலுக்கு துறைமுகமே வேண்டாம்!

என்ற எங்களது உறுதியான எதிர்ப்பை இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் மூலம் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்கிறோம்

காரைக்கால் மக்களின் எதிர்ப்பையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், பொது சுகாதாரத்தையும் கருத்தில் கொண்டு, காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முழுமையாக கைவிடுமாறு வலியுறுத்துகிறோம்

நன்றி

இப்படிக்கு,

சு. விடுதலைகனல்
மாநில துணை செயலாளர்
விடுதலைச் சிறுத்தைகள் கட்சி
புதுச்சேரி – காரைக்கால்

நாள் 09.09.2026
இடம் காரைக்கால்

தேதி:

அனுப்புநர்: m. செல்வராஜ்
268
பப்புஞ்சேரி

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து யடங்கு விரிவாகும் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

M. செல்வராஜ்

GOVT OF PUDUCHERRY DSTE / PRO
Date 09/09/26
1590

தேதி:

அனுப்புநர் T. Velan
36 T. Sanaimi nagar
Pathinacherry

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

T. Velan

பதிவு

அனுப்புநர்: V.S.ஜகதீசுவரி
125. சுனாமி தெரு.
பட்டினம் அரசு
T.R. பட்டினம்

09/06/21
15.91

பெறுநர்:

உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல் புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

V.S.

தேதி: 09/09/2026.

அனுப்புநர்: C. S. நடராஜன்,
280, அனாமி காலனி (வடக்கு)
பட்டினச்சேரி,
திரு- பட்டினம்.

GOVT OF PUDUCHERRY DSTE
Date: 09/09/2026
1592

பெறுநர்:

உயர்திரு **மாவட்ட ஆட்சியர்** அவர்கள்,

காரைக்கால்.

பொருள்: **அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக**

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் போர்ட் 2009 முதல் சுமார் 17 ஆண்டுக்கு மேலாக எங்கள் கிராமத்திற்கு மிக அருகில் இயங்கி வருகிறது நாங்கள் கடலை நம்பி வாழ்வு நடத்தும் கடலோடி, மேலும் மேற்கண்ட துறைமுகத்தினால் நாங்கள் இதுவரையில் சந்தித்த பிரச்சனைகள் மற்றும் இந்த துறைமுகம் விரிவாக்கத்தினால் இனி வரும் காலங்களில் நாங்கள் சந்திக்க போகும் பிரச்சனைகள் பற்றிய பாதிப்புகள் பின்வருமாறு

1. நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.

2. எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

3. இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

4. பிரவடையான் ஆற்றை மேற்கு திசையில் தடுத்து அதனை முல்லை ஆற்றோடு இணைப்பதினால் எங்கள் பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் முற்றிலுமாக குறைந்து ஆபத்து உள்ள நிலையில் விவசாயம் செய்யும் நிலங்களில் தன்மையும் குறைந்து விவசாயிகளும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

5. அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

மேற்படி இத்தகைய பிரச்சனைகளை சந்தித்து வரும் நாங்கள் இந்த துறைமுகம் விரிவாக்கம் செய்யப்பட்டால் இனி வரும் நாட்களில் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுவீதியில் நிற்கதியாக நிற்கும் சூழ்நிலை ஏற்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே மேற்படி துறைமுகத்தின் விரிவாக்க திட்டத்தினை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே திட்டத்தினை எதிர்த்து தங்களிடம் இந்த கோரிக்கை மனுவை பதிவாக வைக்கின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

G. Natarajan

உ

ஸ்ரீ எல்லையம்மமன் கோவில் தேவஸ்தானம்

செட்டியார், நாட்டார், காரியகார், பஞ்சாயத்தார்கள் மற்றும் ஊர்மக்கள்

கிளிஞ்சல்மேடு செட்டியார் கிராமம், தலத் தெரு – 609 605.

காரைக்கால், புதுச்சேரி மாநிலம்.

உண்மை! உழைப்பு!! உயர்வு!!!

எண் : 164

தேதி : 09.09.2026

09/09/26
1593

பெறுநர்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
பொது விசாரணை தலைமை அதிகாரி, காரைக்கால் மாவட்டம்,
காரைக்கால்.

பொருள்: காரைக்கால் போர்ட் பிரைவேட் விரிவாக்க நடவடிக்கையை ரத்து செய்ய கோருவது தொடர்பாக...

ஐயா, வணக்கம்!

காரைக்கால் போர்ட் பிரைவேட் விரிவாக்க திட்டம் ஏன் வேண்டாம் என்பதற்கு கீழ்காணும் தெளிவான காரணங்களை கட்டிக்காட்ட விரும்புகிறோம்:

1. தற்போது கடுதலாக முன்மொழியப்பட்டுள்ள 249.21 ஹெக்டர் துறைமுக பரப்பில் சரிபாதி 137.14 ஹெக்டர் கடலினை ஆக்கிரமிக்கிறது. கடலில் மண்ணையும், கல்லையும் கொட்டி நிரப்புவதால் கடல் வளமும், மீன் வளமும் அழியும். இந்தத் திட்டம் முழுமுழுக்க மீனவர்களையும், அவர்களை நம்பி வாழும் மக்களுக்கும் எதிரானது. இதனால், எங்கள் வாழ்வும், வாழ்வாதாரமும் அழியும். பாரம்பரியமாக கடலையை வாழ்வாகவும், வாழ்வதாரமாகவும் கொண்டுள்ள எங்களையும், எங்கள் சந்ததிகளையும் அழிக்கும் திட்டம் இது. எனவே இதற்கு எக்காரணம் கொண்டும் அரசு அனுமதி அளிக்கக்கூடாது.

2. இவ்வாறு கடலில் கல் கொட்டி நிலமாக்குவதும், வடக்கு மற்றும் தெற்கு அலைதடுப்பின் நீளத்தை அதிகப்படுத்துவதும், இந்த பகுதியின் அலைபோக்கை திசைமாற்றும், மேலும் இது கடலரிப்பை அதிகமாக்கும். ஏற்கனவே, துறைமுகத்தின் வடக்கு பகுதியில் உள்ள வாஞ்சூர், பட்டினச்சேரி உள்ளிட்டவை கடலரிப்பால் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, கடல் பகுதியில் ஏற்படும் இந்த மாற்றங்கள் முழுமையாக அலையின் திசைப்போக்கை மாற்றி கடலரிப்பை அதிகமாக்கும் சாத்தியம் நிச்சயமாக உள்ளது. இது எங்களின் கிராமங்கள் வேறு இடங்களுக்கு செல்வதற்கு வழிவகுக்கும். ஏற்கனவே, CRZ 2011 ல் கீழ் நீண்டகால குடியிருப்புத் திட்டம் இல்லை என்பதையும் இங்கு கட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே, இந்தத் திட்டத்தால் எங்கள் கிராமங்களுக்கு ஏற்படும் அபாயம் மற்றும் மீனவ மக்களின் நீண்ட கால குடியிருப்பு திட்டமிடல் இன்மை, நில ஒதுக்கீடு இன்மை ஆகியவற்றை ஆதாரமாகக்கொண்டு இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம்.

3. இந்த துறைமுக விரிவாக்கத்திற்காக கடல் பகுதியில் துறைமுக எல்லை விரிவாக்கமும் முன்மொழியப்பட்டுள்ளது. ஆனால், அதன் பரப்பு என்ன,அதன் GPS புள்ளிகள் என்ன, எங்களின் மீன்பிடி மண்டலத்திற்குள்ளும், மீன் இனபெருக்கப்பகுதிக்குள்ளும் வருகிறதா என்பது குறித்து அறிக்கையில் எந்த தகவலும் இல்லை. கொடுக்கப்பட்டுள்ள வரைபடம் போதிய தெளிவில்லாமல், உள்நோக்கத்தோடு, உண்மையை மறைக்கும் வகையில் உள்ளது.

இந்நிலையில், மீனவர்களோடு கலந்தாலோசிக்காமல் துறைமுக எல்லையை விரிவாக்குவதை கடுமையாகக் கண்டிக்கிறோம். மேலும், CRZ, 2019 தொடர்பான வழக்கில், காரைக்கால் மாவட்ட மீனவர்களின் மீன்பிடி எல்லை தொடர்பாக எங்கள் தரப்பு ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளோம். இந்நிலையில், துறைமுக எல்லையை அதிகப்படுத்துவதை எவ்வகையிலும் ஏற்க முடியாது. எனவே இந்தத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்.

4. சமீப காலமாக காரைக்கால் மாவட்ட மீனவர்கள் இலங்கைக்கு சென்று கைதாவதும், சிறைக்கு செல்வதும், ஆந்திரா போன்ற பகுதிகளுக்கு செல்ல நேர்வதும் நிகழ்கிறது. இதற்கு அடிப்படை காரணமே

உ

ஸ்ரீ எல்லையம்மமன் கோவில் தேவஸ்தானம்

செட்டியார், நாட்டார், காரியகார், பஞ்சாயத்தார்கள் மற்றும் ஊர்மக்கள்

கிளிஞ்சல்மேடு செட்டியார் கிராமம், தரைத் தெரு – 609 605.
காரைக்கால், புதுச்சேரி மாநிலம்.

உண்மை! உழைப்பு!! உயர்வு!!!

எண் : 165 தேதி : 09.09.2026

இந்தத் துறைமுகம் தான். இந்த துறைமுக நடவடிக்கைகளால் ஏற்படும் மாக கடலினை பாதித்து வருகிறது. அதன் காரணமாக CRZ வரம்புக்குட்பட்ட 12 கடல் மைல் தொலைவுக்குட்பட்ட பகுதியில் உள்ள மீன் இனம் முற்றிலுமாக அழிந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் இழந்துள்ள மீனவர்கள் வேறு இடங்களுக்கு செல்லும் போது, அங்கும் தாக்கப்படுகிறோம். உயிர்களை பறிகொடுக்கிறோம். இந்நிலையில் தான்கு மடங்கு கையாளும் திறன் அதிகரிப்பால் ஏற்படும் மாசுவினால் எங்களுக்கு ஏற்படும் பாதிப்பு இன்னும் அதிகமாகும். கடல் வளமும், மீன் வளமும் சிதையும். இதனால் சாகப்போவது நாங்களே. எனவே எங்கள் வாழ்வை முன்னிறுத்தி இந்த திட்டத்தை எதிர்க்கிறோம். என்னெய் மற்றும் எரிபொருட்களுக்கு கடலில் தொடர் குழாய்கள் அமையா திட்டம் உள்ளது. சென்னை எண்ணூரில் 2017 நடந்தது போல் சம்பவம் நடப்பதை எப்படி தடுக்க போகிறார்கள்? அறிக்கையில் எந்த திட்டமும் இல்லை.

5. அடுத்தபடியாக, இங்கு வரும் கப்பல்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும், இதில் மோதி எங்கள் மீனவர்கள் உயிரிழக்க நேரிடும். இது பல இடங்களில் இதுபோன்ற துறைமுகத்தால் நிகழ்ந்துள்ளது. நாங்கள் மீன்பிடிக்க செல்லும் நேரம் வரும் கப்பல்களால் வலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் பாதிக்கும். அந்தச் சூழலில் ஏற்படும் இழப்புகளுக்கு யார் பொறுப்பு? நாங்கள் மீன்பிடிக்க செல்லும் நேரம், அந்தப் பகுதிகளில் கப்பல் வராது? என்பதற்கு துறைமுக நிர்வாகமும், அரசு உத்தரவாதம் அளிக்குமா? இந்தத்திட்டம் ஏற்கனவே உள்ள பிரச்சனைகளை மேலும் சிக்கல் ஆக்கும் என்பதன் அடிப்படையில் இந்தத் திட்டத்தை எதிர்க்கிறோம்.

6. வடக்கு அலை தாங்கி 1180 மீ இருந்து 3046 மீ உயர்த்தப்பட்டு 4226 மீ ஆகவும், தெற்கு அலைதாங்கி 1115 M மீ 1600 மீ உயர்த்தப்பட்டு 2715 மீ ஆகவும் அதாவது கடல் பகுதிக்கு கல் தடுப்பு (காம்பவுண்ட்) அமைப்பதாக துறைமுக நிர்வாகம் முன்மொழிந்துள்ளது. அப்படியென்றால், இதனால் அமைக்கப்படும் பாரம்பரியமாக நாங்கள் மீன்பிடித்த கடல் பரப்பிற்கு, சட்டம்(Compensation) எங்கு கடல் பரப்பை ஒதுக்குவீர்கள் என்பதை துறைமுக நிர்வாகமும் அரசும் தெளிவுபடுத்த வேண்டும். தரைக்கடல் வளமிக்கது, கனிமங்கள் நிறைந்தது. மீன் வளம் நிறைந்தது. எங்களின் வளமிக்க கடல் பரப்பு எங்களின் உரிமை. எனவே இவ்வளவு, சதுர பொருளாதார சிக்கல் கொண்ட இந்தத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்.

7. இந்தத் திட்டத்தால் 1050 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதாகவும், அதில் 150 வேலைவாய்ப்புகள் மட்டுமே நேரடியாகவும், 900 மறைமுகமாகவும் உருவாக்கப்படுவதாகவும் அறிக்கை கூறுகிறது. வெறும் 1000 பேருக்கு வேலை கிடைக்கும் இந்தத் திட்டத்திற்காக லட்சக்கணக்கான மீனவர்களுக்கு ஆதாரமாக விளங்கும் இந்த கடலை அழிப்பது கண்டிக்கத்தக்கது. அதிலும், நேரடி வேலைவாய்ப்பு 150 பேருக்கு தான். மீதம் 900 பேருக்கு வேலை கிடைக்கலாம் என்பது தான் இதன் பொருள். அப்படியென்றால் 150 குடும்பங்களின் வாழ்வுக்காக, 8000 க்கு மேற்பட்ட மீனவ குடும்பங்கள், விதவைகள், மீன் கடை சுமக்கும் பெண்கள், சிறு விற்பனையாளர்கள், ஏலம் விடுபவர்கள் என லட்சக்கணக்கான வர்களின் நிலை என்ன? இந்நிலையில், எவ்வித வேலை வாய்ப்புகளையும் உருவாக்காத இந்தத் திட்டம் முற்றிலும் வீண்.

8. பிரவடையான் ஆறில் போக்கை 1.3 கி.மீ வடக்கு நோக்கி நகர்த்தினால் வெள்ளம் வராது. நீரோட்டம் அதிகரிக்கும் என பல கருத்துகள் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பிரவடையான் ஆறு, வாய்க்கால் அல்ல! இதனை துறைமுகத்திற்காக மாற்றுவது கண்டிக்கத்தக்கது. இதனால், வாஞ்சூர் கிராமத்தின் பாதி நிறத்தும் இடம் கருங்கும். இதற்காக 4 மீட்டருக்கும் உயரமான மணல் மேடுகள் அமைக்கப்பட வேண்டி வரும். கடற்கரை ஒழுங்குமுறை மண்டல விதிப்படி மணல் மேடுகள் சமப்படுத்துவது, அழிப்பது விதிமீறல் ஆகும். மேலும், மணல் மேடுகளே கடலோர கிராமங்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது. மணல் பஞ்சு போன்று செயல்பட்டு மழை நீரை சேமித்து வைக்கிறது. இது கடல் நீர் உட்புகுவதையும் தடுக்கிறது. இது அறிவியல் உண்மை. எனவே, மணல் மேடுகளையும், இந்த பகுதியின் நிலவியலை மாற்றி இயற்கைக்கும், சட்டத்திற்கும், குடிநீர் வளத்திற்கும் எதிரான இந்தத் திட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்.

9. வேலை வாய்ப்பு ரீதியாகவும், சூழியல் மற்றும் பொருளாதார ரீதியாகவும் பயனற்ற இந்த திட்டம் கைவிடப்பட வேண்டும். இதன் நீண்ட கால பாதிப்புகளை கருத்தில் கொண்டு திட்டத்திற்கு அரசு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது.

காரைக்கால் மட்டுமல்லாது, வடக்கு பகுதியில் உள்ள தமிழ்நாட்டின் நாகூர், சாமந்தான் பேட்டை, நம்பியார் நகர், ஆரியநாட்டு தெரு, அக்கரைபேட்டை, கல்லார் போன்ற பல கிராமங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. வாழ்வாதாரம் மட்டுமல்ல, மீனவ கலாச்சாரமும் தான்.

தை மாதம் கிழக்கத்தியார் பூசை கொண்டாடுவோம். கிழக்கத்தியார் எங்கள் புராதன தெய்வம். அவருக்கு எல்லித கோயில்களும் கிடையாது. என் என்றால் எங்களுக்கு கடலும், காற்றும் அவரே. கடல் தான் கிழக்கத்தியார். இந்நிலையில், இந்த துறைமுகத்தால் கடலரிப்பு ஏற்பட்டு எங்கள் கிராமங்களை பாதுகாக்க கல் கொட்டப்பட்டால் எங்களின் பூசை எவ்வாறு நடைபெறும். இறையாண்மையை பாதுகாக்கும் அரசியலமைப்பைக் கொண்டுள்ள நாட்டில் எங்களின் கலாச்சார விழுமியங்களை அழிக்கும் இந்த திட்டம் ஏற்கத்தக்கதல்ல.

மேலும், கல்லார் முதல் நாகூர் வரை உள்ள பகுதி கடும் கடலரிப்பை சந்தித்து வருகிறது. அதேபோல, வாஞ்சூர், பட்டினம், கருகளச்சேரி பகுதியும் கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளது. எனவே இந்தத் திட்டத்திற்கு மீனவ மக்களாகிய எங்கள் எதிர்ப்பை பதிவு செய்கிறோம். அரசு இந்தத் திட்டத்திற்கான முடிவை ரத்து செய்ய வேண்டும்.

10. இத்திட்டம் மற்றும் பொதுக் கருத்து கேட்புக் கூட்டம் குறித்த தகவல்கள் போதுமான அளவில் மக்களிடம் கொண்டு சேர்க்கப்படவில்லை. தமிழில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு (EIA) அறிக்கையின் மொழிபெயர்ப்பு மிகவும் மோசமான தரத்தில் உள்ளது; குறிப்பாக, அதில் உள்ள தொழில்நுட்பச் சொற்கள் மிகத் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளதால், அந்த அறிக்கையைப் புரிந்துகொள்வது இயலாததாக உள்ளது. இதனால், இத்திட்டத்தால் பாதிக்கப்படும் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்களால் இந்த ஆவணத்தை அணுகவோ அல்லது புரிந்துகொள்ளவோ முடியவில்லை. எனவே, அப்பகுதி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் தரமான மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தி இந்த ஆவணத்தை வெளியிடுமாறு அதிகாரிகளை நாங்கள் வலியுறுத்துகிறோம். இந்தகைய சூழலில் பொதுக் கருத்து கேட்புக் கூட்டத்தை நடத்துவது ஏற்புடையதல்ல.

11. இத்திட்டத்தின் கீழ் வரும் கடல் பகுதிகளை காரைக்கால் மட்டுமல்லாது, மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட வடக்கிலும் தெற்கிலும் உள்ள கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களும் பயன்படுத்துகின்றனர். எனவே, இங்கு ஒரே ஒரு பொதுக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை மட்டும் நடத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம்; ஏனெனில், இது ஒரு பொறுப்பற்ற நடவடிக்கையாகவே அமைகிறது.

12. EIA அறிவிக்கை 2006-இன் இணைப்பு IV-இல் உள்ள பிரிவு 2.3-ஐ மீறும் வகையில், EIA அறிக்கை இணையதளத்தில் (website) வெளியிடப்பட்டதைத் தவிர, பரவலாகப் பகிரப்படவில்லை. மாவட்ட நிர்வாகத்தால் இது பகிரப்படவில்லை; அதுடன், விதிமுறைகளின்படி அளிக்கப்பட வேண்டிய பரவலான விளம்பரமும் இதற்கு வழங்கப்படவில்லை.

எண் : 167 தேதி : 03.03.2026

13.



- கடலை 12.5 கிலோமீட்டர் அளவுக்கு தொந்திக்கிறார்கள்
- துறைமுக-எல்லை விரிவாக்கி காரைக்கால்மேடு வரை வந்துவிட்டது.

ஸ்ரீ எல்லையம்மமன் கோவில் தேவஸ்தானம்

செட்டியார், நாட்டார், காரியகார், பஞ்சாயத்தார்கள் மற்றும் ஊர்மக்கள்

கிளிஞ்சல்மேடு செட்டியார் கிராமம், தலத் தெரு – 609 605.
காரைக்கால், புதுச்சேரி மாநிலம்.

உண்மை! உழைப்பு!! உயர்வு!!!

எண் : 168 தேதி : 03.03.2026

- எண்ணெய், ஏறி-பொருளை கொட்டும் இடம், குளாய் 18 கிலோமீட்டர் கடலுக்குள் அமயபோகிறது

காரைக்கால் , தரங்கம்பாடி மற்றும் வடக்கே உள்ள அனைத்து ஊரு படகுகள் தேந்திசையில் மீன்பிடிக்க இதை அணைதையும் கந்தி தான் செல்லவேண்டும்.

14.



புதுச்சேரி அரசு ஆணை 03/2024 (ஆகஸ்ட் 1, 2024) படி துறைமுக வரம்புகள் சிவப்பு கோடுகளாக காட்டப்பட்டுள்ளன. இது வாஞ்குருக்கும் பட்டினச்சேரிக்கும் இடைப்பட்ட இடத்திலிருந்து தொடங்குகிறது.

இப்படிக்கு

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL

Regd No : 007/2012

(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))

IN

TRADITIONAL FISHWORKERS UNION

Regd. No. : 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum (NFF))

(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.

(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vannur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038

Ph : 0413 - 2961118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :

A. Senthilkumar, M.A., L.L.B., P. Kulothungan B.A., L.L.B., U. Dineshrajkumar, M.Com., L.L.B.,

To

The Member Secretary,
Puducherry Pollution Control Committee,
Department of Science, Technology and Environment,
Government of Puducherry,
Puducherry.

GOVT. OF PUDUCHERRY DSTE / PPCC
Date 1616 21/9/26

Subject: Strong objection to the proposed Master Plan Expansion of Karaikal Port – Threat to the livelihood of traditional fishworkers – Serious concerns regarding CRZ compliance, coastal erosion, marine biodiversity, reclamation, dredging, breakwater expansion and diversion of natural watercourses – Request for rejection/suspension of clearance until an independent scientific and social assessment is completed – Regarding.

Reference:

1. Draft Comprehensive EIA/EMP Report for the Master Plan of Karaikal Port, Thirumalairayan Pattinam Commune Panchayat, Keezha Vanjore Village, Karaikal District, Puducherry, April 2026.
2. Proposal for Master Plan Development of Karaikal Port by Karaikal Port Private Limited (KPPL).
3. Applicable Coastal Regulation Zone (CRZ) Notifications and environmental laws, including the CRZ Notification, 2011, as applicable to the project.
4. Environmental and CRZ clearances and amendments referred to in the Draft EIA/EMP documents.

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL

Regd No : 397/2012

(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))

IN

TRADITIONAL FISHWORKERS UNION

Regd. No. : 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum (NFF))

(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.

(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vanour Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038

Ph : 0413 - 2961118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :

A. Senthilkumar, M.A., L.L.B., P. Kulothungan B.A., L.L.B., U. Dineshrajkumar, M.Com., L.L.B.,

Respected Sir/Madam,

I write this representation on behalf of the **Meenavar Viduthalai Vengaikal Iyakkam** and the **Traditional Fishworkers Union**, representing and protecting the rights, livelihood, marine environment and traditional fishing interests of the coastal fishing communities.

We hereby place on record our **strong objection to the proposed Master Plan Expansion of Karaikal Port**. After examining the Draft EIA/EMP documents submitted for the proposed development, we are seriously concerned that the magnitude of the proposed expansion may cause substantial and potentially irreversible impacts on the coastal environment, marine ecology, fisheries resources and the livelihood of traditional fishworkers.

The Draft EIA/EMP Report itself describes the proposal as a comprehensive master-plan development of Karaikal Port in the Thirumalairayan Pattinam Commune Panchayat and Keezha Vanjore area of Karaikal District.

1. Serious threat to the livelihood of traditional fishermen

The sea is not merely a natural resource for traditional fishing communities. It is their workplace, source of food, source of employment and the foundation of their social and economic existence.

The EIA documents themselves recognise the importance of fisheries in the Karaikal coastal region. The report records that Karaikal has significant fishery potential and that thousands of fishing families depend upon marine resources for their livelihood. Therefore, any major alteration of the marine environment, fishing grounds, navigation routes, fish habitats or coastal processes must be assessed with the highest degree of scientific and social responsibility.

The proposed expansion, including reclamation, dredging, expansion of breakwaters and other marine infrastructure, may directly or indirectly affect:

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL
Regd No : 567/2012
(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))
IN
TRADITIONAL FISHWORKERS UNION
Regd. No. : 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum (NFF))
(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.
(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vannur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038
Ph : 0413 - 2961110 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :
A. Senthilkumar, M.A., L.L.B., P. Kulothungan B.A., L.L.B., U. Dineshrajkumar, M.Com., L.L.B.,

- Traditional fishing grounds;
- Fish migration and breeding areas;
- Availability of marine fishery resources;
- Access of traditional fishing vessels to the sea;
- Navigation routes used by fishworkers;
- Nearshore and offshore fishing activities;
- Marine food chains;
- Sediment movement and coastal processes; and
- The long-term livelihood security of fishing communities.

The EIA itself acknowledges that dredging and construction activities can disturb benthic organisms and increase turbidity, and that suspended solids can affect the marine environment and fisheries.

Therefore, the conclusion that the impacts will be insignificant should not be accepted without an independent and transparent scientific verification involving traditional fishworkers and independent marine experts.

2. Massive reclamation and expansion require serious environmental scrutiny

The project documents indicate a major expansion of Karaikal Port involving substantial additional development.

The proposal referred to in the project documents includes:

- Expansion of the port area;
- Large-scale reclamation;
- Development of additional berths;
- Extension and modification of breakwaters;
- Capital dredging and maintenance dredging;
- Development of port backup facilities;
- Expansion of cargo handling capacity; and

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL
Regd. No : 507/2012
(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))
IN
TRADITIONAL FISHWORKERS UNION
Regd. No.: 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum - NFF)
(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.
(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vanaur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038
Ph : 0413 - 2661118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :
A. Senthilkumar, M.A., L.L.B., P. Kulothungan B.A., L.L.B., U. Dineshrajkumar, M.Com., L.L.B.

- Diversion and realignment of the Puravadaiyanar river/creek system.

The Terms of Reference documents state that approximately **137.14 hectares are proposed for reclamation**, with additional land proposed for acquisition and a total master-plan area of approximately **506 hectares**. The project also proposes a major increase in cargo-handling capacity and extensive marine infrastructure.

Such large-scale alteration of the coastline cannot be considered merely as a routine expansion. It requires a comprehensive examination of cumulative and long-term impacts.

3. Coastal erosion and shoreline change – major concern

We strongly submit that the expansion of ports, breakwaters and reclamation works can alter natural coastal sediment movement and shoreline processes.

The proposed expansion involves a substantial increase in breakwater infrastructure and major intervention in the nearshore marine environment. Any alteration to wave movement, currents and sediment transport can potentially result in:

- Increased erosion in adjoining coastal stretches;
- Accretion in some locations and erosion in others;
- Loss of beach areas;
- Damage to fishing villages and coastal infrastructure;
- Increased vulnerability during cyclones and storm surges; and
- Long-term loss of traditional fishing access.

The fishing community has already experienced and witnessed the consequences of coastal changes. Therefore, any claim that there will be no significant erosion impact must be subjected to an **independent long-term shoreline and sediment-transport assessment**, including cumulative impacts of the existing port and proposed expansion.

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL

Regd No : 507/2012

(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))

IN

TRADITIONAL FISHWORKERS UNION

Regd. No. : 1994/RTU/2022 (Affiliated with National Fisheworkers Forum (NFF))

(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.

(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliochvadey & Post, Vannur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038

Ph : 0413 - 2961118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., LL.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :

A. Senthilkumar, M.A., LL.B., P. Kulothungan B.A., LL.B., U. Dineshrajkumar, M.Com., LL.B.,

The EIA documents themselves show that shoreline change and long-term coastal processes are matters requiring assessment in connection with the proposed development.

We therefore request that no final clearance be granted until an independent expert institution conducts a transparent, peer-reviewed assessment of:

5. Historical shoreline change before construction of the existing port;
6. Shoreline change after construction of the existing port;
7. Erosion and accretion patterns on both the northern and southern sides;
8. The likely impact of additional breakwaters;
9. The impact of dredging and reclamation on sediment transport; and
10. Long-term impacts under cyclone and climate-change conditions.

4. Proposed diversion of natural river/creek system

We are seriously concerned about the proposal to divert or realign the **Puravadaiyanar river/creek**.

The project documents state that the natural creek traverses the port area and discharges into the sea and that diversion/realignment is proposed as part of the development.

Natural coastal creeks and estuarine systems are important for:

- Drainage;
- Floodwater discharge;
- Tidal exchange;
- Marine and estuarine ecology;
- Nutrient transport;
- Fishery productivity; and
- Coastal ecosystem stability.

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL
Regd No : 007/2012
(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))
IN
TRADITIONAL FISHWORKERS UNION
Regd. No. : 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum, NFF)
(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.
(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vannur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038
Ph : 0413 - 2661118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPERUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :
A. Senthilkumar, M.A., L.L.B., P. Kulothungan B.A., L.L.B., U. Dineshrajkumar, M.Com., L.L.B.,

Any diversion or artificial modification of such a natural system must not be undertaken merely for port-development convenience. The potential consequences for nearby communities, fishing grounds, drainage, flooding, groundwater and marine ecology must be independently assessed.

We therefore demand that the proposed diversion of the river/creek be subjected to an **independent hydrological, ecological and social impact assessment**, with public disclosure of all modelling studies.

5. CRZ compliance must be strictly examined

We respectfully submit that the proposed development must be strictly examined under the applicable provisions of the **Coastal Regulation Zone framework**, including the CRZ Notification, 2011 wherever applicable to the project and its approvals.

The project documents themselves identify the presence of different CRZ categories within the proposed development area.

The authorities must therefore ensure that:

- The project does not violate CRZ restrictions;
- No prohibited activity is permitted in regulated coastal areas;
- HTL/LTL demarcation is independently verified;
- Reclamation and dredging are legally permissible and scientifically justified;
- The diversion of natural watercourses is lawfully examined;
- Fishing rights and traditional access are protected;
- Cumulative impacts are properly assessed; and
- All previous environmental and CRZ clearance conditions have been fully complied with.

We further submit that the existence of earlier environmental or CRZ clearances cannot automatically justify an entirely new or substantially enlarged master-plan development without fresh and rigorous examination.

MEENAVAR VIDUTHALAI VENGAIKAL
Regd No : 007/2012
(Affiliated with Federation of Indian Fisher Organizations (FIFO))
IN
TRADITIONAL FISHWORKERS UNION
Regd. No. : 1904/RTU/2022 (Affiliated with National Fishworkers Forum (NFF))
(Head Office) # 1, Kuppam South Street, Ganapathichettikulam, Puducherry - 605 014.
(T.N. Office) 49, Vengattamman Koil Street Pilliachvadey & Post, Vannur Talk Villpuram Dist - 605 104. Cell : 9361235038
Ph : 0413 - 2961118 | Cell : 9442118904 | E-mail : Viduthalaivengaikaliyakkam@gmail.com

Puducherry	President : A.S. RAVI	Founder Cum General Secretary : S. VENGADESSAPEROUMAL, M.Sc., LL.B.,	Treasurer : G. RATHIGA, B.Sc., L.L.B
Tamilnadu	President : N. KATHIRAVAN	General Secretary : V. CANAGARADJOU, BA.,MSW.,	Treasurer : R. KUPPURAJ

Legal Advisors :
A. Senthilkumar, MA., LL.B., P. Kulothungan B.A., LL.B., U. Dineshrajkumar, M.Com., LL.B.

6. Marine biodiversity and endangered/protected species require independent verification

1. 4 Claims of ecological recovery for the new creek are not supported by evidence or a monitoring framework

1.5 Impact of the diversion on fishing livelihoods has not been separately assessed

2. The direction of net littoral (sand) transport used in the Report's modelling (Towards south) is contradicted by the Government's own coastal research authority (Towards North)

The Draft EIA's sediment-transport model (Table 4-1, Section 4.2.5.5) concludes that net littoral drift along the Karaikal coast runs southward. This directly contradicts the Shoreline Management Plan for the Union Territory of Puducherry (September 2024), published by the National Centre for Coastal Research (NCCR), Ministry of Earth Sciences, Government of India, which states on page 97 of that report that "the Puducherry and Karaikal coastal stretch exhibits net northerly drift in the range of 50,000 to 1,00,000 m^3/year," citing a site-specific, peer-reviewed field study of the Karaikal coast (Sundar, V., & Sannasiraj, S.A., 2022, "Longshore sediment transport rate from the field measured wave and sediment characteristics along the coast of Karaikal, India," ISH Journal of Hydraulic Engineering, 29(4), 557–568).

Why this is a material, not a minor, discrepancy

The direction of net littoral drift is a first-order input that determines which side of the Master Plan's breakwater extensions and reclamation will accrete sand and which side will be starved of sediment and erode. This is not a peripheral detail — it determine.

2.1. Which communities and coastal stretches (north or south of the port) actually bear the erosion risk from the proposed breakwater extensions (north breakwater from 1,180 m to 4,226 m; south breakwater from 1,115 m to 2,715 m).

2.2. Whether the proposed sand-bypass system, as designed (moving sand north-to-south), would in fact worsen erosion on the naturally sediment-starved side, if the true net drift is northward as NCCR conclude

2.3. Whether the training wall proposed for the new (diverted) Puravadaiyanar river mouth is correctly oriented to withstand the dominant direction of sediment approach.

2.4. Whether the Report's predicted erosion/accretion zones and monitoring locations (Chapter 6, Environmental Monitoring Programme) are even the correct locations to be monitoring in the first place.

3. Social / Livelihood Concerns

3.1 Fisherfolk impact appears understated. With 8,889 fishing households (32,632 people) in the study area, the mitigation for fishing communities is limited to "signboards... to keep them informed" — this seems disproportionately light given the scale of breakwater extension, dredging, and river diversion, all of which can affect near-shore fish habitat and access.

3.2 Social Impact Assesment claim of "no fishing grounds in the proposed development area" sits awkwardly next to the river/creek diversion and large fisherfolk population figures — this warrants more substantiation

3.4 EIA report its list of anticipated impacts includes "Loss of fishing grounds" and "Loss of beach and landing centres"as explicit concerns from port construction (dredging, reclamation, berth construction, channel widening)

Kindly record these as submissions for public hearing and I request not to grant Clearance to Karaikal Port expansion vide its Master Plan Development to Karaikal Port Private Limited (KPPL).

Thank you.

Sincerely

Prabhakar Jayaprakash

பதிவு எண் : 206/2025

திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம்

THIRUMALAIRAYANPATTINAM NUGARVOR VIZHIPPUNARVU SANGAM

எண். 1, அல்லிநகர் தெரு, திருமலைராயன்பட்டினம் - 609 606.
காரைக்கால் மாவட்டம்.
செல் : 93440 50153
94429 31942

பொறுப்புத் தலைவர் :
K.G. கவிநிலவன்

செயலாளர் :
V. ராஜேந்திரன்

துணைத் தலைவர் :
G. ஆனந்தகிருஷ்ணன்

பொருளாளர்:
S. கலைமணி

இணைச் செயலாளர் :
D. திவாகரனுன்

செய்தித்தொடர்பாளர் :
M. சந்தானம்

செயற்குழு உறுப்பினர்கள் :
M. ஷமீ
K.T. ராஜேஷ்
V. வசீகரன்
U.H. முகம்மதுகனி
P. செல்லமுத்து
G. கிருஷ்ணசாமி
T. ராஜமுனிஷ்வரன்
V. நாராயணன்
A. திவ்யநாதன்

ஆலோசகர்கள் :
V. சர்வாணபவன்
P. விஜயன்

சட்ட ஆலோசகர் :
வழக்கறிஞர் R. சுரேஷ்

ஆடிட் :
M. கலைமணி

எண்: 14/TNVS/TRP/2026 தேதி: 09-09-2026

To
மேன்மை மிகு உறுப்பினர் செயலாளர் அவர்கள்
புதுச்சேரியாக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCC),
3-ஆம்தளம், Housing Board Complex,
இலாஸ்பேட்டை,
புதுச்சேரி – 605005.

OFFICE OF THE COLLECTOR
10 SEP 2026
5438
KARAIKAL

ஐயா,

பொருள்: காரைக்கால் மாவட்டம் – 21.5 MTPA திறன் கொண்டதும் தினமும் 100.3 MTPA கூடுதலாக கையாளுவது – தரம் உயர்த்தி அனுமதிக்க – சம்பந்தமாக.

காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய கையாளுமையும் தினமும் சுமார் 21.5 மெட்ரிக் டன்களாக உள்ளதிலிருந்து 100.3 மெட்ரிக் டன்களாக உயர்த்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள Master Plan Development of Karaikal Port திட்டத்தில் தங்களை திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம் கவனமாக எதிர்பார்க்கிறோம், கேட்டுக்கொள்கிறோம் என்பதை பதிவு செய்கிறோம்.

காரைக்கால் மாவட்டம் திரு. எஸ்.பி.ஆர் துறைமுகம் [illegible] திரவிய எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, இரும்பு தாது மற்றும் மொத்த சரக்குகளை கையாள்கிறது. தற்போது 21.5 மெட்ரிக் டன்களாக உள்ள திறனை [illegible] 100.3 மெட்ரிக் டன்களாக உயர்த்துவது காரைக்கால் – [illegible] மாவட்டத்தில் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் [illegible] மாசுபாடு, [illegible] பாதிப்பை ஏற்படுத்தும். எனவே 100.3 MTPA Master of Karaikal Port திட்டத்தில் பிராந்திய சுற்றுச்சூழல் தாக்கங்களை [illegible] மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் [illegible] கவனமாக [illegible] மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தலைவர்
திருமலைராயன்பட்டினம் நுகர்வோர் விழிப்புணர்வு சங்கம்

copy to: மாவட்ட ஆட்சியர் அவர்கள்
காரைக்கால்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி

அலைபேசி : 92451 86609, 94424 53110

தேதி : 09/09/2026

OFFICE OF THE COLLECTOR 5403 09 SEP 2026 KARAIKAL

பெறுநர் :

உறுப்பினர் செயலர் அவர்கள்,
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் (PPCC)
புதுச்சேரி – UT.

பொருள் : காரைக்கால் துறைமுகம் (KPPL) விரிவாக்கம் செய்வது சம்பந்தமாக, புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலமாக 09/09/2026-அன்று காரைக்கால் மாவட்டம் திருமலைராயன்பட்டினம் கொம்யூன் போலகம் பல்நோக்கு கூடத்தில் நடைபெற்றும் பொது கருத்து கேட்பு கூட்டத்தில், ஆட்சேபனை கடிதம் சமர்ப்பித்தல் தொடர்பாக...

அய்யா,

புதுச்சேரி மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (PPCC) நடத்தும் பொது கருத்து கேட்பு தொடர்பாக எழும் முக்கிய கேள்விகள் :

1. புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் (PPCC), இந்த பொது கருத்து கேட்பை எந்த அடிப்படையில் நடத்துகிறது?
2. இந்த பொது கருத்து கேட்புக்கான தேதி, நேரம் மற்றும் இடத்தை காரைக்கால் மாவட்ட ஆட்சியரிடம் கோருவதற்கு புதுச்சேரி அரசின் எந்த அதிகாரி அல்லது துறை புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அதிகாரம் அல்லது அனுமதி வழங்கியுள்ளது?
3. காரைக்கால் துறைமுகத்தின் இத்தகைய மிகப்பெரிய விரிவாக்க திட்டம் குறித்து, பொது கருத்து கேட்பிற்கான தேதியை கோருவதற்கு முன்பாக புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஏன் புதுச்சேரி அரசுக்கு முறையாக தெரிவிக்கவில்லை?
4. காரைக்கால் துறைமுகத்தின் இந்த மிகப்பெரிய விரிவாக்க திட்டம் குறித்து புதுச்சேரி அரசின் துறைமுகத் துறைக்கு முழுமையான தகவல் உள்ளதா?
5. இந்த விரிவாக்க திட்டத்திற்காக பொது கருத்து கேட்பை நடத்துவதற்கு, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு அரசு துறைமுகத்துறை அல்லது புதுச்சேரி அரசு ஏதேனும் அனுமதி அல்லது ஒப்புதல் வழங்கியுள்ளதா?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி

அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

6. காரைக்கால் துறைமுகத்தின் நிலப்பரப்பு, அரசு நிலங்கள், கடற்கரைப் பகுதி, கடல் நீர்ப்பரப்பு, நில மீட்பு (Reclamation), ஆற்று திசை மாற்றம் மற்றும் துறைமுகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மாஸ்டர் பிளானில் மாற்றம் போன்ற முக்கியமான விஷயங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் புதுச்சேரி அரசின் முன் நிர்வாக அல்லது கொள்கை ரீதியான ஒப்புதல் இன்றி இந்த பொது கருத்து கேட்பு எவ்வாறு முன்னெடுக்கப்படுகிறது?
7. இந்தத் திட்டத்தின் நிர்வாகத்துறையான துறைமுகத்துறையின் தெளிவான நிலைப்பாடு மற்றும் அரசின் அனுமதி பெறப்படாமல் நடத்தப்படும் பொது கருத்து கேட்பு, பொதுமக்களுக்கு முழுமையான மற்றும் சரியான தகவல்களை வழங்கும் வகையில் இருக்குமா?
8. அரசின் அனுமதி இன்னும் பரிசீலனையில் இருந்தால்,இத்தகைய மிகப்பெரிய திட்டம் ஏன் பொதுமக்கள் விசாரணைக்காக முன்னெடுக்கப்படுகிறது?
9. பொதுமக்களுக்கு முன்வைக்கப்படும் இந்தத் திட்டத்தின் தற்போதைய சட்டப்பூர்வ மற்றும் நிர்வாக நிலை என்ன?
10. பிரவடியனாறு நதியை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தகுதியான அதிகாரிகள் உண்மையில் அனுமதி அளித்துள்ளனரா?அல்லது அது EIA-வில் இடம் பெற்றுள்ள ஒரு முன்மொழிவு மட்டுமா?
11. அகழ்வுப் பகுதிகள், நில மீட்பு பகுதிகள், மற்றும் கடலில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படும் இடங்களை தெளிவாக காட்டும் வரைபடங்கள் பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
12. கடல் நீர் நிலத்தடி நீருக்குள் ஊடுருவும் அபாயம் குறித்து அறிவியல் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதா?
13. வாஞ்சூர் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் தற்போதைய நிலத்தடி நீரின் உப்பு தன்மை நிலை என்ன?
14. திட்டம் தொடங்கிய பின்னர் நிலத்தடி நீரின் தரம் எவ்வாறு கண்காணிக்கப்படும்?
15. குடிநீர் ஆதாரங்கள் உப்பாகிவிட்டால் பாதிக்கப்படும் மக்களுக்கு யார் பொறுப்பேற்பார்கள்?
16. இவ்வளவு பெரிய திட்டத்திற்கான கூடுதல் நீர் தேவையை காரைக்கால் மாவட்டம் தாங்கக்கூடிய நிலையிலா உள்ளது?

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
காரைக்கால் மாவட்ட குழு
தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்
நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.
COMMUNIST PARTY OF INDIA (MARXIST)
KARAIKAL DISTRICT COMMITTEE
No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.
செயலாளர் : S.M. தமீம் அன்சாரி
அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

17. ஏற்படக்கூடிய பாதிப்புகள் போக்குவரத்து நெரிசல், சாலை விபத்துக்கள், கிராம சாலைகள் சேதம்,தூசு மாசுபாடு,ஒலி மாசுபாடு, டீசல் புகை, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு பாதிப்பு போன்றவை ஏற்படும். ஆகவே, முழுமையான Traffic Impact Assessment பொதுமக்களுக்கு வெளியிடப்பட வேண்டும்.

18. தனியார் வர்த்தக நடவடிக்கையால் சேதம் அடையும் பொது உட்கட்டமைப்பை சீரமைக்க பொதுமக்களின் வரிப்பணம் பயன்படுத்தப்படுமா?

19. முழு விரிவாக்கத்திற்கு பிறகு ஆண்டிற்கு அதிகபட்சமாக எவ்வளவு நிலக்கரி கையாளப்படும்? **'தேவையை பொருத்தது'** என்ற பதில் பொதுமக்களின் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கவலைகளுக்கு போதுமானதல்ல.

EIA-வில் தெளிவாக குறிப்பிட வேண்டியது :

- அதிகபட்ச நிலக்கரி கையாளும் திறன்,
- நிலக்கரி சேமிப்பு அளவு,
- நிலக்கரி யார்டுகளின் எண்ணிக்கை,
- மூடிய/திறந்த சேமிப்பு,
- கன்வேயர் அமைப்புகள்,
- தூசு கட்டுப்பாட்டு அமைப்புகள்,
- காற்று மாசுபாட்டு மாதிரிகள்.

வடக்கு வாஞ்சூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் புற்று நோயாளிகள்/புற்றுநோய் சம்பவங்கள், சுவாச நுரையீரல் நோய் பாதிப்புகள், பெண்களுக்கு கருச்சிதைவுகள் ஏற்படுவது போன்ற சம்பவங்கள் குறித்து பொதுமக்களிடையே பெரும் கவலைகள் எழுந்துள்ளன. இத்தகைய கவலைகள் தகுதியான பொது சுகாதார மற்றும் அறிவியல் அமைப்புகளால் சுயாதீனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் தற்போதைய காரைக்கால் துறைமுகத்தின் சுற்றுச்சூழல் செயல்திறன் என்ன?

இந்தத் திட்டத்தில் நதிமாற்றம் பெரிய அளவிலான அகழ்வுப் பணி, கடலோர நிலமீட்பு, புதிய பெர்த்துக்கள், அதிகரிக்கும் கப்பல் போக்குவரத்து ஆகியவை இடம்பெறுகின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

காரைக்கால் மாவட்ட குழு

தோழர். பெ. தாண்டவசாமி நினைவகம்

நெ. 14, நித்தீஸ்வரம் (மேற்கு), கோவில்பத்து, காரைக்கால் - 609 605.

COMMUNIST PARTY OF INDIA (MARXIST)

KARAIKAL DISTRICT COMMITTEE

No. Nitheeswaram (West), Kovilpathu, Karaikal - 609 605.

செயலாளர் : S.M. தமீம் அன்சாரி அலைபேசி : 92451 86609, 94424 53110

நாள் :

விரிவான Fisheries Impact Assessment அவசியம் வெளியிட வேண்டும் :

- காலநிலை மாற்றம் மற்றும் எதிர்கால கடல்மட்ட உயர்வை கருத்தில் கொண்டு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதா? மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டால் என்ன நடக்கும்?
- சூறாவளி+கடல் அலை எழுச்சி+கனமழை ஒரே நேரத்தில் ஏற்பட்டால் புதிய நதி வழித்தடம் பாதுகாப்பாக செயல்படுமா?
- 100.3 MMTPA அளவிலான துறைமுக விரிவாக்கம் முழு காரைக்கால் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கை முறையில் ஏற்படுத்தும் மொத்த தாக்கம் என்ன?

காரைக்கால் துறைமுகத்தை கிட்டத்தட்ட ஐந்து மடங்கு விரிவுபடுத்தும் திட்டத்திற்கு, அதே அளவிலான வலுவான சுற்றுச்சூழல், சமூக மற்றும் பொது பாதுகாப்பு உத்தரவாதங்களும் அவசியம்.

காரைக்கால் மக்களின் உடல்நலம், குடிநீர், நிலம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பை விலையாக கொடுத்து இந்தகைய துறைமுக விரிவாக்க திட்டம் கொண்டுவரப்படுவதை ஏற்க முடியாது.

ஆகையால், துறைமுகம் விரிவாக்க திட்டத்தை முழுவதுமாக கைவிட வேண்டும் என்று எங்களது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) காரைக்கால் மாவட்ட க்குழு சார்பாக, காரைக்கால் மக்கள் நலன் கருதி முன் வைக்கிறோம்.

நன்றி! வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

(எஸ். எம். தமீம்அன்சாரி)

நகல் பெறுவோர் :

1. உயர்திரு. மாவட்ட ஆட்சியர், அவர்கள்
   மாவட்ட ஆட்சியரகம், காரைக்கால்.

By mail

Fwd:

District Collector Karaikal < collr.kkl@py.gov.in >

OFFICE OF THE COLLECTOR
5388
08 SEP 2026
KARAIKAL

< pathydeepa2007@gmail.com >
Tue, 08 Sep 2026 3:15:36 PM +0530

To "collr.kkl"<collr.kkl@py.gov.in>

Tags Not in Contacts

---------- Forwarded message ---------
From: **Pathy Pathy** <pathydeepa2007@gmail.com>
Date: Tue, Sep 8, 2026, 3:11 PM
Subject:
To: <pocc@py.gov.in>

அனுப்புனர்.

A. பசுபதி
274, சுனாமி குடியிருப்பு
பட்டினச்சேரி
திருமலைராயன் பட்டினம்
காரைக்கால், 609606

பெறுநர்.

உயர்திரு தலைவர் அவர்கள்
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமம்
புதுச்சேரி

பொருள்:
காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய 21.5 MMTPA திறனை 100.3 MMTPA ஆக உயர்த்துவதற்கான Master Plan Development / Expansion Proposal தொடர்பாக 09.09.2026 அன்று நடைபெறவுள்ள சட்டப்பூர்வ பொதுக் கருத்துக் கேட்பிற்கு எதிர்ப்பு – மீனவர்களின் வாழ்வாதாரம், கடல் வளம், கடற்கரை, ஆறுகள், மீன்பிடி உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முழுமையாக நிராகரிக்கக் கோருதல் – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மீனவ மக்கள் சார்பில், முன்மொழியப்பட்டுள்ள காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு எங்களது கடுமையான மற்றும் முழுமையான எதிர்ப்பை இம்மனுவின் மூலம் பதிவு செய்கிறோம்.
இந்த எதிர்ப்பு எந்த ஒரு தனிநபரையோ, நிறுவனத்தையோ எதிர்த்து அல்ல, எங்களது கடலையும், மீன்பிடித் தொழிலையும், எங்களது வாழ்வாதாரத்தையும், எங்களது குழந்தைகளின் எதிர்காலத்தையும் காப்பாற்றுவதற்கான எதிர்ப்பு ஆகும்.

1. எங்களுக்கு கடல் என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல – அது எங்களது வாழ்க்கை

ஒரு அலுவலகத்தில் அமர்ந்து பார்க்கும்போது கடல் என்பது ஒரு "Project Area" ஆக இருக்கலாம். ஆனால் ஒரு மீனவனுக்கு கடல் என்பது:
அவனுடைய வேலைத்தளம்;
அவனுடைய குடும்பத்தின் உணவாதாரம்;
அவனுடைய குழந்தைகளின் கல்விக்கான வருமானம்;
அவனுடைய படகும் வலையும்;
அவனுடைய தலைமுறைகளின் வாழ்வாதாரம்;
அவனுடைய சமூகத்தின் அடையாளம்;
அவனுடைய எதிர்காலம்.
கடலை அழித்து வளர்ச்சி செய்ய முடியாது. கடலைப் பாதுகாத்தால்தான் மீனவனின் வாழ்க்கை பாதுகாக்கப்படும்.
எனவே, துறைமுகத்தின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கணக்கிட்டு, அதனால் ஏற்படும் மீனவர்களின் இழப்பை "Impact" என்ற ஒரு அட்டவணையில் மட்டும் பதிவு செய்து முடித்துவிட முடியாது.

2. 21.5 MMTPA-விலிருந்து 100.3 MMTPA – இது சாதாரண விரிவாக்கம் அல்ல
தற்போதைய துறைமுக திறன் சுமார் 21.5 MMTPA எனக் கூறப்படும் நிலையில், அதனை 100.3 MMTPA ஆக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.
இது தற்போதைய திறனைப் பல மடங்கு உயர்த்தும் மிகப்பெரிய மாற்றமாகும். இதன் பொருள்:
அதிக கப்பல்கள்;
அதிக சரக்குகள்;
அதிக dredging;
அதிக கடல் போக்குவரத்து;
அதிக கனரக வாகனப் போக்குவரத்து;
அதிக தொழில்துறை நடவடிக்கைகள்;
அதிக கடல்சார் கட்டமைப்புகள்;
கடற்கரை அமைப்பில் அதிக மாற்றங்கள்;
மீன்பிடிப் பகுதிகளில் அதிக இடையூறுகள்.
எனவே இதனை வெறும் "Port Expansion" என்று சாதாரணமாகக் கருத முடியாது.
இது காரைக்கால் கடற்கரை மற்றும் மீனவ மக்களின் வாழ்க்கை முறையில் மிகப்பெரிய நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமாகும்.

3. துறைமுக விரிவாக்கத்தின் மிகப்பெரிய பாதிப்பு மீனவர்களுக்குத்தான் துறைமுக விரிவாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் அனைத்தும் சமமாகப் பகிரப்படாது.
துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.
குறிப்பாக:
கடலில் செல்லும் பாதைகள்;
பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்;
மீன் இனப்பெருக்கப் பகுதிகள்;
மீன் வளம்;
வலை வீசும் பகுதிகள்;
மீன் இறங்குதளங்கள்;
கரையோர அணுகுமுறை;
படகு நிறுத்துமிடங்கள்;
கடற்கரைப் பயன்பாடு;

ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.
தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம். ஆனால் மீனவனின் கடலுக்கு மாற்று இடம் கிடையாது.

4. 42 மில்லியன் கன மீட்டர் Dredging – மீனவர்களின் முக்கிய கவலை
திட்டத்தில் சுமார் 42 MCM அளவிற்கு capital dredging மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுபோன்ற மிகப்பெரிய அளவிலான கடலடித் தோண்டுதல்:
கடலடித் தள அமைப்பை மாற்றும்;
நீரோட்டத்தை மாற்றும்;
sediment movement-ஐ பாதிக்கும்;
மீன் இனங்களின் வாழ்விடத்தை பாதிக்கக்கூடும்;
மீன்களின் இனப்பெருக்கத்தை பாதிக்கக்கூடும்;
கடற்கரை அரிப்பை அதிகரிக்கக்கூடும்;
சில இடங்களில் மணல் சேர்க்கையை ஏற்படுத்தக்கூடும்.
எங்களுக்கு மிகவும் முக்கியமான கேள்வி:
"42 MCM மண் எடுக்கப்பட்ட பிறகு கடல் எப்படி நடந்து கொள்ளும்?"
அதற்கான உறுதியான பதில் இல்லாமல் இத்திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது.

5. கடற்கரை அரிப்பு ஏற்பட்டால் எங்களை யார் காப்பாற்றுவார்கள்?
துறைமுக கட்டமைப்புகள் மற்றும் கடலில் உருவாக்கப்படும் புதிய கட்டமைப்புகள் இயற்கையான மணல் நகர்வை மாற்றக்கூடியவை.
ஒரு பகுதியில் மணல் சேரலாம்.
மற்றொரு பகுதியில் மணல் குறையலாம்.
ஒரு பகுதியில் கடற்கரை உருவாகலாம்.
மற்றொரு பகுதியில் கடல் நிலத்தை விழுங்கலாம்.
கடற்கரை அரிப்பு ஏற்பட்டால், நிறுவனத்திற்கு மாற்று நிலம் இருக்கலாம்; ஆனால் மீனவனின் வீடு, கிராமம், கோவில், மீன்பிடி தளம் ஆகியவற்றை மாற்று இடத்தில் மீண்டும் உருவாக்க முடியாது.
எனவே, விரிவாக்கத்திற்கு முன் மட்டுமல்லாமல், பல ஆண்டுகளுக்கான shoreline change மற்றும் sediment transport ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

6. Puravadaiyanar ஆற்றின் திசை மாற்றம் – மிகப்பெரிய ஆபத்து
திட்டத்தில் Puravadaiyanar River-ஐ சுமார் 1.3 km அளவிற்கு diversion / realignment செய்வது தொடர்பான முன்மொழிவு இருப்பதாக அறிகிறோம்.
ஆறு என்பது மனிதன் விரும்பியபடி மாற்றக்கூடிய ஒரு கால்வாய் அல்ல.
ஆறு மற்றும் கடல் சந்திக்கும் இடத்தில்:
வெள்ளநீர் வெளியேற்றம்;
sediment movement;
உவர்நீர்-நன்னீர் சமநிலை;
மீன் இனப்பெருக்கம்;
estuarine ecology;
மழைக்கால நீரோட்டம்;
போன்ற பல இயற்கை செயல்பாடுகள் உள்ளன.
ஆற்றின் இயற்கையான பாதையை மாற்றுவதால் எதிர்காலத்தில் வெள்ளம், நீர்த்தேக்கம், கடல் நீர் ஊடுருவல் மற்றும் மீன் வள பாதிப்பு ஏற்படாது என்பதற்கு உறுதியான அறிவியல் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

அத்தகைய முழுமையான உத்தரவாதம் இல்லாத நிலையில், ஆற்றின் திசை மாற்றத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

7. மீன்களின் இனப்பெருக்கப் பகுதிகள் அழிக்கப்படக்கூடாது
மீனவர்கள் இன்று பிடிக்கும் மீன்களையே மட்டும் சார்ந்து வாழ்வதில்லை.
நாளை கிடைக்க வேண்டிய மீன்களையும் இன்று பாதுகாக்க வேண்டியுள்ளது.
கடலடித் தோண்டுதல், கடல் நிரப்புதல், துறைமுக கட்டமைப்புகள் மற்றும் அதிகரிக்கும் கப்பல் போக்குவரத்து ஆகியவை மீன்களின் இயற்கையான வாழ்விடத்தையும் இனப்பெருக்கப் பகுதிகளையும் பாதித்தால்:
இன்று மீனவனுக்கு மீன் குறையும்;
நாளை அவனுடைய குழந்தைக்கு மீன்பிடித் தொழிலே இருக்காது.
எனவே, Fisheries Department மற்றும் உண்மையான உள்ளூர் மீனவர்களின் பங்கேற்புடன் independent fisheries impact assessment மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. கடலில் செல்லும் உரிமையே முதன்மையானது
மீனவர்களின் படகுகள் கடலுக்குச் செல்லும் பாரம்பரிய வழிகள் தடைபடக்கூடாது.
துறைமுகப் பாதுகாப்புப் பகுதிகள், கப்பல் போக்குவரத்து பாதைகள், exclusion zones, dredging zones போன்றவை உருவாக்கப்பட்டால், மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் குறையக்கூடும்.
எனவே:
"எந்தெந்த பகுதிகளில் தற்போது மீனவர்கள் மீன்பிடிக்கின்றனர்?"
என்பதை முதலில் பதிவு செய்ய வேண்டும்.
அதன்பிறகே திட்டத்தின் தாக்கத்தை மதிப்பிட வேண்டும்.

9. மீனவர்களுக்கு பணம் கொடுத்து கடலை இழக்கச் செய்ய முடியாது
மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டால் compensation வழங்கப்படும் என்று கூறுவது மட்டும் போதாது.
ஒரு மீனவனின்:
கடல் அறிவு,
பாரம்பரிய மீன்பிடி முறை,
சமூக உறவு,
மீன்பிடி தொழில்,
குடும்பத் தொழில்,
கடற்கரை வாழ்க்கை,
ஆகியவற்றுக்கு பண மதிப்பை மட்டும் நிர்ணயிக்க முடியாது.
மீன்பிடி வாழ்வாதாரத்தை நிரந்தரமாக அழித்துவிட்டு வழங்கப்படும் இழப்பீடு, வாழ்வாதாரத்திற்கான மாற்றாக இருக்க முடியாது.
எங்களது கோரிக்கை:
முதலில் பாதிப்பைத் தவிர்க்க வேண்டும்.
பின்னர் தான் இழப்பீடு பற்றி பேச வேண்டும்.

10. கடல் வளம் நிறுவனத்தின் சொத்து அல்ல
கடல் எந்த ஒரு தனியார் நிறுவனத்திற்கும் சொந்தமானது அல்ல.
கடல்:
மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும், எதிர்கால தலைமுறைக்கும் பொதுச் சொத்து.

- ஒரு நிறுவனத்தின் வணிக வளர்ச்சிக்காக பொதுமக்களின் கடல் வளம் மற்றும் இயற்கை வளம் நிரந்தரமாக மாற்றப்படக்கூடாது.

11. Coal handling மற்றும் காற்று மாசுபாடு குறித்த கவலை
துறைமுகத்தின் இறுதி சரக்கு கலவையில் coal போன்ற bulk cargo-களின் அளவு தெளிவாக இருக்க வேண்டும்.
மீனவ கிராமங்கள் துறைமுகத்திற்கு அருகில் அமைந்துள்ள நிலையில்:
coal dust;
bulk cargo dust;
truck movement;
storage;
loading/unloading;
wind-borne particulate matter;
போன்றவற்றால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வு தேவை.
"Cargo mix பின்னர் முடிவு செய்யப்படும்" என்று கூறுவது மட்டும் போதாது.
எந்த வகையான சரக்குகள் கையாளப்படும், ஒவ்வொரு சரக்கின் அதிகபட்ச அளவு என்ன, அதன் சேமிப்பு முறை என்ன, அதன் மாசுபாடு தடுப்பு முறை என்ன என்பவை தெளிவாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

12. எங்கள் குடிநீர் பாதுகாப்பாக இருக்குமா?
கடலோரப் பகுதிகளில் நிலத்தடி நீர் ஏற்கனவே மிகவும் முக்கியமான வளமாக உள்ளது.
பெரிய அளவில்:
நில மாற்றம்;
கடல் நிரப்புதல்;
dredging;
கட்டுமானம்;
தொழில்துறை நடவடிக்கைகள்;
நடைபெற்றால் நிலத்தடி நீர் மற்றும் கடல் நீர் ஊடுருவல் தொடர்பான தாக்கங்கள் குறித்து முழுமையான ஆய்வு அவசியம்.
எங்கள் குடிநீர் பாதிக்கப்பட்டால் அதை பணம் கொடுத்து வாங்க முடியாது.

13. Mangrove மற்றும் இயற்கை வளங்களை அழிக்கக் கூடாது
ஆறு–கடல் சந்திக்கும் பகுதிகளில் உள்ள இயற்கையான mangrove மற்றும் பிற coastal ecosystems வெறும் "unused land" அல்ல.
அவை:
வெள்ளத்திலிருந்து பாதுகாப்பு;
கடற்கரைப் பாதுகாப்பு;
மீன் மற்றும் நண்டு போன்ற உயிரினங்களின் வாழ்விடம்;
biodiversity;
carbon storage;
ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
இயற்கை பாதுகாப்பை அழித்து உருவாக்கப்படும் வளர்ச்சி நீடித்த வளர்ச்சி அல்ல.

14. காலநிலை மாற்றத்தை புறக்கணித்து துறைமுகத்தை விரிவுபடுத்தக் கூடாது
காரைக்கால் மிகவும் தாழ்வான கடலோரப் பகுதி.
எதிர்காலத்தில்:
கடல் மட்ட உயர்வு;
கடுமையான புயல்கள்;
storm surge;

அதிக மழை;
திடீர் வெள்ளம்;
கடற்கரை அரிப்பு;
போன்ற அபாயங்கள் அதிகரிக்கக்கூடும்.
எனவே 30–50 ஆண்டுகளுக்கான climate risk assessment இல்லாமல் இவ்வளவு பெரிய துறைமுக விரிவாக்கத்தை அனுமதிப்பது எதிர்கால தலைமுறையை ஆபத்தில் தள்ளுவதாகும்.

15. "வளர்ச்சி" என்ற பெயரில் எங்கள் கிராமங்களை அழிக்கக்கூடாது
நாங்கள் வளர்ச்சிக்கு எதிரானவர்கள் அல்ல.
ஆனால்:
மக்களை அழித்து வளர்ச்சி வேண்டாம்.
மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து வளர்ச்சி வேண்டாம்.
கடலை அழித்து வளர்ச்சி வேண்டாம்.
ஆற்றை மாற்றி வளர்ச்சி வேண்டாம்.
இயற்கையை அழித்து வளர்ச்சி வேண்டாம்.

எங்களுடைய கேள்வி எளிமையானது:
இந்தத் திட்டத்தால் கிடைக்கும் பொருளாதார நன்மை யாருக்கு?
அதனால் ஏற்படும் நிரந்தர இழப்பு யாருக்கு?
லாபம் ஒரு நிறுவனத்திற்கு கிடைத்து, பாதிப்பு முழுவதும் மீனவ மக்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்டால், அந்த வளர்ச்சியை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

16. ஏற்கனவே உள்ள துறைமுகத்தின் சுற்றுச்சூழல் செயல்பாடு முதலில் மதிப்பிடப்பட வேண்டும்
புதிய விரிவாக்கத்திற்கு முன்பு, ஏற்கனவே செயல்பட்டு வரும் துறைமுகத்தின்:
சுற்றுச்சூழல் செயல்திறன்;
கடற்கரை மாற்றம்;
மீன் வள மாற்றம்;
dredging impact;
marine ecology;
air quality;
water quality;
noise;
traffic impact;
fishermen livelihood impact;
ஆகியவை ஆரம்ப காலத்திலிருந்து தற்போதுவரை சுயாதீனமாக மதிப்பிடப்பட வேண்டும்.
ஏற்கனவே ஏற்பட்ட பாதிப்புகள் என்ன என்பது தெரியாமல், அதைவிட பல மடங்கு பெரிய விரிவாக்கத்தை எப்படி அனுமதிக்க முடியும்?

17. Cumulative Impact ஆய்வு அவசியம்
காரைக்காலில் துறைமுகம் மட்டுமல்லாமல் பல்வேறு தொழில்துறை மற்றும் கடலோர நடவடிக்கைகளும் உள்ளன.
எனவே இந்தத் திட்டத்தை தனித்திட்டமாக மட்டும் பார்க்கக் கூடாது.
காரைக்கால் மாவட்டத்தின் மொத்த சுற்றுச்சூழல் சுமை (Cumulative Environmental Impact) மதிப்பிடப்பட வேண்டும்.
கடல், ஆறு, நிலத்தடி நீர், காற்று, சாலை, மீன்வளம், சுகாதாரம் மற்றும் பேரிடர் அபாயம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆய்வு செய்ய வேண்டும்.

18. Public Hearing என்பது வெறும் சடங்கு அல்ல
பொதுக் கருத்துக் கேட்பு என்பது திட்டத்தை ஆதரிப்பவர்களிடம் மட்டும் கருத்து கேட்பதற்கான நிகழ்ச்சி அல்ல.
பாதிக்கப்படக்கூடிய மக்களின் உண்மையான கருத்தை கேட்டு பதிவு செய்வதற்கான சட்டப்பூர்வ வாய்ப்பு.
மீனவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு:
"பின்னர் பார்க்கலாம்";
"இழப்பீடு வழங்கப்படும்";
"அரசு விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்";
என்ற பொதுவான பதில்கள் போதாது.
ஒவ்வொரு கேள்விக்கும் ஆவணத்துடன் கூடிய தெளிவான பதில் வழங்கப்பட வேண்டும்.

19. எங்களது தெளிவான நிலைப்பாடு
காரைக்கால் மாவட்ட மீனவ பஞ்சாயத்துகள் மற்றும் மீனவ மக்கள் சார்பில் நாங்கள் கீழ்கண்ட நிலைப்பாட்டைத் தெளிவாகப் பதிவு செய்கிறோம்:
"முன்மொழியப்பட்டுள்ள காரைக்கால் துறைமுக விரிவாக்கத்தை நாங்கள் ஏற்கவில்லை."
"தற்போதைய துறைமுகத்தை 100.3 MMTPA ஆக உயர்த்தும் எந்தவொரு விரிவாக்கத்தையும் அனுமதிக்கக் கூடாது."
"கடலில் கூடுதல் கட்டமைப்பு, கடல் நிரப்புதல், மிகப்பெரிய அளவிலான dredging மற்றும் Puravadaiyanar ஆற்றின் திசை மாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடாது."
"மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை, கடலுக்கான அணுகல் மற்றும் மீன்பிடி வாழ்வாதாரம் எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது."

எங்களது முக்கிய கோரிக்கைகள்
எனவே, மாவட்ட நிர்வாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளிடமும் கீழ்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறோம்:
முன்மொழியப்பட்ட காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முழுமையாக நிராகரிக்க வேண்டும்.
21.5 MMTPA-விலிருந்து 100.3 MMTPA ஆக திறன் உயர்த்தும் முன்மொழிவை அனுமதிக்கக் கூடாது.
கூடுதல் கடல் நிரப்புதல் (Marine Reclamation) மேற்கொள்ளக் கூடாது.
42 MCM அளவிலான Capital Dredging-ஐ மேற்கொள்ளக் கூடாது.
Puravadaiyanar ஆற்றின் 1.3 km diversion / realignment திட்டத்தை கைவிட வேண்டும்.
மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் மற்றும் கடலுக்கான அணுகல் எந்த வகையிலும் கட்டுப்படுத்தப்படக்கூடாது.
மீனவர்களின் வாழ்வாதாரம், மீன் வளம் மற்றும் கடல்சார் உயிரியல் அமைப்புகளுக்கு ஏற்படும் தாக்கத்தை சுயாதீனமாக மதிப்பிடாமல் எந்த அனுமதியும் வழங்கக்கூடாது.
ஏற்கனவே செயல்பட்டு வரும் துறைமுகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் மீன்வள தாக்கம் குறித்து inception முதல் தற்போதுவரை independent assessment மேற்கொள்ள வேண்டும்.
காரைக்கால் கடற்கரைக்கான cumulative environmental impact assessment மேற்கொள்ள வேண்டும்.
கடற்கரை அரிப்பு மற்றும் sediment transport குறித்து நீண்டகால அறிவியல் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

Climate change, sea-level rise, storm surge மற்றும் extreme rainfall ஆகியவற்றை உள்ளடக்கிய Disaster/Climate Risk Assessment மேற்கொள்ள வேண்டும்.
மீனவர்களின் பாரம்பரிய அறிவையும் அனுபவத்தையும் திட்ட மதிப்பீட்டில் முறையாக இணைக்க வேண்டும்.
மீனவ பஞ்சாயத்துகளின் எழுத்துப்பூர்வ ஆட்சேபனைகள் அனைத்தும் Public Hearing Minutes-ல் முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும்.
ஒவ்வொரு முக்கிய ஆட்சேபனைக்கும் Project Proponent மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து எழுத்துப்பூர்வமான பதில் பெற வேண்டும்.
மீனவர்களின் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக பாதிக்கும் எந்தத் திட்ட மாற்றமும் மீனவ சமூகத்தின் உண்மையான பங்கேற்பு இல்லாமல் மேற்கொள்ளப்படக்கூடாது.

இறுதி வேண்டுகோள்
எங்களுடைய கோரிக்கை மிகவும் எளிமையானது.
எங்களுக்கு இலவசமாக எதுவும் வேண்டாம்.
எங்களுக்கு இழப்பீடு மட்டும் வேண்டாம்.
எங்களுக்கு மாற்று வேலை மட்டும் வேண்டாம்.
எங்களுடைய கடல் வேண்டும்.
எங்களுடைய மீன்பிடித் தொழில் வேண்டும்.
எங்களுடைய கடற்கரை வேண்டும்.
எங்களுடைய ஆறு வேண்டும்.
எங்களுடைய கிராமங்கள் வேண்டும்.
எங்களுடைய குழந்தைகளுக்கு எதிர்காலம் வேண்டும்.
பல தலைமுறைகளாக எங்களுடைய முன்னோர்கள் கடலில் சென்று மீன் பிடித்து எங்களைக் காப்பாற்றியுள்ளனர். அந்தக் கடலை ஒரு திட்டத்தின் பெயரில் மாற்றி, எங்களுடைய அடுத்த தலைமுறையை மீன்பிடித் தொழிலிலிருந்து வெளியேற்றும் எந்த நடவடிக்கையையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.
துறைமுகம் வளர வேண்டும் என்றால் முதலில் மக்கள் வாழ வேண்டும்.
மீனவர்கள் வாழ வேண்டும்.
கடல் வாழ வேண்டும்.
இயற்கை வாழ வேண்டும்.
எனவே, முன்மொழியப்பட்டுள்ள காரைக்கால் துறைமுக Master Plan Development / Expansion திட்டத்தை முழுமையாக நிராகரித்து, எந்தவொரு விரிவாக்கப் பணிக்கும் அனுமதி வழங்க வேண்டாம் என காரைக்கால் மாவட்ட மீனவ பஞ்சாயத்துகள் மற்றும் மீனவ மக்கள் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.
"கடல் எங்கள் வாழ்வாதாரம் – கடலை அழிக்கும் விரிவாக்கம் எங்களுக்கு வேண்டாம்."

தலைமை அலுவலகம் எண்: 5.871/ஏ, கடையன் காடு, வேட்டைகாரனிருப்பு, கீழ்வேளூர் வட்டம், நாகப்பட்டினம், தமிழ்நாடு - 611112.

சு. மணிகண்டன் (எ) மணிபாரதி
நிறுவனத் தலைவர்
அலைபேசி: +91 99435 03618

✉ thamizhthesamakkalkatchi@gmail.com

OFFICE OF THE COLLECTOR
5402
09 SEP 2026
KARAIKAL

8/09/26

7/149

பெறுநர்

உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காரைக்கால்-609602.

ஐயா,

காரைக்காலில் இயங்கி வரும் காரைக்கால் போர்ட் (அதானி குழுமம்) தற்போது விரிவாக்கம் செய்ய உள்ளதாக தெரிகிறது. இதற்காக தமிழகத்தைச் சேர்ந்த முட்டம், உத்தமசோழபுரம், குத்தாலம், கோபுராஜபுரம், பனங்குடி, நரிமணம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த நிலங்களை கையகப்படுத்த உள்ளதாக தெரிகிறது. இதனால் இப்பகுதியில் வாழும் தமிழக மக்களுக்கும் மற்றும் விவசாயிகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட உள்ளது. மேலும், இத்துறைமுகத்தில் பெரும் அளவில் நிலக்கரியானது கையாளப்படுகிறது. இந்நிலக்கரியானது லாரிகள், இரயில்கள் மூலம் உள்பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதால் சுற்றுப்புற சீர்கேடு பரவலாக நடந்து வருகிறது. இதனால் இப்பகுதியில் வாழும் மக்களுக்கு மூச்சுத்திணறல், நுரையீரல் பாதிப்பு மற்றும் பலவிதமான உடல்பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது.

மேற்படி துறைமுகம் விரிவாக்கத்திற்காக நிலம் கையகப்படுத்த கருத்துக் கேட்புக்கூட்டம் நடைபெற உள்ளதாக தெரிகிறது. இதுகுறித்து தமிழக பகுதி கிராம மக்களுக்கு தெரியப்படுத்தவில்லை. காரணம் என்ன? நிலம் கொடுப்பவர்கள் இல்லாமல் எப்படி கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த இயலும்.

எனவே, உரிய முறையில் அனைவருக்கும் தெரிவித்து, உரிய முறையில் கூட்டம் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேற்படி போர்ட் சுற்றுச் சூழலுக்கு எதிராக உள்ளதாலும், காற்று மாசை கட்டுப்படுத்த தவறிவருவதாலும், மேலும் போர்ட் விரிவாக்கம் செய்யதால், காற்று மாசுபாடு அதிகரிக்கும் என்பதால், இத்திட்டத்திற்கு எங்களது எதிர்ப்பை பதிவு செய்து கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
08-09-2026
(சு.மணிகண்டன் (எ)
மணிபாரதி)

je1-dste < je1-dste@py.gov.in >

Fwd: Objection to the Proposed Extension of Adani Port and Request to Protect Coastal Communities and Marine Ecosystems

Member Secretary, Puducherry Pollution Control Committee Puducherry < ppcc@py.gov.in >

Wed, 09 Sep 2026 12:16:10 PM +0530

To "Ramesh N"<senioree-dste@py.gov.in>,"Environment Engineer Govt Of Puducherry"<eedste@py.gov.in>,"Prabhu N"<je1-dste@py.gov.in>

With regards
Dr. N. Ramesh,
Member Secretary
PPCC

========== Forwarded message ==========
From: Sushaanthika Duraisamy <sushaanthikasamy@gmail.com>
To: <ppcc@py.gov.in>
Date: Wed, 09 Sep 2026 11:44:51 +0530
Subject: Objection to the Proposed Extension of Adani Port and Request to Protect Coastal Communities and Marine Ecosystems
========== Forwarded message ==========

To,

The Hon'ble Lieutenant Governor,
The Hon'ble Chief Minister,
The Chief Secretary,
Government of Puducherry.

Respected Sir,

I am writing to register my strong objection to the proposed extension of the Adani Port, which is expected to impact the coastal stretch from Pattinacherry (T.R.Pattinam), Vadakattalai up to Karaikal Fishing Port.

The coastline of Patiinacherry(T.R.Pattinam)to Karaikal fishing port is home to traditional fishing communities whose livelihoods, culture, and identity are inseparably linked to the sea. Any large-scale port expansion has the potential to significantly affect these communities through coastal erosion, shoreline changes, destruction of fish breeding grounds, loss of access to fishing areas, deterioration of marine biodiversity, and increased environmental pollution.

I respectfully urge the Government to carefully evaluate the long-term social, environmental, and economic consequences before granting any approval for the project.

Our concerns include:

- Loss of livelihood for traditional fishermen and coastal workers.
- Increased coastal erosion and damage to villages along the shoreline.
- Adverse impacts on marine ecosystems, fish populations, and biodiversity.
- Risks to public health due to pollution and industrial activities.
- Loss of traditional coastal resources and heritage.
- Potential non-compliance with environmental safeguards if adequate assessments and consultations are not completed.

Article 21 of the Constitution of India guarantees the Right to Life, which has been interpreted by the Hon'ble Supreme Court to include the right to a clean and healthy environment. We respectfully request that the Government ensure strict compliance with all applicable environmental laws and regulations, including the Environmental Impact Assessment (EIA) process, Coastal Regulation Zone (CRZ) Notification, and other relevant statutory requirements. Any decision should be based on scientific evidence, transparency, and meaningful consultation with all affected stakeholders.

Economic development is important, but it should not come at the irreversible cost of people's livelihoods, coastal ecology, and environmental sustainability. I therefore request the Government of Puducherry to place the welfare of its citizens and the protection of the environment at the forefront of its decision-making.

I sincerely hope that our concerns will receive due consideration and that appropriate action will be taken in the public interest.

Thank you for your attention.

Yours faithfully,

Sushaanthika Duraisamy

je1-dste < je1-dste@py.gov.in >

Fwd: Objection to the proposed extension of Adani port

Member Secretary, Puducherry Pollution Control Committee Puducherry < ppcc@py.gov.in >

Wed, 09 Sep 2026 3:45:53 PM +0530

To "Ramesh N"<senioree-dste@py.gov.in>,"Environment Engineer Govt Of Puducherry"<eedste@py.gov.in>,"Prabhu N"<je1-dste@py.gov.in>

With regards
Dr. N. Ramesh,
Member Secretary
PPCC

========== Forwarded message ==========
From: ANANTHI DURAISAMY <ananthiduraisamy2@gmail.com>
To: <ppcc@py.gov.in>
Date: Wed, 09 Sep 2026 13:36:20 +0530
Subject: Objection to the proposed extension of Adani port
========== Forwarded message ==========

Respected Sir/Madam,

I respectfully request the Government of Puducherry to stop the proposed extension of Adani Port from Pattinacherry to Karaikal Fishing Harbour.

This project threatens the livelihoods of thousands of fishermen, increases coastal erosion, damages marine biodiversity, and affects the fragile coastal ecosystem. Development should not come at the cost of traditional fishing communities and environmental sustainability.

I kindly urge the Government to protect our coastline, safeguard the rights of fishermen, and reconsider the proposed port expansion after proper environmental assessment and public consultation.

Thank you for your consideration.

Yours faithfully,

D Ananthi

je1-dste < je1-dste@py.gov.in >

Fwd: The proposed expansion of the Adani Port in the coastal villages of Karaikal

Member Secretary, Puducherry Pollution Control Committee Puducherry < ppcc@py.gov.in >

Thu, 10 Sep 2026 11:29:51 AM +0530

To "Ramesh N"<senioree-dste@py.gov.in>,"Environment Engineer Govt Of Puducherry"<eedste@py.gov.in>,"Prabhu N"<je1-dste@py.gov.in>

With regards
Dr. N. Ramesh,
Member Secretary
PPCC

========== Forwarded message ==========
From: Tashvi Leninkumar <ll3702798@gmail.com>
To: <ppcc@py.gov.in>
Date: Wed, 09 Sep 2026 18:30:11 +0530
Subject: The proposed expansion of the Adani Port in the coastal villages of Karaikal
========== Forwarded message ==========

Respected Sir/Madam,

I am writing to respectfully request the Government of Puducherry to review and reconsider the proposed expansion of the Adani Port in the coastal villages of Karaikal.

The coastal villages of Karaikal are closely connected to the sea and depend on the coastal ecosystem for their livelihoods, particularly fishing and related activities. Any large-scale expansion of port infrastructure may have significant implications for the coastal environment, marine resources, fishing communities, shoreline stability, and the long-term well-being of the people living in these villages.

I therefore request the Government to:

1. Conduct a comprehensive and independent assessment of the environmental and social impacts of the proposed port expansion.
2. Ensure that the concerns and views of the affected coastal and fishing communities are properly heard through transparent public consultations.
3. Carefully assess the potential impact on fishing grounds, marine biodiversity, coastal erosion, and the livelihoods of local residents.
4. Make all relevant environmental studies, permissions, impact assessments, and project details publicly accessible.
5. Until these concerns are thoroughly examined and addressed, kindly consider stopping or putting the proposed expansion on hold.

Development should go hand in hand with environmental protection and the welfare of local communities. We sincerely hope the Government of Puducherry will take appropriate action to protect Karaikal's coastal environment and the rights and livelihoods of its coastal residents.

Thank you for your time and consideration. I kindly request that this representation be taken seriously and that appropriate action be initiated at the earliest.

Yours faithfully,

Tashvi
Karaikal, Puducherry

(No Subject)

From: Member Secretary, Puducherry Pollution Control Committee Puducherry (ppcc@py.gov.in)

To: senioree-dste@py.gov.in; eedste@py.gov.in; je1-dste@py.gov.in; chem_prabhu@yahoo.co.in

Date: Wednesday, 9 September 2026 at 10:59 am IST

With regards
Dr. N. Ramesh,
Member Secretary
PPCC

========== Forwarded message ==========
From: Arun Adhithan <icearun28@gmail.com>
To: <ppcc@py.gov.in>
Date: Tue, 08 Sep 2026 20:42:16 +0530
========== Forwarded message ==========

அனுப்புநர்:
A.அருண்
39,சுனாமி தெற்கு தெரு ,
பட்டினச்சேரி ,திரு பட்டினம்.

பெறுநர்:
உயர்திரு மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
காரைக்கால்.

பொருள்: அதானி துறைமுக விரிவாக்க எதிர்ப்பு சம்பந்தமாக

மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம் மேற்கண்ட மீனவர் கிராமத்தைச் சேர்ந்த நாங்கள் முழுவதும் கடல் தொழில் செய்யும் ஓர் மீனவர் கிராமம் கடந்து 2009 ஆம் ஆண்டு மேற்கண்ட துறைமுகம் வந்த நாள் முதல் இன்று வரை கடலில் சுதந்திரமாக எங்களால் தொழில் செய்ய முடியவில்லை கடலில் தொழில் வளம் குறைந்து வாழ்வாதாரத்தை இழந்து இந்த துறைமுகத்தினால் நாங்கள் முழுவதும் பாதிப்பு உள்ளாகி நிற்கதியாய் நிற்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது எனவே பெரிதும் பாதிக்கப்பட்ட நாங்கள் கீழ்கண்ட பாதிப்பினை தங்களின் கவனத்திற்கு வைக்கின்றோம்.

கடலில் கருங்கல் கொட்டில் அலை தடுப்பு சுவர் அமைத்ததினால் ஏற்கனவே எங்கள் கிராமம் சுமார் 400 மீட்டர் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை காணாமல் போய்விட்டது இந்நிலையில் மேற்படி விரிவாக்கம் செய்யப்பட்டால் எங்கள் கிராமம் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நிலக்கரி காற்றில் கலப்பதினால் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கு சுவாசக்கோளாறு ஏற்படுவதுடன், நுரையீரல், புற்றுநோய் பாதிப்புகள் அருகில் உள்ள கிராமங்களில் அதிகமாக

உள்ளது எனவே மேலும் ஐந்து மடங்கு விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு இது போன்ற நுரையீரல் புற்றுநோய் வரும் பேராபத்தில் உள்ளது.
அதானி துறைமுகம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாக கூறி அவர்களுக்கு நோய்களைத் தான் தருகிறார்கள்.

எங்கள் கிராமத்தை சேர்ந்த பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகளும், புதிதாக திருமணமானவர்க்கு குழந்தை பாக்கியம் கிடைப்பதும் பாதிப்புக்குள்ளாகின்றது.

இயற்கையான கடலில் கப்பல் சென்று வர கால்வாய் அமைத்ததினால் கடல் வாழ் உயிரனங்கள் பாதிக்கப்படுகின்றன மற்றும் இயற்கையான கடல் வளம் நீரோட்டம் மாறிவிட்டது.

துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.குறிப்பாக கடலில் செல்லும் பாதைகள்,பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்,மீன் இனப்பெருக்கப் பகுதிகள், வலை வீசும் பகுதிகள்,மீன் இறங்குதளங்கள், கரையோர அணுகுமுறை படகு நிறுத்துமிடங்கள்,கடற்கரைப் பயன்பாடு ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.

கடலில் கப்பல்கள் நிறுத்தும் ஒரு தளம் அமைத்து அதில் எல்பிஜி கப்பல்கள் வந்து செல்லும் வகையில் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது என அறிகிறோம், அப்படி ஒரு திட்டம் விரிவாக்கப்பட்டால் எல்பிஜி கப்பல் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நாங்கள் யாரும் அந்தப் பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படும். இதனால் எங்களின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும் நிலை ஏற்படும்.

துறைமுகத்தினால் ஏற்படும் நிலக்கரி துகள்கள் கிராம அருகில் இருக்கக்கூடிய மற்றும் தோட்டங்களில் படிவதனால் தோட்டப்பயிர்கள் விஷத்தன்மை நிறைந்ததாக மாறி அதை உண்ணும் பெரியவர்கள் குழந்தைகள் என அனைவருக்கும் உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது இனி மேலும் விரிவுபடுத்தப்பட்டால் சுகாதாரமான குடிநீர் சுகாதாரமான வாழ்க்கை முற்றிலுமாக பறிபோகும் நிலை ஏற்படும்.

அதானி துறைமுகத்தில் தற்போது 21.5 MMTPA கையாளும் பொழுது எங்கள் பகுதியில் ஒரு நாளைக்கு பத்திலிருந்து பதினைந்து முறை சரக்கு ரயில் கடந்து செல்வதால் ஒரு முறைக்கு 20 நிமிடங்கள் காத்திருக்கும் அவல நிலை உள்ளது மேலும் இதனை 100.3MMTPA கூடுதலாக விரிவாக்கம் செய்வதினால் எங்கள் கிராமத்திற்கு ஒரு அவசர காலங்களில் மருத்துவமனைக்கு கூட ரயில் பாதையை கடந்து செல்ல முடியாத பேராபத்து உள்ளது.

எனவே மேற்படி இத்தகைய பாதிப்புகளை கடந்த பல ஆண்டுகளாக சந்தித்து வரும் நாங்கள் அதானி துறைமுகத்தினால் கடலும் கடல் சார்ந்த நிலங்களும் வாழத் தகுதியற்ற நிலையாக மாறிவிடும். கடலை சார்ந்து வாழக்கூடிய எங்களது மீனவ சமூக மக்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு மாற்று இடம் தேடி நாடோடிகளாக செல்லும் நிலை ஏற்படும் என்பதில் எங்களுக்கு எந்த மாற்றுக் கருத்தும் இல்லை எனவே ஏற்கனவே பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும் எங்கள் மீது வேந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் மீண்டும் பன்மடங்கு விரிவாக்கம் என்பதை எந்த சூழ்நிலையிலும் எந்த நிலையிலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை என்பதனை இதன் மூலம் தங்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம் மேலும் எங்களது கருத்தினை அரசு உதாசீனப்படுத்துமானால் எங்களால் துளி அளவும் ஏற்றுக் கொள்ள முடியாது.எங்களின் வாழ்வையும் எங்களின் எதிர்கால சங்கதியரின் வாழ்வையும் கருத்தில் கொண்டு திட்டத்தின் விரிவாக்கத்தினை ஆரம்ப கட்டத்திலேயே அரசு தடுத்து நிறுத்த வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் இதனை அனுமதிக்க கூடாது என்பதனை எங்கள் கிராமத்தின் சார்பாக நாங்கள் ஆணித்தனமாக

வலியுறுத்தி கேட்டுக்கொள்கின்றோம்.எனவே இந்த திட்டத்தினை ஆரம்ப கட்டத்திலேயே எதிர்க்கின்றோம்! எதிர்கின்றோம்! எதிர்கின்றோம்!.
தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம். ஆனால் மீன்பிடி தொழிலுக்கு மாற்று இடம் கிடையாது

கைவிடு! கைவிடு! துறைமுக விரிவாக்கத்தை கைவிடு!
வாழவிடு! வாழவிடு! மீனவனை வாழவிடு!

நன்றி!

(No Subject)

From: Member Secretary, Puducherry Pollution Control Committee Puducherry (ppcc@py.gov.in)

To: senioree-dste@py.gov.in; eedste@py.gov.in; je1-dste@py.gov.in; chem_prabhu@yahoo.co.in

Date: Tuesday, 8 September 2026 at 03:40 pm IST

With regards
Dr. N. Ramesh,
Member Secretary
PPCC

========== Forwarded message ==========
From: Pathy Pathy <pathydeepa2007@gmail.com>
To: <ppcc@py.gov.in>
Date: Tue, 08 Sep 2026 15:11:28 +0530
========== Forwarded message ==========

அனுப்புனர்.
A. பசுபதி
274, சுனாமி குடியிருப்பு
பட்டினச்சேரி
திருமலைராயன் பட்டினம்
காரைக்கால், 609606

பெறுநர்.
உயர்திரு தலைவர் அவர்கள்
புதுச்சேரி மாசுக்கட்டுப்பாடு குழுமம்
புதுச்சேரி

பொருள்:
காரைக்கால் துறைமுகத்தின் தற்போதைய 21.5 MMTPA திறனை 100.3 MMTPA ஆக உயர்த்துவதற்கான Master Plan Development / Expansion Proposal தொடர்பாக 09.09.2026 அன்று நடைபெறவுள்ள சட்டப்பூர்வ பொதுக் கருத்துக் கேட்பிற்கு எதிர்ப்பு – மீனவர்களின் வாழ்வாதாரம், கடல் வளம், கடற்கரை, ஆறுகள், மீன்பிடி உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு துறைமுக விரிவாக்கத் திட்டத்தை முழுமையாக நிராகரிக்கக் கோருதல் – தொடர்பாக.

மதிப்பிற்குரிய ஐயா,

காரைக்கால் மாவட்டத்தின் கடலோரப் பகுதிகளில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் மீனவ மக்கள் சார்பில், முன்மொழியப்பட்டுள்ள காரைக்கால் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கு எங்களது கடுமையான மற்றும் முழுமையான எதிர்ப்பை இம்மனுவின் மூலம் பதிவு செய்கிறோம்.
இந்த எதிர்ப்பு எந்த ஒரு தனிநபரையோ, நிறுவனத்தையோ எதிர்த்து அல்ல. எங்களது கடலையும், மீன்பிடித் தொழிலையும், எங்களது வாழ்வாதாரத்தையும், எங்களது

குழந்தைகளின் எதிர்காலத்தையும் காப்பாற்றுவதற்கான எதிர்ப்பு ஆகும்.

1. எங்களுக்கு கடல் என்பது வெறும் நிலப்பரப்பு அல்ல – அது எங்களது வாழ்க்கை
ஒரு அலுவலகத்தில் அமர்ந்து பார்க்கும்போது கடல் என்பது ஒரு "Project Area" ஆக
இருக்கலாம். ஆனால் ஒரு மீனவனுக்கு கடல் என்பது:
அவனுடைய வேலைத்தளம்;
அவனுடைய குடும்பத்தின் உணவாதாரம்;
அவனுடைய குழந்தைகளின் கல்விக்கான வருமானம்;
அவனுடைய படகும் வலையும்;
அவனுடைய தலைமுறைகளின் வாழ்வாதாரம்;
அவனுடைய சமூகத்தின் அடையாளம்;
அவனுடைய எதிர்காலம்.
கடலை அழித்து வளர்ச்சி செய்ய முடியாது. கடலைப் பாதுகாத்தால்தான் மீனவனின்
வாழ்க்கை பாதுகாக்கப்படும்.
எனவே, துறைமுகத்தின் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கணக்கிட்டு, அதனால் ஏற்படும்
மீனவர்களின் இழப்பை "Impact" என்ற ஒரு அட்டவணையில் மட்டும் பதிவு செய்து
முடித்துவிட முடியாது.

2. 21.5 MMTPA-விலிருந்து 100.3 MMTPA – இது சாதாரண விரிவாக்கம் அல்ல
தற்போதைய துறைமுக திறன் சுமார் 21.5 MMTPA எனக் கூறப்படும் நிலையில், அதனை
100.3 MMTPA ஆக உயர்த்த முன்மொழியப்பட்டுள்ளது.
இது தற்போதைய திறனைப் பல மடங்கு உயர்த்தும் மிகப்பெரிய மாற்றமாகும். இதன்
பொருள்:
அதிக கப்பல்கள்;
அதிக சரக்குகள்;
அதிக dredging;
அதிக கடல் போக்குவரத்து;
அதிக கனரக வாகனப் போக்குவரத்து;
அதிக தொழில்துறை நடவடிக்கைகள்;
அதிக கடல்சார் கட்டமைப்புகள்;
கடற்கரை அமைப்பில் அதிக மாற்றங்கள்;
மீன்பிடிப் பகுதிகளில் அதிக இடையூறுகள்.
எனவே இதனை வெறும் "Port Expansion" என்று சாதாரணமாகக் கருத முடியாது.
இது காரைக்கால் கடற்கரை மற்றும் மீனவ மக்களின் வாழ்க்கை முறையில் மிகப்பெரிய
நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டமாகும்.

3. துறைமுக விரிவாக்கத்தின் மிகப்பெரிய பாதிப்பு மீனவர்களுக்குத்தான் துறைமுக
விரிவாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகள் அனைத்தும் சமமாகப் பகிரப்படாது.
துறைமுகத்திற்கு அருகில் வாழும் மீனவர்கள்தான் முதலில் பாதிக்கப்படுவார்கள்.
குறிப்பாக:
கடலில் செல்லும் பாதைகள்;
பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள்;
மீன் இனப்பெருக்கப் பகுதிகள்;
மீன் வளம்;
வலை வீசும் பகுதிகள்;
மீன் இறங்குதளங்கள்;
கரையோர அணுகுமுறை;
படகு நிறுத்துமிடங்கள்;
கடற்கரைப் பயன்பாடு;

ஆகியவை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடும்.
தொழிற்சாலை அல்லது துறைமுகத்திற்கு மாற்று இடம் இருக்கலாம். ஆனால் மீனவனின் கடலுக்கு மாற்று இடம் கிடையாது.

4. 42 மில்லியன் கன மீட்டர் Dredging – மீனவர்களின் முக்கிய கவலை
திட்டத்தில் சுமார் 42 MCM அளவிற்கு capital dredging மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுபோன்ற மிகப்பெரிய அளவிலான கடலடித் தோண்டுதல்:
கடலடித் தள அமைப்பை மாற்றும்;
நீரோட்டத்தை மாற்றும்;
sediment movement-ஐ பாதிக்கும்;
மீன் இனங்களின் வாழ்விடத்தை பாதிக்கக்கூடும்;
மீன்களின் இனப்பெருக்கத்தை பாதிக்கக்கூடும்;
கடற்கரை அரிப்பை அதிகரிக்கக்கூடும்;
சில இடங்களில் மணல் சேர்க்கையை ஏற்படுத்தக்கூடும்.
எங்களுக்கு மிகவும் முக்கியமான கேள்வி:
"42 MCM மண் எடுக்கப்பட்ட பிறகு கடல் எப்படி நடந்து கொள்ளும்?"
அதற்கான உறுதியான பதில் இல்லாமல் இத்திட்டத்தை முன்னெடுக்கக் கூடாது.

5. கடற்கரை அரிப்பு ஏற்பட்டால் எங்களை யார் காப்பாற்றுவார்கள்?
துறைமுக கட்டமைப்புகள் மற்றும் கடலில் உருவாக்கப்படும் புதிய கட்டமைப்புகள் இயற்கையான மணல் நகர்வை மாற்றக்கூடியவை.
ஒரு பகுதியில் மணல் சேரலாம்.
